யூரி அலேஷா

# மூன்று தடியர்கள்



COMICS
PDF TIMES



COMICS PDF TIMES



## யூரி அலேஷா

# மூன்று தடியர்கள்

குழந்தைகளுக்கான
நாவல்

COMICS PDF TIMES

ஓவியர்:
**ப. கலவூஷின்**





ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

வற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

ஓவியர்: பரீஸ் கலயூஷீன்

**Ю. Олеша**

**ТРИ ТОЛСТЯКА**

*На тамильском языке*

**Yu. Olesha**

**THREE FAT MEN**

*In Tamil*

NOT FOR SALE
FAN MADE ONLY

COMICS PDF TIMES
HSC

ISBN 5-05-000336-9



COMICS PDF TIMES

# பொருளடக்கம்

## முதல் பாகம்
## களைக்கூத்தாடி திபூல்

அத்தியாயம் 1. கஸ்பார் அர்னேரியின் அமைதி இல்லாத நாள் . . . 7
அத்தியாயம் 2. தலைகளை வெட்டப் பத்து மேடைகள் . . . 17
அத்தியாயம் 3. விண்மீன் சதுக்கம் . . . 23

## இரண்டாம் பாகம்
## வாரிசு துத்தியின் பொம்மை

அத்தியாயம் 4. பலூன் விற்பவன் பறந்து போகிறான் . . . 35
அத்தியாயம் 5. நீக்ரோவும் முட்டைக்கோசும் . . . 57
அத்தியாயம் 6. எதிர்பாராத நிலைமை . . . 77
அத்தியாயம் 7. அற்புதப் பொம்மையின் இரவு . . . 86

## மூன்றும் பாகம்
## சுவோக்

அத்தியாயம் 8. சின்ன நடிகையின் கடினமான பாத்திரம் . . . 99
அத்தியாயம் 9. பொம்மை பசியுடன் சாப்பிடுகிறது . . . 107
அத்தியாயம் 10. மிருகக்சாலை . . . 119

## நாலாம் பாகம்
## கருமான் புரோஸ்பெரோ

அத்தியாயம் 11. மிட்டாய்ச் சாலை தவிடுபொடி . . . 129
அத்தியாயம் 12. நட்டுவனார் தாதக்கத்தையார் . . . 141
அத்தியாயம் 13. வெற்றி . . . 149

முடிவுரை . . . 171



## முதல் பாகம்

# கழைக்கூத்தாடி திபூல்

COMICS FOR TIMES



COMICS PDF TIMES





அத்தியாயம் 1

# கஸ்பார் அர்னேரியின் அமைதி இல்லாத நாள்



COMICS PDF TIMES

மந்திரவாதிகளின் காலம் போய்விட்டது. பார்க்கப் போனால் எந்தக் காலத்திலுமே அவர்கள் இருந்திருக்க மாட்டார்கள். அவர்கள் இருந்ததாகச் சொல்லுவது எல்லாம் மிகவும் சின்னக் குழந்தைகளுக்கான கற்பனைகளும் கதைகளுமே. வேடிக்கை பார்ப்பவர்களைச் சாமர்த்திய மாக ஏமாற்றுவது சில தந்திர வித்தைக்காரர்களுக்கு முடிந்திருக்கும். இந்தத் தந்திர வித்தைக் காரர்களை மாயக்காரர்களாகவும் மந்திரவாதிகளாகவும் அவர்கள் எண்ணத் தலைப்பட்டு விட்டார்கள், அவ்வளவுதான்.

அந்த மாதிரி ஒரு மருத்துவர் இருந்தார். கஸ்பார் அர்னேரி என்று பெயர். வெகுளிமனிதனும் சந்தைகளிலும் திருவிழாக் கூட்டங்களிலும் வெட்டியாகப் பொழுது போக்குபவனும் அரைகுறையாகப் படித்த மாணவனும் அவரைக்கூட மந்திரவாதி என்றே மதித்திருப்பார்கள். உண்மையில் இந்த மருத்துவர் வியப்பு ஊட்டும் செயல்களைச் செய்தார். அவை அற்புதங்களே போல இருந்தன. ஆனால், மட்டு மீறிய நம்பிக்கை உள்ள மக்களை ஏமாற்றித் திரியும் மந்திர வாதிகளுக்கும் போலிப் பண்டிதர்களுக்கும் அவருக்கும் பொதுவான தன்மை எதுவுமே இருக்கவில்லை.

மருத்துவர் கஸ்பார் அர்னேரி விஞ்ஞானி. அவர் சுமார் நூறு கலைகளைக் கற்றிருந்தார். என்ன ஆனாலும் கஸ்பார் அர்னேரியைக் காட்டிலும் ஆழ்ந்த அறிவும் கலைஞானமும் உள்ளவர் ஒருவரும் நாட்டில் இருக்கவில்லை என்பது நிச்சயம்.

அவருடைய கலைத்தேர்ச்சி அரைவை இயந்திரக்காரனுக்கும் படை வீரனுக்கும் மாதர்

களுக்கும் மந்திரிகளுக்கும்—மொத்தத்தில் எல்லோருக்கும்—தெரிந்திருந்தது. பள்ளிச் சிறுவர்கள் கூட அவரைப் பற்றி ஒரு பாட்டு பாடி வந்தார்கள். அதன் பல்லவி இப்படி வரும்:

தரையிலிருந்து விண்ணில் பறக்கவும்
நரியின் வாலை எட்டிப் பிடிக்கவும்
கல்லை ஆவியாகச் செய்யவும்
வல்லவர் மருத்துவர் கஸ்பார்.

கோடையில் ஒரு நாள் பருவநிலை மிகவும் நன்றாய் இருந்த போது, சில வகைப் புற்களையும் வண்டுகளையும் சேகரிப்பதற்காக நீண்ட தூரம் உலாவப் போவது என்று மருத்துவர் கஸ்பார் அர்னேரி தீர்மானித்தார்.

மருத்துவர் கஸ்பார் இளமையைக் கடந்து விட்டவர் ஆனதால் மழைக்கும் காற்றுக்கும் அஞ்சினார். வீட்டுக்கு வெளியே போனபோது கழுத்தைச் சுற்றிக் கனத்த மப்ளரைக் கட்டிக் கொண்டார், தூசி விழாமல் இருப்பதற்காகக் கண்ணாடி மாட்டிக் கொண்டார். கால் இடறி விடாமல் இருப்பதற்காகக் கைத்தடியை எடுத்துக் கொண்டார். மொத்தத்தில், பெரிய முன்னேற்பாடுகளோடு உலாவக் கிளம்பினார்.

அன்றையப் பகல் அற்புதமாய் இருந்தது. வெயில் பளிச்சென்று அடித்துக் கொண்டிருந்தது. பச்சைப் பசேலென்று தளதளத்த புல்லைப் பார்த்ததும் வாய் இனித்தது. டாண்டெலியன் மலர்கள் காற்றில் பறந்தன, பட்சிகள் சீழ்க்கை அடித்தன. இளங் காற்று மெல்லிய நடன உடை போல இதமாக வீசிற்று.

''இது நல்லது, ஆனாலும் மழைக் கோட்டை எடுத்துக் கொள்ள வேண்டும், ஏனென்றால் கோடை காலப் பருவநிலை ஏமாற்றி விடும். மழை பெய்யலாம்'' என்று சொல்லிக் கொண்டார் மருத்துவர்.

வீட்டில் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டு, கண்ணாடியைத் தூசி போக ஊதி மாட்டிக் கொண்டார் மருத்துவர். பிறகு தம்முடைய பச்சைத் தோல் கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

மிகவும் கவர்ச்சியான இடங்கள் ஊருக்கு வெளியே, மூன்று தடியர்களின் அரண்மனை இருந்த இடத்தில் இருந்தன. மருத்துவர் அந்த இடங்களுக்கு அடிக்கடி போவது வழக்கம். மூன்று தடியர்களின் அரண்மனை பிரமாண்டமான பூங்காவின் நடுவில் இருந்தது. ஆழமான அகழ்கள் பூங்காவைச் சூழ்ந்திருந்தன. அகழ்களுக்குக் குறுக்கே கரிய இரும்புப் பாலங்கள் அமைந்திருந்தன. அரண்மனைக் காவலர்கள் பாலங்களைக் காத்துக் கொண்டிருந்தார்கள். மஞ்சள் இறகுகள் செருகிய கறுப்பு மெழுகுத் துணித் தொப்பிகள் அணிந்த காவல் படை வீரர்கள் இவர்கள். பூங்காவைச் சுற்றிலும் தொடுவானம் வரையில் பரந்திருந்தன புல் வெளிகள். அவற்றின் நடுநடுவே பூச்செடிகளும் சோலைகளும் குளங்களும் இருந்தன. எல்லாவற்றிலும் அதிக அக்கறைக்கு உரிய புல் வகைகள் அங்கே வளர்ந்தன. எல்லாவற்றிலும் அழகான வண்டுகள் அங்கே ரீங்காரம் செய்தன, எல்லாவற்றையும் விட இனிமையான பட்சிகள் பாடின.

''ஆனால் அவ்வளவு தூரம் நடந்து போக எனக்கு முடியாது. நகர மதில் வரை நடந்து போய் அங்கே வண்டி வைத்துக் கொண்டு அரண்மனைப் பூங்காவுக்குப் போகிறேன்'' என்று எண்ணிக் கொண்டார் மருத்துவர்.

நகர மதிலின் பக்கத்தில் ஆட்கள் வழக்கத்தை விட அதிகமாக நெரிந்தார்கள்.

''இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமையா என்ன? இல்லையே, செவ்வாய்க் கிழமை ஆயிற்றே'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார் மருத்துவர்.

இன்னும் கிட்டத்தில் போனார்.

சதுக்கம் முழுவதையும் அடைத்துக் கொண்டு கூடி இருந்தார்கள் மக்கள். பச்சைக் கைம் முனைகள் உள்ள சாம்பல் நிறக் கம்பளி மேல் சட்டைகள் அணிந்த கம்மியர்களையும், களிமண்

நிற முகங்கள் கொண்ட மாலுமிகளேயும், கவர்ச்சியான நிறங்களில் மார்புச் சட்டைகள் போட்டிருந்த செல்வச் செழிப்புள்ள குடிகளேயும், ரோஜாச் செடிகள் போன்ற ஸ்கர்ட்டுகள் அணிந்த அவர்களுடைய மனேவிகளேயும், சாடிகளும் தாம்பாளங்களும் குளிர்பதனப் பெட்டிகளும் கூட்டடுப்புக்களும் வைத்துக் கொண்டிருந்த விற்பனேயாளர்களேயும் கண்டார் மருத்துவர். இவர்கள் தவிர, துண்டுத் துணிப் போர்வையால் தைத்தவர்கள் போலப் பச்சையும் மஞ்சளும் கலப்பு நிறங்களுமாகக் காணப்பட்ட திறந்த வெளி நடிகர்களும் குதூகலம் உள்ள செம்பழுப்பு நாய்களின் வால்களே இழுத்துக் கொண்டிருந்த சின்னஞ் சிறுவர்களும் அங்கே இருந்தார்கள்.

எல்லோரும் நகர வாயில் கதவுகளுக்கு முன்னுல் நெரிந்தார்கள். வீடு அளவு உயரமாய் இருந்த பிரமாண்டமான கதவுகள் அடைத்துப் பூட்டப்பட்டிருந்தன.

''கதவுகள் பூட்டப்பட்டிருப்பது ஏன்?'' என்று வியந்தார் மருத்துவர்.

கூட்டம் இரைந்தது. எல்லோரும் உரக்கப் பேசினுர்கள், கத்தினுர்கள், திட்டினுர்கள், ஆனுல் எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லே.

கொழுத்த சாம்பல் நிறப் பூனேயைக் கையில் வைத்திருந்த இள மாது ஒருத்தியின் பக்கத்தில் போனுர் மருத்துவர்.

''இங்கே என்ன நடக்கிறது என்று தயை செய்து சொல்லுங்களேன்! இவ்வளவு நிறையப் பேர் ஏன் கூடி இருக்கிறுர்கள், அவர்களுடைய கிளர்ச்சிக்கு என்ன காரணம், நகர வாயில் கதவுகள் ஏன் மூடப்பட்டு இருக்கின்றன?'' என்று கேட்டார்.

''காவல் படையினர் ஆட்களே நகரத்திலிருந்து வெளியேற விட மாட்டோம் என்கிறுர்கள்...''

''ஏனும்?''

''ஏற்கெனவே நகரத்திலிருந்து வெளியேறி மூன்று தடியர்களின் அரண்மனேக்குப் போயிருக்கும் ஆட்களுக்கு இவர்கள் உதவக் கூடாது என்பதற்காக...''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லே, அம்மா, தயவு செய்து என்னே மன்னியுங்கள்...''

''மூன்று தடியர்களின் அரண்மனேயைத் தாக்கிக் கைப்பற்றுவதற்காகக் கருமான் புரோஸ்பெரோவும் கழைக்கூத்தாடி திபூலும் மக்களே இன்று நடத்திப் போயிருக்கிறுர்களே, அது உங்களுக்குத் தெரியாதா என்ன?..''

''கருமான் புரோஸ்பெரோவா?..''

''ஆமாம், பெரியவரே... மதில் உயரமானது, மறு பக்கம் காவல் படைத் துப்பாக்கி வீரர்கள் பதுங்கி இருக்கிறுர்கள். நகரத்திலிருந்து ஒருவரும் வெளியேறவில்லே. கருமான் புரோஸ்பெரோவோடு போனவர்களே அரண்மனேக் காவல் படையினர் சுட்டுக் கொன்று விடுவார்கள்.''

மெய்யாகவே வெகு தொலேவில் சில குண்டுகள் வெடித்த ஓசை கேட்டது.

மாது கொழுத்த பூனேயை நழுவ விட்டாள். பிசைந்த மாவு போலச் சொத்தென்று விழுந்தது பூனே. கூட்டம் முழங்கிற்று.

''அப்படியானுல் மிகவும் முக்கியமான நிகழ்ச்சியை நான் கவனிக்காமல் விட்டு விட்டேன் என்று ஆகிறது. ஒரு மாதம் முழுவதும் நான் அறையிலிருந்து வெளியேறவில்லேதான். பூட்டிய அறையில் வேலே செய்து கொண்டிருந்தேன். வெளி நடப்பு எதையுமே நான் தெரிந்து கொள்ளவில்லே...'' என்று எண்ணமிட்டார் மருத்துவர்.

அந்தச் சமயத்தில் இன்னும் தூரத்தில் குண்டுகளே வெடித்தது பீரங்கி. வெடி முழக்கம் பந்து போலத் துள்ளிக் காற்றில் உருண்டது. மருத்துவர் திகில் அடைந்து சில அடிகள் பின்னே நகர்ந்தார். கூட்டம் முழுவதுமே திடுக்கிட்டுத் துள்ளிப் பின்னுல் சரிந்தது. குழந்தைகள் அழத் தொடங்கின, புருக்கள் இறக்கைகளேப் படபடவென்று அடித்து நாலா பக்கமும் பறந்தன, நாய்கள் குந்தி ஊளேயிடத் தலேப்பட்டன.

பீரங்கி வெடிகளின் கடுமையான முழக்கம் கேட்கலாயிற்று. நினேத்தே பார்க்க முடியாத

அளவு பெருத்த தடதடப்பு அதிர்ந்தது. கூட்டம் வாயில் கதவுகளை நெருக்கி அழுத்திக் கொண்டு ஆரவாரித்தது:

''புரோஸ்பெரோ! புரோஸ்பெரோ!''

''மூன்று தடியர்கள் ஒழிக!''

மருத்துவர் கஸ்பார் ஒரேயடியாகக் குழப்பம் அடைந்தார். கூட்டத்தில் இருந்தவர்கள் அவரை அடையாளம் தெரிந்து கொண்டார்கள், ஏனென்றால் பலருக்கு அவருடைய முகம் பழக்கமாய் இருந்தது. அவரிடம் பாதுகாப்பை நாடுபவர்கள் போலச் சிலர் அவரை நோக்கிப் பாய்ந்தார்கள். மருத்துவரோ, தாமே அழாக் குறையாகத் தவித்தார்.

''அங்கே என்ன நடக்கிறது? வாயில் கதவுகளுக்கு வெளியே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்வது எப்படி? ஒருவேளை மக்கள் வெற்றி பெறலாம்; அல்லது, ஒருவேளை இதற்குள் எல்லோரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம்!''

அப்போது ஒரு பத்துப் பெயர் ஒரு புறம் ஓடினார்கள். அங்கே மூன்று குறுகிய சந்துகள் சதுக்கத்திலிருந்து பிரிந்து போயிருந்தன. உயரமான பழைய கோபுரம் உள்ள கட்டிடம் மூலையில் இருந்தது. மற்றவர்களோடு கோபுரத்தில் ஏறுவது என்று மருத்துவர் முடிவு செய்தார். கீழே, குளியறை போலக் காணப்பட்ட சலவைச் சாலை இருந்தது. நிலவறையில் இருப்பது மாதிரி அங்கே இருட்டாக இருந்தது. சுழல் படிக்கட்டு மேலே இட்டுச் சென்றது. குறுகிய சன்னல்கள் வழியே வெளிச்சம் வந்தது. ஆனால் அது மிகவும் குறைவாய் இருந்ததால் எல்லோரும் மெதுவாக, வெகு சிரமத்துடன் ஏறினார்கள். போதாக் குறைக்குப் படிக்கட்டு இடிந்து சிதைந்திருந்தது, அழிகள் முறிந்திருந்தன. மேல் மாடி போய்ச் சேர்வதற்கு மருத்துவர் கஸ்பார் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்பதை எண்ணிப் பார்ப்பது கடினம் அல்ல. இருபதாவது படியிலிருந்தே அவரது கத்தல் இருட்டில் கேட்டது:

''ஐயோ! என் நெஞ்சு வெடித்து விடும் போல் இருக்கிறது. என் ஒரு செருப்பின் குதி கழன்று விழுந்து விட்டது!''

சதுக்கத்தில் இருந்த போதே, பத்தாவது பீரங்கி வெடிக்குப் பிறகு மருத்துவரின் மழைக் கோட்டு நழுவி விழுந்து விட்டது.

கல் அழிகள் சூழ்ந்த மேடை கோபுரத்தின் உச்சியில் இருந்தது. அங்கிருந்து சுற்றிலும் குறைந்தது ஐம்பது கிலோமீட்டர் தொலைவுக்கு எல்லாவற்றையும் பார்க்க முடிந்தது. காட்சி காணத் தக்கதுதான், என்றாலும் அதைக் கண்டு களிக்க நேரம் இல்லை. சண்டை நடந்து கொண்டிருந்த திக்கிலேயே எல்லோரும் பார்வையைச் செலுத்தினார்கள்.

''என்னிடம் தொலை நோக்கி இருக்கிறது. எட்டு கண்ணாடிகள் வைத்த தொலை நோக்கியை நான் எப்போதும் எடுத்துப் போவது வழக்கம். இதோ'' என்று வார்ப் பொத்தானைக் கழற்றினார் மருத்துவர்.

தொலை நோக்கி கைக்குக் கை மாறிக் கொண்டு போயிற்று.

பசுமையான வெளியில் ஏராளமான ஆட்களை மருத்துவர் கஸ்பார் கண்டார். அவர்கள் நகரத்துக்கு ஓடி வந்து கொண்டிருந்தார்கள். தப்பி வந்து கொண்டிருந்தார்கள். பல நிறக் கொடிகள் போலத் தொலைவில் காணப்பட்டார்கள் ஆட்கள். குதிரைகள் மேல் இருந்த காவல் படையினர் மக்களை விரட்டினார்கள்.

இவை எல்லாம் திரைப்படக் காட்சி போல் இருந்ததாக மருத்துவர் கஸ்பார் நினைத்தார். பளிச்சென்று வெயில் அடித்தது, பசுமை பளபளத்தது. குண்டுகள் பஞ்சுத் துண்டுகள் போல வெடித்தன. தழல் நொடிப் போது பளிச்சிட்டு மறைந்தது. யாரோ கண்ணாடியில் சூரிய பிம்பத்தைக் கூட்டத்தின் மேல் படும்படித் திருப்பியது போல இருந்தது அந்தக் காட்சி. குதிரைகள் எம்பிக் குதித்தன, பின்னங் கால்களில் நின்றன, பம்பரமாய்ச் சுழன்றன.

பூங்காவும் அரண்மனையும் வெண்புகையால் மூடப்பட்டிருந்தது.

''ஓடி வருகிறார்கள்!''

''ஆட்கள் ஓடி வருகிறுர்கள்... மக்கள் தோற்று விட்டார்கள்!''

ஓடி வந்தவர்கள் நகரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். கும்பல் கும்பலாக ஆட்கள் வழியில் விழுந்தார்கள். பசுந்தரையில் பல நிறத் துணித் துண்டுகள் சிதறுவது போலக் காணப் பட்டது.

குண்டு சதுக்கத்துக்கு மேலாகச் சீழ்க்கை அடித்துப் பாய்ந்தது.

ஒருவன் பயந்து போய்த் தொலைநோக்கியைத் தவற விட்டான். குண்டு வெடித்தது. கோபுரத்தின் உச்சியில் இருந்தவர்கள் எல்லோரும் கோபுரத்துக்கு உள்ளே போவதற்காகத் திரும்பிக் கீழே பாய்ந்தார்கள்.

ஒரு கொல்லனுடைய தோல் முன் தாங்கி ஒரு கொக்கியில் மாட்டிக் கொண்டது. அவன் திரும்பினுன், பயங்கரமான எதையோ பார்த்து, சதுக்கம் முழுவதிலும் கேட்கும்படி வீரிட் டான்:

''ஓடுங்கள்! கருமான் புரோஸ்பெரோவைப் படையினர் பிடித்து விட்டார்கள்! இதோ அவர்கள் நகரில் புகுந்து விடுவார்கள்!''




COMICS PDF TIMES

சதுக்கத்தில் பெருங் குழப்பம ஏற்பட்டது. கூட்டம் வாயிலிலிருந்து பின்வாங்கி, சந்துகளுக்குப் பாய்ந்து ஓடியது. பீரங்கி வெடிகளால் எல்லோரும் செவிடுகள் ஆகி விட்டார்கள்.

மருத்துவர் கஸ்பாரும் இன்னும் இரண்டு நபர்களும் கோபுரத்தின் மூன்றும் மாடியில் தங்கி விட்டார்கள். பருத்த சுவற்றில் இருந்த குறுகிய சன்னல் திறப்பின் வழியாக அவர்கள் வெளியே பார்த்தார்கள்.

ஒருவர் தான் சரியாகப் பார்க்க முடிந்தது. மற்றவர்கள் ஒரு கண்ணுல் பார்த்தார்கள். மருத்துவரும் ஒரு கண்ணுல் பார்த்தார், ஆனுல் ஒரு கண்ணுக்குக் கூடக் காட்சி பயங்கரமாய் இருந்தது.

பிரமாண்டமான இரும்புக் கதவுகள் விரியத் திறந்தன. ஒரு முந்நூறு ஆட்கள் ஒரே நேரத்தில் வாயிலுக்குள் பாய்ந்தார்கள். பச்சைக் கைம்முனைகள் உள்ள சாம்பல் நிறக் கம்பளிச் சட்டைகள் அணிந்த கம்மியர்கள் அவர்கள். இரத்தம் பெருக்கியபடி அவர்கள் விழுந்தார்கள். காவல் படையினர் குதிரைகளை அவர்களுடைய தலைகளில் விரட்டிச் சென்ருர்கள். காவல்





படையினர் வாட்களால் வெட்டினர்கள், துப்பாக்கிகளால் சுட்டார்கள். மஞ்சள் இறகுகள் விரிந்தன, கறுப்பு மெழுகுத் துணித் தொப்பிகள் பளிச்சிட்டன. குதிரைகள் சிவந்த வாய்களைத் திறந்தன, கண்களை உருட்டி விழித்தன, நுரையைச் சிந்தின.

''பாருங்கள்! பாருங்கள்! புரோஸ்பெரோ!'' என்று கத்தினர் மருத்துவர்.

கருமான் புரோஸ்பெரோ சுருக்கு மாட்டி இழுத்து வரப்பட்டான். அவன் நடந்தான், விழுந்தான், மறுபடி எழுந்தான். அவனுடைய செம்பழுப்புத் தலைமயிர் சிடுக்காகி இருந்தது. முகத்தில் இரத்தம் கசிந்தது, கழுத்தில் பருத்த சுருக்கு மாட்டி இருந்தது.

''புரோஸ்பெரோ! கைதி ஆகி விட்டான்!'' என்று கத்தினர் மருத்துவர்.

அந்த நேரத்தில் சலவைச் சாலையைக் குண்டு தாக்கியது, கோபுரம் சாய்ந்தது, ஆடிற்று, சாய்ந்த நிலையில் ஒரு வினடி நின்றது, பின்பு தகர்ந்து சரிந்தது. மருத்துவர் குப்புற விழுந்தார். அவருடைய மறு செருப்பின் குதியும் கைத்தடியும் பெட்டியும் மூக்குக் கண்ணடியும் நழுவி விழுந்து விட்டன.





## அத்தியாயம் 2

# தலைகளை வெட்டப் பத்து மேடைகள்



மருத்துவர் நல்லபடியாக விழுந்தார். அவர் மண்டையை உடைத்துக் கொள்ளவில்லை, அவருடைய கால்களும் முழுதாக இருந்தன. ஆனால் இதற்கு எவ்வித அர்த்தமும் கிடையாது. குண்டினால் தாக்கப்பட்ட கோபுரத்தோடு நல்லபடியாக விழுவது கூட நிரம்ப விரும்பத் தக்கது அல்ல. அதிலும், மருத்துவர் கஸ்பார் போல இளமையைக் கடந்து விட்டவரும் அனேகமாக முதியவரும் ஆன மனிதருக்கோ, இது கொஞ்சங்கூட இனியது அல்ல. என்ன ஆனாலும், வெறும் அச்சம் காரணமாகவே மருத்துவர் உணர்வு இழந்தார். அவருக்கு நினைவு தெளிந்த போது மாலை ஆகி விட்டிருந்தது. மருத்துவர் சுற்றிலும் பார்த்தார். ''எவ்வளவு சங்கடம்! மூக்குக் கண்ணாடி உடைந்து விட்டது. கண்ணாடி இல்லாமல் நான் பார்க்கும் போது கூர்மை யான பார்வை உள்ளவன் கண்ணாடி மாட்டிக் கொண்டால் எப்படிப்பார்ப்பானோ அப்படித் தான் பார்க்கிறேன் போல் இருக்கிறது. இது மிகவும் பிடிக்காத சேதி'' என்று சொல்லிக் கொண்டார்.

பிறகு பிய்ந்து போன செருப்புக் குதிகளைப் பற்றி முணுமுணுத்தார்:

''ஏற்கெனவே நான் உயரம் அல்ல. இப்போதோ, ஓர் அங்குலம் கட்டை ஆகிவிடுவேன். அல்லது, ஒருவேளை இரண்டு அங்குலமோ, ஏன் என்றால், பிய்ந்து போனவை இரண்டு குதிகள் ஆயிற்றே? இல்லை, ஓர் அங்குலம் மட்டுந்தான்...''

சல்லிக் கற்களின் குவியல் மேல் கிடந்தார் அவர். அனேகமாகக் கோபுரம் முழுவதும் இடிந்து விழுந்திருந்தது. சுவற்றின் நீளமான, குறுகிய துண்டு எலும்பு போலத் துருத்திக் கொண்டிருந்தது. வெகு தொலைவில் வாத்தியங்கள் இசைத்துக் கொண்டிருந்தன. குதூகலமான

வால்ட்ஸ் நடன மெட்டு காற்ருேடு பறந்து போய் மறைந்து விட்டது, திரும்பவில்லே. மருத்துவர் தலேயை நிமிர்த்திஞர். முறிந்த கறுப்பு உத்திரக் கட்டைகள் மேலே வெவ்வேறு பக்கங்களிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தன. பசுமையான மாலே வானத்தில் விண்மீன்கள் மினுமினுத்தன.

''எங்கே வாத்தியம் வாசிக்கிருர்கள்?'' என்று வியந்தார் மருத்துவர்.

மழைக்கோட்டு இல்லாததால் குளிர்ந்தது. சதுக்கத்தில் ஒரு குரல் கூடக் கேட்கவில்லே. மருத்துவர் முக்கி முனகிக் கொண்டு ஒன்றன் மேல் ஒன்ருக விழுந்து கிடந்த கற்களுக்கு நடுவே எழுந்தார். வழியில் ஒருவனுடைய பெரிய பூட்சில் அவருடைய கால் மாட்டிக் கொண்டது. ஒரு கருமான் உத்திரத்தின் குறுக்கே நீட்டிப் படுத்து, வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். மருத்துவர் அவனேக் கொஞ்சம் அசைத்தார். ஆனுல் அவன் எழுந்திருப்பதாய் இல்லே. இறந்து போயிருந்தான்.

இறந்தவனுக்கு மரியாதை காட்டுவதற்காகத் தொப்பியைக் கழற்றக் கையைத் தூக்கிஞர் மருத்துவர்.

''என் தொப்பியும் காணுமல் போய் விட்டது. எங்கே தான் போவது நான்?''

அவர் சதுக்கத்திலிருந்து வெளியேறிஞர். வழியில் ஆட்கள் கிடந்தார்கள். மருத்துவர் ஒவ்வொருவரையும் தாழக் குனிந்து பார்த்தார். அவர்களுடைய விரியத் திறந்த விழிகளில் நட்சத்திரங்கள் பிரதிபலிக்கக் கண்டார். உள்ளங்கையால் அவர்களுடைய நெற்றிகளேத் தொட்டுப் பார்த்தார். அவை மிகவும் குளிர்ந்து இரத்தத்தால் நனேந்திருந்தன. இரவில் இரத்தம் கறுப்பாகத் தெரிந்தது.

''ஓகோ, அப்படியா! ஆக, மக்கள் தோற்று விட்டதாகத் தெரிகிறது... இனி என்ன தான் நடக்கும்?'' என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டார் மருத்துவர்.

ஓர் அரை மணி நேரத்தில் அவர் ஆள் நடமாட்டம் உள்ள இடங்களே அடைந்தார். நிரம்பக் களேத்துப் போயிருந்தார். அவருக்குப் பசியும் தாகமுமாக இருந்தது. இங்கே நகரம் வழக்கம் போலக் காட்சி அளித்தது.

நீண்ட நடைக்குப் பின் இளேப்பாறியபடி நாற் சந்தியில் நின்று கொண்டு மருத்துவர் எண்ணமிட்டார்: ''என்ன ஆச்சரியம்! பல நிற விளக்குகள் எரிகின்றன, வண்டிகள் விரைகின்றன, கண்ணுடிக் கதவுகள் கிணுகிணுக்கின்றன. அரை வட்டச் சன்னல்கள் பொன் ஒளி வீசுகின்றன. அங்கே தூண்களே ஒட்டிஞற்போல ஆண், பெண் இணேகள் தோன்றித்தோன்றி மறைகின்றன. குதூகலமான கூட்ட நடனம் நடந்து கொண்டிருக்கிறது. கறுப்பு நீருக்கு மேலே சீன வண்ண விளக்குகள் சுழல்கின்றன. மனிதர்கள் நேற்று வாழ்ந்தது போலவே வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இன்று காலே நடந்தது என்ன என்பது இவர்களுக்குத் தெரியாதா என்ன? குண்டுகள் வெடித்ததும் முனகல்களும் இவர்கள் காதுகளில் படவில்லேயா என்ன? மக்கள் தலேவன், கருமான் புரோஸ்பெரோ கைதி ஆகி விட்டான் என்பது இவர்களுக்குத் தெரியாதோ? ஒருவேளே ஒன்றுமே நடக்கவில்லேயோ? நான் தான் பயங்கரமான கனவு கண்டேனே ஒருவேளே?''

மூன்று விளக்குகள் எரிந்து கொண்டிருந்த கம்பம் இருந்த மூலேயில் நடைபாதை ஓரமாக வாடகை வண்டிகள் நின்று கொண்டிருந்தன. பூக்காரிகள் ரோஜா மலர்கள் விற்றுக் கொண்டிருந்தார்கள். வண்டிக்காரர்கள் பூக்காரிகளோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அவனேச் சுருக்கு மாட்டி ஊர் நெடுக இழுத்துப் போனுர்கள். பாவம், அவன்!''

''இப்போது அவனே இரும்புக் கூண்டில் வைத்திருக்கிருர்கள். கூண்டு மூன்று தடியர்களின் அரண்மனேயில் இருக்கிறது'' என்ருன் ரிப்பன் கட்டிய இள நீலப் பட்டுத் தொப்பி அணிந்த பருத்த வண்டிக்காரன் ஒருவன்.

அப்போது ஒரு சீமாட்டி ரோஜா வாங்குவதற்காகப் பெண்ணுடன் பூக்காரிகளிடம் வந்தாள்.



''யாரைக் கூண்டில் வைத்திருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

''கருமான் புரோஸ்பெரோவை. காவல் படையினர் அவனைக் கைது செய்து விட்டார்கள்.''

''நல்லதுதான், ஆண்டவன் காப்பாற்றினான்!'' என்றாள் சீமாட்டி.

பெண் சிணுங்கினாள்.

''நீ எதற்காக அழுகிறாய், அசடே?'' என்று ஆச்சரியப்பட்டாள் சீமாட்டி. ''கருமான் புரோஸ்பெரோ மேல் இரக்கப்படுகிறாயா? அவன் மேல் இரக்கப்பட வேண்டாம். அவன் நமக்குத் தீங்கு செய்யப் பார்த்தான். இதோ பார், எவ்வளவு அழகான ரோஜாக்கள்...''

கைப்பான தண்ணீரும் இலைகளும் நிறைந்த தாம்பாளங்களில் அன்னங்கள் போல மெதுவாக நீந்திக் கொண்டிருந்தன பெரிய ரோஜா மலர்கள்.

''இந்தா, மூன்று ரோஜாப் பூக்கள் உனக்கு. அழுவதற்குக் காரணமே கிடையாது. அவர்கள் கலகக்காரர்கள். அவர்களை இரும்புக் கூண்டுகளில் அடைக்காவிட்டால் அவர்கள் நம்முடைய வீடுகளையும் உடைகளையும் ரோஜாப் பூக்களையும் பறித்துக் கொண்டு நம்மைக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டு விடுவார்கள்.''

அந்தச் சமயத்தில் அருகாக ஓடினான் ஒரு பையன். நட்சத்திரங்கள் தைத்த சீமாட்டியின் மழைக்கோட்டை அவன் முதலில் பிடித்து இழுத்தான், பெண்ணின் பின்னலை இழுத்தான்.

''பரவாயில்லை, சீமாட்டியாரே! கருமான் புரோஸ்பெரோ கூண்டில் இருக்கிறான், ஆனால் கழைக்கூத்தாடி திபூல் வெளியே சுதந்திரமாய் இருக்கிறான்!'' என்று கத்தினான்.

''அட துடுக்கா!''

சீமாட்டி காலைத் தொப்பென்று அடித்தவள் கைப் பையைத் தவற விட்டு விட்டாள். பூக்காரிகள் கலீரென்று சிரிக்கத் தொடங்கினார்கள். பருத்த வண்டிக்காரன் இந்த அமளியைப் பயன்படுத்திக் கொண்டு, தன் வண்டியில் ஏறிப் போகும்படிச் சீமாட்டிக்கு யோசனை சொன்னான்.

சீமாட்டியும் பெண்ணும் வண்டியில் ஏறிப் போய் விட்டார்கள்.

''டேய் துடியா, பொறு!'' என்று பையனைக் கூவி அழைத்தாள் பூக்காரி. ''இங்கே வாயேன்! சொல்லு உனக்குத் தெரிந்ததை...''

இரண்டு வண்டிக்காரர்கள் முன் இருக்கைகளிலிருந்து இறங்கி, ஐந்து தோள் மூடிகள் வைத்த மேல் கோட்டுக்களில் சிக்கித் தடுமாறியபடிப் பூக்காரிகளின் பக்கத்தில் வந்தார்கள்.

''ஆகா, சாட்டை என்றுல் இதுதான் சாட்டை! சாட்டை மன்னன்!'' என்று வண்டிக்காரன் வீசி ஆட்டிய நீளச் சவுக்கைப் பார்த்து எண்ணிக் கொண்டான் பையன். அந்த மாதிரிச்சாட்டை தனக்கு இருக்க வேண்டும் என்று பையன்



நிரம்ப ஆசைப்பட்டான், ஆனுல் பல காரணங்களால் அந்த ஆசை நிறைவேறக் கூடாததாக இருந்தது.

''அப்படியானுல் நீ என்ன சொல்லுகிறுய்? சர்க்கஸ்காரன் திபூல் பிடிபடவில்லை என்கிறுயா?'' என்று கட்டைக் குரலில் கேட்டான் வண்டிக்காரன்.

''எல்லாரும் அப்படிச் சொல்லுகிறுர்கள். நான் துறைமுகத்துக்குப் போயிருந்தேன்...''

''காவல் படையினர் அவனைக் கொன்று விடவில்லையா?'' என்று தானும் கட்டைக் குரலில் கேட்டான் இன்னொரு வண்டிக்காரன்.

'''இல்லே, பெரியவரே... அழகு ராணீ, ஒரு ரோஜாப் பூ எனக்குப் பரிசாகத் தாயேன்!''



''பொறுடா, அசடே. முதலில் சேதி சொல்லு...''

''ஆகட்டும். வந்து, அதாவது, இப்படியாக்கும்... அவன் கொல்லப்பட்டான் என்றே முதலில் எல்லோரும் நினைத்தார்கள். பிறகு இறந்தவர்களுக்கு நடுவே அவனைத் தேடினார்கள். அவனே, கிடைக்கவில்லே.''

''ஒருவேளை அவனை அகழில் தள்ளி இருப்பார்களோ?'' என்று கேட்டான் வண்டிக்காரன்.

ஒரு பிச்சைக்காரன் இந்தப் பேச்சில் குறுக்கிட்டான்.

''யாரை அகழில்? சர்க்கஸ்காரன் திபூல் ஒன்றும் பூனை அல்ல, அகழில் தள்ளி மூழ்கடிப்பதற்கு. சர்க்கஸ்காரன் திபூல் உயிரோடு இருக்கிறான். அவனுக்குத் தப்பி ஓட வாய்த்து விட்டது'' என்றான் பிச்சைக்காரன்.

''புளுகுகிறாய், ஓட்டைப் பயலே!'' என்றான் வண்டிக்காரன்.

''சர்க்கஸ்காரன் திபூல் உயிரோடு இருக்கிறானும்!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூவினார்கள் பூக்காரிகள்.

பையன் ரோஜாப் பூவைச் சட்டென உருவிக் கொண்டு ஓட்டம் எடுத்தான். ஈரப் பூவிலிருந்து நீர்த் துளிகள் மருத்துவர் மேல் சொட்டின. கண்ணீர் போலக் கைத்த துளிகளை மருத்துவர் முகத்திலிருந்து துடைத்துக் கொண்டார். பின்பு, பிச்சைக்காரன் சொல்வதை உற்றுக் கேட்பதற்காக இன்னும் கிட்டே போனார்.

அப்போது ஒரு நிகழ்ச்சி காரணமாகப் பேச்சு தடைப்பட்டது. வீதியில் அசாதாரணமான ஊர்வலம் ஒன்று வந்தது. இரண்டு குதிரை வீரர்கள் தீவட்டிகளுடன் முன்னே வந்தார்கள். நெருப்புத் தாடிகள் போல விரிந்தன தீவட்டிச் சுவாலைகள். அரசின் சின்னம் பொறித்த கறுப்பு வண்டி அவற்றின் பின்னே மெதுவாக நகர்ந்தது.

எல்லாவற்றுக்கும் பின்னால் நடந்தார்கள் தச்சர்கள். அவர்கள் நூறு பெயர் இருந்தார்கள்.

அவர்கள் சட்டைக் கைகளை மடக்கி விட்டுக் கொண்டு, வேலைக்குத் தயாராக முன்தாங்கிகள் மாட்டிக் கொண்டு, ரம்பங்களையும் இழைப்புளிகளையும் பெட்டிகளையும் கக்கங்களில் இடுக்கியபடி நடந்தார்கள். ஊர்வலத்தின் இரண்டு பக்கங்களிலும் குதிரைகள் மேல் வந்தார்கள் காவல் படையினர். பாய்ந்து ஓடப் பார்த்த குதிரைகளை இழுத்து அடக்கிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

''என்ன இது? என்ன இது?'' என்று கிளர்ச்சி பொங்கக் கேட்டார்கள் வழிப்போக்கர்கள்.

சின்னம் பொறித்த கறுப்பு வண்டியில் மூன்று தடியர்களின் ஆலோசனைக் குழு அதிகாரி உட்கார்ந்திருந்தான். பூக்காரிகள் பயந்து போனார்கள். உள்ளங்கைகளைக் கன்னங்கள் வரை உயர்த்தியபடி அதிகாரியின் தலையைப் பார்த்தார்கள். வண்டியின் கண்ணாடிக் கதவு வழியே அது தெரிந்தது. வீதியில் விளக்குகள் பளிச்சென்று ஒளி பரப்பின. பொய் மயிர்த் தொப்பி அணிந்த கறுப்புத் தலை உயிர் இல்லாதது போல ஆடிற்று. வண்டியில் பறவை உட்கார்ந்திருப்பது போல் இருந்தது.

''விலகுங்கள்!'' என்று கத்தினார்கள் காவல் படையினர்.

''தச்சர்கள் எங்கே போகிறார்கள்?'' என்று காவல் படை அதிகாரியிடம் கேட்டாள் சின்னப் பூக்காரி.

காவல் படை அதிகாரி நேரே அவள் முகத்தைப் பார்த்து வெறிக் கூச்சல் போடவே, மாறு காற்று அடித்தது போல அவளுடைய தலைமயிர் பறந்தது.

''தலைகளை வெட்டுவதற்கான மேடைகள் கட்டப் போகிறார்கள் தச்சர்கள்! புரிந்ததா? தச்சர்கள் பத்து வெட்டு மேடைகள் கட்டுவார்கள்!''

''அப்படியா?''

பூக்காரி தாம்பாளத்தை நழுவ விட்டாள். தண்ணீருடன் ரோஜாப் பூக்கள் சாறுடன் வெந்த பழங்கள் போலக் கொட்டின.

''அவர்கள் வெட்டு மேடைகள் கட்டப் போகிறார்கள்!'' என்று அருவருப்போடு திருப்பிச் சொன்னார் மருத்துவர் கஸ்பார்.

காவல் படையினன் திரும்பி, பூட்சுகள் மாதிரி முறுக்கிய மீசைகளின் அடியில் பற்கள் தெரியும்படித் திறந்து காட்டி, ''வெட்டு மேடைகள்! எல்லாக் கலகக்காரர்களுக்கும் வெட்டு மேடைகள்! எல்லார் தலைகளும் வெட்டப்படும்! மூன்று தடியர்களின் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்யத் துணிபவர்கள் எல்லோருடைய தலைகளும் துண்டாகி விடும்!'' என்று கூச்சல் போட்டான்.

மருத்துவரின் தலை சுற்றியது. மூர்ச்சை போட்டு விழுந்து விடுவார் என்று அவருக்குத் தோன்றியது.

''இன்றைக்கு நான் அளவு கடந்து நிறைய அனுபவித்து விட்டேன். தவிர எனக்குக் கடும் பசியாகவும் களைப்பாகவும் இருக்கிறது. சட்டுப் புட்டென்று வீடு போய்ச் சேர வேண்டும்'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார் மருத்துவர்.

உண்மையாகவே மருத்துவருக்கு இளைப்பாற நேரம் வந்து விட்டது. நிகழ்ந்தவை, கண்டவை, கேட்டவை எல்லாவற்றாலும் ஒரேயடியாகக் கிளர்ச்சி அடைந்திருந்ததால், இடிந்த கோபுரத்தோடு தாமும் சரிந்து விழுந்ததையும், தொப்பியும் மழைக்கோட்டும் கைத்தடியும் செருப்புக் குதிகளும் தவறிவிட்டதையும் கூட அவர் பொருட்படுத்தவில்லை. மூக்குக் கண்ணாடி போனதுதான் எல்லாவற்றிலும் மோசமாக இருந்தது.

அவர் வண்டி வைத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.



## அத்தியாயம் 3

# விண்மீன் சதுக்கம்



மருத்துவர் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். கீல் பூசிய மிக அகலமான சாலைகள் வழியாக அவருடைய வண்டி போய்க் கொண்டிருந்தது. ஹால்களை விடப் பிரகா சமாக ஒளி வீசிக் கொண்டிருந்தன இந்தச் சாலைகள். அவற்றுக்கு மேலே விளக்குகளின் வரிசை வானளாவ உயர்ந்திருந்தது. கண்களைக் கூசச் செய்யும்படிக் கொதித்த பால் நிரம் பிய பலூன்கள் போல இருந்தன தெரு விளக்குகள். விளக்குகளைச் சுற்றி மொய்ப்பதும் நொய்யென்று இரைவதும் மடிவதுமாக இருந்தன சிறு பூச்சிகள். மருத்துவருடைய வண்டி கரையோரச் சாலையில் தடுப்புக் கற் சுவர்களை ஒட்டிச் சென்றது. முன் கால்களில் கேடயங் களைப் பிடித்துக் கொண்டு நாக்குக்களைத் துருத்திக் கொண்டிருந்த சிங்கங்களின் வெண்கலச் சிலைகள் அவற்றின் மேல் இருந்தன. கீலெண்ணெய் போலக் கறுப்பாகப் பளபளத்த குழம்பல் நீர் கீழே மெதுவாகப் பெருகிற்று. நகரத்தின் நிழல் உருவம் நீரில் தலைகீழாகத் தெரிந்தது. அது மூழ்கிற்று, நீந்தி வெளியேறப் பார்த்தது. ஆனால் வெளியேற முடியாமல் மெல்லிய தங்கப் புள்ளிகளாகக் கரைய மட்டுமே செய்தது. மருத்துவரின் வண்டி கமான்களின் வடிவில் வளைந் திருந்த பாலங்கள் வழியாகப் போயிற்று. கீழே இருந்தோ, மறு கரையில் இருந்தோ பார்ப் பதற்கு இந்தப் பாலங்கள் தாவிக் குதிப்பதற்கு முன்னால் இரும்பு முதுகுகளை வளைக்கும் பூனைகள் போலக் காணப்பட்டன. இங்கே, நகரில் புகும் இடத்தில், ஒவ்வொரு பாலத்தின் மேலும் காவல் படை இருந்தது. படையினர் முரசுகளின் மேல் உட்கார்ந்து சுங்கான்களைப் புகைத்துக்

கொண்டும், சீட்டு ஆடிக் கொண்டும், நட்சத்திரங்களைப் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

மருத்துவர் வண்டியில் போனபடியே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தார்.

வீதியிலிருந்தும் வீடுகளிலிருந்தும் சாப்பாட்டுக் கடைகளின் திறந்த சன்னல்களிலிருந்தும் உல்லாசப் பொழுதுபோக்குத் தோட்டங்களிலிருந்தும் வந்த ஒரு பாட்டின் சில சொற்கள் காதில் விழுந்தன:

கருமான் புரோஸ்பெரோவின் கழுத்தில்
கச்சிதமாய் விழுந்தது சுருக்கு.
உரிமைகள் ஊக்கமாய்க் கோரியவன்
உட்கார்ந்திருக்கிறான் இரும்புக் கூண்டில்.

குடி மயக்கத்தில் இருந்த ஒரு பகட்டன் இந்த அடிகளைத் திரும்பிப் பாடினான். அவனுடைய அத்தை செத்துப் போனாள். ஏராளமான பணமும் அதை விட ஏராளமான மச்சங்களும் அவளுக்கு இருந்தன, ஆனால் நேர் வாரிசு ஒருவன் கூட இல்லை. அத்தையின் பணம் எல்லாம் வாரிசு உரிமையாகப் பகட்டனுக்குக் கிடைத்திருந்தது. ஆகையால்தான் பணக்காரர்களின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளம்பியது அவனுக்குப் பிடிக்கவில்லை.

விலங்குக் காட்சிச் சாலையில் பெரிய நாடகம் நடந்து கொண்டிருந்தது. மயிர் அடர்ந்த மூன்று கொழுத்த குரங்குகள் மூன்று தடியர்களாக நடித்துக் கொண்டிருந்தன. நரி வேட்டை நாய் வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தது. கோமாளியின் கருஞ்சிவப்பு உடையின் முதுகுப் பக்கம் சூரிய பிம்பமும் வயிற்றின் மேல் சந்திர பிம்பமும் வரையப்பட்டிருந்தன. இசையின் தாளத்துக்குப் பொருந்த அவன் செய்யுள் படித்துக் கொண்டிருந்தான்:

மூன்று கோதுமை மூட்டைகள் போல்
மூன்று தடியர் சுமந்தார் நம்மேல்!
தொந்திகளை வளர்ப்பதிலேயே
எந்தப் பொழுதும் குறி அவர்க்கு!
இருங்கள் உஷாராக, தடியர்களே,
நெருங்குது சாக்காடு உங்களையே!''

''நெருங்குது சாக்காடு உங்களையே!'' என்று நான்கு பக்கங்களிலும் இருந்து கத்தின தாடிக்காரக் கிளிகள்.

நம்ப முடியாத அளவு கூச்சல் கிளம்பியது. வெவ்வேறு கூண்டுகளில் இருந்த பிராணி களும் பட்சிகளும் குலைக்கவும் உறுமவும் கிரீச்சிடவும் சீழ்க்கை அடிக்கவும் தொடங்கின.

குரங்குகள் மேடையில் இங்கும் அங்கும் தாவின. அவற்றின் கால்கள் எங்கே, கைகள் எங்கே என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அவை பார்வையாளர்கள் மேல் தாவிக் குதித்துத் தப்பி ஓடப் பார்த்தன. பார்வையாளர்கள் நடுவிலும் குழப்பம் ஏற்பட்டது. அதிகத் தடியாய் இருந்தவர்கள் சிறப்பாகக் கூச்சல் போட்டார்கள். தடியர்கள் கன்னங்கள் சிவக்க, ஆத்திரத் தால் உடம்புகள் நடுங்க, தொப்பிகளையும் இரட்டை நோக்காடிகளையும் கோமாளி மேல் எறிந்தார்கள். ஒரு கொழுத்த சீமாட்டி குடையை ஆட்டினாள். குடை பக்கத்திலிருந்த கொழுத்த மாதின் தலையில் மாட்டி அவளுடைய தொப்பியைப் பறித்து விட்டது.

''ஐயையையோ!'' என்று அங்கலாய்த்துக் கைகளை உயர்த்தினாள் பறி கொடுத்தவள், ஏனென்றால் தொப்பியோடு கூடவே அவளுடைய பொய்மயிரும் போய் விட்டது.

தப்பி ஓடிக் கொண்டிருந்த ஒரு குரங்கு அந்த மாதின் வழுக்கை மண்டையில் பளார் என்று அறைந்தது. அவள் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாள்.

''ஹ-ஹ-ஹா!''

பார்ப்பதற்கு மெலிந்தும் மோசமாக உடை அணிந்தும் இருந்த மற்றப் பார்வையாளர் கள் ''ஹ-ஹ-ஹா!'' என்று பொங்கிப் பொங்கிச் சிரித்தார்கள். ''பலே! பலே! தொலையட்டும் இவர்கள்! மூன்று தடியர்கள் ஒழிக! புரோஸ்பெரோ நீடூழி வாழ்க! திபூல் நீடூழி வாழ்க! மக்கள் நீடூழி வாழ்க!'' என்று முழங்கினார்கள்.

அந்தச் சமயத்தில் யாரோ மிகவும் இரைந்து கத்தியது கேட்டது:

''நெருப்பு! நகரம் தீப்பிடித்து எரிகிறது...''

ஒருவரை ஒருவர் நசுக்கிக் கொண்டும் பெஞ்சிகளைப் புரட்டிக் கொண்டும் ஆட்கள் வெளி யேறும் வாயில்களுக்கு ஓடினார்கள். நாலா பக்கமும் ஓடின குரங்குகளைக் காவல்காரர்கள் பிடித் தார்கள்.

மருத்துவரை ஏற்றிப் போன வண்டியோட்டி அவர் பக்கம் திரும்பி, தனக்கு முன்னே சாட்டையால் சுட்டிக் காட்டினான்.

''காவல் படையினர் தொழிலாளர்களின் வட்டாரங்களுக்கு நெருப்பு வைக்கிறார்கள். சர்க் கஸ்காரன் திபூலைப் பிடிக்கப் பார்க்கிறார்கள் அவர்கள்...'' என்றான்.

நகரத்துக்கு மேலே, வீடுகளின் கறுப்புக் கும்பலுக்கு மேலே, ரோஜாச் செவ்வொளி நடுங்கிற்று.

நகரத்தின் பிரதானச் சதுக்கம் விண்மீன் சதுக்கம் என்று அழைக்கப்பட்டது. மருத்து வரின் வண்டி அதை நெருங்கிய போது, மேலே போவது அசாத்தியமாகத் தோன்றியது. உள்ளே போகும் வழியில் வாடகை வண்டிகளும் சாரட்டுக்களும் குதிரைச் சவாரி செய்பவர் களும் நடைப் பயணிகளுமாகப் பெருங் கூட்டம் நெரிந்தது.

''என்ன அது?'' என்று கேட்டார் மருத்துவர்.

ஒருவரும் பதிலே பேசவில்லை, ஏனென்றால் எல்லாருடைய கவனமும் சதுக்கத்தில் நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியிலேயே நிலைத்திருந்தது. வண்டிக்காரனும் தன் இருக்கையில் நட்டமாய் நின்று அந்தத் திக்கில் பார்க்கலானான்.

அந்தச் சதுக்கம் விண்மீன் சதுக்கம் என்று அழைக்கப்பட்டதற்குக் காரணம் இதுதான்: ஒரே உயரமும் வடிவமும் உள்ள பிரமாண்டமான கட்டிடங்கள் சதுக்கத்தைச் சூழ்ந்திருந்தன. சதுக்கம் கண்ணாடிக் கும்மட்டத்தால் வேயப்பட்டிருந்தது. இதனால் அது பார்ப்பதற்குப் பிர மாண்டமான சர்க்கஸ் போல் இருந்தது. கும்மட்டத்தின் நடுவில், அச்சம் தரும் உயரத்தில் எரிந்தது உலகத்திலேயே மிகவும் பெரிய தெரு விளக்கு. வியப்பூட்டும்படிப் பிரமாண்டமான உருண்டை அது. பலத்த கம்பி வடங்களில் தொங்கிய இரும்பு வளையம் அதைக் குறுக்கில் அணைத்துப் பிடித்திருந்தது. இதனால் அது வளையங்கள் சூழ்ந்த சனிக் கிரகம் போலக் காணப் பட்டது. விளக்கின் ஒளி மிகவும் இனியதாக இருந்தது. உலகின் எந்த ஒளியையும் அது நிகர்த் திருக்கவில்லை. ஆகையால் நகர மக்கள் அந்த விளக்குக்கு விண்மீன் என்ற விந்தையான பெயரை இட்டிருந்தார்கள். சதுக்கம் முழுவதற்கும் அந்தப் பெயர் வழங்கலாயிற்று.

சதுக்கத்திலோ, அக்கப் பக்கத்தில் இருந்த வீடுகளிலோ, வீதிகளிலோ மேற்கொண்டு எந்த வெளிச்சமும் தேவைப்படவில்லை. எல்லாச் சந்து பொந்துகளுக்கும் கல் வளையமாகச் சதுக்கத் தைச் சூழ்ந்திருந்த வீடுகளின் எல்லா மூலைகளுக்கும் சாமான் அறைகளுக்கும் வெளிச்சம் தந்து கொண்டிருந்தது விண்மீன். விளக்குகளோ மெழுகுவத்திகளோ இல்லாமலே அங்கிருந்தவர்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

சாரட்டுகளுக்கும் வாடகை வண்டிகளுக்கும் மருந்துக் குப்பிகளின் மூடிப் பகுதிகள் போலி ருந்த வண்டியோட்டிகளின் தொப்பிகளுக்கும் மேலாகப் பார்வை செலுத்தினான் மருத்துவரின் வண்டிக்காரன்.

''உங்களுக்கு என்ன தெரிகிறது? அங்கே என்ன நடக்கிறது?'' என்று வண்டியோட்டியின் முதுகுக்குப் பின்னாலிருந்து எட்டிப்பார்த்தபடிக் கவலையுடன் கேட்டார் மருத்துவர். உருவத்தில்

சிறியவரான அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை. போதாக்குறைக்கு அவருக்குப் பார்வையும் மந்தம்.

வண்டியோட்டி தான் கண்டது எல்லாவற்றையும் விவரித்தான்.

அவன் கண்டது இதுதான்.

சதுக்கத்தில் ஒரே கொந்தளிப்பாக இருந்தது. மிகப் பெரிய வட்ட வெளியில் ஆட்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். சதுக்கத்தின் வட்டம் குடை ராட்டினம் மாதிரிச் சுழல்வது போலக் காணப்பட்டது. உயரே நிகழ்ந்ததை முன்னிலும் நன்றாகப் பார்ப்பதற்காக ஆட்கள் ஓர் இடம் விட்டு வேறு இடத்துக்கு மாறிய வண்ணமாய் இருந்தார்கள்.

உயரத்தில் தகதகவென்று எரிந்து கொண்டிருந்த அற்புத விளக்கு சூரியன் போலக் கண்களைக் கூசச் செய்தது. ஆட்கள் தலைகளை உயர நிமிர்த்தி, கண்களைக் கைகளால் மறைத்துக் கொண்டார்கள்.

''அதோ அவன்! அதோ அவன்!'' என்ற கூச்சல்கள் கேட்டன.

''அதோ, பாருங்கள்! அங்கே!''

''எங்கே? எங்கே?''

''இன்னும் உயரே!''

''திபூல்! திபூல்!''

நூற்றுக் கணக்கான சுட்டு விரல்கள் இடது பக்கம் காட்டின. அங்கே ஒரு சாதாரண வீடு இருந்தது. ஆனால் அதன் ஆறு மாடிகளிலும் எல்லாச் சன்னல்களும் திறந்திருந்தன. ஒவ்வொரு சன்னலிலிருந்தும் தலைகள் வெளியே துருத்தி இருந்தன. அவை வெவ்வேறு விதமாகக் காட்சி அளித்தன. சில குஞ்சலங்கள் உள்ள இரவுக் குல்லாய்கள் அணிந்திருந்தன. மற்றவை செம்மஞ்சள் சுருள்கள் உள்ள ரோஜா நிறத் தொப்பிகள் போட்டிருந்தன. பின்னும் சில தலைக் குட்டைகள் கட்டியிருந்தன. ஏழை இளைஞர்கள்—கவிகளும் ஓவியர்களும் நடிகைகளும்—வசித்த மேல் மாடியில் புகையிலைப் புகைப் படலங்கள் சூழ்ந்த மீசையற்ற குதூகல முகங்களும் மாதர்களின் தலைகளும் எட்டிப் பார்த்தன. தங்க நிறக் கூந்தலின் ஒளிர்வால் சூழப்பட்ட அந்த மாதர்களின் தோள்கள் மேல் இறக்கைகள் முளைத்திருப்பது போலத் தோன்றியது. அந்த வீட்டின் அழிகள் பாய்ச்சிய திறந்த சன்னல்களிலிருந்து பல நிறத் தலைகள் பறவைகள் போல வெளியே துருத்திக் கொண்டிருந்ததால் அந்த வீடு பொன் குருவிகள் நிறைந்த பெரிய கூண்டு போலக் காட்சி அளித்தது. அந்தத் தலைகளுக்கு உடையவர்கள் கூரை மேல் நடந்து கொண்டிருந்த மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். முகம் பார்க்கும் கண்ணாடி இல்லாமல் சொந்தக் காதுகளைப் பார்ப்பது எப்படி முடியாதோ அப்படியே இதுவும் முடியாததாக இருந்தது. சொந்த வீட்டிலிருந்து சொந்தக் கூரையைப் பார்க்க விரும்பிய இந்த மனிதர்களுக்கு அந்த மாதிரிக் கண்ணாடியாக இருந்தது சதுக்கத்தில் வெறிக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்த கூட்டம். அது எல்லாவற்றையும் பார்த்தது, கத்திற்று, கைகளை வீசி ஆட்டியது. சிலர் பெரு மகிழ்ச்சியையும் மற்றவர்கள் கடுங்கோபத்தையும் வெளியிட்டார்கள்.

கூரையில் நகர்ந்து கொண்டிருந்தது சிறு உருவம். அது மெதுவாகவும் எச்சரிக்கையுடனும் தன்னம்பிக்கையுடனும் கட்டிடத்தின் முக்கோண முகட்டினுடைய சரிவில் இறங்கிற்று. அதன் கால்களுக்கு அடியில் இரும்பு கணகணத்தது.

சர்க்கஸ் கழைக் கூத்தாடி பச்சைச் சீனக் குடையின் உதவியால் நிலையைச் சமமாக வைத்துக் கொள்வது போல இந்த உருவம் மழைக் கோட்டை வீசி ஆட்டி நிலையைச் சமப்படுத்திக் கொண்டது.

சர்க்கஸ்காரன் திபூல்தான் அந்த உருவம்.

''சபாஷ், திபூல்! பலே, திபூல்!'' என்று ஆர்ப்பரித்தார்கள் மக்கள்.

''உறுதியாய் இரு! சந்தையில் கயிற்றின் மேல் நடந்தாயே, அதை நினைவுபடுத்திக் கொள்.''

''இவன் விழ மாட்டான். நாட்டில் எல்லோரிலும் மேலான சர்க்கஸ்காரன் இவன்...''

''இவனுக்கு இது முதல் தடவை அல்ல. கயிற்றின் மேல் நடப்பதில் இவன் எவ்வளவு திறமை உள்ளவன் என்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்...''

''சபாஷ், திபூல்!''

''ஓடு! தப்பு! புரோஸ்பெரோவை விடுவி!''

வேறு சிலருக்கு ஆத்திரமாய் இருந்தது. அவர்கள் முட்டிகளை ஆட்டினார்கள்:

''உன்னால் தப்பவே முடியாதடா, கேடு கெட்ட கோமாளிப் பயலே!''

''படு மோசக்காரப் பயலே!''

''கலகக்காரப் பயலே! முயலைச் சுடுவது போல உன்னைச் சுட்டுக் கொல்ல வேண்டும்...''

''உஷார்! முகட்டிலிருந்து உன்னை வெட்டு மேடையில் தள்ளுகிறோம் பார். தலைகளை வெட்டுவதற்கான பத்து மேடைகள் நாளைக்குத் தயாராகி விடும்!''

திபூல் தன் பயங்கர நடையைத் தொடர்ந்தான்.

''எங்கிருந்து வந்தான் இவன்? இந்தச் சதுக்கத்துக்கு எப்படி வந்து சேர்ந்தான்? கூரை மேல் எப்படி ஏறினான்?'' என்று கேட்டார்கள் ஆட்கள்.

''காவல் படையினரின் கைகளிலிருந்து தப்பி விட்டான் இவன். ஓடினான், மறைந்தான். அப்புறம் நகரின் வெவ்வேறு பகுதிகளில் காணப்பட்டான். கூரைகள் மேலாக வீட்டுக்கு வீடு தாவினான். இவன் பூனை மாதிரி விசு உள்ளவன். இவனுடைய கலை இவனுக்கு உதவிற்று. நாடு பூராவும் இவனுடைய புகழ் முழங்குவது காரணத்தோடுதான்'' என்று விளக்கினார்கள் மற்றவர்கள்.

காவல் படையினர் சதுக்கத்துக்கு வந்தார்கள். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பக்கத்துத் தெருக்களுக்கு ஓடி விட்டார்கள். திபூல் தடுப்பைத் தாண்டி முகட்டு விளிம்பில் நின்றான். மழைக்கோட்டு சுற்றிய கையை நீட்டினான். பச்சை நிறமழைக் கோட்டு கொடி போல விரிந்தது.

சந்தைகளிலும் ஞாயிற்றுக் கிழமை உல்லாசக் கூட்டங்களிலும் இதே மழைக்கோட்டுடன், மஞ்சள், கறுப்பு முக்கோணங்களால் தைத்த இதே பின்னல் துணி உடையில் அவன் சர்க்கஸ் வித்தைகள் காட்டுவது வழக்கம்.

இப்போது உயரே, கண்ணாடிக் கும்மட்டத்துக்கு அடியில், சிறிய, மெல்லிய மேனியும் கோடுகள் போட்ட உடையுமாக இருந்த அவன், வீட்டின் வெள்ளைச் சுவற்றின் மேல் ஊரும் குளவி போல் காணப்பட்டான். மழைக்கோட்டு காற்றில் உப்பிய போது குளவி பளபளக்கும் பச்சைச் சிறகுகளை விரிப்பது போல் இருந்தது.

''இதோ நீ விழுந்து விடுவாய், தெருக்கூத்தாடிப் பயலே! இதோ உன்னைச் சுட்டுத் தொலைத்து விடுவார்கள்!'' என்று கத்தினான் மச்சங்கள் நிறைந்த அத்தையின் பணத்தை வாரிசுரிமையாகப் பெற்ற குடிகாரப் பகட்டன்.

COMICSPDFTIMES



காவல் படையினர் வசதியான இடத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். அவர்களுடைய அதிகாரி ஒரே கவலையில் ஆழ்ந்தவனாக ஓடினான். அவன் கையில் இருந்தது கைத்துப்பாக்கி. அவனுடைய குதி முட்கள் நீளமாய் இருந்தன.

ஒரே நிசப்தம் குடி கொண்டது. கொதி நீரில் முட்டை போலக் குதித்த நெஞ்சைப் பிடித்துக் கொண்டார் மருத்துவர்.

திபூல் ஒரு வினாடி முகட்டு விளிம்பில் தாமதித்தான். சதுக்கத்தின் எதிர்ப் பக்கத்துக்குப் போவது அவனுக்கு அவசியமாய் இருந்தது. அப்போது விண்மீன் சதுக்கத்திலிருந்து தொழிலாளர் வட்டாரங்களின் திக்கில் தப்பி ஓட அவனால் முடியும்.

சதுக்கத்தின் நடுவில், மஞ்சள், நீலப் பூக்கள் நிறைந்த பாத்தியில் நின்று கொண்டான் அதிகாரி. நீர்நிலையும் வட்டமான கல் கிண்ணத்திலிருந்து பீச்சி அடித்த நீர் ஊற்றும் அங்கே இருந்தன.

''பொறுங்கள்! இவனை நானே சுட்டுத் தள்ளுகிறேன். ரெஜிமெண்டில் எல்லோரையும் விடக் குறி தவறாமல் சுடுபவன் நான். எப்படிச் சுட வேண்டும் என்று கற்றுக் கொள்ளுங்கள்'' என்று அந்த அதிகாரி படைவீரர்களிடம் கூறினான்.

எல்லாப் பக்கங்களிலுமிருந்து, ஒன்பது வீடுகளிலிருந்து, கும்மட்டத்தின் நடுவுக்கு, விண் மீனுக்கு, இழுத்துக் கட்டப்பட்டிருந்தன ஒன்பது எஃகு வடங்கள் (கப்பல் வடக்கயிறு போலப் பருத்த கம்பிகள்).

விளக்கிலிருந்து, தகதகக்கும் அற்புத விண்மீனிலிருந்து ஒன்பது மிக நீண்ட கரும் கதிர்கள் சதுக்கத்துக்கு மேலே நாலா புறமும் போவது போலத் தோன்றியது.

அந்த நேரத்தில் திபூல் என்ன நினைத்தானோ தெரியாது. ஆனால் அவன் இந்த மாதிரி முடிவு செய்திருக்கலாம்: ''சந்தையில் வடக் கயிற்றில் வழக்கமாக நடப்பது போல இந்தக் கம்பி மேல் நடப்பேன். விழ மாட்டேன். ஒரு கம்பி விளக்கு வரை போகிறது. மற்றொன்று விளக்கிலிருந்து எதிர் வீட்டுக்குப் போகிறது. இரண்டு கம்பிகள் மேலாகவும் நடந்து நான் எதிர் வீட்டுக் கூரையை அடைந்து தப்புவேன்.''

அதிகாரி கைத்துப்பாக்கியை உயர்த்திக் குறி வைக்கலானான். திபூல் கம்பி தொடங்கிய இடம் வரை முகட்டு விளிம்பில் நடந்து, சுவற்றிலிருந்து விலகி, விளக்கை நோக்கிக் கம்பி மேல் நகரத் தொடங்கினான்.

கூட்டம் ''ஆ'' என்று மலைத்தது.

அவன் சில வேளைகளில் மிகவும் மெதுவாக நடந்தான். வேறு சில வேளைகளிலோ, விரைவாகவும் எச்சரிக்கையுடனும் அடி வைத்து, அசைந்து ஆடியபடி, கைகளை இரு புறமும் நீட்டிக் கொண்டு அனேகமாக ஓடினான். அவன் விழுந்து விடுவான் என்று ஒவ்வொரு கணமும் தோன்றியது. இதோ அவனுடைய நிழல் சுவற்றின் மேல் தெரிந்தது. அவன் விளக்கை நெருங்க நெருங்க, அவனுடைய நிழல் சுவற்றில் மேலும் மேலும் தாழ்ந்து, பெரியதும் வெளிறியதும் ஆகிக் கொண்டு போயிற்று.

கீழே இருந்தது கிடுகிடு பள்ளம்.

விளக்குக்குப் பாதி வழியில் அவன் இருந்த போது, முழு நிசப்தத்தில் அதிகாரியின் குரல் ஒலித்தது:

''இப்போது நான் சுடுவேன். அவன் நேரே குளத்தில் விழுவான். ஒன்று, இரண்டு, மூன்று!''

படாரென்ற வெடிச் சத்தம் கேட்டது.

திபூல் மேலே நடந்தான், ஆனால் அதிகாரி எதனாலோ குளத்தில் குப்புற விழுந்தான்.

அவன் கொல்லப்பட்டு விட்டான்.

காவல் படை வீரன் ஒருவனுடைய கையில் இருந்த கைத்துப்பாக்கியிலிருந்து இள நீலப் புகை வந்து கொண்டிருந்தது. அவன்தான் அதிகாரியைச் சுட்டவன்.



''நாய்ப் பயலே! மக்களுடைய நண்பனைக் கொல்லப் பார்த்தாயே! நான் அதைத் தடுத்தேன். மக்கள் நீடூழி வாழ்க!'' என்றான் அவன்.

''மக்கள் நீடூழி வாழ்க!'' என்று அவனை ஆதரித்தார்கள் மற்றக் காவல் படையினர்.

''மூன்று தடியர்கள் நீடூழி வாழ்க!'' என்று கத்தினார்கள் அவர்களுடைய எதிரிகள்.

அவர்கள் எல்லாப் புறங்களிலும் சிதறி, கம்பி மேல் நடந்து கொண்டிருந்த மனிதன் மீது குண்டுகள் சுடத் தொடங்கினார்கள்.

திபூல் விளக்கை நெருங்கி விட்டான். மழைக்கோட்டை வீசி ஆட்டி விளக்கின் ஒளியிலிருந்து கண்களை மறைத்துக் கொண்டான். குண்டுகள் குறி பிசகின. கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

படார்! படார்!

''தவறி விட்டது!''

''பலே! குறி பிசகி விட்டது!''

திபூல் விளக்கைச் சுற்றி இருந்த வளையத்தின் மேல் தோற்றினான்.

''பரவாயில்லை! அவன் மறு பக்கம் போவான்... இன்னொரு கம்பி மேல் நடப்பான். அங்கிருந்து அவனை ஒழிப்போம்!'' என்றார்கள் காவல் படையினர்.

ஒருவரும் எதிர்பாராதது அப்போது நடந்தது. விளக்கின் ஒளியில் கறுப்பு ஆகிவிட்ட கட்டங்கள் போட்ட உருவம் இரும்பு வளையத்தில் குந்தி, ஒரு நெம்புகோலைத் திருப்பிற்று. கிளிக்கென்ற ஒலியும் கிணுகிணுப்பும் கேட்டன. அக்கணமே விளக்கு அணைந்து விட்டது.

ஒரு வார்த்தை கூடப் பேச யாருக்கும் வாய்க்கவில்லை. பெட்டிக்குள் அடைபட்டது போல பயங்கர இருட்டும் பயங்கர நிசப்தமும் சூழ்ந்தன.

அடுத்த நிமிடம் மிக மிக உயரத்தில் எதுவோ மறுபடி இடித்துக் கணகணத்தது. இருண்ட கும்மட்டத்தில் வெளிறிய சதுரம் திறந்தது. இரண்டு சிறு விண்மீன்கள் மினுமினுத்த வானத் துண்டை எல்லோரும் பார்த்தார்கள். பிறகு இந்தச் சதுரத்தில், வானத்தின் பின்னணியில் புகுந்தது கரிய உருவம். கண்ணாடிக் கும்மட்டத்தின் மேல் தடதடவென்று யாரோ ஓடிய சத்தம் கேட்டது.

சர்க்கஸ்காரன் திபூல் கும்மட்டத் திறப்பின் வழியாக விண்மீன் சதுக்கத்திலிருந்து தப்பி ஓடி விட்டான்.

வெடியோசைகளாலும் திடீரென்று சூழ்ந்த இருட்டாலும் குதிரைகள் மிரண்டன.

மருத்துவரின் வண்டி குடை கவிழாமல் மயிரிழை தப்பிற்று. வண்டிக்காரன் வண்டியை எதிர்ப்புறம் திருப்பிச் சுற்றுவழியாக ஓட்டினான்.

இப்படியாக, அசாதாரணமான பகலையும் வழக்கத்துக்கு மாறான இரவையும் கழித்து விட்டு முடிவில் வீடு திரும்பினார் மருத்துவர் கஸ்பார் அர்னேரி. அவருடைய வீட்டுக் காரியங்களை மேற்பார்த்து வந்து கனிமீடு அத்தை வாயிலில் அவரை எதிர்கொண்டாள். அவள் நிரம்பக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். மெய்தானே: மருத்துவர் வீட்டை விட்டுக் கிளம்பி வெகு நேரம் ஆகி இருந்தது! கனிமீடு அத்தை கைகளை உயரே வீசினாள், ஆவென்றாள், தலையை அசைத்தாள்:

''உங்கள் மூக்குக் கண்ணாடி எங்கே? உடைந்து போய் விட்டதா? அடாடா, டாக்டர், டாக்டர்! எங்கே உங்கள் மழைக்கோட்டு? கெட்டுப்போக்கி விட்டீர்களா? அடாடாடா!..''

''கனிமீடு அத்தை, இது மட்டும் அல்லாமல், என் இரண்டு செருப்புக் குதிகளும் பிய்ந்து விழுந்து விட்டன...''

''அடாடா, எப்பேர்ப்பட்ட துரதிர்ஷ்டம்!''

''இதை விடக் கடுமையான துன்பம் இன்றைக்கு நேர்ந்தது, கனிமீடு அத்தை: கருமான் புரோஸ்பெரோ கைதி ஆகிவிட்டான். அவனை இரும்புக் கூண்டில் அடைத்திருக்கிறார்கள்.''

பகலில் நடந்தது எதுவுமே கனிமீடு அத்தைக்குத் தெரியாது. பீரங்கி வெடிகளின் சத்தம்



அவள் காதில் பட்டது, வீடுகளுக்கு மேலே ஒளியை அவள் கண்டாள். கலகக்காரர்களைத் தண்டிப்பதற்காக நீதிமன்றச் சதுக்கத்தில் நூறு தச்சர்கள் வெட்டு மேடைகளைக் கட்டுவதாக அண்டை வீட்டுக்காரி அவளிடம் சொல்லி இருந்தாள்.

''எனக்கு ஒரே பயமாய்ப் போய் விட்டது. சன்னல் கதவுகளை அடைத்தேன், எங்கும் போவதில்லை என்று முடிவு செய்தேன். நான் உங்களுக்கு ஒவ்வொரு நிமிடமும் காத்துக் கொண்டிருந்தேன். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. மதியச் சாப்பாடு ஆறிப் போயிற்று, இரவுச் சாப்பாடும் ஆறிவிட்டது. அப்படியும் உங்களைக் காணோம்...'' என்றாள் கனிமீடு அத்தை.

இரவு முடிந்து விட்டது. மருத்துவர் படுக்க ஏற்பாடு செய்யலானார்.

அவர் கற்ற நூறு கலைகளில் வரலாற்று இயலும் ஒன்று. தோல் அட்டை போட்ட பெரிய புத்தகம் மருத்துவரிடம் இருந்தது. முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய தமது எண்ணங்களை அவர் இதில் குறித்துவந்தார்.

''கச்சிதமாக இருக்க வேண்டும்'' என்று விரலை உயர்த்தியபடிச் சொன்னார்.

களைப்பைப் பொருட்படுத்தாமல் மருத்துவர் தம் தோல் புத்தகத்தை எடுத்து மேசை அருகில் உட்கார்ந்து குறிப்பு எழுதத் தொடங்கினார்:

''கம்மியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், மாலுமிகள் முதலியவர்கள்—நகரத்தின் ஏழை உழைப்பாளி மக்கள் எல்லாரும்—மூன்று தடியர்களின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். காவல் படையினர் வென்றார்கள். கருமான் புரோஸ்பெரோ கைதி ஆகி விட்டான். ஆனால் சர்க்கஸ்காரன் திபூல் தப்பி ஓடி விட்டான். சற்று நேரத்துக்கு முன்னால் விண்மீன் சதுக்கத்தில் ஒரு காவல் படை வீரன் தன் அதிகாரியைச் சுட்டுக் கொன்றான். மக்களுக்கு எதிராகப் போரிடவும் மூன்று தடியர்களைக் காக்கவும் எல்லாப் படையினரும் விரைவில் மறுத்து விடுவார்கள் என்று இந்த நிகழ்ச்சி குறிக்கிறது. ஆனாலும் திபூலுக்கு என்ன நேருமோ என்று அச்சம் உண்டாகிறது...''

இந்த இடத்தில் மருத்துவருக்குப் பின்னால் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தார். அங்கே கணப்பு இருந்தது. பச்சை மழைக்கோட்டு மாட்டிய உயரமான ஒருவன் கணப்பிலிருந்து வெளியே வந்தான். சர்க்கஸ்காரன் திபூல்தான் அவன்.





## இரண்டாம் பாகம்

# வாரிசு துத்தியின் பொம்மை





## அத்தியாயம் 4

# பலூன் விற்பவன் பறந்து போகிறன்

1



மறு நாள் நீதிமன்றச் சதுக்கத்தில் வேலை மும்முரமாக நடந்தது: தச்சர்கள் பத்து வெட்டு மேடைகள் கட்டுவதில் முனைந்திருந்தார்கள். காவல் படைப்பிரிவு ஒன்று அவர்களுடைய வேலையை மேற்பார்த்துக் கொண்டிருந்தது. தச்சர்கள் விருப்பம் இல்லாமல் தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

''கம்மியர்களுக்காகவும் சுரங்கத் தொழிலாளர்களுக்காகவும் வெட்டு மேடைகள் கட்ட எங்களுக்கு மனமே இல்லை!'' என்று ஆத்திரத்தோடு சொன்னார்கள் அவர்கள்.

''அவர்கள் எங்கள் சோதரர்கள்.''

''உழைப்பவர்கள் எல்லோரையும் விடுவிப்பதற்காக அவர்கள் சாவை மதியாமல் போராடினர்கள்.''

''பேச்சு நிற்கட்டும்!'' என்று படைப் பிரிவுத் தலைவன் அடித் தொண்டையைப் பிய்த்துக் கொண்டு கத்தவே, கட்டுமானத்திற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த பலகைகள் அந்தக் கூச்சலால் தடதடவென்று சரிந்தன. ''பேச்சை நிறுத்துங்கள், இல்லாவிட்டால் உங்களைச் சவுக்குகளால் விளாறும்படி உத்தரவு இடுவேன்!''

காலை முதல் வெவ்வேறு பக்கங்களிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக நீதிமன்றச் சதுக்கத்துக்கு வரத் தலைப்பட்டார்கள்.

காற்று பலமாக வீசிற்று, புழுதி பறந்தது. குறிப் பலகைகள் அசைந்தாடின, கறுமுறுத்தன.

தொப்பிகள் தலைகளிலிருந்து கழன்று, துள்ளிக் கொண்டிருந்த வண்டிகளின் சக்கரங்களுக்கு அடியில் விழுந்து உருண்டன.

ஓர் இடத்தில் காற்றின் காரணமாக நம்பவே முடியாத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. குழந்

தைகளுக்கு வண்ண பலூன்கள் விற்றுக் கொண்டிருந்தவனைக் காற்று பலூன்களோடு சேர்த்து அடித்துக் கொண்டு போய் விட்டது.

விசித்திரமான இந்தப் பறப்பைப் பார்த்த குழந்தைகள் ''ஆகா, பலே!'' என்று ஆரவாரித் தார்கள்.

அவர்கள் கைகளைக் கொட்டினார்கள், ஏனென்றால், முதலாவதாக, காட்சி கவனத்தைக் கவர்ந்தது, இரண்டாவதாக, பறந்து கொண்டிருந்த பலூன் விற்பவனுடைய சங்கடமான நிலைமை குழந்தைகளுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி அளித்தது. குழந்தைகள் இந்த விற்பனையாள னிடம் எப்போதுமே பொறாமை கொண்டிருந்தார்கள். பொறாமை கெட்ட உணர்வுதான். ஆனாலும் என்ன செய்வது? சிவப்பும் நீலமும் மஞ்சளுமான பலூன்கள் கண்ணைப் பறித்தன. அந்த மாதிரி ஒரு பலூன் வைத்துக் கொள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஆசையாய் இருந்தது. விற்பவனிடம் அவை ஏராளமாக இருந்தன. ஆனால் அற்புதங்கள் நிகழ்வது இல்லையே! எவ் வளவுதான் சொன்னபடிக் கேட்டாலும் எந்த ஒரு பையனுக்கோ, எவ்வளவுதான் கவனம் உள்ளவள் ஆனாலும் எந்த ஒரு பெண்ணுக்கோ, சிவப்போ, நீலமோ, மஞ்சளோ, எந்த ஒரு பலூனையும் வாழ்க்கையில் ஒரு தரம் கூட விற்பனையாளன் பரிசு கொடுத்ததில்லை.

இந்த வறண்டதனத்துக்காக இப்போது விதி அவனைத் தண்டித்திருந்தது. பலூன்கள் கட்டப்பட்டிருந்த கயிற்றைப் பிடித்துத் தொங்கியபடி நகரத்துக்கு மேலே பறந்து சென்றான் அவன். பளிச்சென்று நீலமாய் இருந்த வானத்தில் இந்த பலூன்கள் பல நிற முந்திரிப் பழங் களின் மாயமான பறக்கும் குலை போலத் தோற்றம் அளித்தன.

''காப்பாற்றுங்கள்!'' என்று எதிலும் நம்பிக்கை இல்லாமல் கால்களை வெட்டி வெட்டி உதைத்துக் கொண்டு கத்தினான் விற்பனையாளன்.

அவனுடைய கால்களில் வைக்கோல் செருப்புகள் இருந்தன. அவை அவனுக்கு மிகவும் பெரியவை. அவன் தரையில் நடந்து கொண்டிருந்த வரையில் எல்லாம் நல்லபடியாக வாய்த் தது. செருப்புகள் நழுவாமல் இருப்பதற்காக அவன் நடைபாதையில் கால்களைச் சோம்பேறி போல இழுத்து இழுத்து வைத்தான். இப்போது காற்றில் மிதந்த போதோ, இந்தத் தந்திரத்தைக் கடைப்பிடிக்க அவனால் முடியவில்லை.

''நாசமாய்ப் போக!''

பலூன்களின் கொத்து மேலே எழும்பி, கிரீச்சிட்டபடிக் காற்றில் மிதந்து போயிற்று.

ஒரு செருப்பு எப்படியும் கழன்று விட்டது.

''பார்! வேர்க்கடலை! வேர்க்கடலை!'' என்று கத்தினார்கள் கீழே ஓடிக் கொண்டிருந்த குழந்தைகள்.

விழுந்து கொண்டிருந்த செருப்பு வேர்க்கடலை போலத்தான் இருந்தது.

அந்த நேரத்தில் வீதியில் போய்க் கொண்டிருந்தார் நட்டுவனார். அவர் நிரம்ப ஓயில் உள்ளவராகக் காணப்பட்டார். சின்ன உருண்டைத் தலையும் மெல்லிய கால்களுமாக நெட் டையாய் இருந்தார். கொஞ்சம் பிடில் வாத்தியம் போலவும் கொஞ்சம் வெட்டுக்கிளி போலவும் தோற்றம் அளித்தார். புல்லாங்குழலின் ஏக்கம் ததும்பும் இசைக்கும் நர்த்தகர்களின் கனிந்த சொற்களுக்குப் பழகி இருந்த அவருடைய நயமுள்ள காதுகளால் குழந்தைப் பட்டாளத்தின் உரத்த மகிழ்ச்சிக் கூச்சல்களைத் தாங்க முடியவில்லை.

''கூப்பாட்டை நிறுத்துங்கள்!'' என்று கோபித்துக் கொண்டார். ''இப்படி இரைந்து கத்தலாமா? அழகான, இனிமையாக இசைக்கும் சொற்களில் மகிழ்ச்சியை வெளியிட வேண்டும்... உதாரணமாக...''

அவர் நாகரிகப் பாங்கில் நின்று கொண்டார், ஆனால் உதாரணம் காட்ட அவருக்கு வாய்க்கவில்லை. எல்லா நட்டுவனார்களையும் போலவே பெரும்பாலும் கீழே, கால்களுக்கு அடி யில், பார்க்க அவர் பழகி இருந்தார்! பாவம்! பாவம்! உயரே நடந்ததை அவர் பார்க்க வில்லை.



COMICS PDF TIMES

விற்பனையாளனின் செருப்பு அவருடைய தலையில் விழுந்தது. அவருடைய தலை சின்னது ஆகையால், பெரிய வைக்கோல் செருப்பு தொப்பி போல அதற்குப் பொருந்திற்று.

நய நாகரிகம் உள்ள நட்டுவனுர் சண்டிமாடுகளை விரட்டுபவன் போல வீரிட்டார். செருப்பு அவருடைய பாதி முகத்தை மூடிவிட்டது.

குழந்தைகள் வயிறுகளைப் பிடித்துக் கொண்டார்கள்:

''ஹ-ஹ-ஹா! ஹ-ஹ-ஹா!''

எங்கள் நட்டுவனுர் தாதக்கத்தையார்
எப்போதும் கீழேயே பார்த்திடுவார்.
எங்கும் எலி போலே கீச்சிடுவார்,
இரு மடங்கு நீள மூக்குடையார்.
எங்கிருந்தோ வந்த வைக்கோல் செருப்பு
இங்கவர் மூக்கில் முளைத்தது பார்!

எந்த நொடியிலும் மறு பக்கம் குதித்து ஓடி ஒளியத் தயாராகச் சுற்றுச் சுவர் மேல் உட்கார்ந்து கொண்டு இப்படிப் பாடினுர்கள் சிறுவர்கள்.

நட்டுவனுரோ, ''ஐயோ!'' என்று முனகினுர். ''ஐயோ, நான் எப்படித் துன்பப்படுகி றேன்! நடனக் காலணியாக இருந்தாலாவது பரவாயில்லை. இதுவோ, அசிங்கம் பிடித்த, முரட்டுச் செருப்பு!''

முடிவில் என்ன நடந்தது என்ருல் நட்டுவனுர் கைது செய்யப்பட்டார்.

''அன்பரே, உங்கள் தோற்றம் படுகோரமாய் இருக்கிறது. பொது அமைதியை நீங்கள் குலைக்கிறீர்கள். ஒருபோதுமே இப்படிச் செய்வது தகாது, இந்த மாதிரிக் கலவரம் நிறைந்த நேரத்திலோ, கூடவே கூடாது'' என்ருர்கள் அதிகாரிகள்.

நட்டுவனுர் கைகளைப் பிசைந்தார்.

''எப்பேர்ப்பட்ட பொய்! எந்த மாதிரிப் படாப்பழி! நடன மெட்டுக்களுக்கும் புன்னகை களுக்கும் நடுவில் வாழ்பவன் நான், தார ஸ்தாயி இசைக் குறி போன்ற உருவம் உள்ளவன் நான். பொது அமைதியை என்னுல் குலைக்க முடியுமா எங்காவது? ஓ!.. ஓ!..'' என்று தேம் பினுர் நட்டுவனுர்.

அப்புறம் நட்டுவனுருக்கு என்ன நேர்ந்ததோ தெரியாது. தவிர, பார்க்கப் போனுல் அதைத் தெரிந்து கொள்வதில் நமக்கு ஆவலும் இல்லை. பறந்து கொண்டிருந்த பலூன் விற்ப வனின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்வது அதை விட எவ்வளவோ முக்கியம்.

நல்ல டாண்டெலியன் மலர் போல அவன் பறந்து கொண்டு போனுன்.

''இது மானக்கேடு! எனக்குப் பறக்க ஆசை கிடையாது! எனக்குப் பறக்கவே தெரியாது...'' என்று ஒப்பாரி வைத்தான் அவன்.

ஆனுல் அதனுல் ஒரு பயனும் இல்லை. காற்று வலுத்தது. பலூன் கொத்து இடைவிடாமல் மேலே போயிற்று. காற்று அதை நகருக்கு வெளியே, மூன்று தடியர்களின் அரண்மனையின் பக்கம் அடித்துச் சென்றது.

சில சந்தர்ப்பங்களில் கீழே பார்க்க விற்பனையாளனுக்கு வாய்த்தது. அப்போது கூரை களையும் அழுக்கடைந்த நகங்கள் போல் இருந்த ஓடுகளையும் குடியிருப்பு வட்டாரங்களையும் இளநீலமான குறுகிய நீரையும் கட்டுக்குட்டான குழந்தைகள் போலக் காணப்பட்ட மனிதர் களையும் பச்சைப் பொங்கலை நிகர்த்த தோட்டங்களையும் அவன் கண்டான். நகரம் குண்டூசியில் குத்தியது போல அவனுக்குக் கீழே சுழன்றது.

நிலைமை மோசமாயிற்று.

''இன்னும் கொஞ்ச நேரம் போனுல் நான் மூன்று தடியர்களின் பூங்காவில் விழுந்து விடுவேன்'' என்று கலவரத்துடன் எண்ணம் இட்டான் விற்பனையாளன்.

அடுத்த நிமிடம் அவன் மெதுவாகவும் மிடுக்காகவும் அழகாகவும் பூங்காவுக்கு மேலே பறந்து, படிப்படியாகத் தரையை நெருங்கினுன். காற்று அடங்கிவிட்டது.

''ஒருவேளை இப்போது நான் தரையில் இறங்கி விடுவேன். ஆட்கள் என்னைப் பிடிப்பார் கள். முதலில் நன்ருக அடி கொடுப்பார்கள். பிறகு சிறையில் அடைப்பார்கள். அல்லது, வீணுக நேரம் தாழ்த்தாமல் சட்டென்று தலையை வெட்டி விடுவார்கள்'' என்று நினைத்துக் கொண்டான் பலூன்காரன்.

அவனை ஒருவரும் பார்க்கவில்லை. ஒரு மரத்திலிருந்துதான் மிரண்டு போன பறவைகள் சிவ்வென்று பறந்து நாலா பக்கமும் சிதறின. பல நிற பலூன்களின் பறக்கும் கொத்திலிருந்து மேகத்தின் நிழல் போன்ற மெல்லிய நிழல் விழுந்தது. கப்பிப் பாதையிலும் பாத்தியிலும் தாராவின் மேல் சவாரி செய்து கொண்டிருந்த பையனின் சிலையிலும் பாராக் கொடுக்கையில் தூங்கி விட்ட காவல் படையினன் மேலும் கண்ணுக்கு இனிய வானவில் வண்ணங்களைப் பரப்பியபடி அடி வழுகிச் சென்றது. இதனுல் காவல் படையினனுடைய முகத்தில் வேடிக் கையான மாறுதல்கள் ஏற்பட்டன. அவனுடைய மூக்கு பிணத்தினுடையது போலச் சட்டென நீலம் பாரித்தது, பின்பு செப்படி வித்தைக்காரனுடையது மாதிரிப் பச்சை ஆயிற்று, முடிவில் குடிகாரன் மூக்கு போலச் சிவப்பு ஆயிற்று. பல வண்ணக் காட்சிக் கருவியின் கண்ணுடிகள் இப்படித்தான் நிறத்தை மாற்றிக் கொண்டு இடம் மாறிய வண்ணமாய் இருக்கும்.

விதியை முடிவு செய்யும் கணம் நெருங்கிற்று: அரண்மனையின் திறந்த சன்னல்களின் பக்கம் போனுன் பலூன்காரன். அவற்றில் ஒன்றுக்குள் இதோ தூவி போலப் பறந்து புகுவான் என் பதில் அவனுக்குச் சந்தேகமே உண்டாகவில்லை.

அப்படியே நடந்தது.

பலூன்காரன் சன்னலுக்குள் பறந்து புகுந்தான். அது அரண்மனைச் சமையல் அறையின் சன்னல். மிட்டாய்ச் சாலை அது.

நலைக்கு நாள் நடந்த கலகம் வெற்றிகரமாக அடக்கப்பட்டு விட்டதை ஒட்டி மூன்று தடியர்களின் அரண்மனையில் அன்று விருந்துக் கொண்டாட்டம் ஏற்பாடாகி இருந்தது. மூன்று தடியர்களும் அரசு ஆலோசனை மன்றத்தார் எல்லோரும் பரிவாரங்களும் மதிப்புக்கு உரிய விருந்தாளிகளும் விருந்துக்குப் பிறகு நீதிமன்றச் சதுக்கம் போவதாய் இருந்தார்கள்.

என் நண்பர்களே, அரண்மனை மிட்டாய்ச் சாலையில் புகுவது நிரம்பக் கவர்ச்சி உள்ளது. தின்பண்ட வகைகளின் தரம் அறிந்தவர்கள் மூன்று தடியர்கள். தவிரவும் சந்தர்ப்பமும் அசா தாரணமாய் இருந்தது. விருந்துக் கொண்டாட்டம்! ஆரண்மனைச் சமையல்காரர்களும் மிட் டாய்க்காரர்களும் எப்பேர்ப்பட்ட கைவரிசையைக் காட்டி இருப்பார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மிட்டாய்ச் சாலையில் புகுந்த பலூன்காரனுக்கு அச்சமும் அளவு இல்லாத மகிழ்ச்சியும் ஒரே நேரத்தில் ஏற்பட்டன. கவனம் இல்லாத வீட்டுக்காரி சன்னல் குறட்டில் வைத்திருக்கும் கேக்கின் மேல் பறக்கும் குளவி இப்படித்தான் அச்சமும் மகிழ்ச்சியும் அடையும் போலிருக் கிறது.

அவன் ஒரு நிமிடம் பறந்தான். எதையும் நன்ருகப் பார்க்க அவனுக்கு வாய்க்கவில்லை. தான் விந்தையான ஒரு பறவைச்சாலையில் புகுந்து விட்டதாகவும் தெற்கு நாடுகளைச் சேர்ந்த, பல நிறங்கள் உள்ள அற்புதப் பறவைகள் அதில் பாடிக் கொண்டும் சீழ்க்கை அடித்துக் கொண்டும் சீறிக் கொண்டும் சடசடத்துக் கொண்டும் இருப்பதாகவும் அவனுக்கு முதலில் தோன்றியது. ஆனுல் மறு கணமே இந்த எண்ணம் மாறி விட்டது. நசுக்கப்பட்டு, சாறு பெருக்கிக் கொண்டு, தங்கள் சாற்றிலேயே ஊறிக் கொண்டிருக்கும் வெப்பப் பிரதேசப் பழங்கள் நிறைந்த பழக்கடையில் தான் இருப்பதாக நினைத்தான். தலையைக் கிறங்க வைக்கும் இனிய நறு மணம் அவன் மூக்கைத் தாக்கிற்று. சூடும் இறுக்கமும அவனுடைய தொண்டை யைக் கரிக்க வைத்தன.

விந்தையான பறவைச்சாலையும் பழக்கடையும் எல்லாம் உடனே கலந்து குழம்பின.

மெத்தென்றும் வெதுவெதுப்பாகவும் இருந்த ஒன்றில் பொத்தென்று விழுந்தான் பலூன் காரன். பலூன்களை அவன் விடவில்லை. கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தான். பலூன்கள் அவன் தலைக்கு மேலே அசையாமல் நின்றன.

அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். என்ன ஆனாலும் சரி, அவற்றைத் திறப்பதில்லை என்று முடிவு செய்தான்.

''இப்போது எனக்கு நிலைமை புரிந்து விட்டது. இது பறவைச்சாலையோ பழக்கடையோ அல்ல. இது மிட்டாய்ச்சாலை. நான் கேக்கில் உட்கார்ந்திருக்கிறேன்!'' என்று நினைத்துக் கொண்டான்.

உண்மை அதுதான்.

சாக்லேட்டு, கிச்சிலி, மாதுளை, பாலாடை, உலர் பழங்கள், சர்க்கரைப் பொடி, பழக்கூழ் ஆகியவற்றின் அரசில் அவன் இறங்கி மணம் வீசும் பல நிற அரசின் ஆட்சியாளனாக அரியணை மேல் வீற்றிருந்தான். அரியணையாக இருந்தது கேக்கு.

அவன் கண்களைத் திறக்கவில்லை. பெருத்த கலகம் மூளும், புயல் வீசும் என்று எதிர்பார்த்து எதற்கும் தயாராக இருந்தான். ஆனால் அவன் அறவே எதிர்பாராதது நடந்தது.

''கேக் நாசம்'' என்று கடுமையும் வருத்தமும் தொனிக்கக் கூறினான் மிட்டாய்ச்சாலை உதவியாள்.

அப்புறம் நிசப்தம் நிலவிற்று. பொங்கிய சாக்லேட்டின் மேல் குமிழிகள்தாம் வெடித்தன.

பலூன்காரனுக்குத் திகிலால் மூச்சு முட்டியது. வலிக்கும் அளவுக்கு இமைகளை இறுக மூடிக்கொண்டு, ''என்ன நடக்கும்?'' என்று கிசுகிசுத்தான்.

உண்டியலில் காசு குலுங்குவது போலத் துள்ளிற்று அவன் நெஞ்சு.

பெரிய மிட்டாய்க்காரனின் குரல் கேட்டது. ''வெட்டிப் பேச்சு! விருந்தாளிகள் இரண் டாவது வெஞ்சனத்தைச் சாப்பிட்டு முடித்து விட்டார்கள். இன்னும் இருபது நிமிடங்களில் கேக்கு பரிமாற வேண்டி இருக்கும். பல நிற பலூன்களும் பறந்து வந்த அயோக்கியப் பயலு டைய மூஞ்சியும் விருந்துக் கொண்டாட்டக் கேக்குக்கு அருமையான அலங்காரமாக இருக்கும்'' என்றான் அவன்.

இப்படிச் சொல்லி விட்டு மிட்டாய்க்காரன் கூச்சல் போட்டான்:

''கொண்டு வா பாலாடை!..''

உதவியாட்கள் பாலாடை கொண்டு வந்தார்கள்.

ஆகா, அது என்ன பரபரப்பு!

மூன்று மிட்டாய்க்காரர்களும் இருபது சமையல்காரப் பையன்களும் மூன்று தடியர்களில் எல்லோரிலும் தடியனுடைய பாராட்டுக்குத் தகுதி பெறத்தக்க ஊக்கத்துடன் பலூன்காரனைச் சூழ்ந்தார்கள். ஒரே நிமிடத்தில் நாலு பக்கமும் பாலாடையை அப்பி அவனை மூடி விட்டார் கள். மூடிய கண்களுடன் உட்கார்ந்திருந்த பலூன்காரன் எதையும் காணவில்லை, ஆனால் காட்சி



அற்புதமாய் இருந்தது. அவன் உடல் முழுவதும் பாலாடைப் பூச்சில் மறைந்து விட்டது. தலையும் சிறு மலர்கள் தீட்டிய தேநீர்க் கெண்டி போல் இருந்த வட்ட முகமும் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. உடலின் மற்ற எல்லாப் பகுதிகளும் கவர்ச்சியான ரோஜா நிறச் சாயல் உள்ள வெள்ளைப் பாலாடையால் போர்க்கப்பட்டிருந்தன. பலூன்காரன் எதைப் போல் வேண்டுமானாலும் தோற்றம் அளித்திருக்கலாம், ஆனால் வைக்கோல் செருப்பை இழந்தது போலவே தனது சொந்தத் தோற்றத்தை அவன் இழந்து விட்டான்.

வெண்பனிச் சிறகுகள் உள்ள அன்னப் பட்சியாக அவனை ஒரு கவி இப்போது மதித்திருப்பான். சலவைக் கல் சிலை என்று தோட்டக்காரனும், சவர்க்கார நுரைக் குன்று என்று வண்ணாத்தியும் வெண்பனிப் பொம்மை என்று குறும்புக்காரப் பையனும் எண்ணி இருப்பார்கள்.

மேலே தொங்கிக் கொண்டிருந்தன பலூன்கள். அலங்காரம் வழக்கத்துக்கு மாறானதாக இருந்தது, ஆனாலும் எல்லாம் சேர்ந்து காணத்தக்க காட்சியாக விளங்கின.

தான் தீட்டிய ஓவியத்தைப் பார்வையிடும் ஓவியனின் குரலில், ''வாய்த்து விட்டது'' என்றான் தலைமை மிட்டாய்க்காரன்.

பிறகு அவனுடைய குரல் முதல் தடவை போலவே வெறிக் கூச்சல் போட்டது:

''உலர் பழங்கள்!''

எல்லாத் தரங்களிலும் எல்லா வகைகளிலும் எல்லா வடிவங்களிலும் உலர் பழங்கள் வந்தன. கைப்புள்ளவை, வெனிலா மணமுள்ளவை, புளிப்பானவை, முக்கோண வடிவானவை, விண்மீன் வடிவானவை, வட்டமானவை, பிறை வடிவானவை, ரோஜா போன்றவை எல்லாம் அவற்றில் இருந்தன.

சமையல்காரப் பையன்கள் முழு மூச்சாகப் பாடுபட்டார்கள். தலைமை மிட்டாய்க்காரன் மூன்று தரம் கை கொட்டுவதற்குள் பாலாடைக் குவியல் முழுவதும், முழுக் கேக்கும் உலர் பழங்கள் செருகப்பட்டுக் காட்சி தந்தன.

''தயார். இப்போது லேசான செம்மை படிவதற்கு இதை அடுப்பில் செருக வேண்டும்'' என்றான் தலைமை மிட்டாய்க்காரன்.

''அடுப்பிலா? என்ன? எந்த அடுப்பில்? என்னையா அடுப்பில் செருக வேண்டும்?'' என்று கலவரப்பட்டான் பலூன்காரன்.

அப்போது மிட்டாய்ச்சாலைக்குள் ஓடி வந்தான் ஒரு பணியாள்.

''கேக்கு! கேக்கு! உடனே கொண்டு போங்கள் கேக்கை! விருந்தாளிகள் இனிப்பை எதிர்பார்க்கிறார்கள்!'' என்று கத்தினான்.

''தயார்!'' என்று பதில் அளித்தான் தலைமை மிட்டாய்க்காரன்.

''நல்ல வேளை, பிழைத்தேன்!'' என்று எண்ணினான் பலூன்காரன். இப்போது அவன் கண்களைக் கொஞ்சம் போலத் திறந்தான்.

இளநீலப் பணியாடைகள் அணிந்த ஆறு வேலையாட்கள் அவன் உட்கார்ந்திருந்த பிரமாண்டமான தட்டைத் தூக்கிக் கொண்டு போனார்கள். சமையல்காரப் பையன்கள் தன்னைக் கேலி செய்து கெக்கலித்தது வெளியே போகையில் அவன் காதில் பட்டது.

அகலமான படிக்கட்டின் வழியே மாடி ஹாலுக்கு அவன் கொண்டு போகப்பட்டான். பலூன்காரன் மறுபடி நொடிப் போது கண்களைச் சுருக்கிக் கொண்டான். ஹாலில் இரைச்சலும் குதூகலமுமாக இருந்தது. பல குரல்கள் ஒலித்தன, சிரிப்பு பீரிட்டது, கைதட்டல்கள் கேட்டன. விருந்துக் கொண்டாட்டம் கோலாகலமாக நடப்பதை எல்லா அறிகுறிகளும் காட்டின.

பலூன்காரன், அல்லது, சரியாகச் சொன்னால் கேக்கு, மேசை மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது.

அப்போது பலூன்காரன் கண்களைத் திறந்தான்.

உடனே மூன்று தடியர்களைக் கண்டான்.

அவர்கள் நம்ப முடியாத அளவு தடியாய் இருந்ததைக் கண்டு பலூன்காரனின் வாய் ஆவென்று திறந்தது.

''அதை உடனே மூட வேண்டும். என் நிலைமையில் உயிர்க் குறிகளைக் காட்டாமல் இருப்பது மேல்'' என்று சட்டென முடிவு செய்தான் அவன்.

ஆனால், அந்தோ! வாய் மூட மாட்டேன் என்றது. இந்த மாதிரி இரண்டு நிமிடங்கள் கழிந்தன. பின்பு பலூன்காரனின் வியப்பு குறைந்தது. அவன் சிரமப்பட்டு வாயை மூடிக் கொண்டான். ஆனால் உடனே கண்கள் விரியத் திறந்தன. அரும் பாடுபட்டு வாயையும் கண்களையும் ஒன்றன் பின் ஒன்றாக மூடிக் கொண்டு அவன் தன் வியப்பை முழுதும் அடக்கிக் கொண்டான்.

மற்றவர்களை விட உயரத்தில், முக்கிய இடங்களில் உட்கார்ந்திருந்தார்கள் தடியர்கள். அவர்கள் மற்ற எல்லோரையும் விட நிறையச் சாப்பிட்டார்கள். கைத்துவாலையைக் கூடத் தின்னத் தொடங்கினான் ஒருவன்.



''நீங்கள் தின்பது கைத்துவாலே...''

''அப்படியா? எங்கோ நினைவாகத் தின்னத் தொடங்கி விட்டேன்...''

அவன் கைத்துவாலேயை வைத்து விட்டு மூன்றுவது தடியனின் காதை உடனே கடிக்கத் தலைப்பட்டான். பார்ப்பதற்கு அது இறைச்சிக் கொழுக்கட்டை போல் இருந்தது.

எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''போதும் வேடிக்கை'' என்று முள் கரண்டியை உயர்த்தினுன் இரண்டாவது தடியன். ''நிலேமையில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. கேக்கு வந்து விட்டது.''

''பலே, பலே!''

எல்லோருக்கும் உற்சாகம் பிறந்து விட்டது.

''என்ன நடக்கும்? என்னதான் நடக்கும்? இவர்கள் என்னைத் தின்பார்களா?'' என்று தவித்தான் பலூன்காரன்.

அப்போது கடிகாரத்தில் இரண்டு மணி அடித்தது.

''இன்னும் ஒரு மணி நேரத்தில் நீதிமன்றச் சதுக்கத்தில் மரண தண்டனை தொடங்கும்'' என்முன் முதல் தடியன்.

''கருமான் புரோஸ்பெரோ தானே முதலில் தண்டனை பெறுவான்?'' என்று கேட்டான் மதிப்பு மிக்க விருந்தாளிகளில் ஒருவன்.

''அவன் இன்றைக்குத் தண்டிக்கப்பட மாட்டான்'' என்முன் அரசு அமைச்சன்.

''என்ன? எப்படி? ஏன்?''



''இப்போதைக்கு அவனுடைய உயிரைக் காப்பாற்றி வைத்திருக்கிறோம். கலகக்காரர்களின் திட்டத்தையும் முக்கியமான சதிகாரர்களுடைய பெயர்களையும் அவனிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.''

''எங்கே தான் இருக்கிறான் அவன்?''

விருந்துக் கூட்டம் முழுவதும் இதைத் தெரிந்து கொள்வதில் ஆவல் கொண்டு கேக்கைக் கூட மறந்து விட்டது.

''முன்போலவே இரும்புக் கூண்டில் அடைபட்டிருக்கிறான் அவன். கூண்டு இங்கே, அரண்மனையில், வாரிசு துத்தியின் மிருகச்சாலையில் இருக்கிறது.''

''கூப்பிடுங்கள் அவனை...''

''அவனை இங்கே அழைத்து வாருங்கள்!'' என்று கத்தினார்கள் விருந்தாளிகள்.

''சரிதான். நம் விருந்தாளிகள் இந்த மிருகத்தைக் கிட்டத்தில் பார்க்கட்டும். எல்லோரையும் மிருகச்சாலைக்கு வரும்படி சொல்லி இருப்பேன். ஆனால் அங்கே உறுமலும் கீச்சொலியும் நாற்றமுமாய் இருக்கும்... மதுக் கிண்ணங்களின் கணகணப்பையும் பழங்களின் மணத்தையும் போல இல்லாமல் படு மோசமாய் இருக்கும் அதெல்லாம்'' என்றான் முதல் தடியன்.

''உண்மைதான்! உண்மைதான்! மிருகச்சாலைக்குப் போகத் தேவை இல்லை...''

''புரோஸ்பெரோ இங்கே அழைத்துவரப் படட்டும். கேக்கைத் தின்று கொண்டே இந்த விகிருதியைப் பார்வை இடுவோம்.''

''மறுபடி கேக்கா?'' என்று நடுங்கினான் பலூன்காரன். ''இந்தக் கேக்கை விடவே மாட்டார்கள் போல் இருக்கிறதே... பெருந் தீனிக்காரர்கள்!''

''புரோஸ்பெரோவை அழைத்து வாருங்கள்'' என்றான் முதல் தடியன்.

அரசு அமைச்சன் வெளியே போனான். நடையின் வடிவில் இரண்டு வரிசைகளாக நின்ற பணியாட்கள் குனிந்து வணங்கினார்கள். நடை பாதி தாழ்ந்தது.

பெருந்தீனிக்காரர்கள் பேச்சை நிறுத்தினார்கள்.

''அவன் மிகவும் பயங்கரமானவன். எல்லோரையும் விடப் பலசாலி. சிங்கத்தை விடப் பலம் உள்ளவன். வெறுப்பு அவனுடைய கண்களில் தழல் வீசுகிறது. அவற்றை நேரிட்டுப் பார்க்க நம்மால் முடிவதில்லை'' என்றான் இரண்டாவது தடியன்.

''கோரமான தலை அவனுக்கு. அது பிரமாண்டமானது. தூணின் தலைப்பகுதி போன்றது. செம்பட்டைத் தலைமயிர் அவனுக்கு. அவன் தலையைச் சுற்றி நெருப்பு எரிவது போல இருக்கும்.''

கருமான் புரோஸ்பெரோ பற்றிய பேச்சு தொடங்கியதும் பெருந்தீனிக்காரர்களின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. சாப்பிடுவதையும் வேடிக்கை பேசுவதையும் இரைவதையும் அவர்கள் நிறுத்தினார்கள், வயிறுகளை உள்ளடக்கிக் கொண்டார்கள். சிலர் வெளிறிக்கூடப் போனார்கள். அவனைப் பார்க்க விரும்பியதால் பலருக்கு அதிருப்தி ஏற்பட்டது.

மூன்று தடியர்கள் ஆழ்ந்த போக்கை மேற்கொண்டார்கள். கொஞ்சம் மெலிந்து விட்டதாகத் தோன்றினார்கள்.

திடீரென்று எல்லோரும் பேச்சை நிறுத்தினார்கள். ஒரே நிசப்தம் குடி கொண்டது. தடியர்களில் ஒவ்வொருவனும் மற்றவனுக்குப் பின்னால் மறைந்து கொள்ள விரும்பியவன் போல உடம்பை அசைத்தான்.

கருமான் புரோஸ்பெரோ ஹாலுக்கு இட்டு வரப்பட்டான்.

அரசு அமைச்சன் முன்னே நடந்தான். இரு புறங்களிலும் வந்தார்கள் காவல் படைவீரர்கள். அவர்கள் கறுப்பு மெழுகுத்துணித் தொப்பிகளைக் கழற்றாமல், உருவிய வாட்களுடன் ஹாலுக்குள் வந்தார்கள். சங்கிலி கணகணத்தது. கருமானின் கைகளில் விலங்குகள் மாட்டப்பட்டிருந்தன. அவன் விருந்து மேசையின் பக்கத்தில் இட்டு வரப்பட்டான். தடியர்களுக்குச் சில அடிகள் தள்ளி நின்றான்.



கருமான் புரோஸ்பெரோ தலையைக் குனிந்து கொண்டிருந்தான். அவன் வெளிறி இருந்தான். சிடுக்கான செம்பட்டைத் தலைமயிருக்கு அடியில் அவனுடைய நெற்றியிலும் கன்னப் பொறிகளிலும் இரத்தம் அடலாக உறைந்திருந்தது.

அவன் தலையை நிமிர்த்தி தடியர்களைப் பார்த்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் எல்லோரும் பின்னே நகர்ந்தார்கள்.

''இவனை எதற்காக இங்கே கூட்டி வந்தீர்கள்? எனக்கு இவனிடம் பயமாய் இருக்கிறதே!'' என்று கத்தினான் ஒரு விருந்தாளி. நாட்டில் எல்லோரையும் விடப் பணக்காரனான அரைவை இயந்திரச் சொந்தக்காரன் அவன்.

இப்படிச் சொன்னவன், மூர்ச்சையாகி, பழப்பாகில் மூக்கு படும்படிச் சாய்ந்தான். சில விருந்தாளிகள் வெளியே போவதற்காகக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். கேக்கைப் பற்றிய நினைவே யாருக்கும் வரவில்லை.

''உங்களுக்கு என்ன வேண்டும் என்னிடம்?'' என்று கேட்டான் கருமான்.

முதல் தடியன் நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டான்.

''நாங்கள் உன்னைப் பார்க்க விரும்பினோம். நீ யார் கைகளில் இருக்கிறாயோ அவர்களைப் பார்க்க உனக்கு விருப்பம் உண்டாகவில்லையா?'' என்றான்.

''உங்களைக் காணவே எனக்கு அருவருப்பாய் இருக்கிறது.''

''விரைவில் நாங்கள் உன் தலையை வெட்டி விடுவோம். எங்களைப் பார்க்காமல் இருக்க இதன் மூலம் உனக்கு உதவுவோம்.''

''நான் அஞ்சவில்லை. என் தலை ஒன்று தான். மக்களுக்கோ, நூறாயிரக் கணக்கான தலைகள். அவைகளை வெட்ட உங்களால் முடியாது.''

''இன்றைக்கு நீதிமன்றச் சதுக்கத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்படும். உன் தோழர்களை அங்கே கொலையாளிகள் தீர்த்துக் கட்டி விடுவார்கள்.''

பெருந்தீனிக்காரர்கள் லேசாகச் சிரித்தார்கள். அரைவை இயந்திரச் சொந்தக்காரன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான், தன் கன்னங்களில் ஒட்டிக் கொண்டிருந்த பழப்பாகை நக்கக் கூடச் செய்தான்.

''உங்கள் மூளை கொழுப்பால் ஊதிப்போய் இருக்கிறது. உங்கள் தொப்பைக்கு அப்பால் உள்ளது எதுவும் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை...''

இரண்டாவது தடியனுக்கு ரோசமாய் இருந்தது. ''கேளுங்கள் ஐயா, இவன் சொல்வதை. நாங்கள் எதைப் பார்க்க வேண்டுமாம்?'' என்றான்.

''உங்கள் அமைச்சர்களிடம் கேளுங்கள். நாட்டில் என்ன நடக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும்.''

அரசு அமைச்சன் தெளிவாக எதையும் குறிக்காமல் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். அமைச்சர்கள் தட்டுக்களில் விரல்களால் தாளம் போடலானார்கள்.

''கேளுங்கள் இவர்களிடம். இவர்கள் உங்களுக்குச் சொல்லுவார்கள்...'' என்று பேச்சைத் தொடர்ந்தான் புரோஸ்பெரோ.

அவன் இடையில் நிறுத்தினான். எல்லோரும் காதுகளைக் கூராக்கிக் கொண்டார்கள்.

''கடும் உழைப்பால் பயிராக்கிய தானியங்களை எவர்களிடமிருந்து நீங்கள் பறித்துக் கொள்கிறீர்களோ அந்த விவசாயிகள் நிலப் பிரபுக்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறார்கள். உழவர்கள் நிலச் சொந்தக்காரர்களின் அரண்மனைகளைத் தீக்கிரை ஆக்குகிறார்கள், தங்கள் நிலங்களிலிருந்து அவர்களை விரட்டுகிறார்கள். நீங்கள் உடைமை ஆக்கிக் கொள்வதற்காக நிலக்கரி தோண்டி எடுக்கச் சுரங்கத் தொழிலாளர்கள் விரும்பவில்லை. உங்கள் செல்வத்தைப் பெருக்கும் பொருட்டு வேலை செய்ய விரும்பாமல் தொழிலாளர்கள் இயந்திரங்களை உடைக்கிறார்கள். மாலுமிகள் உங்கள் சரக்குகளைக் கடலில் எறிகிறார்கள். தரைப்படை வீரர்கள் உங்களுக்குத் தொண்டு செய்ய மறுக்கிறார்கள். விஞ்ஞானிகளும் அலுவலர்களும் நீதிபதிகளும் நடிகர்களும் மக்கள் தரப்புக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். முன்பு உங்களுக்காக வேலை செய்து, நீங்கள் கொழுக்கையில் அந்த வேலைக்காக அற்ப ஊதியம் பெற்று வந்தவர்கள் எல்லோரும், எல்லா ஆக்கம் கெட்டவர்களும் உரிமைகளை இழந்தவர்களும் பட்டினியால் மெலிந்த அனாதைகளும் அங்கவீனர்களும் பிச்சைக்காரர்களும் எல்லோரும் உங்களுக்கு எதிராக, கொழுத்தவர்களும் பணம் பெருத்தவர்களும் கல்நெஞ்சர்களுமான எல்லோருக்கும் எதிராகப் போருக்குக் கிளம்பி இருக்கிறார்கள்...''

''இவன் வீண் வார்த்தை பேசுகிறான் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றான் அரசு அமைச்சன்.

ஆனால் புரோஸ்பெரோ மேலே பேசிக் கொண்டு போனான்:

''உங்களையும் உங்கள் ஆட்சியையும் வெறுப்பதற்குப் பதினைந்து ஆண்டுகளாக நான் மக்களைப் பயிற்றி வந்தேன். எவ்வளவு நீண்ட காலமாக நாங்கள் வலிமை திரட்டி வருகிறோம் தெரியுமா? இப்போது உங்கள் சாக்காடு நெருங்கி விட்டது...''

''போதும்!'' என்று கீச்சிட்டான் மூன்றாவது தடியன்.

''இவனை மறுபடி கூண்டில் அடைக்க வேண்டும்'' என்றான் இரண்டாவது தடியன்.

முதல் தடியன் சொன்னான்:

''சர்க்கஸ்காரன் திபூலை நாங்கள் பிடிக்கும் வரை நீ உன் கூண்டில் இருப்பாய். உங்கள் இருவருக்கும் மரண தண்டனை ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும். உங்களுடைய பிணங்களை மக்கள் காண்பார்கள். எங்களோடு சண்டை போடும் விருப்பம் நீண்ட காலத்துக்கு அவர்களுக்கு உண்டாகாது.''

புரோஸ்பெரோ பேசாதிருந்தான். மறுபடி தலையைக் குனிந்து கொண்டான்.

தடியன் சொல்லிக் கொண்டு போனான்:

''யாரோடு சண்டை போட விரும்புகிறாய் என்பதை நீ மறந்து விட்டாய். நாங்கள்,


COMICS PDF TIMES

அதாவது மூன்று தடியர்கள், பலசாலிகள், மிகுந்த வல்லமை உள்ளவர்கள். எல்லாம் எங்களுக்குச் சொந்தம். நம்முடைய நிலத்தில் விளேயும் தானியம் எல்லாம் முதலாவது தடியனுடைய எனது உடைமை. இரண்டாவது தடியனுக்கு நிலக்கரி எல்லாம் சொந்தம். மூன்ருவது தடியன் இரும்பை எல்லாம் விலேக்கு வாங்கி இருக்கிருன். நாங்கள் எல்லோரையும் விடப் பணக்காரர்கள்! நாட்டில் மிகப் பெரிய பணக்காரன் கூட எங்களுடன் ஒப்பிடும் போது நூறு மடங்கு ஏழை. எங்கள் தங்கத்தைக் கொண்டு வேண்டியதை எல்லாம் வாங்க எங்களால் முடியும்!''

இப்போது பெருந்தீனிக்காரர்களுக்கு வெறி கிளம்பி விட்டது. தடியனுடைய சொற்கள் அவர்களுக்குத் துணிச்சல் தந்தன.

''கூண்டில் அடையுங்கள் இவனே! கூண்டில்!'' என்று கூச்சல் போடத் தொடங்கிஞர்கள் அவர்கள்.

''மிருகச்சாலேக்கு இழுத்துப் போங்கள்!''

''கூண்டில் அடையுங்கள்!''

''கலகக்காரன்!''

''கூண்டில் அடையுங்கள்!''

புரோஸ்பெரோ இட்டுச் செல்லப் பட்டான்.

''இப்போது கேக்கு தின்போம்'' என்ருன் முதல் தடியன்.

''தொலேந்தேன்!'' என்று எண்ணிக் கொண்டான் பலூன்காரன்.

எல்லோருடைய பார்வையும் அவன் பக்கம் திரும்பிற்று. அவன் கண்களே மூடிக் கொண்டான். பெருந்தீனிக்காரர்களுக்குக் குஷி பிறந்து விட்டது.

''ஹொ-ஹொ-ஹோ!''

''ஹ-ஹ-ஹா! எவ்வளவு அற்புதமான கேக்கு! பலூன்களேத் தான் பாருங்களேன்!''

''பிரமாதமானவை!''

''இந்த மூஞ்சியைப் பாருங்கள்!''

''விசித்திரமானது.''

எல்லோரும் கேக்கின் பக்கத்துக்கு நகர்ந்தார்கள்.

''வேடிக்கையான இந்தப் பொம்மைக்கு உள்ளே என்ன இருக்கிறது?'' என்று கேட்டு, பலூன்காரன் நெற்றியில் வலிக்கும்படிச் சுண்டிஞன் ஒருவன்.

''மிட்டாய்கள் தான், சந்தேகம் இல்லாமல்.''

''அல்லது ஷாம்பேன் மது...''

''நிரம்பச் சுவாரசியமானது! மிகவும் ஆவலேத் தூண்டுவது!''

''முதலில் இந்தத் தலேயை அறுத்துப் பார்ப்போமே என்ன இருக்கிறது என்று...''

''ஐயோ!''

பலூன்காரனுல் தாங்க முடியவில்லே. மிகவும் தெளிவாக ''ஐயோ!'' என்று சொல்லிக் கண்களேத் திறந்தான்.

ஆவல் மிகுந்தவர்கள் திடுக்கிட்டுப் பின்னே நகர்ந்தார்கள். அந்த நேரத்தில் கணீரென்ற குழந்தைக் குரல் நுழை மாடத்தில் உரக்க ஒலித்தது:

''பொம்மை! என்னுடைய பொம்மை!''

எல்லோரும் உற்றுக் கேட்டார்கள். மூன்று தடியர்களும் அரசு அமைச்சனும் சிறப்பாகக் கவலேப்பட்டார்கள்.

கூச்சல் அழுகையாக மாறிற்று. மனம் புண்பட்ட சிறுவன் நுழைமாடத்தில் இரைந்து ஓலமிட்டான்.

''என்ன அது? வாரிசு துத்தி அல்லவா அழுகிருன்!'' என்ருன் முதல் தடியன்.

''வாரிசு துத்திதான் அழுகிருன்!'' என்று ஒரே குரலில் கூடப் பாடிஞர்கள் இரண்டாவது தடியனும் மூன்ருவது தடியனும்.

மூன்று தடியர்களும் வெளிறிப் போனார்கள். அவர்களுக்கு மிகுந்த அச்சம் உண்டாயிற்று.

அரசு அமைச்சனும் சில அமைச்சர்களும் பணியாட்களும் நுழை மாடம் போகும் வாயிலுக்கு ஓடினார்கள்.

''என்ன நடந்தது? என்ன நடந்தது?'' என்று ஹால் முழுவதும் கிசுகிசுத்தது.

ஒரு பையன் ஹாலுக்குள் ஓடி வந்தான். அமைச்சர்களையும் பணியாட்களையும் அவன் இடித்துத் தள்ளினான். தலைமயிர் அசைந்தாட, மெருகிட்ட சோடுகள் பளிச்சிடத் தடியர்களிடம் ஓடினான். விம்மி அழுது கொண்டே சில வார்த்தைகளைக் கத்திச் சொன்னான், ஆனால் அவை ஒருவருக்கும் விளங்கவில்லை.

''இந்தப் பயல் என்னைக் கண்டு கொள்வான்!'' என்று கவலைப்பட்டான் பலூன்காரன். எனக்கு மூச்சு விடவும் விரலைக் கூட அசைக்கவும் இடைஞ்சலாய் இருக்கும் இந்தப் பாழும் பாலாடை பையனுக்குக் கட்டாயம் நிரம்பப் பிடிக்கும். அவனுடைய அழுகையை நிறுத்து வதற்காக ஒரு கேக்குத் துண்டை என் குதிகாலோடு சேர்த்து வெட்டிக் கொடுப்பார்கள், சந்தேகம் இல்லாமல்.''

ஆனால் பையன் கேக்கை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பலூன்காரனின் உருண்டைத் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த அருமையான பலூன்கள் கூட அவனுடைய கவனத் தைக் கவரவில்லை.

பையன் துயரம் பொங்க அழுதான்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டான் முதல் தடியன்.

''வாரிசு துத்தி எதற்காக அழுகிறான்?'' என்று கேட்டான் இரண்டாவது தடியன்.

மூன்றாமவன் கன்னங்களை உப்பினான்.

வாரிசு துத்திக்குப் பன்னிரண்டு வயது. மூன்று தடியர்களின் அரண்மனையில் அவன் வளர்ந்து வந்தான். சிறு இளவரசன் போல அவன் சீராட்டப்பட்டான். தடியர்கள் வாரிசு வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. மூன்று தடியர்களின் எல்லாச் சொத்துக்களும் நாட்டின் ஆட்சி அதிகாரமும் வாரிசு துத்தியின் கைகளுக்கு மாற வேண்டி இருந்தன.

வாரிசு துத்தியின் கண்ணீர் கருமான் புரோஸ்பெரோவின் சொற்களைக் காட்டிலும் அதிக மாக மூன்று தடியர்களுக்கு அச்சம் ஊட்டியது.

பையன் கைகளை முட்டி பிடித்து ஆட்டினான், கால்களைத் தொப்பென்று அடித்தான். அவனுடைய கோபத்துக்கும் மனத்தாங்கலுக்கும் எல்லையே இல்லை.

காரணம் ஒருவருக்கும் தெரியவில்லை.

வளர்ப்பு ஆசிரியர்கள் ஹாலுக்குள் வர அஞ்சி, தூண்களின் பின்னாலிருந்து எட்டிப் பார்த்தார்கள். கறுப்பு உடைகளும் கறுப்புப் பொய் மயிர்த் தொப்பிகளும் அணிந்திருந்த இந்த ஆசிரியர்கள் புகை ஏறிய விளக்குச் சிம்னிகள் போல் காணப்பட்டார்கள்.

கடைசியில், கொஞ்சம் அமைதி அடைந்த சிறுவன் நடந்ததை விவரித்தான்.

''என் பொம்மை, என்னுடைய அற்புதப் பொம்மை உடைந்து விட்டது!.. என்னுடைய பொம்மையைப் பாழ்படுத்தி விட்டார்கள். காவல் படைக்காரர்கள் என்னுடைய பொம்மையை வாள்களால் குத்தித் துளைத்து விட்டார்கள்...''

அவன் மறுபடி வீரிடத் தொடங்கினான். சிறு முட்டிகளால் கண்களைத் தேய்த்து, கண்ணீ ரைக் கன்னங்களில் பூசினான்.

''என்ன?!'' என்று கூச்சலிட்டார்கள் தடியர்கள்.

''என்ன?!''

''காவல் படையினரா?''

''குத்தித் துளைத்தார்களா?''

''வாட்களாலா?''

''வாரிசு துத்தியின் பொம்மையையா?''

ஹாலில் இருந்தவர்கள் எல்லோரும் ஆழ்ந்த பெருமூச்சு விடுவதுபோல, ''இது நடக்க முடியாது!'' என்ருர்கள்.

அரசு அமைச்சன் தலையைப் பிடித்துக் கொண்டான். நரம்பு நோய்க்கார அரைவை இயந் திரச் சொந்தக்காரன் மறுபடியும் மூர்ச்சையானுன், ஆனுல் தடியனின் பயங்கரக் கூச்சலால் அக்கணமே சுய நினைவுக்கு வந்து விட்டான்.

''கொண்டாட்டத்தை நிறுத்துங்கள்! எல்லாக் காரியங்களையும் தள்ளிப் போடுங்கள்! ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டுங்கள்! எல்லா அலுவலர்களையும்! எல்லா நீதிபதிகளையும்! எல்லா அமைச்சர்களையும்! எல்லாக் கொலையாளிகளையும்! இன்றைய மரண தண்டனையை ரத்து செய்யுங்கள்! அரண்மனையில் துரோகம்!''

ஒரே பரபரப்பு உண்டாயிற்று. ஒரு நிமிடம் பொறுத்து அரண்மனைச் சாரட்டுகள் எல்லாத் திசைகளிலும் பாய்ந்து ஓடின. நீதிபதிகளும் ஆலோசகர்களும் கொலையாளிகளும் ஐந்து நிமிடங் களில் அரண்மனைக்கு விரைந்து வந்தார்கள். கலகக்காரர்களின் மரண தண்டனையை எதிர்பார்த்து நீதிமன்றச் சதுக்கத்தில் கூடியிருந்த கூட்டம் கலைந்து போக வேண்டி வந்தது. அறிவிப்பாளர் கள் மேடை மேல் ஏறி, மிக முக்கிய நிகழ்ச்சிகளின் காரணமாக மரண தண்டனை மறு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக இந்தக் கூட்டத்துக்குத் தெரிவித்தார்கள்.

கேக்கோடு கூடப் பலூன்காரனையும் ஹாலிலிருந்து வெளியேற்றினுர்கள். பெருந்தீனிப் பட்டாளம் நொடி நேரத்தில் நிதானத்துக்கு வந்து விட்டது.

எல்லோரும் வாரிசு துத்தியை நெருக்கமாகச் சூழ்ந்து கொண்டு, அவன் சொன்னதைக் கேட்டார்கள்.

''பூங்காவில் நான் புல் மேல் உட்கார்ந்திருந்தேன். பொம்மை என் பக்கத்தில் உட்கார்ந் திருந்தது. சூரிய கிரகணம் பிடிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினேம். அது ரொம்பச் சுவாரசியமானது. நேற்றைக்கு நான் புத்தகத்தில் படித்தேன்... கிரகணம் பிடிக்கும் போது, பகலில் விண்மீன்கள் தெரியுமாம்...''

விம்மல்கள் காரணமாக வாரிசுக்குப் பேச முடியவில்லை. அவனுக்குப் பதிலாக எல்லா விவரத்தையும் வளர்ப்பு ஆசிரியன் சொன்னுன். அச்சத்தால் நடுங்கியபடியால் அவனும் சிரமத் துடனேயே பேசினுன்.

''வாரிசு துத்திக்கும் அவனுடைய பொம்மைக்கும் கிட்டத்திலேயே நான் இருந்தேன். மூக்கைத் தூக்கியபடி வெயிலில் உட்கார்ந்திருந்தேன். என் மூக்கில் பரு வெடித்திருக்கிறது. அழகைக் கெடுக்கும் பருவைப் போக்க வெயில் எனக்கு உதவும் என்று நினைத்தேன். திடீரென்று வந்தார்கள் காவல் படையினர். பன்னிரண்டு பெயர் இருந்தார்கள். எதைப் பற்றியோ ஆத் திரத்தோடு பேசிக் கொண்டிருந்தார்கள். எங்கள் பக்கத்தில் வந்ததும் அவர்கள் நின்ருர்கள். அவர்களைப் பார்த்தால் பயமாய் இருந்தது. அவர்களில் ஒருவன் வாரிசு துத்தியைக் காட்டி, 'இதோ இருக்கிறது ஓநாய்க் குட்டி. மூன்று கொழுத்த பன்றிகளிடம் வளர்கிறது ஓநாய்க் குட்டி' என்ருன். ஐயோ! இந்தச் சொற்களின் பொருளை நான் புரிந்து கொண்டேன்.''

''அந்த மூன்று கொழுத்த பன்றிகள் யாராம்?'' என்று கேட்டான் முதல் தடியன்.

மற்ற இரு தடியர்களும் குப்பென்று சிவந்தார்கள். அப்போது முதல் தடியனும் சிவந்து போனுன். மூன்று தடியர்களும் கடுமையாக மூக்குகளை உறிஞ்சவே, தாழ்வாரத்துக் கண்ணுடிக் கதவு திறந்து மூடிக் கொண்டது.

வளர்ப்பு ஆசிரியன் கதையைத் தொடர்ந்தான்: ''அவர்கள் வாரிசு துத்தியைச் சூழ்ந்து கொண்டார்கள். 'மூன்று பன்றிகள் இரும்பு ஓநாய்க் குட்டியை வளர்க்கின்றன' என்ருர்கள். அவர்கள் கேட்டார்கள்: 'வாரிசு துத்தி, உன் இருதயம் எந்தப் பக்கத்தில் இருக்கிறது? இவனு டைய இருதயம் எடுக்கப்பட்டு விட்டது. கெட்டவனுகவும் இரக்கம் இல்லாதவனுகவும் கொடி யவனுகவும் மனிதர்கள் மேல் வெறுப்பு உள்ளவனுகவும் இவன் வளர வேண்டும்... மூன்று

பன்றிகளும் மண்டையைப் போட்டதும் கெட்ட ஓநாய் அவர்களுடைய இடத்துக்கு வரும்.'''

அரசு அமைச்சன் வளர்ப்பு ஆசிரியன் தோளைப் பிடித்து உலுக்கி, ''பயங்கரமான இந்தப் பேச்சுக்களை நீர் ஏன் தடுத்து நிறுத்தவில்லை? மக்களின் தரப்புக்கு மாறி விட்ட துரோகிகள் இவர்கள் என்பதை நீர் புரிந்து கொள்ளவில்லையோ?'' என்று கத்தினான்.

வளர்ப்பு ஆசிரியனுக்குக் கிலி பிடித்து விட்டது. அவன் குழற்றினான்:

''நான் இதைக் கண்டு கொண்டேன், ஆனால் அவர்களிடம் எனக்குப் பயமாய் இருந்தது. அவர்கள் ஒரேயடியாக ஆத்திரம் அடைந்து இருந்தார்கள். என்னிடமோ, ஆயுதம் எதுவும் இல்லை, பருவைத் தவிர... அவர்கள் வாட்களின் பிடிகளைப் பற்றிக் கொண்டு எதற்கும் தயாராக இருந்தார்கள். அவர்களில் ஒருவன் சொன்னான்: 'பாருங்கள், இதோ இருக்கிறது பஞ்சு அடைத்த உருவம், இந்தப் பொம்மை. ஓநாய்க் குட்டி பொம்மையோடு விளையாடுகிறது. உயிருள்ள குழந்தைகள் இவனுக்குக் காட்டப்படுவது இல்லை. பஞ்சு அடைத்த உருவம், விசையில் வைத்த பொம்மை, இவனுக்குத் தோழியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.' அப்போது இன்னொருவன் கத்தினான்: 'மகளையும் பெண்சாதியையும் நான் கிராமத்தில் விட்டிருக்கிறேன். நிலப் பிரபுவின் பூங்காவில் மரத்தில் தொங்கிய பேரிக்காயை என் மகன் கவண் கல்லால் அடித்தானாம். பணக்காரர்களின் ஆட்சியை அவமதித்ததற்காகப் பையனை மிலாறுகளால் விளாறும்படி நிலப் பிரபு உத்தரவிட்டானாம். அவனுடைய வேலைக்காரர்கள் என் வீட்டுக்காரியை வெளிப்படையாக அவமானப்படுத்தினார்களாம்.' காவல் படையினர் கத்தவும் வாரிசு துத்தி மேல் பாயவும் தலைப்பட்டார்கள். தன் மகனைப் பற்றிச் சொன்னானே, அவன் வாளை உருவிப் பொம்மையில் செருகினான். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள்...''

இந்த இடத்தில் வாரிசு துத்தி கண்ணீர் பெருக்கினான்.

'''இந்தா, ஓநாய்க் குட்டீ! உன்னுடைய கொழுத்த பன்றிகளையும் அப்புறம் ஒரு கை பார்க்கிறோம்' என்றார்கள் அவர்கள்.''

''எங்கே அந்தத் துரோகிகள்?'' என்று உறுமினார்கள் தடியர்கள்.

''பொம்மையை எறிந்து விட்டுப் பூங்காவுக்கு உள்ளே ஓடிப் போய் விட்டார்கள் அவர்கள். 'கருமான் புரோஸ்பெரோ நீடூழி வாழ்க! சர்க்கஸ்காரன் திபூல் நீடூழி வாழ்க! மூன்று தடியர்கள் ஒழிக!' என்று அவர்கள் கத்தினார்கள்.''



''காவலர்கள் அவர்களை ஏன் சுடவில்லை?'' என்று ஆத்திரப்பட்டார்கள் ஹாலில் இருந்தவர்கள்.

வளர்ப்பு ஆசிரியன் அப்போது ஒரு பயங்கரமான சேதியைச் சொன்னன்:

''காவலர்கள் அவர்களைப் பாராட்டித் தொப்பிகளை ஆட்டினர்கள். காவலர்கள் அவர்களுக்கு விடை அளித்ததை, சுற்றுச் சுவரின் பின்னிருந்து நான் பார்த்தேன். அவர்கள் சொன்னர்கள்: 'தோழர்களே! மக்களிடம் போய், எல்லாப் படையினரும் விரைவில் அவர்கள் தரப்புக்கு வந்து விடுவார்கள் என்று சொல்லுங்கள்'...''

பூங்காவில் நடந்தது இதுதான்.

கலவரம் தொடங்கியது. அரண்மனையிலும் பூங்காவில் உள்ளே வரும் வாயில்களிலும் வெளியே போகும் வாயில்களிலும் பாலங்களின் மேலும் நகர வாயில்களுக்குப் போகும் சாலையிலும் அரண்மனைக் காவல் படையின் மிக மிக நம்பகமான பிரிவுகள் நிறுத்தப்பட்டன.

அரசு ஆலோசனை மன்றத்தின் கூட்டம் கூடியது. விருந்தாளிகள் போய் விட்டார்கள். அரண்மனைத் தலைமை மருத்துவனின் தராசில் மூன்று தடியர்கள் எடை பார்த்துக் கொண்டார்கள். கவலைப்பட்ட போதிலும் அவர்கள் ஒரு துளி கொழுப்பைக் கூட இழக்கவில்லை என்று தெரிந்தது. தலைமை மருத்துவன் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான். ரொட்டியும் வெறும் நீரும் மட்டுமே அவனுக்குச் சாப்பிடக் கொடுக்கும்படி உத்தரவு ஆயிற்று.

வாரிசு துத்தியின் பொம்மை பூங்காவில் புல்லின் மேல் கண்டு எடுக்கப்பட்டது. சூரிய கிரகணத்தைப் பார்க்க அதற்கு வாய்க்கவில்லை. பயன்படவே முடியாதபடிச் சீர்குலைக்கப்பட்டிருந்தது அது.

வாரிசு துத்தியைச் சமாதானப்படுத்தவே முடியவில்லை. உடைந்த பொம்மையைத் தழுவிக் கொண்டு அவன் தேம்பினன். பொம்மை சிறு பெண்ணின் வடிவத்தில் இருந்தது. அது துத்தியின் அளவே உயரமாக இருந்தது. கலைத்திறமையுடன் செய்யப்பட்ட விலை மிகுந்த அந்தப் பொம்மை உயிருள்ள சிறுமிக்குத் தோற்றத்தில் எவ்விதத்திலும் வேறாய் இல்லை.

இப்போது அதன் உடை கிழிக்கப் பட்டிருந்தது. வாட்களின் தாக்குதலால் ஏற்பட்ட துளைகள் மார்பில் கறுப்பாகத் தெரிந்தன. ஒரு மணி நேரம் முன்பு வரை உட்காரவும் நிற்கவும் புன்னகை செய்யவும் நடனம் ஆடவும் அதனல் முடிந்தது. இப்போதோ, அது வெறும் பஞ்சு அடைத்த உருவம், கந்தல் துணி ஆகிவிட்டது. அதன் தொண்டையிலும் மார்பிலும் ரோஜா நிறப் பட்டுக்கு அடியில் ஓர் இடத்தில் கரகரத்தது உடைந்த சுருள்கம்பி—பழைய கடிகாரங்கள் மணி அடிப்பதற்கு முன்னல் கரகரக்குமே, அந்த மாதிரி.

''இது செத்துப் போய் விட்டது! எவ்வளவு துன்பம்! இது செத்துப் போய் விட்டது!'' என்று முறையிட்டான் வாரிசு துத்தி.

சிறுவன் துத்தி ஓநாய்க் குட்டியாக இருக்கவில்லை.

''இந்தப் பொம்மையைச் செப்பனிட வேண்டும். வாரிசு துத்தியின் துயரத்துக்கு வரம்பே இல்லை. என்ன விலை செலுத்தியும் பொம்மையைச் சரிப்படுத்த வேண்டும்!'' என்று அரசு ஆலோசனைக் கூட்டத்தில் சொன்னன் அரசு அமைச்சன்.

''வேறொரு பொம்மை வாங்க வேண்டும்'' என்று யோசனை சொன்னர்கள் அமைச்சர்கள்.



''வாரிசு துத்தி வேறு பொம்மை வேண்டாம் என்கிருன். இந்தப் பொம்மை மறுபடி உயிர் பெற வேண்டும் என்று அவன் ஆசைப்படுகிருன்.''

''ஆனுல் இதைச் செப்பனிட யாரால் தான் முடியும்?''

''எனக்குத் தெரியும்'' என்ருன் மக்கள் கல்வித் துறை அமைச்சன்.

''யாரால்?''

''திருவாளர்களே, நகரத்தில் மருத்துவர் கஸ்பார் அர்னேரி வசிப்பதை நாம் மறந்து விட்டோம். இந்த மனிதரால் எல்லாம் செய்ய முடியும். வாரிசு துத்தியின் பொம்மையை அவர் சரிப்படுத்துவார்.''

எல்லோரும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

''பலே! பலே!''

மருத்துவர் கஸ்பாரை நினைவு படுத்திக் கொண்டு அரசு ஆலோசனே சபையினர் எல்லோரும் ஒரே குரலில் பாடினுர்கள்:

தரையிலிருந்து விண்ணில் பறக்கவும்
நரியின் வாலே எட்டிப் பிடிக்கவும்
கல்லே ஆவியாகச் செய்யவும்
வல்லவர் மருத்துவர் கஸ்பார்.

மருத்துவர் கஸ்பாருக்கு உத்தரவு அப்போதே எழுதப்பட்டது.

''திருவாளர் மருத்துவர் கஸ்பார் அர்னேரிக்கு

''மூன்று தடியர்கள் அரசாங்கத்தின் அரசு ஆலோசனே மன்றம் வாரிசு துத்தியின் பழுது பட்ட பொம்மையை இத்துடன் அனுப்பி வைத்து, நாளேக்குள் இதைச் செப்பனிட்டுத் தரும்படி உங்களுக்குக் கட்டளே இடுகிறது. பொம்மை முன்போன்ற ஆரோக்கியமும் உயிர்த் துடிப்பும் உள்ள தோற்றத்தைப் பெற்ருல், நீங்கள் விரும்பும் பரிசு உங்களுக்குத் தரப்படும். கட்டளே நிறைவேற்றப்படாவிட்டால் உங்களுக்குக் கடும் தண்டனே கிடைக்கும்.

**அரசு ஆலோசனே மன்றத் தலேவன், அரசு அமைச்சன்...''**

அக்கணமே அரசு அமைச்சன் உத்தரவில் கையெழுத்து இட்டான். பெரிய அரசு முத்திரையும் அப்போதே இடப்பட்டது. செம்மச் செம்ம நிறைந்த மூட்டையின் வடிவம் பொறித்த வட்ட முத்திரை அது.

மருத்துவர் கஸ்பார் அர்னேரியைத் தேடிக் கண்டு அரசு ஆலோசனே மன்றத்தின் உத்தரவை அவரிடம் கொடுப்பதற்காக அரண்மனேக் காவல் படைக் காப்டன் பொனவெந்தூரா பிரபு இரண்டு காவல் படையினர் உடன் வர நகரத்துக்குப் புறப்பட்டான்.

அவர்கள் குதிரைகள் மேல் சவாரி செய்தார்கள். பின்னுல் சாரட்டு வந்தது. அரண்மனே அலுவலன் அதில் இருந்தான். அவன் பொம்மையை மடி மேல் வைத்திருந்தான். கத்தரித்த சுருட்டை மயிர் அடர்ந்த அழகான தலேயைப் பொம்மை அவனுடைய தோள் மேல் சாய்த்துக் கொண்டிருந்தது.

வாரிசு துத்தி அழுவதை நிறுத்தினுன். மறுபடி உயிர் பெற்று விட்ட உடல் நலம் உள்ள பொம்மையை ஆட்கள் அடுத்த நாள் கொண்டுவருவார்கள் என்று அவன் நம்பினுன்.

அரண்மனேயில் பகல் இப்படிக் கலவரம் நிறைந்ததாகக் கழிந்தது.

ஆனுல் பறந்து வந்த பலூன்காரன் கதை என்ன ஆயிற்று?

அவன் ஹாலிலிருந்து எடுத்துப் போகப்பட்டது நமக்குத் தெரியும்.

அவன் மறுபடி மிட்டாய்ச்சாலே சேர்ந்தான்.

அங்கே நிகழ்ந்தது விபத்து.

கேக்கைத் தூக்கி வந்தவர்களில் ஒரு பணியாள் கிச்சிலிப் பழத் தோல் மேல் காலே வைத்து விட்டான்.

''சமாளித்துக் கொள்!'' என்று கத்தினார்கள் பணியாட்கள்.

தன் அரியணை அசைந்தாடுவதை உணர்ந்த பலூன்காரன் ''காப்பாற்றுங்கள்!'' என்று கூச்சலிட்டான்.

ஆனால் பணியாள் சமாளித்துக் கொள்ளவில்லை. மெருகிட்ட ஓடுகள் பாவிய கெட்டித் தரையில் தடாலென்று விழுந்து, நீண்ட கால்களை உயர்த்தி ஓவென்று ஊளையிட்டான்.

''ஆகா, பலே!'' என்று ஆனந்தக் கூச்சல் போட்டார்கள் சமையல்காரப் பையன்கள்.

தட்டோடும் கேக்கோடும் சேர்ந்து பணியாளின் பின்னே தரையில் விழுந்த பலூன்காரன் புகலற்ற ஏக்கத்துடன் ''சனியன்களா!'' என்றான்.

தட்டு சுக்கு நூறாக உடைந்து போயிற்று. பாலாடை வெண்பனிப் பந்துகள் போல எல்லாப் புறங்களிலும் சிதறிற்று. பணியாள் துள்ளி எழுந்து ஓடிப் போய் விட்டான்.

சமையல்காரப் பையன்கள் குதித்துக் கூத்தாடினார்கள், ஆரவாரித்தார்கள்.

உடைசல்களுக்கு நடுவில், குட்டமாய்த் தேங்கி இருந்த ராஸ்ப்பெரிப் பழப் பாகில், நல்ல பிரெஞ்சுப் பாலாடைப் படலங்கள் சூழத் தரை மேல் உட்கார்ந்திருந்தான் பலூன்காரன். பாலாடைத் துண்டுகள் சிதறிய கேக்கின் மேல் ஏக்கத்துடன் உருகிக் கொண்டிருந்தன.

மிட்டாய்ச்சாலையில் சமையல்காரப் பையன்கள் மட்டுமே இருந்ததையும் மூன்று பெரிய மிட்டாய்க்காரர்கள் இல்லாததையும் கண்டு பலூன்காரனுக்கு ஆறுதல் உண்டாயிற்று.

''சமையல்காரப் பையன்களோடு உடன்பாடு செய்து கொள்வேன். அவர்கள் தப்பிப் போக எனக்கு உதவுவார்கள். என் பலூன்கள் எனக்குக் கைகொடுக்கும்'' என்று அவன் முடிவு செய்தான்.

பலூன்கள் கட்டியிருந்த கயிற்றை அவன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தான்.

சமையல்காரப் பையன்கள் எல்லாப் பக்கங்களிலும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். பலூன்கள் செல்வக் களஞ்சியங்கள், ஒரு பலூனையாவது தனக்காக வைத்துக் கொள்வது சமையல்காரப் பையனுடைய இன்பக் கனவு என்பதை அவர்களுடைய பார்வையிலிருந்து பலூன்காரன் கண்டு கொண்டான்.

அவன் சொன்னான்:

''துணிகரச் செயல்கள் எனக்கு ஓரேயடியாக அலுத்து விட்டன. நான் சின்னப் பையனோ வீரனோ அல்ல. எனக்குப் பறக்கப் பிடிக்காது. மூன்று தடியர்களிடம் எனக்குப் பயமாய் இருக்கிறது. கொண்டாட்டக் கேக்குகளை அழகுபடுத்த எனக்குத் தெரியாது. அரண்மனையிலிருந்து தூரப் போய்விட எனக்கு நிரம்ப ஆசையாய் இருக்கிறது.''

சமையல்காரப் பையன்கள் சிரிப்பதை நிறுத்தினார்கள். பலூன்கள் அசைந்தாடின, சுழன்றன. இந்த இயக்கம் காரணமாக வெயில் ஒளி ஒரு தரம் நீலமாகவும் இன்னொரு தரம் மஞ்சளாகவும் மற்றொரு தரம் சிவப்பாகவும் அவற்றில் பளிச்சிட்டது. அவை அற்புதமான பலூன்கள்.

''நான் தப்பியோட உங்களால் உதவ முடியுமா?'' என்று கயிற்றை இழுத்துக் கொண்டு கேட்டான் பலூன்காரன்.

''முடியும்'' என்று தணிந்த குரலில் சொன்னான் ஒரு பையன். பின்பு, ''உங்கள் பலூன்களை எங்களுக்குத் தாருங்கள்'' என்றான்.

பலூன்காரன் வெற்றியடைந்தான்.

''நல்லது'' என்று உணர்ச்சியைக் காட்டாமல் சொன்னான். ''எனக்குச் சம்மதம். பலூன்கள் ரொம்ப விலை உள்ளவை. எனக்கு இந்த பலூன்கள் மிகவும் தேவை. ஆனாலும் நான் இசைகிறேன். உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது. உங்கள் முகங்களில் குதூகலமும் ஒளிவு மறைவு இல்லாத குணமும் தெரிகின்றன. உங்கள் குரல்கள் கணீரென்று ஒலிக்கின்றன.''

''உங்களைச் சாத்தான் வாரிக் கொண்டு போக!'' என்று அதே சமயம் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

''தலைமை மிட்டாய்க்காரர் இப்போது சரக்கறையில் இருக்கிறார். மாலைச் சிற்றுண்டிக்கு வேண்டிய பிஸ்கோத்துக்களுக்குத் தேவையான பண்டங்களை நிறுத்துக் கொண்டிருக்கிறார். அவர் திரும்புவதற்குள் நீங்கள் போய் விட வேண்டும்'' என்றான் ஒரு சமையல்காரப் பையன்.

''சரி. தாமதிப்பது கூடாது'' என்று இசைந்தான் பலூன்காரன்.

''இதோ. எனக்கு ஓர் இரகசியம் தெரியும்.''

இப்படிச் சொல்லி, கன சதுர வடிவான ஓட்டுத் திண்ணை மேல் இருந்த பெரிய பித்தளைப் பாத்திரத்தின் பக்கத்தில் போய், அதன் மூடியைத் திறந்தான் பையன்.

''பலூன்களைக் கொடுங்கள்'' என்று கேட்டான்.

''உனக்கு மூளை பிசகி விட்டதோ? உன்னுடைய பாத்திரம் எனக்கு எதற்காக? நான் தப்பிப் போக விரும்புகிறேன். என்னைப் பாத்திரத்தில் நுழையச் சொல்லுகிறாயா என்ன?'' என்று எரிந்து விழுந்தான் பலூன்காரன்.

''ஆமாம்.''

''பாத்திரத்திலா?''

''ஆமாம்.''

''அப்புறம்?''

''அங்கே காண்பீர்கள். பாத்திரத்தில் இறங்குங்கள். தப்பி ஓட எல்லாவற்றிலும் மேலான வழி இது.''

ஒடிசலான பலூன்காரன் மட்டும் அல்ல, மூன்று தடியர்களில் எல்லோரிலும் பருமனானவன் கூட நுழையக் கூடியபடி அவ்வளவு விசாலமாக இருந்தது பாத்திரம்.



''நேரத்தில் வெளியேற விரும்பினுல் இறங்குங்கள் சீக்கிரம்.''

பலூன்காரன் பாத்திரத்துக்குள் எட்டிப் பார்த்தான். அதற்கு அடி இல்லே. கிணறு போன்ற கறுப்புப் பள்ளத்தை அவன் கண்டான்.

''நல்லது. பாத்திரத்தில் தான் இறங்க வேண்டும் என்ருல் அப்படியே செய்கிறேன். காற்றில் பறப்பதையும் பாலாடையில் குளிப்பதையும் விட இது மோசமாய் இராது. சரி, போய் வருகிறேன், சின்னப் புரட்டர்களே. இந்தாருங்கள், என் விடுதலேக்கு விலே.''

முடிச்சை அவிழ்த்து, பலூன்களேச் சமையல்காரப் பையன்களுக்குக் கொடுத்தான், ஆளுக்கு ஒன்ருக எல்லோருக்கும் போதுமானவையாக இருந்தன இருபது பலூன்கள். ஒவ்வொருவனுக்கும் தனிக் கயிற்றில்.

பின்பு, தனக்கு இயல்பான பாங்கின்மையுடன் கால்களே முன்னுல் எடுத்து வைத்துப் பாத்திரத்தில் நுழைந்தான் பலூன்காரன். சமையல்காரப் பையன் பாத்திரத்தை அழுத்தி மூடினுன்.

''பலூன்கள்! பலூன்கள்!'' என்று மகிழ்ச்சி பொங்க ஆரவாரித்தார்கள் சமையல்காரப் பையன்கள்.

மிட்டாய்ச்சாலேயிலிருந்து இறங்கி, அதன் சன்னலே ஒட்டி இருந்த பூங்காப் புல்வெளிக்கு ஓடினுர்கள்.

அங்கே, காற்ருேட்டமான திறந்த வெளியில் பலூன்களே வைத்துக் கொண்டு விளேயாடுவது அதிக இன்பமாய் இருந்தது.

திடீரென்று மிட்டாய்ச் சாலேயின் மூன்று சன்னல்களில் மூன்று மிட்டாய்க்காரர்கள் தென்பட்டார்கள்.

''என்ன? என்ன இது? இது என்ன ஒழுங்கீனம்? வாருங்கள் திரும்பி!'' என்று ஒவ்வொரு மிட்டாய்க்காரனும் கூப்பாடு போட்டான்.

இந்தக் கூச்சலால் திடுக்கிட்ட சமையல்காரப் பையன்கள் பலூன் கயிறுகளே விட்டுவிட்டார்கள்.

இன்பம் முடிந்து விட்டது.

இருபது பலூன்களும் சட்டென்று பறந்து, ஒளி வீசிக் கொண்டிருந்த நீல வானத்துக்குப் போய் விட்டன. சமையல்காரப் பையன்களோ, வெள்ளேத் துணித் தொப்பிகள் அணிந்த தலேகளே உயர்த்தி, மணம் வீசிய மலர்ச்செடிகளுக்கு நடுவே, கீழே புல் மேல் திறந்த வாய்களுடன் நின்ருர்கள்.



அத்தியாயம் 5

## நீக்ரோவும் முட்டைக்கோசும்



COMICS PDF TIMES

மருத்துவரின் அமைதி இல்லாத இரவு கழைக்கூத்தாடியும் சர்க்கஸ் காரனுமான திபூல் கணப்பிலிருந்து வெளி வந்ததில் முடிந்தது உங்களுக்கு நினைவு இருக்கும்.

அதிகாலையில் மருத்துவர் கஸ்பாரின் சோதனைக் கூடத்தில் அவர்கள் இருவரும் என்ன செய்தார்களோ, தெரியாது. கவலையினாலும் மருத்துவர் கஸ்பாரை நீண்ட நேரம் எதிர்பார்த்ததாலும் களைத்துப் போன கனிமீடு அத்தை அயர்ந்து தூங்கினாள், கனவில் கோழியைக் கண்டாள்.

மறு நாள், அதாவது, பலூன் விற்பவன் மூன்று தடியர்களின் அரண்மனைக்குப் பறந்து போனதும் காவல் படையினர் வாரிசு துத்தியின் பொம்மையைக் குத்தித் துளைத்ததும் நிகழ்ந்த அன்று, கனிமீடு அத்தைக்கு ஒரு நிகழ்ச்சியால் வருத்தம் உண்டாயிற்று. பொறியில் அகப்பட்டிருந்த சுண்டெலியை அவள் தப்ப விட்டு விட்டாள். முந்திய இரவு இந்தச் சுண்டெலி ஆரஞ்சுப் பழப் பாகுக் கட்டியை அரைக் கிலோ தின்று தீர்த்திருந்தது. இன்னும் முன்னால், வெள்ளிக் கிழமை இரவில் இது கார்னேஷன் மலர் வைத்திருந்த கண்ணாடித் தம்ளரைக் குப்புறத் தள்ளி விட்டது.

தம்ளர் உடைந்து போயிற்று. கார்னேஷன் மலருக்கோ, இருதயப் படபடப்பைத் தணிக்கும் வலெரியான் துளிகளின் மணம் எதனாலோ வந்து விட்டது.

அமைதி இல்லாத இரவில் சுண்டெலி பொறியில் மாட்டிக் கொண்டது.

அதிகாலையில் எழுந்த கனிமீடு அத்தை பொறியைத் தூக்கினாள். சிறைப்படுவது அதற்கு இது முதல் தடவை அல்ல போல ஒரே அசட்டையான தோற்றத்துடன் உட்கார்ந்திருந்தது சுண்டெலி. அது வெறுமே நடித்தது.

பொறியை நன்றாகத் தெரியும் இடத்தில் வைத்து, ''உனக்குச் சொந்தம் இல்லாத பழப் பாகை இனிமேல் தின்னாதே!'' என்றாள் கனிமீடு அத்தை.

நல்லுடை அணிந்து கொண்டு கனிமீடு அத்தை மருத்துவர் கஸ்பாரின் சோதனைக் கூடத்துக்குப் புறப்பட்டாள். சுண்டெலி பிடிபட்ட சந்தோஷத்தை அவருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினாள். தலைக்கு நாள் காலையில் ஆரஞ்சுப் பழப் பாகுக் கட்டி பாழாகி விட்டது பற்றி அவளுக்கு அனுதாபம் தெரிவித்திருந்தார் மருத்துவர் கஸ்பார்.

''பழப் பாகுக் கட்டியில் புளியம் நிறைய இருப்பதால் அது சுண்டெலிகளுக்குப் பிடிக்கிறது'' என்றார் அவர்.

கனிமீடு அத்தைக்கு இதனால் ஆறுதல் உண்டாயிற்று.

''சுண்டெலிக்கு என் புளியம் பிடிக்கிறதாக்கும்... அதற்கு என் எலிப்பொறி பிடிக்கிறதா என்பதையும் பார்ப்போமே'' என்று எண்ணிக் கொண்டாள்.

சோதனைக்கூட வாயிலை நெருங்கினாள் கனிமீடு அத்தை. எலிப்பொறியைக் கைகளில் பிடித்திருந்தாள்.

அதிகாலை. திறந்த சன்னலுக்கு வெளியே மரஞ்செடிகள் தளதளத்தன. பலூன்காரனை அடித்துப் போன பலத்த காற்று சற்று நேரம் பொறுத்தே வீசத் தொடங்கிற்று.

கதவின் மறுபுறம் ஆள் நடமாட்டம் கேட்டது.

''பாவம்! இவர் இரவு முழுவதும் தூங்காமலே இருந்து விட்டாரா என்ன?'' என்று நினைத்துக் கொண்டாள் கனிமீடு அத்தை.

அவள் கதவைத் தட்டினாள்.

மருத்துவர் என்னவோ சொன்னார், ஆனால் அவளுக்குத் தெளிவாகக் கேட்கவில்லை.

கதவு திறந்தது. நிலையின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார் மருத்துவர். எரிந்த ரப்பர் போன்ற நாற்றம் சோதனைக் கூடத்தில் அடித்தது. புடம் போடும் மூசையின் அணையும் தறுவாயில் இருந்த சிவப்பு நெருப்பு மூலையில் மினுமினுத்தது.

இரவில் எஞ்சிய நேரம் எல்லாம் மருத்துவர் கஸ்பார் ஏதோ விஞ்ஞானச் சோதனையில் ஈடுபட்டிருந்தார் என்பது தெரிந்தது.

''காலை வணக்கம்!'' என்று குதூகலம் பொங்கக் கூறினார் மருத்துவர்.

கனிமீடு அத்தை எலிப்பொறியை உயரத் தூக்கினாள். சுண்டெலி சின்ன மூக்கை விடைத்து மோப்பம் பிடித்தது.

''சுண்டெலியைப் பிடித்து விட்டேன்!''

''அப்படியா! எங்கே, காட்டுங்கள்!'' என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் சொன்னார் மருத்துவர்.

கனிமீடு அத்தை குலுக்கி மினுக்கிக் கொண்டு சன்னலுக்குப் பக்கத்தில் போனாள்.

''இதோ பாருங்கள்!''

அத்தை எலிப்பொறியை நீட்டினாள். திடீரென்று அவள் பார்வையில் பட்டான் ஒரு நீக்ரோ. சன்னலின் பக்கத்தில், ''சாக்கிரதையாக!'' என்று எழுதப்பட்டிருந்த பெட்டி மேல் உட்கார்ந்திருந்தான் அழகான ஒரு நீக்ரோ.

நீக்ரோ வெற்று உடம்பாய் இருந்தான்.

நீக்ரோ சிவப்பு நிக்கர் மாட்டி இருந்தான்.



நீக்ரோ கறுப்பும் ஊதாவும் பழுப்புமாகப் பளபளத்தான்.

நீக்ரோ சுங்கான் புகைத்துக் கொண்டிருந்தான்.

கனிமீடு அத்தை ''ஐயோ!'' என்று உரக்க வீரிட்டதால் இருகூறுகளாகப் பிளக்கத் தெரிந்தாள். அவள் பம்பரமாய்ச் சுழன்று வயற்காட்டுப் பொம்மை போலக் கைகளை இரு புறமும் நீட்டினாள். அப்போது அவள் இசகு பிசகாக எதையோ தட்டி விடவே, எலிப்பொறியின் தாழ்ப்பாள் கிணுகிணுத்துத் திறந்து கொண்டது. சுண்டெலி துள்ளி விழுந்து எங்கோ மறைந்து விட்டது.

கனிமீடு அத்தை அப்படித் திகைத்துப் போனாள்.

நீக்ரோ கடகடவென்று உரக்கச் சிரித்து நீண்ட வெறுங் கால்களை நீட்டினான். பிரமாண்டமான மிளகாய்ப் பழம் போன்ற சிவப்புச் சோடுகள் அவன் கால்களில் இலகின.

குப் குப்பென்று அடிக்கும் புயல் காற்றில் சிறு கிளை நடுங்குவது போல அவன் பற்களில் இடுக்கி இருந்த சுங்கான் துள்ளித் துள்ளிக் குதித்தது. மருத்துவரின் மூக்குக் கண்ணாடியும் பளிச்சுப் பளிச்சென்று ஒளி வீசியபடி நர்த்தனம் ஆடிற்று. அவரும் சிரித்துக் கொண்டிருந்தார்.

கனிமீடு அத்தை சோதனைக் கூடத்திலிருந்து பாய்ந்து ஓடினாள். ''சுண்டெலி! சுண்டெலி! பழப் பாகுக் கட்டி! நீக்ரோ!'' என்று ஓலமிட்டாள் அவள்.

மருத்துவர் கஸ்பார் அவள் பின்னே ஓடினார்.

''கனிமீடு அத்தை, நீங்கள் வீணாகக் கலவரப்படுகிறீர்கள். என்னுடைய புதிய சோதனை பற்றி முன்கூட்டி உங்களுக்குத் தெரிவிக்க நான் மறந்து விட்டேன். ஆனால் நீங்களே எதிர்பார்த்திருக்கலாமே. நானோ விஞ்ஞானி, பல கலைகளில் வல்லவன், பல வகை இயந்திரங்களில் தேர்ச்சி பெற்றவன். விதம் விதமான சோதனைகள் செய்து வருகிறேன். என்னுடைய சோதனைக்

கூடத்தில் நீக்ரோவை மட்டும் அல்ல, யானையைக் கூடப் பார்க்கலாம். கனிமீடு அத்தை... கனிமீடு அத்தை... நீக்ரோ ஒரு விஷயம், முட்டைப் பொரியலோ, வேறு விஷயம்... நாங்கள் காலைச் சிற்றுண்டிக்காகக் காத்திருக்கிறோம். என் நீக்ரோவுக்கு நிறைய முட்டைப் பொரியல் பிடிக்கும்...''

''சுண்டெலிக்குப் புளியம் பிடிக்கும், நீக்ரோவுக்கு முட்டைப் பொரியல் பிடிக்கும்...'' பதைபதைப்புடன் கிசுகிசுத்தாள் கனிமீடு அத்தை.

''அவ்வளவுதான். முட்டைப் பொரியல் இப்போது, சுண்டெலி இரவில். அது இரவில் பிடிபட்டு விடும், கனிமீடு அத்தை... வெளியே அது செய்வதற்கு ஒன்றும் மிச்சம் இல்லை. ஆரஞ்சுப் பழப் பாகு அறவே தின்று தீர்க்கப்பட்டு விட்டது.''

கனிமீடு அத்தை அழுதாள், முட்டைப் பொரியலில் உப்புக்குப் பதிலாகக் கண்ணீர் சிந்தினாள். கண்ணீர் ஒரே காட்டமாய் இருந்தபடியால் மிளகுப் பொடிக்கும் தேவை இல்லாது போயிற்று.

''நிறைய மிளகுப் பொடி தூவி இருப்பது நன்றாய் இருக்கிறது. அபார ருசி!'' என்று முட்டைப் பொரியலை ஆவலோடு விழுங்கினான் நீக்ரோ.

கனிமீடு அத்தை நெஞ்சுப் படபடப்பைத் தணிப்பதற்காக வலெரியான் துளிகளைக் குடித்தாள். அவை எதனாலோ கார்னேஷன் மலர் போல மணத்தன. கண்ணீரின் காரணமாக இருக்கும்.

மருத்துவர் கஸ்பார் வீதியில் நடந்ததை அப்புறம் அவள் சன்னல் வழியே பார்த்தாள். எல்லாம் ஒழுங்காய் இருந்தன: புதிய மப்ளர், புதிய கைத்தடி, அழகான முழுக் குதிகள் வைத்த புதிய (உண்மையில் பழைய) செருப்புக்கள்.

ஆனால் அவர் பக்கத்தில் நடந்தான் நீக்ரோ.

கனிமீடு அத்தை கண்களை இறுக மூடிக் கொண்டு தரையில் உட்கார்ந்தாள். அவள் உட்கார்ந்த இடத்தில் இருந்தது பூனை. அது கலவரம் அடைந்து கத்திற்று. கனிமீடு அத்தை தன்னை மீறிய ஆத்திரம் பொங்கப் பூனையை மொத்தினாள்: அது ஓயாமல் அவளைச் சுற்றி வந்து கொண்டிருந்ததற்காகவும் சரியான நேரத்தில் சுண்டெலியைப் பிடிக்க அதனால் முடியாததற்காகவும்.

சுண்டெலியோ, மருத்துவர் கஸ்பாரின் சோதனைக் கூடத்திலிருந்து கனிமீடு அத்தையின் அலமாரிக்கு வந்து வாதுமை அப்பத்தைத் தின்று கொண்டே ஆரஞ்சுப் பழப் பாகுக் கட்டியைப் பரிவுடன் நினைவுகூர்ந்தது.

மருத்துவர் கஸ்பார் அர்னேரி நிழல் வீதியில் வசித்து வந்தார். இந்த வீதியிலிருந்து இடது பக்கம் திரும்பினால் விதவை லிஸவேத்தா என்ற பெயர் உள்ள சந்து வரும். அங்கிருந்து இடி விழுந்து முறிந்து போன ஓக் மரத்தால் புகழ் பெற்ற வீதியைத் தாண்டி இன்னும் ஐந்து நிமிட நேரம் நடந்தால் பதினாலாவது சந்தையில் இருக்கலாம்.

மருத்துவர் கஸ்பாரும் நீக்ரோவும் அந்தத் திக்கில் நடந்தார்கள். அதற்குள் காற்று வலுத்தது. முறிந்த ஓக் மரம் ஊஞ்சல் போலக் கிறீச்சிட்டது. விளம்பரத் தாள் ஒட்டுபவனால் பசை தடவிய காகிதத்தைச் சரியாக வைத்துக் கொள்ளவே முடியவில்லை. காற்று அதைக் கைகளிலிருந்து பிடுங்கி அவனுடைய முகத்தில் எறிந்தது. அவன் வெள்ளைக் கைத்துவாலையால் முகத்தைத் துடைத்துக் கொள்வது போலத் தொலைவிலிருந்து பார்க்கையில் தோன்றியது.

விளம்பரத் தாளைச் சுற்றுச் சுவர் மேல் ஒட்டக் கடைசியில் அவனுக்கு வாய்த்து விட்டது.

மருத்துவர் கஸ்பார் படித்தார்:




''அப்படியா! புரிந்தது விஷயம். நீதிமன்றச் சதுக்கத்தில் இன்று மரண தண்டனை நிறைவேற்றப்படப் போகிறது. பணக்காரர்கள், பெருந்தீனிக்காரர்களுடைய அட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்களுடைய தலைகளை மூன்று தடியர்களின் கொலைகாரர்கள் வெட்டப் போகிறார்கள். மூன்று தடியர்கள் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நீதிமன்றச் சதுக்கத்தில் கூடும்

மக்கள் வெட்டு மேடைகளை உடைத்துத் தகர்த்து, கொலையாளிகளைக் கொன்று, மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் தங்கள் சோதரர்களை விடுவித்து விடலாம் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகையால்தான் மக்களின் இன்பப் பொழுது போக்குக்கு அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். இன்றைய மரண தண்டனையிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்ப அவர்கள் விரும்புகிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டார் மருத்துவர் கஸ்பார்.

அவரும் அவருடைய கறுப்புத் துணைவனும் சந்தைச் சதுக்கத்தை அடைந்தார்கள். நாடக மேடைகளின் பக்கத்தில் ஆட்கள் கூடி இருந்தார்கள். ஒரு பகட்டனையோ, பொன் மீன் அல்லது முந்திரிப் பழ நிற உடை அணிந்த சீமாட்டியையோ, தங்கச் சரிகைப் பூத்தையல் வேலை செய்த பல்லக்கில் அமர்ந்த உயர்குடி முதியவனையோ, இடையில் பிரமாண்டமான தோல் பணப்பை வைத்திருக்கும் வியாபாரியையோ கூடி இருந்தவர்களுக்கு நடுவில் மருத்துவர் கஸ்பார் காணவில்லை.

நகரின் ஓரப் பகுதிகளில் வசித்த கம்மியர்கள், தொழிலாளர்கள், மலிவான ரை ரொட்டி விற்பவர்கள், நாட்கூலிக்காரிகள், சுமை தூக்கிகள், கிழவிகள், பிச்சைக்காரர்கள், அங்கவீனர்கள் ஆகியவர்களே இங்கே கூடி இருந்தார்கள். சாம்பல் நிறமான பழைய கிழிந்த உடைகளில் பச்சை முன்கைப் பகுதிகள், கலப்பு நிற மழைக் கோட்டுகள், அல்லது வெவ்வேறு நிற ரிப்பன்கள் ஒரு சிலரிடம் காணப்பட்டன.

கிழவிகளின் கம்பளி இழைகள் போன்ற தலைமயிரைக் காற்று பரத்தியது. அது கண்களைக் காந்தச் செய்தது, ஏழைகளின் பழுப்பு நிறக் கந்தல்களைப் பிய்க்கப் பார்த்தது.

எல்லோருடைய முகங்களும் ஏக்கத்தைக் காட்டின. எல்லோரும் கெட்டதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நீதிமன்றச் சதுக்கத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்படும். நம் தோழர்களின் தலைகள் அங்கே உருளப் போகின்றன. இங்கேயோ, மூன்று தடியர்களால் நிறையத் தங்கம் கொடுத்து அமர்த்தப்பட்ட கோமாளிகள் கோரணிகள் காட்டப் போகிறார்கள்'' என்று ஆட்கள் பேசிக் கொண்டார்கள்.

''நீதிமன்றச் சதுக்கத்துக்குப் போவோம்!'' என்ற கூச்சல்கள் எழுந்தன.

''நம்மிடம் ஆயுதங்கள் இல்லை. நம்மிடம் கைத்துப்பாக்கிகளும் வாட்களும் கிடையாது. நீதிமன்றச் சதுக்கத்தையோ காவல் படையினரின் மூன்று வரிசைகள் சுற்றிலும் அரண் செய்திருக்கின்றன.''

''படையினர் இன்னமும் பணக்காரர்களுக்கே தொண்டு செய்கிறார்கள். அவர்கள் நம்மைத் துப்பாக்கிகளால் சுட்டார்கள். பரவாயில்லை! இன்று இல்லாவிட்டால் நாளை அவர்கள் நம்மோடு சேர்ந்து கொண்டு தங்கள் அதிகாரிகளை எதிர்த்துப் போரிடுவார்கள், நிச்சயமாக.''

''இன்றே கூட, விண்மீன் சதுக்கத்தில் ஒரு காவல் படையினன் தன்னுடைய அதிகாரியைச் சுட்டுக் கொன்றான். அதனால் சர்க்கஸ்காரன் திபூலின் உயிரை அவன் காப்பாற்றினான்.''

''ஆனால் திபூல் எங்கே? தப்பி ஓட அவனுக்கு வாய்த்ததா?''

''தெரியாது. காவல் படையினர் இரவு முழுவதும், அதிகாலையிலும் தொழிலாளர் வட்டாரங்களுக்குத் தீ வைத்துக் கொண்டிருந்தார்கள். திபூலைப் பிடிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்தார்கள்.''

மருத்துவர் கஸ்பாரும் நீக்ரோவும் நாடக மேடைகளை நெருங்கினார்கள். நிகழ்ச்சிகள் இன்னும் தொடங்கவில்லை. வண்ணம் தீற்றிய திரைகளுக்குப் தடுப்புக்களுக்கும் பின்னால் குரல்கள் கேட்டன, சலங்கைகள் ஒலித்தன, புல்லாங் குழல்கள் ஊதின. எதுவோ கீச்சிட்டது, சரசரத்தது, இரைந்தது. அங்கே நடிகர்கள் நாடகத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.



திரை விலகிற்று. ஒரு மூஞ்சி எட்டிப் பார்த்தது. அவன் ஒரு ஸ்பானியன். கைத்துப்பாக்கி சுடுவதில் அற்புதத் திறமை உள்ளவன். அவனுடைய மீசைகள் முறுக்கி விடப்பட்டிருந்தன. ஒரு கண் சுழன்றது.

நீக்ரோவைப் பார்த்ததும் அவனுடைய முகம் மலர்ந்தது. ''ஓகோ, நீயும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளப் போகிறுயா? உனக்கு என்ன சம்பளம் கொடுத்தார்கள்?'' என்று கேட்டான்.

நீக்ரோ பேசாதிருந்தான்.

''எனக்குப் பத்து தங்க நாணயங்கள் கிடைத்தன'' என்று பெருமை அடித்துக் கொண்டான் ஸ்பானியன். நீக்ரோவை நடிகன் என்று அவன் எண்ணி விட்டான். மர்மமான முகத்தோற்றத்தை வருவித்துக் கொண்டு, ''இப்படிக் கிட்டே வா'' என்று கிசுகிசுத்தான்.

நீக்ரோ மேடை மேல் ஏறித் திரையை நெருங்கினுன். ஸ்பானியன் அவனுக்கு இரகசியச் சேதியைத் தெரிவித்தான். சந்தைகளில் அன்று கலை நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்காக நூறு நடிகர்களை மூன்று தடியர்கள் கூலிக்கு அமர்த்தி இருந்தார்களாம். தங்கள் நடிப்பின் போது இவர்கள் பணக்காரர்கள், பெருந்தீனிக்காரர்களின் ஆட்சியை எல்லா வகையிலும் புகழ வேண்டும், அதே சமயம் கலகக்காரர்களையும் கருமான் புரோஸ்பெரோவையும் சர்க்கஸ்காரன் திபூலையும் தூற்ற வேண்டும் என்று ஏற்பாடாம்.

''செப்படி வித்தைக்காரர்கள், மிருகங்களைப் பழக்குபவர்கள், கோமாளிகள், குதிரைச் சவாரிக்காரிகள், குரல் வித்தைக் கலைஞர்கள், நர்த்தகர்கள் என்று பெரிய கலைஞர் குழுவை அவர்கள் திரட்டி இருக்கிறுர்கள்... எல்லோருக்கும் பணம் கொடுத்தாயிற்று.''

''மூன்று தடியர்களைப் புகழ்வதற்கு எல்லா நடிகர்களுமா இசைந்து விட்டார்கள்?'' என்று கேட்டார் மருத்துவர் கஸ்பார்.

ஸ்பானியன் சீறினுன்:

''உஷ்-ஷ்!'' அவன் விரலை உதடுகளில் அழுத்திக் கொண்டான். ''இதைப் பற்றி இரைந்து பேசப்படாது. நிறையப் பேர் மாட்டோம் என்றுர்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறுர்கள்.''

நீக்ரோ கோபம் பொங்கத் தூவென்று துப்பினுன்.

அப்போது வாத்தியங்கள் இசைக்கலாயின. சில மேடைகளில் நிகழ்ச்சி தொடங்கிற்று. கூட்டத்தில் கலகலப்பு ஏற்பட்டது.

பலகை மேடையிலிருந்து சேவல் கொக்கரிப்பது போலக் கூவினுன் கோமாளி. ''குடிகளே! உங்களை வாழ்த்த அனுமதியுங்கள்...''

நிசப்தம் ஏற்படுவதற்காக அவன் பேச்சை இடையில் நிறுத்தினுன். அவனுடைய வாயிலிருந்து மாவு உதிர்ந்தது.

''பின்வரும் சந்தோடி நிகழ்ச்சி குறித்து உங்களை வாழ்த்த அனுமதியுங்கள்: நம் இனிய, ரோஜா நிற மூன்று தடியர்களின் கொலையாளிகள் கலகக்காரக் கீழ் மக்களின் தலைகளை இன்று வெட்டுவார்கள்...''



அவன் பேச்சை முடிக்கவில்லை. ஒரு தொழிலாளி பாதி தின்ற கோதுமை அடையை அவன் மேல் எறிந்தான். அது கோமாளியின் வாயில் ஒட்டிக் கொண்டது.

''ம்-ம்-ம்-ம்...''

கோமாளி மும்மும்மூ என்றான், ஆனால் குரல் கிளம்பவில்லை. அரை குறையாக வெந்தமாவு அவன் வாயில் அப்பி இருந்தது. அவன் கைகளை ஆட்டி மூஞ்சியைச் சுளித்தான்.

''அப்படித்தான் வேண்டும்! சரி தான்!'' என்று கூட்டத்தில் இருந்த வர்கள் கத்தினார்கள்.

கோமாளி தடுப்புக்குப் பின்னே ஓடி விட்டான்.

''அயோக்கியப் பயல்! மூன்று தடியர்களுக்குத் தன்னை விற்று விட் டான்! நம்முடைய விடுதலைக்காகச் சாவை மதியாமல் போரிட்டவர்களைப் பணத்துக்காகத் தூற்றுகிறான்!''

வாத்தியங்கள் முன்னிலும் உரக்க ஒலித்தன. இன்னும் சில இசைக் குழுக்கள் சேர்ந்து கொண்டன. ஒன் பது குழல்கள், மூன்று எக்காளங்கள், மூன்று துருக்கிய டமாரங்கள் ஆகிய வையும் ஒரு பிடிலும் அவற்றில் இருந்தன. பிடிலின் ஒலிகள் பல் வலி உண்டாக்கின.

இந்த வாத்திய இசையால் கூட் டத்தின் இரைச்சலை அடக்கி விட நாடக மேடைகளின் சொந்தக்காரர் கள் முயன்றார்கள்.

''இந்த அடைகளுக்கு நம் நடிகர்கள் ஒருவேளை பயந்து விடுவார்கள். ஒன்றுமே நடக் காதது போலப் பாவனை செய்ய வேண்டும் நாம்'' என்றான் அவர்களில் ஒருவன்.

''தயவு செய்யுங்கள்! தயவு செய்யுங்கள்! நாடகம் தொடங்கப் போகிறது...''

இன்னொரு நாடக மேடை ''டிரோஜன் குதிரை'' என்று அழைக்கப்பட்டது.

திரைக்குப் பின்னாலிருந்து வந்தான் இயக்குநன். அவன் தலையில் மிக உயரமான பச்சைக்

கம்பளித் தொப்பி இருந்தது. மார்பில் உருண்டையான செப்புப் பொத்தான்கள் இலகின. கன்னங்களில் சிரமப்பட்டுப் பூசிய அழகான சிவப்புப் பூச்சு திகழ்ந்தது.

''இரையாதிருங்கள்!'' என்று அவன் சொன்ன தோரணை ஜெர்மன் மொழி பேசுவது போல இருந்தது. ''இரையாதேயுங்கள்! எங்கள் நிகழ்ச்சி உங்கள் கவனத்துக்கு உரியது.''

கூட்டம் கொஞ்சம் கவனம் செலுத்தத் தலைப்பட்டது.

''இன்றையக் கொண்டாட்டத்துக்காகப் பயில்வான் லப்பித்தூப்பை நாங்கள் அழைத்திருக்கிறோம்.''



''தாத்-தித்-தூத்-தா!'' என்று முழங்கிற்று எக்காளம்.

கை தட்டல் போலக் கொஞ்சம் சடசடப்பு கேட்டது.

''பயில்வான் லப்பித்தூப் தம் வலிமையின் அற்புதங்களை உங்களுக்குக் காட்டுவார்...''

வாத்தியங்கள் இசைத்தன. திரை விலகிற்று. மேடைக்கு வந்தான் பயில்வான் லப்பித்தூப்.

ரோஜா நிற அரைக் கால்சட்டை அணிந்த பூதாகாரமான அந்த இளைஞன் மெய்யாகவே பெருத்த வலிமை உள்ளவனாகக் காணப்பட்டான்.

அவன் நீண்ட மூச்சு இழுத்து எருது போலத் தலையைக் குனிந்தான். அவனுடைய தசைகள் மலைப்பாம்பால் விழுங்கப்பட்ட குழிமுயல்கள் போலத் தோலுக்கு அடியில் அசைந்தன.

பணியாட்கள் எடைக் குண்டுகளைக் கொண்டு வந்து மேடை மேல் போட்டார்கள். பலகைகள் அனேகமாக உடையத் தெரிந்தன. புழுதியும் மரத்தூளும் படலம் படலமாகக் கிளம்பின. சத்தம் சந்தை முழுவதிலும் கேட்டது.

பயில்வான் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினன். எடைக் குண்டுகளைக் கைக்கு ஒன்ருக எடுத்து, பந்துகள் போல மேலே வீசிப் பிடித்து, ஒன்றோடு ஒன்றை மடாரென்று மோதினன்... தீப் பொறிகள் சிதறின.

''பார்த்தீர்களா! கருமான் புரோஸ்பெரோ, சர்க்கஸ்காரன் திபூல், இரண்டு பேருடைய மண்டைகளையும் மூன்று தடியர்கள் இப்படித்தான் மோதி உடைக்கப் போகிருர்கள்'' என்ருன் அவன்.

இந்தப் பயில்வானையும் மூன்று தடியர்கள் பணம் கொடுத்துக் கைக்குள் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

தன் கேலிப் பேச்சால் தானே மகிழ்ந்து, ''ஹ-ஹ-ஹா!'' என்று சிரித்தான்.

தன் மேல் அடையை எறிய எவனும் துணிய மாட்டான் என்பதை அவன் அறிந்திருந்தான். அவனுடைய பலத்தை எல்லோரும் பார்த்திருந்தார்களே.

நிலவிய அமைதியில் கணீரென்று ஒலித்தது நீக்ரோவின் குரல். ஏராளமான தலைகள் அவன் பக்கம் திரும்பின.

படி மேல் காலை வைத்து, ''நீ என்ன சொல்லுகிருய்?'' என்று கேட்டான் நீக்ரோ.

''கருமான் புரோஸ்பெரோ, சர்க்கஸ்காரன் திபூல், இரண்டு பேர் தலைகளையும் நெற்றியோடு நெற்றி மோதும்படி இந்த மாதிரி அடித்து உடைப்பார்கள் மூன்று தடியர்கள் என்கிறேன்.''

''மூடு வாயை!''

நீக்ரோ அமைதியாகவும் கண்டிப்புடனும் தணிந்த குரலில் சொன்னன்.

''அப்படிச் சொல்ல நீ யார், கறுப்புப் பிண்டமே?'' என்று சீறினன் பயில்வான்.

எடைக் குண்டுகளைப் போட்டு விட்டுக் கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டான் அவன்.

அந்த நீக்ரோ மேடை மீது ஏறினன்.

''உனக்கு வலிமை நிறையத் தான். ஆனல் கீழ்மையும் குறைவில்லை. என் கேள்விக்குப் பதில் சொல்லு, யார் நீ? மக்களை ஏளனம் செய்ய உனக்கு யார் உரிமை தந்தார்கள்? எனக்கு உன்னைத் தெரியும். சம்மட்டி அடிப்பவனுடைய மகன் நீ. உன்னுடைய தகப்பன் தொழிற்சாலையில் இன்னமும் வேலை செய்கிருன். உன் தமக்கையின் பெயர் ஏலி. அவள் சலவைத் தொழிலாளி. பணக்காரர்களின் உள்ளாடைகளை அவள் வெளுக்கிருள். ஒருவேளை காவல் படையினர் அவளை நேற்று சுட்டுக் கொன்றிருப்பார்கள்... நீ துரோகி!''

பயில்வான் திகைத்துப் பின்வாங்கினன். நீக்ரோ சொன்னது எல்லாம் உண்மை. பயில்வானுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''போ அப்பாலே!'' என்று அதட்டினன் நீக்ரோ.

பயில்வான் சுதாரித்துக் கொண்டான். அவன் முகம் குப்பென்று சிவந்தது. அவன் முட்டிகளை இறுக்கினன்.

''எனக்கு உத்தரவிட உனக்கு உரிமை கிடையாது! நான் உன்னை அறியேன். நீ சாத்தான்'' என்று சிரமத்துடன் சொன்னன்.



''போய் விடு அப்பாலே! நான் மூன்று வரை எண்ணுவேன். ஒன்று!''

கூட்டம் மலைத்துப் போயிற்று. நீக்ரோ லப்பித்தூப்பின் தோள் உயரந்தான் இருந்தான், அவனை விட மூன்று மடங்கு ஒடிசலாய் இருந்தான். ஆனாலும் சண்டை மூண்டால் நீக்ரோவே வெல்வான் என்பதில் ஒருவருக்கும் சந்தேகம் உண்டாகவில்லை. நீக்ரோவின் தோற்றத்தில் அவ்வளவு உறுதியும் கண்டிப்பும் தன்னம்பிக்கையும் காணப்பட்டன.

''இரண்டு!''

பயில்வான் தலையை உள்ளிழுத்துக் கொண்டான்.

''சைத்தான்!'' என்று வாய்க்குள் சீறினான்.

''மூன்று!''

பயில்வான் மறைந்து விட்டான். பயங்கரமான அடியை எதிர்பார்த்துப் பலர் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள். அவர்கள் அவற்றைத் திறந்த போது பயில்வானைக் காணோம். தடுப்புக்குப் பின்னால் ஒரே நொடியில் மறைந்து விட்டான் அவன்.

''மூன்று தடியர்களை மக்கள் இந்த மாதிரித்தான் விரட்டப் போகிறார்கள்!'' என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கைகளை உயர்த்தினான் நீக்ரோ.

கூட்டம் மகிழ்ச்சிப் பெருக்கால் கொந்தளித்தது. ஆட்கள் கைகளைக் கொட்டினார்கள், தொப்பிகளை உயரே எறிந்தார்கள்.

''மக்கள் நீடூழி வாழ்க!''

''பலே! பலே!''

மருத்துவர் கஸ்பார் மட்டும் திருப்தி இல்லாமல் தலையை அசைத்தார். அவர் எதனால் அதிருப்தி அடைந்தார் என்பது தெரியவில்லை.

''யார் இவன்? யார் இவன்? இந்த நீக்ரோ யார்?'' என்று பார்வையாளர்கள் ஆவலோடு கேட்டார்கள்.

''இவனும் நடிகனோ?''

''நாம் இவனைப் பார்த்ததே இல்லையே!''

''யார் நீ?''

''எதற்காக எங்களுக்குப் பரிந்து பேசினாய்?''

''பொறுங்கள்! வழி விடுங்கள்!..''

ஒரு கந்தலாண்டி கூட்டத்துக்கு இடையே புகுந்து முன்னே வந்தான். தலைக்கு நாள் மாலையில் பூக்காரிகளோடும் வண்டிக்காரர்களோடும் பேசின அதே பிச்சைக்காரன் இவன். மருத்துவர் கஸ்பார் அவனை அடையாளம் கண்டு கொண்டார்.

''பொறுங்கள்! இவர்கள் நம்மை ஏமாற்றுவது உங்கள் பார்வையில் படவில்லையா? இந்த நீக்ரோ லப்பித்தூப் போலவே நடிகன். ஒரே திருட்டுக் கும்பல். இவனுக்கும் மூன்று தடியர்களிடமிருந்து பணம் கிடைத்திருக்கும்'' என்று கிளர்ச்சி பொங்கச் சொன்னான் பிச்சைக்காரன்.

நீக்ரோ முட்டிகளை இறுக்கினான். கூட்டத்தின் மகிழ்ச்சி கோபமாக மாறிற்று.

''உண்மைதான்! ஒரு போக்கிரி இன்னொருவனை விரட்டி விட்டான்.''

''தன்னுடைய தோழனை நாம் அடித்து நொறுக்குவோம் என்று அஞ்சி இப்படி வேடிக்கை செய்திருக்கிறான்.''

''ஒழிக!''

''அயோக்கியன்!''

''துரோகி!''

கூட்டத்தை அடக்குவதற்காக ஏதோ சொல்ல வாயெடுத்தார் மருத்துவர் கஸ்பார், ஆனால் நேரம் கடந்து விட்டது. ஒரு பன்னிரண்டு ஆட்கள் மேடைக்கு ஓடி வந்து நீக்ரோவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''மொத்துங்கள் அவனை!'' என்று கீச்சிட்டாள் ஒரு கிழவி.

நீக்ரோ கையை நீட்டினான். அவன் கலங்கவில்லை.

''நில்லுங்கள்!''

கூச்சல்களையும் இரைச்சலையும் சீழ்க்கைகளையும் அடக்கி விட்டது அவனுடைய குரல். நிசப்தத்தில் அமைதியாகவும் சகஜமாகவும் ஒலித்தன நீக்ரோவின் சொற்கள்:

''நான்தான் சர்க்கஸ்காரன் திபூல்.''

குழப்பம் ஏற்பட்டது.

தாக்க வந்தவர்களின் வளையம் கலைந்து விட்டது.

''அப்படியா?'' என்று பெரு மூச்சு விட்டது கூட்டம்.

நூற்றுக் கணக்கானவர்கள் அவனைப் பார்ப்பதற்காகத் தலைகளை முன்னே நீட்டி, அசையாமல் இருந்தார்கள்.

ஒருவன் மட்டும் குழப்பம் அடைந்தவன் போலக் கேட்டான்:

''அப்படியானால் நீ ஏன் கறுப்பாய் இருக்கிறாய்?''

''இந்தக் கேள்வியை மருத்துவர் கஸ்பார் அர்னேரியிடம் கேளுங்கள்'' என்று சொல்லி, புன்னகையுடன் மருத்துவரைச் சுட்டிக் காட்டினான் நீக்ரோ.

''சந்தேகம் இல்லாமல் அவன்தான் இவன்!''

''திபூல்!''

''வெற்றி! திபூல் பத்திரமாய் இருக்கிறான்! திபூல் உயிரோடு இருக்கிறான்! திபூல் நம்மோடு இருக்கிறான்!''

''நீடூழி வாழ்...''

ஆனால் ஆரவாரம் நடுவில் நின்று விட்டது. எதிர்பாராத கெட்ட நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது. பின் வரிசைகளில் குழப்பம் உண்டாயிற்று. ஆட்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள்.

''சத்தம் போடாதீர்கள்! அமைதியாய் இருங்கள்!''

''ஓடு திபூல், தப்பித்துக் கொள்!''

மூன்று குதிரைச் சவாரிக்காரர்களும் ஒரு சாரட்டுடன் சதுக்கத்துக்கு வந்தார்கள்.

அரண்மனைக் காவல் படைப் பிரிவுக் காப்டன் பொனவெந்தூரா பிரபுவும் அவனுடைய துணைவர்களான இரண்டு காவல் படையினரும். வாரிசு துத்தியின் பழுதடைந்த பொம்மையுடன் சாரட்டில் இருந்தான் அரண்மனை அலுவலன். கத்தரித்த சுருட்டை முடியுள்ள அழகான தலையை அவன் தோள் மேல் ஏக்கத்தோடு சாய்த்துக் கொண்டிருந்தது பொம்மை.

அவர்கள் மருத்துவர் கஸ்பாரைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

''காவல் படைக்காரர்கள்!'' என்று ஆபாச வசவுகளுடன் கத்தினான் ஒருவன். சில ஆட்கள் சுற்றுச் சுவற்றைத் தாண்டி ஓடி விட்டார்கள்.

கறுப்புச் சாரட்டு நின்றது. குதிரைகள் தலைகளை ஆட்டின. சேணம் கிணுகிணுத்துப் பளிச்சிட்டது.

இள நீல இறகுகளைக் காற்று பரத்தியது.

குதிரைகள் மேல் வந்தவர்கள் சாரட்டைச் சூழ்ந்து கொண்டார்கள்.

காப்டன் பொனவெந்தூராவின் குரல் பயங்கரமாய் இருந்தது. பிடில் இசை பல் வலி

உண்டாக்கிற்று என்றால், இந்தக் குரலைக் கேட்டதும் பற்கள் உடைந்து விழுந்த உணர்ச்சி உண்டாயிற்று.

அங்கவடிகளில் கொஞ்சம் எழும்பி, ''மருத்துவர் கஸ்பார் அர்னேரியின் வீடு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

கடிவாளத்தை அவன் இழுத்துப் பிடித்தான். மணிக்கட்டுகளுக்கு மேல் மணி வடிவில் அகன்ற முரட்டுத் தோல் கையுறைகள் அணிந்திருந்தான் அவன்.

இந்தக் கேள்வி ஒரு கிழவியை இடி போலத் தாக்கிற்று. அவள் திடுக்கிட்டுப் போய், நிச்சயம் இல்லாத ஒரு திக்கில் கையைக் காட்டினாள்.

''எங்கே?'' என்று மறுபடி கேட்டான் காப்டன்.

இப்போது அவன் குரல் ஒலித்த விதம், ஒரு பல் மட்டும் அல்ல, தாடை முழுவதுமே உடைந்து விழுந்து விட்டது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது.

''நான் இங்கே இருக்கிறேன். என்னைத் தேடுவது யார்?''

ஆட்கள் விலகினார்கள். மருத்துவர் கணக்காக அடி வைத்துச் சாரட்டின் பக்கத்தில் போனார்.

''மருத்துவர் கஸ்பார் அர்னேரி நீங்கள் தாமா?''



''ஆமாம்.''

சாரட்டின் கதவு திறந்தது.

''உடனே சாரட்டில் ஏறிக் கொள்ளுங்கள். உங்களை உங்கள் வீட்டுக்குக் கூட்டிப் போவார்கள். சங்கதி என்ன என்பதை அங்கே தெரிந்து கொள்வீர்கள்.''

குதிரைக்காரன் பின் தட்டிலிருந்து குதித்து, சாரட்டில் ஏற மருத்துவருக்கு உதவினான். கதவு மூடிக் கொண்டது.

உலர்ந்த தரையைப் பிளந்தபடிக் குதிரைப் படை அணி புறப்பட்டது. ஒரு நிமிடம் பொறுத்து எல்லாம் திருப்பத்துக்கு அப்பால் மறைந்து விட்டன.

காப்டன் பொனவெந்துராவோ, காவல் படையினரோ, கூட்டத்திற்குப் பின்னே நின்ற சர்க்கஸ்காரன் திபூலைப் பார்க்கவில்லை. நீக்ரோவைப் பார்த்திருந்தாலும், முந்திய இரவு தாங்கள் தேடிக் கொண்டிருந்த ஆள் அவன்தான் என்று அவர்கள் தெரிந்து கொண்டிருப்பது சந்தேகந்தான்.

ஆபத்து விலகி விட்டது என்று தோன்றியது. ஆனால் வன்மமுள்ள சீறல் திடீரென்று கேட்டது.

காலிக்கோ துணி இழுத்துக் கட்டிய தடுப்புக்குப் பின்னாலிருந்து தலையை நீட்டினான் பயில்வான் லப்பித்தூப்.

''பொறு... பொறு, அப்பனே! இதோ காவல் படைக்காரர்களை எட்டிப் பிடித்து நீ இங்கே இருக்கிறாய் என்று சொல்லி விடுகிறேன்!'' என்று சீறி, பருத்த முட்டியைக் காட்டித் திபூலைப் பயமுறுத்தினான்.

பின்பு அவன் தடுப்பைத் தாண்டுவதற்காக ஏறினான். அவனுடைய பூதாகாரமான ரோஜா நிற உடலைத் தாங்க முடியாமல் தடுப்பு வாத்துக் குரலில் கத்தி முறிந்து விட்டது.

அதனால் ஏற்பட்ட இடுக்கிலிருந்து காலை விடுவித்துக் கொண்டு ஆட்களின் கும்பலை இடித்துத் தள்ளி விட்டுச் சாரட்டின் பின்னே பாய்ந்து ஓடினான் பயில்வான்.

உருண்டு திரண்ட வெறுங் கைகளை வீசி ஆட்டியபடி, ''நில்லுங்கள்! நில்லுங்கள்! சர்க்கஸ்காரன் திபூல் அகப்பட்டு விட்டான்! சர்க்கஸ்காரன் திபூல் இங்கே இருக்கிறான்! என் கைகளில் இருக்கிறான்!'' என்று கூப்பாடு போட்டான்.

நிலைமை அபாயகரமாகத் திரும்பிற்று. சுழலும் விழியும் இடையில் செருகிய கைத்துப்பாக்கியுமாக ஸ்பானியன் வேறு அவனோடு சேர்ந்து கொண்டான். இன்னொரு கைத்துப்பாக்கியை அவன் கையில் பிடித்திருந்தான். ஸ்பானியன் கூச்சல் கிளப்பினான். மேடை மேல் துள்ளிக் குதித்துக் கொண்டு கத்தினான்:

''குடிகளே! திபூலைக் காவல் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும், இல்லா விட்டால் நமக்குக் கெடுதல் உண்டாகும். குடிகளே! மூன்று தடியர்களோடு சச்சரவு செய்வது கூடாது!''

பயில்வான் லப்பித்தூப் எந்த மேடையில் நிகழ்ச்சியைச் சரியாகக் காட்ட முடியவில்லையோ அதன் இயக்குநனும் ஸ்பானியனோடு சேர்ந்து கொண்டான்.

''அவன் என் மேடை நிகழ்ச்சியை இடை முறித்தான்! பயில்வான் லப்பித்தூப்பை விரட்டினான்! ஒரு நீக்ரோவுக்காக மூன்று தடியர்களுக்குப் பதில் சொல்ல நான் விரும்பவில்லை!'' என்றான்.

கூட்டம் திபூலைக் காத்து நின்றது.

பயில்வானால் காவல் படையினரை எட்டிப் பிடிக்க முடியவில்லை. அவன் சதுக்கத்துக்குத் திரும்பினான். முழு வேகத்தோடு நேரே திபூல் மேல் பாய்ந்தான். ஸ்பானியன் மேடையிலிருந்து குதித்து இரண்டாவது கைத்துப்பாக்கியை உருவிக் கொண்டான். நாடக மேடை இயக்குநன்



ஒரு வெள்ளைக் காகித வட்டத்தை எங்கிருந்தோ எடுத்துக் கொண்டான். பழகிய நாய்கள் சர்க்கசில் இந்த மாதிரி வட்டத்தைத் தாண்டிக் குதிப்பது வழக்கம். அவன் வட்டத்தை வீசி ஆட்டி, மேடையிலிருந்து குதித்து, ஸ்பானியன் பின்னே கிந்திக் கிந்தி நடந்தான்.

ஸ்பானியன் சுட வாக்காகக் கைத்துப்பாக்கிக் குதிரையைப் பின் இழுத்துக் கொண்டான்.

ஓட வேண்டும் என்பதைத் திபூல் கண்டு கொண்டான். கூட்டம் விலகிக் கொடுத்தது. மறு நிமிடமே திபூல் சதுக்கத்திலிருந்து மறைந்து விட்டான். சுற்றுச் சுவற்றைத் தாண்டிக் குதித்தவன், ஒரு காய்கறித் தோட்டத்தை அடைந்தான். இடுக்கு வழியாகப் பார்த்தான். பயில்வானும் ஸ்பானியனும் இயக்குநனும் காய்கறித் தோட்டத்துக்கு ஓடி வந்து கொண்டிருந் ததார்கள். காட்சி மிகவும் வேடிக்கையாக இருந்தது. திபூல் வாய் விட்டுச் சிரித்தான். பயில் வான் மதம் பிடித்த யானை போல ஓடி வந்து கொண்டிருந்தான். ஸ்பானியன் பின் கால்களில் துள்ளும் எலி போல் இருந்தான். இயக்குநனோ, குண்டடி பட்ட காக்கை போலக் கிந்தி நடந் தான்.

''நாங்கள் உன்னை உயிரோடு பிடித்து விடுவோம். சரண் அடைந்து விடு!'' என்று கத் தினார்கள் அவர்கள்.

ஸ்பானியன் கைத்துப்பாக்கிக் குதிரையைக் கிலுக்கிப் பற்களை நெறுநெறுத்தான். காகித வட்டத்தை ஆட்டினான் இயக்குநன்.



திபூல் தாக்குதலை எதிர்பார்த்தான். அவன் நின்ற இடம் பொருபொருத்த கருமண் நிலம். சுற்றிலும் பாத்திகள் இருந்தன. அவற்றில் வளர்ந்திருந்தன முட்டைக் கோசும் அக்காரக் கிழங்கும். எவையோ பசுங் கொடிகள் படர்ந்திருந்தன, தண்டுகள் துருத்தி இருந்தன, அகலமான இலைகள் கிடந்தன.

எல்லாம் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. தெளிந்த நீல வானம் பளிச்சென்று ஒளி வீசிற்று.

சண்டை தொடங்கிற்று.

மூன்று பேரும் சுற்றுச் சுவற்றை நெருங்கினார்கள்.

''நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று கேட்டான் பயில்வான்.

ஒருவரும் பதில் சொல்லவில்லை.

அப்போது ஸ்பானியன் சொன்னான்:

''சரண் அடைந்து விடு! என்னுடைய ஒவ்வொரு கையிலும் ஒரு கைத்துப்பாக்கி இருக்கிறது. அவை 'புரட்டனும் மகனும்' என்ற மிகச் சிறந்த கம்பெனி தயாரித்தவை. நான் நாட்டிலேயே சிறந்த துப்பாக்கி வீரன், புரிந்ததா?''

கைத்துப்பாக்கியால் சுடும் கலையில் திபூல் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. அவனிடம் கைத்துப்பாக்கி இருக்கக்கூட இல்லை. ஆனால் அவன் கைக்கு அடியில், இன்னும் சரியாய்ச் சொன்னால்

காலுக்கு அடியில், ஏராளமான முட்டைக்கோசுகள் இருந்தன. அவன் குனிந்து, உருண்டையும் கனமுமான ஒரு முட்டைக்கோசைப் பறித்து, சுவற்றுக்கு மறு புறம் எறிந்தான். அது இயக் குநனின் வயிற்றைத் தாக்கிற்று. அதன் பின் வந்தன இரண்டாவது, மூன்ருவது முட்டைக் கோசுகள்... குண்டுகள் போலவே அவை வெடித்தன. பகைவர்கள் திகைத்துப் போனுர்கள்.

நான்காவது முட்டைக்கோசைப் பறிக்கக் குனிந்தான் திபூல். அதன் உருண்டைக் கன்னங் களைப் பிடித்து, பறித்து எடுக்க முயன்ருன். ஆனுல்—விந்தைதான்!—முட்டைக்கோசு மசிவ தாய் இல்லை. அது மட்டும் அல்ல, மனிதக் குரலில் பேச வேறு தொடங்கிற்று:

''இது ஒன்றும் முட்டைக்கோசு அல்ல, என் தலையாக்கும் இது. நான் குழந்தைகளுக்கு பலூன்கள் விற்பவன். மூன்று தடியர்களின் அரண்மனையிலிருந்து தப்பி, சுரங்க வழியை அடைந்தேன். வழி பெரிய பாத்திரத்தில் தொடங்கி, இங்கே முடிகிறது. நீளக் குழாய் போலத் தரைக்கு அடியில் நீண்டிருக்கிறது அது...''

திபூலுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. முட்டைக்கோசு தன்னை மனிதத் தலை என்று சொல்லிக் கொள்கிறதே!

அப்போது அவன் குனிந்து அந்த மாயத்தை உற்றுப் பார்த்தான். கண்களை நம்ப வேண் டியது ஆகி விட்டது. கயிற்றில் நடக்கத் திறமை உள்ளவனின் கண்கள் பொய் சொல்ல மாட்டா.

அவன் கண்டது முட்டைக்கோசை எவ்விதத்திலும் ஒத்திருக்கவில்லை. அது பலூன் விற் பவனின் வட்ட முகம். எப்போதும் போலவே அது சிறு மலர்கள் தீட்டிய மெல்லிய மூக்குள்ள தேநீர்க் கெண்டி மாதிரி இருந்தது.

பலூன்காரன் தரையிலிருந்து எட்டிப் பார்த்தான். உழுத மண் ஈரக் கட்டிகளாகச் சிதறி, கறுப்புக் கழுத்துப் பட்டை போல அவனுடைய கழுத்தைச் சுற்றிப் படிந்தது.

''அருமை!'' என்ருன் திபூல்.

பலூன்காரன் வட்ட விழிகளால் அவனை ஏறிட்டுப் பார்த்தான். கனிவுள்ள வானம் அவற்றில் பிரதிபலித்தது.

''சமையல்காரப் பையன்களுக்கு என்னுடைய பலூன்களைக் கொடுத்தேன். அவர்கள் என்னை வெளியே போக விட்டார்கள்... அதே, அவற்றில் ஒரு பலூன் பறக்கிறது...''

திபூல் பார்வை செலுத்தினுன். கண்களைக் கூசச் செய்த நீல வானத்தில் மிக மிக உயரே பறந்து கொண்டிருந்த சின்ன ஆரஞ்சு நிற பலூனைக் கண்டான்.

சமையல்காரப் பையன்கள் விட்டு விட்ட பலூன்களில் ஒன்று அது.

சுற்றுச் சுவற்றுக்கு வெளியே நின்று தாக்கும் திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்த மூன்று பேரும் கூட அந்த பலூனைக் கண்டார்கள். ஸ்பானியன் எல்லாவற்றையும் மறந்து விட்டான். அவன் எதிறிக் குதித்து இரண்டாவது விழியைச் சுழற்றி, சுடும் பாங்கில் நின்ருன். துப்பாக்கி சுடுவதில் அளவற்ற ஆர்வம் உள்ளவன் அவன்.

''பாருங்கள், பத்து மணிக்கூண்டு உயரத்தில் பறக்கிறது மட்டித்தனமான பலூன்! குறி தவருமல் அதைச் சுடுவேன் என்று பத்து தங்க நாணயங்கள் பந்தயம் கட்டுகிறேன். என்னை விடத் தேர்ந்த துப்பாக்கி வீரன் எவனும் இல்லை'' என்று கத்தினுன்.

பந்தயம் கட்ட எவனும் தயாராய் இல்லை, ஆனுல் ஸ்பானியனின் உற்சாகம் அதனுல் குன்றிவிடவில்லை. பயில்வானுக்கும் இயக்குநனுக்கும் எரிச்சல் மண்டிற்று.

''கழுதைப் பயலே!'' என்று முழங்கினுன் பயில்வான். ''கழுதைப் பயலே! பலூன்களை வேட்டையாடிக் கொண்டிருக்க இது நேரம் அல்ல. கழுதைப் பயலே! நாம் திபூலைப் பிடிக்க வேண்டும். குண்டுகளை வீணுக்காதே.''

எதனுலும் பயன் இல்லே. குறி தவருத துப்பாக்கி வீரனுக்கு பலூன் மட்டு மீறிக் கவர்ச்சி உள்ளதாய் இருந்தது. தன்னுடைய ஒய்வற்ற விழியை மூடிக் கொண்டு இலக்குப் பார்க்கத் தொடங்கினுன் ஸ்பானியன். அவன் குறி பார்த்துக் கொண்டிருந்த போது திபூல் பலூன் காரனேத் தரையிலிருந்து வெளியே. இழுத்து விட்டான். ஆகா, எப்பேர்ப்பட்ட காட்சி! பலூன் காரனின் உடை மேல் எதுதான் இல்லே! மிஞ்சிய பாலாடையும் பழப் பாகும், ஒட்டிக் கொண்ட மண் துணுக்குகளும் உலர் பழங்களின் மென்மையான விண்மீன் வடிவத் துண்டுகளும்!

புட்டியிலிருந்து அடைப்பானே எடுப்பது போலத் திபூல் பலூன்காரனே வெளியில் எடுத்த இடத்தில் கறுப்புத் துளே இருந்தது. இந்தத் துளேயில் மண் சிதறிற்று. மேலே தூக்கிய வண்டிமேல் பெருத்த மழைத் துளிகள் சடபடப்பது போல் இருந்தது அந்த ஒலி.

ஸ்பானியன் சுட்டான். அவனுடைய குண்டு பலூன் மேல் படவில்லே என்பதைச் சொல்லவே வேண்டாம். ஆனுல் ஐயோ! அவனுடைய குண்டு இயக்குநனுடைய பச்சைத் தொப்பியில்—மணிக் கூண்டு அளவு உயரமாய் இருந்த தொப்பியில்—பட்டது.



திபூல் எதிர்ப் பக்கத்துச் சுற்றுச் சுவற்றைத் தாண்டிக் குதித்துக் காய்கறித்தோட்டத்திலிருந்து ஓடி விட்டான்.

இயக்குநனின் பச்சைத் தொப்பி விழுந்து, தேநீர் தயாரிப்பதற்கான சமவாரின் புகைக் குழாய் போல உருண்டது. ஸ்பானியன் ஒரேயடியாகக் குழப்பம் அடைந்தான். சிறந்த துப்பாக்கி வீரன் என்ற புகழ் போய் விட்டது! அதோடு, இயக்குநன் வைத்திருந்த மரியாதையும் போய் விட்டது.

''அட, உதவாக்கரைப் பயலே!'' என்று அடக்க முடியாத ஆத்திரத்துடன் கத்திய இயக்குநன், கோபத்தால் மூச்சு திணற, ஸ்பானியனின் தலேயில் காகித வட்டத்தால் ஓங்கி அடித்தான்.

வட்டம் பரட்டென்று கிழிந்து விட்டது. ஸ்பானியனின் தலே பல்வைத்த காகிதக் கழுத்துப் பட்டையில் மாட்டிக் கொண்டது.

லப்பித்தூப் ஒருவன் மட்டும் வெட்டியாக நின்ருன். ஆனுல் குண்டு வெடித்தது அக்கம் பக்கத்து நாய்களே உசுப்பி விடவே, அவற்றில் ஒன்று எங்கிருந்தோ பாய்ந்து வந்து பயில் வானேத் தாக்கிற்று.

''தப்ப முடிந்தவர்கள் தப்பிப் பிழையுங்கள்!'' என்று கத்தினுன் லப்பித்தூப்.

மூன்று பேரும் ஓட்டம் எடுத்தார்கள்.

பலூன்காரன் தனியாய் இருந்தான். அவன் சுவர் மேல் ஏறிச் சுற்று முற்றும் பார்த்தான. மூன்று நண்பர்களும் பசிய சரிவில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். லப்பித்தூப் கடிபட்ட பருத்த கெண்டைக்காலைப் படித்தபடி ஒற்றைக் காலால் நொண்டி அடித்துக் கொண்டிருந் தான். இயக்குநர் மரத்தின் மேல் ஏறி ஒரு பறவையைப் போலத் தொங்கிக்கொண்டிருந்தார். ஸ்பானியன் காகித வட்டத்துக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்த தலையை ஆட்டியபடி நாயை விரட்டுவதற்காகச் சுட்டுக் கொண்டிருந்தான், ஆனால் அவன் சுட்ட ஒவ்வொரு குண்டும் காய்கறித் தோட்ட வைக்கோல் பொம்மை மேல் பட்டுக் கொண்டிருந்தது.

நாய் சரிவின் மேல் நின்று கொண்டிருந்தது. மறுபடி தாக்க அதற்கு விருப்பம் இல்லை போலத் தெரிந்தது. லப்பித்தூப்பினது கெண்டைக்கால் சதையின் ருசியால் முழுத் திருப்தி அடைந்து அது வாலை ஆட்டிற்று, பளிச்சிட்ட ரோஜா நிற நாக்கைத் தொங்க விட்டபடி முகம் மலரப் புன்னகை செய்தது.



அத்தியாயம் 6

# எதிர்பாராத நிலைமை



COMICS PDF TIMES

நீ ஏன் கறுப்பாய் இருக்கிறாய் என்ற கேள்விக்கு, ''மருத்துவர் கஸ்பார் அர்னேரியைக் கேளுங்கள்'' என்று விடை அளித்தான் சர்க்கஸ்காரன் திபூல்.

ஆனால் மருத்துவர் கஸ்பாரைக் கேட்காமலே காரணத்தை ஊகிக்கலாம். போர்க் களத்திலிருந்து ஓடி ஒளிந்து கொள்ளத் திபூலுக்கு வாய்த்தது என்பதை நினைவு படுத்திக் கொள்வோம். காவல் படையினர் அவனைத் தேடினார்கள், தொழிலாளர் குடியிருப்பு வட்டாரங்களுக்கு நெருப்பு வைத்தார்கள், விண்மீன் சதுக்கத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்பதை எல்லாம் நினைவு படுத்திக் கொள்வோம். மருத்துவர் கஸ்பாரின் வீட்டில் திபூல் அடைக்கலம் புகுந்தான். ஆனால் அங்கேயும் எந்த நிமிடத்திலும் அவன் பிடிபட வாய்ப்பு இருந்தது. அபாயம் கண்கூடாகத் தெரிந்தது. மிக நிறையப் பெயருக்குத் திபூலின் முகம் பழக்கமானதாய் இருந்தது.

ஒவ்வொரு கடைக்காரனும் தானே தடியனாகவும் பணக்காரனாகவும் இருந்ததால் மூன்று தடியர்களின் தரப்பில் இருந்தான். மருத்துவர் கஸ்பாரின் அண்டை அயலில் வசித்த எந்தப் பணக்காரனும் மருத்துவர் திபூலுக்கு அடைக்கலம் தந்திருப்பது பற்றிக் காவல் படையினருக்கு உளவு தெரிவித்திருக்க முடியும்.

திபூல் தம் வீட்டுக்கு வந்த அந்த இரவில், ''நீங்கள் உங்கள் தோற்றத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்'' என்று மருத்துவர் கஸ்பார் அவனிடம் சொன்னார்.

அப்படியே அவனை வேறு ஆளாக மாற்றி விட்டார்.

அவர் சொன்னார்:

''நீங்கள் வாட்டசாட்டமானவர். உங்கள் மார்புக்கூடு மிகப் பெரியது, தோள்கள் அகல மானவை, பற்கள் பளபளப்பானவை, தலைமயிர் சுருட்டை, முரடானது. தோலின் நிறம் வெள்ளையாக இல்லாவிட்டால், நீங்கள் வட அமெரிக்க நீக்ரோ போல் இருப்பீர்கள். அதுவும் நிரம்ப நல்லது. கறுப்பு ஆக நான் உங்களுக்கு உதவுகிறேன்.''

மருத்துவர் கஸ்பார் அர்னேரி நூறு கலைகள் கற்றிருந்தார். மிகவும் ஆழ்ந்த மனிதர் அவர், ஆனால் இனிய சுபாவம் உள்ளவர். வேலை நேரத்தில் வேலை, ஒழிவு நேரத்தில் இன்பப் பொழுதுபோக்கு என்பது அவருடைய கோட்பாடு. சில நேரங்களில் உல்லாசமாகப் பொழுதைப் போக்குவது அவருக்குப் பிடித்தது. ஆனால் ஓய்வு எடுத்துக் கொண்ட போதும் விஞ்ஞானத்தை அவர் மறக்கவில்லை. அந்த வேளைகளில் அனாதைக் குழந்தைகளுக்குப் பரிசாக ஒட்டுப் படங்கள் தயாரித்தார், அருமையான பட்டாசுகளும் விளையாட்டுச் சாமான்களும் பண்ணிக் கொடுத்தார், வேறு எவற்றிலும் இல்லாத இனிய ஒலியுள்ள இசைக் கருவிகளை அமைத்தார், புதிய வண்ணக் கலவைகள் சேர்த்தார்.

''இதோ பாருங்கள்'' என்று திபூலிடம் சொன்னார் மருத்துவர். ''இதோ இந்தக் குடுவையில் இருக்கிறது நிறம் இல்லாத நீர்மம். ஆனால் ஏதேனும் பொருளில் பட்டதும் வறண்ட காற்றின் பாதிப்பால் இது அந்தப் பொருளைக் கறுப்பு ஆக்கி விடும். அதுவும் நீக்ரோவுக்கு இயல்பான ஊதாச் சாயல் உள்ள கறுப்பு. இதோ, இந்தக் குடுவையில் இருக்கும் சாறு இந்த நிறத்தைப் போக்கக் கூடியது.''

பல நிற முக்கோணத் துணித் துண்டுகளால் தைத்த தன் உடையைத் திபூல் களைந்தான். முள்ளாய்க் குத்திக் கரிவாயு நெடி அடித்த நீர்மத்தைப் பூசிக் கொண்டான்.

ஒரு மணி நேரத்தில் அவன் கறுப்பு ஆகி விட்டான்.

அப்போது சுண்டெலியும் தானுமாக அறைக்குள் வந்தாள் கனிமீடு அத்தை. அப்புறம் நடந்தது நமக்குத் தெரியும்.

மருத்துவர் கஸ்பாரிடம் திரும்புவோம். அரண்மனை அலுவலனின் கறுப்புச் சாரட்டில் காப்டன் பொனவெந்தூரா அவரை அழைத்துப் போன போது நாம் அவரைப் பிரிந்தோம்.

சாரட்டு படு வேகமாகப் பறந்தது. பயில்வான் லப்பித்தூப்பால் அதைப் பிடிக்க முடியவில்லை என்பதை நாம் அறிவோம்.

சாரட்டில் இருட்டாய் இருந்தது. உள்ளே போன மருத்துவர், தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அலுவலன் மடி மேல் ஒரு குழந்தையை—பெண்ணை—வைத்துக் கொண்டிருப்பதாக முதலில் நினைத்தார். பெண்ணின் தலைமயிர் பறட்டையாய் இருந்தது அவர் கவனத்தில் பட்டது.

அலுவலன் பேசாதிருந்தான். பெண்ணும் அப்படியே.

மரியாதை உள்ள மருத்துவர் தொப்பியை உயர்த்தி, ''மன்னியுங்கள், நான் நிரம்ப இடத்தை அடைத்துக் கொண்டு விட்டேனோ?'' என்று கேட்டார்.

அலுவலன் வறண்ட குரலில் பதில் சொன்னான்:

''கவலைப்படாதீர்கள்.''

சாரட்டின் குறுகிய சன்னல்கள் வழியே வெளிச்சம் விட்டு விட்டுப் பளிச்சிட்டது. சற்று நேரத்தில் கண்கள் இருட்டுக்குப் பழகி விட்டன. அலுவலனின் நீள மூக்கையும் பாதி மூடிய இமைகளையும் பகட்டான உடை அணிந்த அழகுள்ள பெண்ணையும் மருத்துவர் தெளிவாகக் கண்டார். பெண் ஒரேயடியாக ஏங்கிப் போனவள் போலக் காணப்பட்டாள். அவள் வெளிறி இருந்தாள் போலும். ஆனால் அரை இருட்டில் இதைத் திட்டமாகச் சொல்ல முடியவில்லை.

''பாவம்! இவளுக்கு உடம்பு சரி இல்லை போல் இருக்கிறது'' என்று எண்ணிக் கொண்டார் மருத்துவர்.

மறுபடி அலுவலனிடம் பேச்சுக் கொடுத்தார்:

''என்னுடைய உதவி தேவைப்படுவதாகத் தோன்றுகிறதே, சரி தானா? பாவம், குழந்தைக்கு உடம்பு சரியாய் இல்லையோ?''

''ஆம், உங்கள் உதவி தேவைப்படுகிறது'' என்று பதில் சொன்னான் நீள மூக்கு அலுவலன்.

''இவள் மூன்று தடியர்களில் ஒருவனுடைய மருமகள், அல்லது வாரிசு துத்தியின் விருந்தாளிச் சிறுமி என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. இவள் விலை மிக்க உடை அணிந்திருக்கிறாள், அரண்மனையிலிருந்து வண்டியில் அழைத்து வரப்படுகிறாள், காவல் படைக் காப்டன் இவளுடன் வருகிறான் என்னும் போது இவள் மிக முக்கியமான பேர்வழி என்பது தெளிவாகிறது. ஆனால் ஒன்று: உயிருள்ள குழந்தைகள் வாரிசு துத்தியை நெருங்க விடப்படுவது கிடையாதே. இந்தத் தெய்வக் குழந்தை அரண்மனைக்கு எப்படிப் போய்ச் சேர்ந்தது?'' என்று எண்ணமிட்டார் மருத்துவர்.

பல வித ஊகங்களில் அவர் தடுமாறினார். நீள மூக்கு அலுவலனிடம் பேச்சுக் கொடுக்க அவர் மறுபடி முயன்றார்.

''சொல்லுங்கள், இந்தப் பெண்ணுக்கு என்ன உடம்பு? தொண்டை அடைப்பான் நோயோ ஒருவேளை?''

''இல்லை, நெஞ்சில் துளை.''

''இவளுடைய நுரையீரல்கள் சரியாய் இல்லை என்கிறீர்களா?''

''இவளுடைய நெஞ்சில் துளை'' என்று திருப்பிச் சொன்னான் அலுவலன்.

மரியாதைக்காக மருத்துவர் மறுத்துப் பேசவில்லை.

''பாவம் இந்தப் பெண்!'' என்று பெருமூச்செறிந்தார்.

''இது பெண் அல்ல, பொம்மை'' என்றான் அலுவலன்.

அப்போது சாரட்டு மருத்துவரின் வீட்டை நெருங்கி விட்டது.

பொம்மையோடு அலுவலனும் காப்டன் பொனவெந்தூராவும் மருத்துவரின் பின்னே வீட்டுக்குள் போனார்கள். மருத்துவர் அவர்களைச் சோதனைக் கூடத்துக்கு அழைத்துப் போனார்.

''இது பொம்மை என்றால் என்னுடைய தொண்டு எதற்காகத் தேவைப்பட்டது?''

அலுவலன் விளக்கினான். நிலைமை தெளிவாயிற்று.

காலைக் கிளர்ச்சிகளிலிருந்து இன்னும் தன்னிலைக்கு வராத கனிமீடு அத்தை இடுக்கு வழியாகப் பார்த்தாள். பயங்கரமான காப்டன் பொனவெந்தூரா அவள் கண்ணில் பட்டான். வெளி மடிப்புள்ள பிரமாண்டமான நீள் சோட்டில் காலை ஆட்டியபடி வாளை ஊன்றி நின்று கொண்டிருந்தான் அவன். அவனுடைய குதிமுட்கள் வால் நட்சத்திரங்கள் போல் இருந்தன. அலுவலன் நாற்காலியில் உட்கார வைத்திருந்த ஏங்கிய நோயாளிப் பெண்ணையும் கனிமீடு அத்தை கண்டாள். பகட்டான ரோஜா நிற உடை அணிந்த அந்தப் பெண் பறட்டை மயிர்த் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். ஒப்பனைக் குஞ்சங்களின் இடத்தில் தங்க ரோஜாப் பூக்கள் வைத்த சாட்டின் சோடுகள் அணிந்த தன் அழகிய கால்களை அவள் பார்த்துக் கொண்டிருந்தது போலத் தோன்றியது.

பலத்த காற்று இடை வழியில் சன்னல் கதவுகளை அசைத்துக் கொண்டிருந்தது. அந்த ஓசையில் கனிமீடு அத்தையால் வேறு எதையும் கேட்க முடியவில்லை.

ஆனால் சில விஷயங்கள் அவளுக்குப் புரிந்தன.

மூன்று தடியர்களுடைய அரசு ஆலோசனை மன்றத்தின் உத்தரவை அலுவலன் மருத்துவருக்குக் காட்டினன். அதைப் படித்த மருத்துவர் கிளர்ச்சி அடைந்தார்.

''பொம்மை நாளைக் காலைக்குள் செப்பனிடப்பட வேண்டும்'' என்று சொல்லி எழுந்தான் அலுவலன்.

காப்டன் பொனவெந்துரா படைத் தோரணையில் வணக்கம் தெரிவிப்பதற்காகக் கால்களை டக்கென்று சேர்த்து வைக்கவே, குதிமுட்கள் கிணுகிணுத்தன.

''அது சரி... ஆனல்...'' மருத்துவர் கைகளை விரித்தார். ''நான் முயன்று பார்க்கிறேன். ஆனல் உறுதி சொல்ல முடியுமா எங்காவது? இந்த மாயப் பொம்மையின் பொறி அமைப்பு எனக்குத் தெரியாது. நான் அதை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். எந்த மாதிரிப் பழுது நேர்ந்திருக்கிறது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இந்தப் பொறி அமைப்பின் புதிய பகுதிகளை நான் தயாரிக்க வேண்டும். இதற்கெல்லாம் நிறைய நேரம் தேவைப்படும். என் கலை பயன் இல்லாமலும் போய் விடக் கூடும்... காயம் பட்ட பொம்மையை மறுபடி உடல் நலம் உள்ளது ஆக்க ஒருகால் என்னல் முடியாமல் போகலாம்... எனக்குத் தயக்கமாய் இருக்கிறது, திருவாளர்களே... இவ்வளவு குறுகிய நேரம்... ஒரே ஓர் இரவு... என்னல் உறுதி சொல்ல முடியாது...''

அலுவலன் அவருடைய பேச்சை இடை முறித்தான். விரலை உயர்த்தி அவன் சொன்னன்:

''வாரிசு துத்தி படுகிற துயரம் மிகவும் பெரியது, ஆகையால் நேரம் தாழ்த்த எங்களால் முடியாது. பொம்மை நாளைக் காலைக்குள் மறுபடி உயிர் பெற வேண்டும். மூன்று தடியர்களின் விருப்பம் இது. அவர்களுடைய ஆணைக்குக் கீழ்ப்படிய மறுப்பதற்கு ஒருவரும் துணிய மாட்டார்கள். செப்பனிடப்பட்ட, நலமுள்ள பொம்மையை மூன்று தடியர்களின் அரண்மனைக்கு நாளைக் காலையில் கொண்டு வாருங்கள்.''

''சரி... ஆனல்...'' என்று மறுத்தார் மருத்துவர்.

''மறு பேச்சே வேண்டாம்! பொம்மை நாளைக் காலைக்குள் சரியாக்கப்பட்டு விட வேண்டும். இதை நீங்கள் செய்தால் உங்களுக்குப் பரிசு கிடைக்கும். இல்லாவிட்டால் கடுமையான தண்டனை.''

மருத்துவர் மலைத்துப் போனர்.

''நான் முயன்று பார்க்கிறேன். ஆனல் இது மிகவும் பொறுப்புள்ள வேலை...'' என்று குழற்றினர்.

''சந்தேகம் இல்லாமல்'' என்று பேச்சைக் கத்தரித்து விரலைத் தொங்க விட்டான் அலுவலன். ''உத்தரவை நான் உங்களுக்குத் தெரிவித்து விட்டேன். அதை நிறைவேற்றுவது உங்கள் கடமை. விடை கொடுங்கள்!''

கனிமீடு அத்தை கதவு அருகிலிருந்து துள்ளி விலகித் தன் அறைக்கு ஓடினள். அங்கே ஒரு மூலையில் எதையோ கொறித்துக் கொண்டிருந்தது அதிர்ஷ்டசாலியான சுண்டெலி. அச்சம் தந்த விருந்தாளிகள் அறையிலிருந்து வெளியே வந்தார்கள். அலுவலன் சாரட்டில் ஏறிக் கொண்டான். வாளும் குதிமுட்களும் பளிச்சிட்டுக் கிணுகிணுக்கக் குதிரை மேல் துள்ளி ஏறினன் காப்டன் பொனவெந்துரா. காவல் படையினர் தொப்பிகளைச் சரி செய்து கொண்டார்கள். பின்பு எல்லோரும் புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

வாரிசு துத்தியின் பொம்மை மருத்துவருடைய சோதனைக் கூடத்தில் இருந்தது.

வந்தவர்களை வழி அனுப்பிய பிறகு மருத்துவர் கனிமீடு அத்தையிடம் போய் வழக்கத்துக்கு மாறுன கடுகடுத்த குரலில் சொன்னர்:

''கனிமீடு அத்தை! நினைவு வைத்துக் கொள்ளுங்கள். விவேகம் உள்ள மனிதன், தேர்ந்த



மருத்துவன், நுட்பமான தொழில் விஞேஞன் என்று நான் புகழ் பெற்றிருக்கிறேன். தவிரவும் என் உயிர் மேல் எனக்கு ஆசை. நாளைக் காலையில் நான் இந்த இரண்டையுமே இழக்க நேரிடலாம். இன்று இரவு முழுவதும் நான் கடுமையான வேலை செய்ய வேண்டி இருக்கும். புரிந்து கொண்டீர்களா?'' இப்படிச் சொல்லி, மூன்று தடியர்களுடைய அரசு ஆலோசனை மன்றத்தின் உத்தரவு எழுதிய காகிதத்தை ஆட்டினர். ''எனக்கு யாரும் இடைஞ்சல் செய்யக் கூடாது. இரைச்சல் போடாதீர்கள். தட்டுக்களை ஓசைப் படுத்தாதீர்கள். எதையும் வறுத்துக் கருக்காதீர்கள். கோழிகளைக் கூப்பிடாதீர்கள். சுண்டெலிகளைப் பிடிக்காதீர்கள். முட்டைப் பொரியல், பூக்கோசு, ஆரஞ்சுப் பழப் பாகுக்கட்டி, வலெரியான் துளிகள், எதுவுமே கூடாது! புரிந்து கொண்டீர்களா?''

மருத்துவர் கஸ்பார் மிகவும் கோபமாய் இருந்தார்.

கனிமீடு அத்தை தன் அறைக்குள் போய், கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

''விந்தையான நிகழ்ச்சிகள், மிகவும் விந்தையான நிகழ்ச்சிகள்! எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. எவனே நீக்ரோ, எதுவோ பொம்மை, எதுவோ உத்தரவு... விந்தையான நாட்கள் வந்து விட்டன!'' என்று சிடுசிடுத்தாள்.

அமைதி அடைவதற்காக, தன் மருமகளுக்குக் கடிதம் எழுதத் தீர்மானித்தாள். பேனு முனை கிறீச்சிடாமல் இருக்கும் பொருட்டு மிகவும் சாக்கிரதையாக எழுத வேண்டி இருந்தது. மருத்துவரைத் தொந்தரவு செய்வோமோ என்று அவள் பயந்தாள்.

ஒரு மணி நேரம் கழிந்தது. கனிமீடு அத்தை எழுதிக் கொண்டிருந்தாள். அன்று காலையில் மருத்துவர் கஸ்பாரின் சோதனைக் கூடத்தில் காணப்பட்ட மாயமான நீக்ரோவை வருணிக்கும் கட்டத்திற்கு அவள் வந்திருந்தாள்.

''... அவர்கள் இரண்டு பேரும் வெளியே போனர்கள். அரண்மனை அலுவலனேடும் காவல் படைக்காரர்களோடும் திரும்பி வந்தார் மருத்துவர். அவர்கள் ஒரு பொம்மையைக் கொண்டு வந்தார்கள். அது அப்படியே ஒரு சின்னப் பெண் மாதிரி இருந்தது. ஆனல் நீக்ரோ அவர்களோடு வரவில்லை. அவன் எங்கே போனனே, எனக்குத் தெரியாது...''

நீக்ரோ, அதாவது சர்க்கஸ்காரன் திபூல் எங்கே போனன் என்ற கேள்வி மருத்துவருக்கும் கவலை உண்டாக்கிற்று. பொம்மையைச் சோதிக்கையில் திபூல் என்ன ஆனன் என்று ஓயாமல் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு எரிச்சல் வந்தது. தமக்குத் தாமே பேசிக் கொண் டார்:

''எப்பேர்ப்பட்ட யோசனையின்மை! நான் அவனை நீக்ரோவாக மாற்றினேன், அற் புதமான நிறத்தை அவனுக்கு ஏற்படுத்தினேன். அவனை அடையாளமே தெரியாதபடி மாற்றி னேன். அவனே, பதினைலாவது சந்தையில் இன்று தானே தன்னைக் காட்டிக் கொண்டான். அவன் பிடிபட்டு விடலாமே... அடாடா! எவ்வளவு முன்யோசனையே இல்லாத ஆள்! இரும்புக் கூண்டில் அடைபட அவனுக்கு ஆசையாய் இருக்கிறதோ?''

மருத்துவர் கஸ்பார் ஒரேயடியாக மனம் கலங்கிப் போயிருந்தார். திபூலின் அசாக்கிரதை, அப்புறம் இந்தப் பொம்மை... போதாக்குறைக்கு, தலைக்கு நாள் ஏற்பட்ட கவலைகள், நீதி மன்றச் சதுக்கத்தில் பத்து வெட்டு மேடைகள்...

''அவலம் பிடித்த நேரம்!'' என்று உரக்கச் சொன்னர் மருத்துவர்.

அன்று நடப்பதாக இருந்த மரண தண்டனை தள்ளி வைக்கப்பட்டது அவருக்குத் தெரி யாது. அரண்மனை அலுவலன் பேச்சில் சிக்கனமாய் இருந்தான். அன்று அரண்மனையில் நடந் ததை அவன் மருத்துவருக்குத் தெரிவிக்கவில்லை.

மருத்துவர் அப்பாவிப் பொம்மையைக் கூர்ந்து பார்த்து, விளங்காமல் திகைத்தார்:

''எப்படி ஏற்பட்டன இந்தக் காயங்கள்? இவை வெடியாக் கருவியால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. வாட்களால் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். பொம்மையை, அற்புதமான பெண்ணை, யாரோ குத்தித் துளைத்திருக்கிறார்கள்... யார் அது? வாரிசு துத்தியின் பொம்மையை வாளால் குத்தித் துளைக்கத் துணிந்தவன் எவன்?''

இதைச் செய்தவர்கள் காவல் படையினர் என்று மருத்துவர் நினைக்கவே இல்லை. அரண்மனைக் காவல் படைப் பிரிவு கூட மூன்று தடியர்களுக்கு ஏவல் செய்ய மறுத்து மக்களின் தரப்புக்கு வந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணத்துக்கு இடம் கொடுக்கவே அவரால் முடிந்திராது. அது மட்டும் தெரிந்தால் அவர் எவ்வளவு ஆனந்தப்பட்டிருப்பார்!

மருத்துவர் பொம்மையின் தலையைக் கையில் எடுத்துக் கொண்டார். வெயில் சன்னல் வழியாக வந்தது. பொம்மை மேல் அது பளிச்சென்று அடித்தது. மருத்துவர் பார்வையிட்டார்.

''விந்தை, மிகவும் விந்தையான சேதி'' என்று சிந்திக்கலானார். ''இந்த முகத்தை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன்... ஆமாமாம், சந்தேகம் இல்லாமல்! நான் இதைப் பார்த்திருக்கிறேன். எனக்கு இது பழக்கமானது. ஆனால் எங்கே பார்த்தேன்? எப்போது? அது உயிருள்ள முகம். ஒரு சின்னப் பெண்ணின் துடியான முகம். அது புன்னகை செய்தது, அருமையான உணர்ச்சி வேறுபாடுகளைக் காட்டிற்று. ஆழ்ந்து கவனித்தது, குலுக்கி மினுக்கிற்று, ஏங்கிற்று... ஆம், ஆம். இதில் சந்தேகத்துக்கே இடம் இல்லை! ஆனால் பாழும் பார்வை மந்தம் அந்த முகத்தை நினைவுபடுத்திக் கொள்ள எனக்கு இடைஞ்சலாய் இருக்கிறது.''

பொம்மையின் சுருட்டை மயிர் அடர்ந்த தலையை அவர் கண்களின் கிட்டத்தில் கொண்டு வந்தார்.

''எவ்வளவு அற்புதமான பொம்மை! இதைச் செய்தவன் எவ்வளவு தேர்ந்த சிற்பி! இது சாதாரணப் பொம்மை போல் இல்லை. பொம்மைகளின் விழிகள் வழக்கமாக இளநீலமாய்த் துருத்திக் கொண்டிருக்கும். அவற்றில் மனித உணர்ச்சியோ, சிந்தனையோ இருக்காது. சற்றுத் தூக்கிய மூக்கு, செப்புப் போன்ற சின்ன வாய், அசட்டுத்தனமான சணல் நிறச் சுருட்டைத் தலைமயிர், அப்படியே செம்மறி ஆட்டின் ரோமம் போல. பொம்மை பார்ப்பதற்கு மகிழ்ச்சி உள்ளது மாதிரி இருக்கும், ஆனால் உண்மையில் அது அசடு... இந்தப் பொம்மையிலோ எதுவும் பொம்மைத்தனம் உள்ளதாய் இல்லை. சத்தியமாய்ச் சொல்லுகிறேன், பொம்மையாக மாற்றப்பட்ட பெண்ணாக இருக்கலாம் இது!''

மருத்துவர் கஸ்பார் தம்முடைய அசாதாரணமான நோயாளியை வியப்புடன் பார்வையிட்டார். இதே வெளிறிய சின்ன முகத்தையும் கவனமுள்ள சாம்பல் நிற விழிகளையும் குட்டையாகக் கத்தரித்த கலைந்த தலைமயிரையும் தாம் எங்கோ, எப்போதோ பார்த்திருக்கிறார் என்ற எண்ணம் அவருடைய மனத்திலிருந்து அகலவே இல்லை. தலையின் திருப்பமும் பார்வையும் சிறப்பாகப் பழக்கமானவையாக அவருக்குத் தோன்றின. பொம்மை தலையைப் பக்கவாட்டில் கொஞ்சம் போலச் சாய்த்து மருத்துவரைக் கீழிருந்து கவனமாக, தந்திரமாக நோக்கிற்று...

மருத்துவரால் பொறுக்க முடியவில்லை. அவர் இரைந்து கேட்டார்:

''பொம்மையே, உன் பெயர் என்ன?''

ஆனால் பொம்மைப் பெண் பேசவில்லை. அப்போது மருத்துவர் சுய நினைவுக்கு வந்தார். பொம்மை பழுதடைந்திருந்தது. அதைப் பேச வைக்க வேண்டும், இருதயத்தைச் செப்பனிட வேண்டும், மறுபடி புன்னகை செய்யவும் நடனம் ஆடவும், தன் வயதுப் பெண்கள் போல நடந்து கொள்ளவும் அதற்குக் கற்பிக்க வேண்டும்.

''பார்ப்பதற்கு இது பன்னிரண்டு வயதுப் பெண் போல் இருக்கிறது.''

நேரம் தாழ்த்த முடியாதிருந்தது. மருத்துவர் வேலையில் முனைந்தார். ''பொம்மையை நான் உயிர்ப்பிக்க வேண்டும்.''

கனிமீடு அத்தை தன் கடிதத்தை எழுதி முடித்தாள். இரண்டு மணி நேரம் அவள் சும்மா இருந்தாள். அப்புறம் ஆவல் அவளை அரிக்கத் தொடங்கிற்று. ''மருத்துவர் கஸ்பார் செய்ய வேண்டி இருந்த அவசர வேலைதான் என்ன? அது என்ன பொம்மை?''

அவள் ஓசை செய்யாமல் நடந்து சோதனைக் கூட வாயிலை நெருங்கி, இருதய வடிவில் இருந்த சாவித் துளை வழியே பார்வை செலுத்தினாள். அந்தோ! அதில் சாவி செருகப்பட்டிருந்தது. அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கதவு திறந்தது, மருத்துவர் கஸ்பார் வெளியே வந்தார். அவர் ஒரேயடியாகக் கலக்கம் அடைந்திருந்ததால் கனிமீடு அத்தையை அவளுடைய கூச்சம் இன்மைக்காகக் கடிந்து கொள்ளக்கூட இல்லை. ஆனாலும் கனிமீடு அத்தை குழப்பம் அடைந்தாள்.

''கனிமீடு அத்தை, நான் போகிறேன். இன்னும் சரியாகச் சொன்னால் நான் போக வேண்டி இருக்கிறது. வண்டி அமர்த்திக் கொண்டு வாருங்கள்'' என்றார் மருத்துவர்.

கொஞ்ச நேரம் பேசாதிருந்த பின் அவர் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார்.

''மூன்று தடியர்களின் அரண் மனைக்குப் போகிறேன். அங்கிருந்து அனேகமாகத் திரும்ப மாட்டேன்.''

கனிமீடு அத்தை வியப்பினால் பின்னே நகர்ந்தாள்.

''மூன்று தடியர்களின் அரண்மனைக்கா?''

''ஆமாம், கனிமீடு அத்தை. நிலைமை மிகவும் சிக்கலானது. வாரிசு துத்தியின் பொம்மையை ஆட்கள் என்னிடம் கொண்டு வந்தார்கள். உலகத்தில் எல்லாவற்றிலும் மேலான பொம்மை இது. இதன் பொறி அமைப்பு உடைந்து விட்டது. இந்தப் பொம்மையை நாளைக் காலைக்குள் செப்பனிட்டுத் தரும்படி மூன்று தடியர்களுடைய அரசு ஆலோசனை மன்றம் எனக்கு உத்தரவு இட்டிருக்கிறது. கடுமையான தண்டனை கிடைக்கும் அபாயம் எனக்கு எதிர்ப்பட்டிருக்கிறது...''

கனிமீடு அத்தைக்கு அழுகை வந்தது.

''இந்த அப்பாவிப் பொம்மையைப் பழுது பார்க்க என்னால் முடியாது. அதன் மார்பில் வைக்கப்பட்டிருக்கும் பொறி அமைப்பை நான் புரிந்து கொண்டேன். அதன் சூட்சுமத்தைத் தெரிந்து கொண்டேன். அதைச் சீர்படுத்த என்னால் முடியும். ஆனால்... படு அற்ப விஷயம்! ஒன்றுமே இல்லாத ஒரு சின்னச் சாமான் இல்லாததால் இதை ஒக்கிட என்னால் முடியாதிருக்கிறது. நுட்பமான இந்தப் பொறி அமைப்பில் பல் சக்கரம் ஒன்று இருக்கிறது. அது பிளந்து விட்டது... இப்போது அது வேலைக்கு உதவாது! புதுச் சக்கரம் செய்ய வேண்டும்... இதற்குத் தேவையான வெள்ளி போன்ற உலோகம் என்னிடம் இருக்கிறது... ஆனால் வேலை தொடங்குவதற்கு முன்னால் அந்த உலோகத்தைத் துத்தக் கரைசலில் குறைந்தது இரண்டு நாட்களாவது வைத்திருக்க வேண்டும். புரிகிறதா? இரண்டு நாட்கள்... ஆனால் பொம்மை நாளைக் காலை தயாராய் இருக்க வேண்டுமே.''

''வேறு எந்தச் சக்கரத்தையாவது பொருத்த முடியாதா?'' என்று தயக்கத்துடன் கேட்டாள் கனிமீடு அத்தை.

மருத்துவர் வருத்தத்துடன் கையை உதறினார்:

''எல்லாவற்றையும் பொருத்திப் பார்த்தேன், பயன் இல்லை.''

ஐந்து நிமிடங்கள் பொறுத்து மூடிய நான்கு சக்கர வாடகை வண்டி ஒன்று மருத்துவர்

கஸ்பாரின் வீட்டு வாசலில் நின்றது. மூன்று தடியர்களின் அரண்மனைக்குப் போவதென்று மருத்துவர் முடிவு செய்து விட்டார்.

''நாளைக் காலைக்குள் பொம்மையைச் சீர்படுத்த முடியாது என்று அவர்களிடம் சொல்லி விடுகிறேன். என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்...'' என்றார்.

கனிமீடு அத்தை முன்றாங்கித் துணியைக் கடித்த வண்ணம் தலையை ஆட்டினாள். தலை கழன்று விழுந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படும் வரையில் ஆட்டிக் கொண்டிருந்தாள்.

மருத்துவர் கஸ்பார் பொம்மையைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு புறப்பட்டார்.



## அத்தியாயம் 7

# அற்புதப் பொம்மையின் இரவு



காற்று மருத்துவர் கஸ்பாரின் இரண்டு காதுகளிலும் சீழ்க்கை அடித்தது. அதன் மெட்டு சகிக்க முடியாததாக இருந்தது. ஊக்கத்துடன் சாணை பிடிப்பவனின் சாணைக் கல் உருளையும் கத்தியும் ஒன்றோடு ஒன்று உராய்ந்து எழுப்பும் நீக்ரோ விரைவு நடன மெட்டை விடக் கூட மோசமாக இருந்தது அது.

மருத்துவர் கோட்டின் கழுத்துப் பட்டையால் காதுகளை மூடிக் கொண்டு காற்றுக்கு முதுகைக் காட்டியபடி உட்கார்ந்தார்.

அப்போது காற்று விண்மீன்களோடு விளையாடத் தலைப்பட்டது. அது சில வேளைகளில் அவற்றை ஊதிப் பரத்திற்று, வேறு சில வேளைகளில் கூரையின் கறுப்பு முக்கோணங்களின் பின்னால் எறிந்தது. இந்த விளையாட்டு அலுத்துப் போனதும் அது மேகங்களைக் கற்பனை செய்தது. ஆனால் மேகங்கள் கோபுரங்கள் போலச் சரிந்து விட்டன. அப்போது காற்று சட்டென்று குளிர்ந்து போயிற்று. அது வன்மம் காரணமாகக் குளிர்ந்து விட்டது.

மழைக் கோட்டால் இறுகப் போர்த்துக் கொள்வது மருத்துவருக்கு அவசியம் ஆயிற்று. பாதிக் கோட்டால் அவர் பொம்மையைப் போர்த்தார்.

''வேகமாய் விடுங்கள்! விரட்டுங்கள் குதிரைகளை! தயவு செய்து விரட்டுங்கள்!''

ஒரு காரணமும் இல்லாமல் மருத்துவர் திகில் அடைந்து வண்டியோட்டியை அவசரப் படுத்தினார்.

ஒரே கலவரமாகவும் இருட்டாகவும் வெறுமையாகவும் இருந்தது. ஒரு சில சன்னல்களில் மட்டுமே கொஞ்சம் சிவந்த விளக்குகள் தெரிந்தன. மற்றச் சன்னல்கள் மூடப்பட்டிருந்தன. மக்கள் பயங்கர நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த முன்னிரவில் பல விஷயங்கள் வழக்கத்துக்கு மாறுகவும் சந்தேகத்துக்கு இடமாகவும் தோன்றின. அற்புதப் பொம்மையின் விழிகள் ஒளி புகும் இரண்டு மணிக் கற்கள் போலப் பளிச்சிடுவதாகக் கூடச் சில வேளைகளில் மருத்துவருக்குப் பிரமை உண்டாயிற்று. தன் வழித் துணைவியைப் பாராமல் இருக்க அவர் முயன்ருர்.

''அர்த்தம் இல்லாத கலவரம்!'' என்று தம்மைத் தேற்றிக் கொண்டார். ''என் நரம்புகள் தளர்ந்து போயிருக்கின்றன. சர்வ சாதாரணமான முன் இரவு. ஆள் நடமாட்டம் தான் குறைவு. காற்று ஆட்களுடைய நிழல்களை விந்தையாக அசைத்து ஆட்டுவதால் எதிரே வருபவன் ஒவ்வொருவனும் இறக்கைகள் போன்ற மர்மமான மழைக் கோட்டு அணிந்த தொழில் முறைக் கொலைகாரனுகத் தோன்றுகிருன்... நாற்சந்திகளில் எரிவாயு விளக்குகள் மட்டும் ஏனே பிரேதம் போன்ற இளநீல நிறத்தில் எரிகின்றன... அட, மூன்று தடியர்களின் அரண்மனைக்குச் சட்டெனப் போய்ச் சேர்ந்தால் நல்லது!..''

அச்சத்தைப் போக்குவதற்குக் கைகண்ட மருந்து ஒன்று இருக்கிறது: தூக்கம். கம்பளியைத் தலைமேல் இழுத்துப் போர்த்துக் கொள்வது சிறப்பாக உதவும் என்று சொல்லப்படுகிறது. மருத்துவர் இந்த மருந்தைப் பயன்படுத்தினுர். கம்பளிக்குப் பதிலாகத் தொப்பியைக் கண்களுக்கு மேல் இழுத்து விட்டுக் கொண்டார். அதோடு, நூறு வரை எண்ணத் தொடங்கினுர். ஆனுல் அது பயன் தரவில்லை. அப்போது அவர் தீவிரமாகச் செயல்படும் உபாயத்தைக் கையாண்டார். மனதுக்குள் இப்படிச் சொல்லிக் கொண்டார்:

''ஒரு யானையும் ஒரு யானையும் இரண்டு யானைகள்; இரண்டு யானைகளும் ஒரு யானையும் மூன்று யானைகள்; மூன்று யானைகளும் ஒரு யானையும் நான்கு யானைகள்...''

இந்த மாதிரி ஒரு யானைக் கூட்டத்தையே திரட்டி விட்டார் மருத்துவர். ஆனுல் நூற்று இருபத்து மூன்ருவது யானை கற்பனை யானையிலிருந்து நிச யானையாக மாறிற்று. அது யானை தானு அல்லது ரோஜா நிறப் பயில்வான் லப்பித்தூப்பா என்று புரிந்து கொள்ள மருத்துவரால் முடியாததால் அவர் தூங்கத் தொடங்கிக் கனவு கண்டார் என்பது தெளிவாகிறது.

நனவை விடக் கனவில் நேரம் படு விரைவாகக் கழிகிறது. மருத்துவர் தம் கனவில் மூன்று தடியர்களின் அரண்மனைக்குப் போனதோடு அவர்களுடைய நீதிமன்றத்தின் முன்பும் தோன்றினுர். நீலப் பாவாடை கட்டிய குரங்கைக் கையில் பிடித்திருக்கும் ஜிப்சி போல ஒவ்வொரு தடியனும் பொம்மையைக் கையில் பிடித்துக் கொண்டு அவருக்கு எதிரே நின்ருன்.

அவர் சொன்ன விளக்கங்கள் எவற்றையும் கேட்க அவர்கள் விரும்பவில்லை.

''நீ உத்தரவை நிறைவேற்றவில்லை. நீ கடும் தண்டனைக்கு உரியவன். விண்மீன் சதுக்கத்துக்கு மேலே பொம்மையோடு நீ கம்பி மேல் நடக்க வேண்டும். மூக்குக் கண்ணுடியை மட்டும் கழற்றி விடு...'' என்ருர்கள் அவர்கள்.

மருத்துவர் மன்னிப்பு கேட்டார். எல்லாவற்றையும் விட, பொம்மைக்குத் தீங்கு நேருமே என்றுதான் அவர் அஞ்சினுர்... அவர் இப்படிச் சொன்னுர்:

''நான் பழகி விட்டேன், என்னுல் இப்போது விழ முடியும்... நான் கம்பியிலிருந்து தவறிக் குளத்தில் விழுந்தால் ஒன்றும் ஆகாது. நான் ஏற்கெனவே அனுபவப்பட்டிருக்கிறேன்: நகர வாயிலுக்குப் பக்கத்தில் கோபுரத்தோடு சேர்ந்து விழுந்தேன்... ஆனுல் பொம்மை, பாவம், பொம்மை! அது சுக்கு நூருக உடைந்து சிதறி விடுமே... அதற்கு இரக்கம் காட்டுங்களேன்... இது பொம்மை இல்லை, உயிருள்ள சின்னப் பெண் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவளுக்கு அருமையான பெயர். அதை நான் மறந்து விட்டேன். எவ்வளவு யோசித்தும் அது எனக்கு நினைவு வர மாட்டேன் என்கிறது...''

''கிடையாது!'' என்று கத்தினுர்கள் தடியர்கள். ''கிடையாது! மன்னிப்பே கிடையாது! மூன்று தடியர்களின் உத்தரவு அப்படி!''

கூச்சல் கடுமையாய் இருந்ததால் மருத்துவர் விழித்துக் கொண்டார்.



''மூன்று தடியர்களின் உத்தரவு அப்படி!'' என்று மருத்துவரின் காதுக்கு மேலே கத்தினுன் ஒருவன்.

இப்போது மருத்துவர் தூங்கவில்லை. நனவில் தான் ஒருவன் இப்படிக் கத்தினுன். மருத்துவர் கண்களே, அல்லது, இன்னும் சரியாகச் சொன்னுல், மூக்குக் கண்ணுடியைத் தொப்பிக்கு அடியிலிருந்து விடுவித்துச் சுற்று முற்றும் பார்த்தார். அவர் தூங்கிக் கொண்டிருந்த போது நன்ருக இருட்டி விட்டது என்பது தெரிந்தது.

வண்டி நின்று கொண்டிருந்தது. கரிய உருவங்கள் அதைச் சூழ்ந்திருந்தன. மருத்துவரின் கனவில் கலந்து குழம்பிய கூச்சலை அவை தாம் கிளப்பின. அவை கை விளக்குகளே ஆட்டின. அதனுல் அழி வரிசை வடிவான நிழல்கள் விழுந்தன.

''என்ன நடந்தது? நாம் எங்கே இருக்கிறேம்? இந்த ஆட்கள் யார்?'' என்று கேட்டார் மருத்துவர்.

உருவங்களில் ஒன்று கிட்டே வந்து, கை விளக்கைத் தலை மட்டத்துக்குத் தூக்கி, மருத்துவர் மேல் வெளிச்சம் படும்படிச் செய்தது. கைவிளக்கு அசையத் தொடங்கிற்று. மேலிருந்து அதன் வளையத்தைப் பிடித்திருந்த கை மணிக்கட்டுக்கு மேல் அகலமான மணி வடிவ மடிப்பு வைத்த முரட்டுத் தோல் உறை அணிந்திருந்தது.

அவர்கள் காவல் படையினர் என்பதை மருத்துவர் புரிந்து கொண்டார்.

''மூன்று தடியர்களின் உத்தரவு அப்படி'' என்று திருப்பிச் சொல்லிற்று உருவம்.

மஞ்சள் வெளிச்சம் அதைக் கூறுகளாகப் பிளந்தது. மெழுகுத் துணித் தொப்பி பளிச்சிட்டது. இரவில் அது இரும்புத் தொப்பி போலத் தோற்றம் அளித்தது.

''அரண்மனைக்கு ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு மேல் கிட்டே வர யாருக்கும் உரிமை கிடையாது. இந்த உத்தரவு. இன்று பிறப்பிக்கப்பட்டது. நகரத்தில் கொந்தளிப்பு. மேலே போவது கூடாது!''

''சரிதான், ஆனுல் அரண்மனைக்குப் போவது எனக்குக் கட்டாயமாகத் தேவை.''

மருத்துவருக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

காவல் படையினன் அதிகாரக் குரலில் சொன்னுன்:

''நான் காவல் பிரிவுத் தலைவன் காப்டன் த்செரேப். மேற்கொண்டு ஓர் அடி கூடப் போக உங்களே நான் விட மாட்டேன். திருப்பு!'' என்று கை விளக்கை ஆட்டிக் கொண்டு வண்டிக்காரனை அதட்டினுன்.

மருத்துவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனாலும், தாம் யார், எதற்காகத் தாம் அரண்மனைக்குப் போக வேண்டும் என்பதை அறிந்ததும், காவலர்கள் தம்மைப் போக விட்டு விடுவார்கள் என்பதில் அவருக்குச் சந்தேகம் உண்டாகவில்லை.

''நான் மருத்துவன் கஸ்பார் அர்னேரி'' என்றார் அவர்.

பதிலாகக் கலீரென்ற சிரிப்பொலி கேட்டது. கை விளக்குகள் நாலா பக்கமும் நடன மாடின.

''பெரியவரே, இந்த மாதிரிக் கலவரம் நிறைந்த நேரத்தில், இந்தப் பின்னிரவில் வேடிக்கை பேச எங்களுக்கு மனம் இல்லை'' என்றான் காவல் பிரிவுத் தலைவன்.

''நான் உங்களுக்கு மறுபடி சொல்கிறேன்: நான்தான் மருத்துவன் கஸ்பார் அர்னேரி.''

காவல் பிரிவுத் தலைவனுக்குக் கோபம் பொங்கி வந்தது. ஒவ்வொரு சொல்லுக்கும் பிறகு வாளைக் குலுக்கியபடி மெதுவாகவும் இடை விட்டு விட்டும் பேசினான்:

''அரண்மனைக்குள் நுழைவதற்காக வேறு ஒருவருடைய பெயரைச் சொல்லிப் பசப்பு கிறீர்கள் நீங்கள். மருத்துவர் கஸ்பார் அர்னேரி இரவு நேரங்களில் சுற்றித் திரிவது இல்லை. அதிலும் இந்த இரவில். இப்போது அவர் மிக முக்கியமான வேலையில் முனைந்திருக்கிறார்: வாரிசு துத்தியின் பொம்மையை அவர் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறார். நாளைக் காலையில் தான் அவர் அரண்மனைக்கு வருவார். உங்களை, ஆள் மாறாட்டம் செய்ததற்காக நான் கைது செய்கிறேன்.''

''என்ன?'' இப்போது மருத்துவருக்குப் பொங்கி வந்தது ஆத்திரம்.

''என்ன? என்னை நம்பாதிருக்க இவன் துணிந்து விட்டானா? நல்லது. இதோ காட்டு கிறேன் இவனுக்குப் பொம்மையை!''

பொம்மையை எடுப்பதற்காக மருத்துவர் கையை நீட்டினார். அப்புறம்...

பொம்மையைக் காணவில்லை. அவர் தூங்கிக் கொண்டிருந்த போது அது வண்டியிலிருந்து விழுந்து விட்டது.

மருத்துவர் சில்லிட்டுப் போனார்.

''ஒருவேளை இது எல்லாமே கனவோ?'' என்ற எண்ணம் அவர் உணர்வில் தோன்றியது.

ஆனால் அந்தோ! அது உண்மை நடப்பு.

''ஊம்?'' என்று பற்களைக் கிட்டித்து, விளக்கு பிடித்திருந்த விரல்களை அசைத்தபடி உறு மினான் காவல் பிரிவுத் தலைவன். ''போய்த் தொலையும் பெற்றோம் பிழைத்தோம் என்று! கிழட்டுப் பிணத்தோடு விவகாரம் வேண்டாம் என்பதற்காக உம்மை விடுகிறேன்... ஒழி யும்!''

பணிந்து போக வேண்டியதாயிற்று. வண்டிக்காரன் வண்டியைத் திருப்பினான். வண்டி கிரீச்சிட்டது, குதிரை செருமிற்று, இரும்புக் கைவிளக்குகள் கடைசித் தரம் அசைந்தாடின, அப்பாவி மருத்துவர் திரும்பிப் போனார்.

தாங்க முடியாமல் அவர் அழத் தொடங்கினார். காவல் படைக்காரன் அவரிடம் ஒரே முரட்டுத்தனமாகப் பேசினான், அவரைக் கிழட்டுப் பிணம் என்றான். எல்லாவற்றுக்கும் மேல், வாரிசு துத்தியின் பொம்மையை அவர் கெட்டுப் போக்கி விட்டார்!

''இதன் அர்த்தம் என்ன என்றால் என் தலை போய்விடும்—நேரான அர்த்தத்தில்—என்பது தான்.''

அவர் அழுதார். அவருடைய மூக்குக் கண்ணாடியில் ஆவி படிந்தது, அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. தலையணையில் தலையைப் புதைத்துக் கொள்ள அவருக்கு விருப்பம் உண்டா யிற்று. இதற்கிடையே வண்டிக்காரன் குதிரையை விரட்டிக் கொண்டு போனான். ஒரு பத்து நிமிட நேரம் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார் மருத்துவர். ஆனால் அவருக்கு வழக்கமான நல்லறிவு விரைவில் அவரிடம் திரும்பி விட்டது.

''இப்போதும் பொம்மை எனக்குக் கிடைக்கலாம். இன்று இரவில் ஆள் நடமாட்டம்



குறைவு. இந்த இடம் எப்போதும் வெற்ருய் இருக்கும். ஒருவேளை இந்த நேரத்தில் ஒருவருமே இந்த வழியாகப் போகவில்லையோ என்னவோ...'' என்று எண்ணமிட்டார்.

மெது நடையாக வண்டியை ஓட்டும்படியும் வழியைக் கவனமாகப் பார்வையிடும்படியும் வண்டிக்காரனுக்குக் கட்டளை இட்டார்.

''ஊம், என்ன? ஊம், என்ன?'' என்று நிமிடத்துக்கு ஒரு தரம் கேட்டுக் கொண்டு போனுர்.

''ஒன்றையும் காணேம், ஒன்றையும் காணேம்'' என்று பதில் சொன்னுன் வண்டிக்காரன்.

தான் கண்ட பொருள்களைப் பற்றி அவன் வரிசையாகச் சொல்லிக்கொண்டு போனுன், ஆனுல் அவை வேண்டாதவை, சுவாரசியம் இல்லாதவை:

''சிறு பீப்பாய்.''

''இல்லை... இது அல்ல...''

''நல்ல, பெரிய கண்ணுடித் துண்டு.''

''இல்லை.''

''பிய்ந்த செருப்பு.''

''வேண்டாம்.'' மருத்துவரின் குரல் தணிந்து கொண்டு போயிற்று.

வண்டிக்காரன் முடிந்த வரையில் ஊக்கத்துடன் தேடினுன். கவனமாக உற்றுப் பார்த்தான். இருட்டில் அவனுடைய பார்வை ஒரே கூர்மையாக இருந்ததைக் கண்டபோது அவன் வண்டிக்காரன் அல்ல, பெருங்கடலில் போகும் கப்பலின் கப்பித்தான் என்று எண்ணத் தோன்றியது.

''ஆனுல் பொம்மை, பொம்மை உமக்குத் தட்டுப் படவில்லையா? ரோஜா நிறக் கவுன் போட்ட பொம்மை?''

''பொம்மையைக் காணேம்'' என்று ஏங்கிய கட்டைக் குரலில் சொன்னுன் வண்டிக்காரன்.

''அப்படியானுல் யாரேனும் அதை எடுத்துப் போயிருப்பார்கள். மேற்கொண்டு தேடுவது வீண். இதோ, இந்த இடத்தில் நான் தூங்கிப் போனேன்... அப்போது அது என் பக்கத்தில் இருந்தது... ஐயோ!..''

மருத்துவருக்கு மறுபடி அழுகை வந்தது.

வண்டிக்காரன் பரிவுடன் சில தடவைகள் மூக்கை உறிஞ்சினுன்.

''என்ன செய்வது?''

''அட எனக்கே தெரியவில்லை... அட எனக்கே தெரியவில்லை...'' மருத்துவர் கைகளில் தலையைப் புதைத்துக் கொண்டு குனிந்து உட்கார்ந்திருந்தார். துயரத்தினுலும் வண்டி தூக்கிப் போட்டதாலும் அவரது உடம்பு ஆடிக் கொண்டிருந்தது. ''எனக்குத் தெரிந்து விட்டது'' என்று மறுபடி பேசத் தொடங்கினுர். ''ஆமாம், சந்தேகம் இல்லாமல்... ஆமாம், சந்தேகத்துக்கே இடமில்லை... இது எனக்கு முன்னமே தோன்ருமல் போனது எப்படி? அவள் ஓடி விட்டாள், இந்த பொம்மைப் பெண்... நான் தூங்கிப் போனதும் அவள் ஓடி விட்டாள். புரிகிறது. அவள் உயிருள்ள பெண். பார்த்த உடனேயே நான் இதைக் கண்டு கொண்டேன். ஆனுல் மூன்று தடியர்களுக்கு நான் இழைத்த குற்றத்தை இது குறைத்து விடவில்லை...''

அப்போது அவருக்குப் பசி எடுத்தது. கொஞ்ச நேரம் பேசாதிருந்த பின் கம்பீரமான குரலில் அறிவித்தார்:

''இன்றைக்கு நான் மதியச் சாப்பாடு சாப்பிடவில்லை. பக்கத்தில் உள்ள சாப்பாட்டுக் கடைக்கு வண்டியை விடுங்கள்.''

பசியால் மருத்துவர் அமைதி அடைந்தார்.

இருண்ட வீதிகளில் அவர்கள் நீண்ட நேரம் சுற்றி அலைந்தார்கள். சாப்பாட்டுக் கடைக்காரர்கள் எல்லோரும் தங்கள் கடைகளை மூடி விட்டார்கள். அன்று இரவில் எல்லாத் தடியர்



களும் கலவரத்துடன் நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கதவுகளுக்குப் புதிய தாழ்ப்பாள்கள் போட்டிருந்தார்கள், உள்ளே வரும் வழியில் அலமாரிகளையும் பெட்டிகளையும் அடுக்கி அரண் செய்திருந்தார்கள். தூவி மெத்தைகளாலும் கோடுகள் போட்ட தலையணைகளாலும் சன்னல்களை அடைத்திருந்தார்கள். அவர்கள் தூங்கவில்லை. பருமனுகவும் பணக்காரர்களாகவும் இருந்த எல்லோரும் அன்று இரவு தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். காவல் நாய்கள் அதிக விழிப்புடனும் எரிச்சலுடனும் இருக்க வேண்டும் என்பதற்காகக் காலையிலிருந்து அவற்றுக்கு இரை போடாமல் வைத்திருந்தார்கள். பணக்காரர்களுக்கும் கொழுத்தவர்களுக்கும் பயங்கரமான இரவு தொடங்கி இருந்தது. எந்த நிமிடத்திலும் மக்கள் மறுபடி கிளர்ச்சி செய்யலாம் என்று அவர்கள் உறுதியாய் எண்ணினுர்கள். சில காவல் படையினர் மூன்று தடியர்களுக்குத் துரோகம் செய்து, வாரிசு துத்தியின் பொம்மையைக் குத்தித்துளைத்து விட்டு, அரண்மனையிலிருந்து விட்டு, அரண்மனையிலிருந்து வெளியேறி விட்டார்கள் என்ற வதந்தி நகரத்தில் பரவி இருந்தது. எல்லாப் பணக்காரர்களுக்கும் பெருந்தீனிக்காரர்களுக்கும் இது பெருத்த கலவரம் ஊட்டிற்று.

''நாசமாய்ப் போயிற்று! காவல் படையினரையும் நம்மால் இனிமேல் நம்ப முடியாது. நேற்று அவர்கள் கிளர்ச்சியை ஒடுக்கினுர்கள். இன்றே, தங்கள் பீரங்கிகளை நம் வீடுகளுக்கு எதிராகத் திருப்புகிருர்கள்'' என்று அவர்கள் சள்ளைப்பட்டார்கள்.

பசி தீரச் சாப்பிட்டுக் களைப்பாறும் நம்பிக்கையை மருத்துவர் கஸ்பார் இழந்து விட்டார். சுற்றிலும் எங்குமே உயிர்க் களை இல்லை.

''வீட்டுக்குப் போக வேண்டுமா என்ன? அது நிரம்பத் தொலைவு ஆயிற்றே... பட்டினியால் எனக்குப் பிராணன் போய் விடுமே அதற்குள்!'' என்று கலங்கினுர் மருத்துவர்.

திடீரென்று இறைச்சிப் பொரியலின் மணம் அவர் மூக்கில் பட்டது. ஆம். வதங்கும் இறைச்சியின் இனிய வாசனை வீசிற்று. அனேகமாக, வெங்காயத்தோடு ஆட்டுக் கறி வதங்கும் மணம். தொலைவில் வெளிச்சம் தெரிந்ததை வண்டிக்காரன் அதே கணத்தில் கண்டான். குறுகிய வெளிச்சக் கோடு காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

அது என்ன?

''சாப்பாட்டுக் கடையாக இருந்தால் நன்றாய் இருக்கும்!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூவினார் மருத்துவர்.

அவர்கள் பக்கத்தில் நெருங்கினார்கள்.

அது சாப்பாட்டுக் கடையே அல்ல.

சில சிறு வீடுகளிலிருந்து ஒரு புறம் விலகி வெட்ட வெளியில் நின்று கொண்டிருந்தது சக்கரங்கள் உள்ள ஒரு வீடு.

குறுகிய வெளிச்சக் கோடு, இந்த வீட்டின் கதவு நன்றாக மூடப்படாததால் ஏற்பட்ட இடுக்கு என்று தெரிய வந்தது.

வண்டிக்காரன் முன் இருக்கையிலிருந்து இறங்கி, விவரம் தெரிந்து வரப் போனான். மருத்துவர் நடந்த துன்ப நிகழ்ச்சிகளை மறந்து, இறைச்சிப் பொரியலின் மணத்தை ரசித்துக் கொண்டிருந்தார். அவர் நெடு மூச்சு இழுத்தார், மூக்கால் சீழ்க்கை அடித்தார், கண்களை இறுக மூடிக் கொண்டார்.

''முதலாவதாக, எனக்கு நாய்களிடம் பயம்! இரண்டாவதாக, இங்கே படிகள் தெரிகின்றன...'' என்று இருட்டிலிருந்து கத்தினான் வண்டிக்காரன்.

எல்லாம் நல்லபடியாக முடிந்தது. வண்டிக்காரன் படிகள் மேல் ஏறிக் கதவைத் தட்டினான்.

''யார் அது?''

குறுகிய வெளிச்சக் கோடு அகலமான, பளிச்சிடும் முக்கோணமாக மாறிற்று. கதவு திறந்தது. நிலை அருகே ஒருவன் நின்று கொண்டிருந்தான். சூழ்ந்திருந்த வெறுமையான இருட்டின் நடுவே பிரகாசமான வெளிச்சம் உள்ள இந்தப் பின்னணியில் அவன் கறுப்புக் காகிதத்திலிருந்து கத்தரித்து எடுத்தவன் போலத் தட்டையாகக் காணப்பட்டான்.

மருத்துவரின் சார்பில் வண்டிக்காரன் பதில் சொன்னான்:

''இவர் மருத்துவர் கஸ்பார் அர்னேரி. நீங்கள் யார்? சக்கரங்கள் உள்ள இந்த வீடு யாருடையது?''

''இங்கே இருக்கிறது பிரிஸாக் மாமாவின் நாடகக் குழு'' என்று வாயிற்படியிலிருந்து பதிலளித்தது சீன நிழல். அது என்ன காரணத்தாலோ மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைந்தது,



கைகளை வீசி ஆட்டிற்று. ''வாருங்கள், திருவாளர்களே, தயவு செய்து வாருங்கள்! மருத்துவர் கஸ்பார் அர்னேரி பிரிஸாக் மாமாவின் நாடகக் குழுவைப் பார்க்க வந்திருப்பதனால் எங்களுக்கு நிரம்ப மகிழ்ச்சி!'' என்றது.

இன்பமுள்ள முடிவு! இரவு நேரத்தில் அலைந்தது எல்லாம் போதும்! பிரிஸாக் மாமாவின் நாடகக் குழு நீடூழி வாழ்க!

மருத்துவருக்கும் வண்டிக்காரனுக்கும் குதிரைக்கும் தங்க இடமும் சாப்பாடும் ஓய்வும் கிடைத்தன. சக்கரங்கள் உள்ள வீடு விருந்தினரைப் பரிந்து உபசரித்தது. பிரிஸாக் மாமாவின் ஊர் ஊராய்ச் செல்லும் நாடகக் குழு அதில் வசித்தது.

இந்தப் பெயரைக் கேள்விப்படாதவர்கள் யார்? பிரிஸாக் மாமாவின் நாடகக் குழுவைப் பற்றித் தெரியாதவர்கள் யார்? ஆண்டு முழுவதும், விழாக்களிலும் சந்தைகளிலும் தன் நாடக நிகழ்ச்சிகளை அது சந்தைச் சதுக்கங்களில் நடத்தி வந்தது. எவ்வளவு திறமை உள்ள நடிகர்கள் அதில் இருந்தார்கள்! அவர்களுடைய நாடக நிகழ்ச்சிகள் எவ்வளவு கவர்ச்சி உள்ளவையாக இருந்தன! முக்கியமானது என்ன என்றால், இங்கே, இந்த நாடகக் குழுவில் கழைக்கூத்தாடி திபூல் நிகழ்ச்சிகள் நடத்தி வந்தது தான்.

நாட்டில் சிறந்த கழைக்கூத்தாடி என்று அவன் புகழ் பெற்றிருந்தது நமக்குத் தெரியும். அவனுடைய திறமையை விண்மீன் சதுக்கத்தில் நாம் கண்கூடாகக் கண்டோம். காவல் படையினர் குண்டுகள் சுட்டுக் கொண்டிருந்ததை மதியாமல், கிடுகிடு பாதாளத்துக்கு மேலே அவன் அங்கே கம்பி மேல் நடந்தான்.

சந்தைச் சதுக்கங்களில் திபூல் வித்தை காட்டிய போது சின்னவர்களும் பெரியவர்களுமான எல்லாப் பார்வையாளர்களுக்கும் அடிக்கடி கை தட்டியதால் கைகளில் காய்ப்புகள் ஏற்பட்டன! கடைக்காரர்களும் சரி, ஏழைக் கிழவிகளும் சரி, பள்ளிச் சிறுவர்களும் சரி, படை வீரர்களும் சரி, எல்லோருமே, ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லோருமே இந்தக் கை தட்டல்களில் உற்சாகமாகப் பங்கு கொண்டார்கள்... இப்போதோ, கடைக்காரர்களும் பகட்டர்களும் தங்கள் முந்திய உற்சாகப் பெருக்குக்காக வருந்தினார்கள்:

''நாம் இவனைப் பாராட்டிக் கை தட்டினோம், இவனோ, நம்மை எதிர்த்துச் சண்டை போடுகிறான்!'' என்றார்கள்.

பிரிஸாக் மாமாவின் நாடகக் குழு அனாதை ஆகி விட்டது: சர்க்கஸ்காரன் திபூல் அதை விட்டு விலகி விட்டான்.

திபூலுக்கு நேர்ந்ததைப் பற்றி மருத்துவர் கஸ்பார் ஒன்றுமே சொல்லவில்லை. வாரிசு துத்தியின் பொம்மை பற்றியும் அவர் பேசவில்லை.

நாடகக் குழுவின் இருப்பிடத்தில், சக்கரங்கள் உள்ள வீட்டிற்கு உள்ளே, மருத்துவர் கண்டது என்ன?

ஒரு பெரிய துருக்கிய டமாரத்தின் மேல் அவர் உட்கார்த்தப்பட்டார். ஆழ்ந்த சிவப்பு நிற முக்கோணங்களாலும் வலையாகப் பின்னிய தங்கக் கம்பியாலும் அது அழகுபடுத்தப்பட்டிருந்தது. சரக்கு வண்டியின் பாங்கில் கட்டப்பட்ட வீட்டில் பல இருப்பிட அறைகள் இருந்தன. கித்தான் தடுப்புக்களால் அவை பிரிக்கப்பட்டிருந்தன.

இரவு வெகு நேரம் ஆகி விட்டது. நாடகக் குழுவினர் உறங்கிக் கொண்டிருந்தார்கள். கதவைத் திறந்த, சீன நிழல் போல் காணப்பட்ட மனிதன் வேறு யாரும் இல்லை, முதிய கோமாளி. அவன் பெயர் அவ்கூஸ்த். அந்த இரவில் அவன் முறைக் காவல் வேலை செய்து கொண்டிருந்தான். மருத்துவர் வந்த போது அவ்கூஸ்த் தனக்கு இரவுச் சாப்பாடு தயாரித்துக் கொண்டிருந்தான். மெய்யாகவே, வெங்காயத்தோடு ஆட்டு இறைச்சியைத்தான் அவன் வதக்கிக் கொண்டிருந்தான்.

டமாரத்தின் மேல் உட்கார்ந்த மருத்துவர் இருப்பிடத்தைப் பார்வையிட்டார். ஒரு பெட்டியின் மேல் மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெள்ளையும் ரோஜா நிறமு



மான சிகரெட்டுக் காகிதங்கள் சுற்றிய வளையங்கள், பளபளப்பான உலோகப் பிடிகள் வைத்த, வரிகள் போட்ட நீண்ட சவுக்குகள், தங்க வட்டங்கள் தூவி, பூக்களும் விண்மீன்களும் பல நிறத் துண்டுத் துணிகளும் தைத்த உடைகள் முதலியவை சுவர்களில் தொங்கிக் கொண் டிருந்தன. முகமூடிகள் சுவர்களிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தன. சிலவற்றில் கொம்புகள் துருத்திக் கொண்டிருந்தன. வேறு சிலவற்றில் மூக்குகள் துருக்கியச் செருப்புகள் போல் இருந் தன. பின்னும் சிலவற்றில் வாய் ஒரு காதிலிருந்து மறு காது வரை நீண்டிருந்தது. ஒரு முகமூடியில் காதுகள் பிரமாண்டமாக இருந்தன. எல்லாவற்றிலும் வேடிக்கை என்ன என்றால், அவை மனிதக் காதுகள் தாம். ஆனால் மிகவும் பெரியவை என்பதே.

மூலையில் இருந்த கூண்டில் இன்னது என்று தெரியாத ஒரு சிறு பிராணி இருந்தது.

ஒரு சுவற்றின் பக்கத்தில் சிறிய மர மேசை இருந்தது. அதற்கு மேலே முகம் பார்க்கும் சின்னக் கண்ணாடிகள் தொங்கிக் கொண்டிருந்தன. பத்து உருப்படி. ஒவ்வொரு கண்ணாடிக்கும் பக்கத்தில் சொந்தக் கொழுப்பால் மேசை மேல் ஒட்ட வைக்கப்பட்ட மெழுகுவத்தி துருத்திக் கொண்டிருந்தது. மெழுகுவத்திகள் எரியவில்லை. டப்பாக்களும் தூரிகைகளும் வண்ணங்களும் தூவிச் செண்டுகளும் பொய்மயிர்த் தொப்பிகளும் மேசை மேல் கிடந்தன. ரோஜா நிறப்ப வுடர் சிதறி இருந்தது. பல நிறக் குட்டங்கள் உலர்ந்து போயிருந்தன.

''காவல் படைக்காரர்களிடமிருந்து இன்றைக்கு நாங்கள் தப்பி வந்து விட்டோம்'' என்று பேசத் தொடங்கினான் கோமாளி. ''சர்க்கஸ்காரன் திபூல் எங்கள் நாடகக் குழுவில் இருந்தது உங்களுக்குத் தெரியுமே. அவனை நாங்கள் ஒளித்து வைத்திருப்பதாக நினைத்துக் காவல் படைக்காரர்கள் எங்களைப் பிடிக்கப் பார்த்தார்கள்.''

முதிய கோமாளியின் முகத்தில் மிகுந்த வருத்தம் ததும்பிற்று.

''சர்க்கஸ்காரன் திபூல் எங்கே என்பது எங்களுக்கே தெரியாது. அவன் ஒன்று கொல்லப்பட்டிருப்பான், இல்லாவிட்டால் இரும்புக் கூண்டில் அடைக்கப்பட்டிருப்பான்.''

கோமாளி பெருமூச்செறிந்து நரைத் தலையை ஆட்டினன். கூண்டில் இருந்த பிராணி பூனைக் கண்களால் மருத்துவரைப் பார்த்தது.

''நீங்கள் இவ்வளவு நேரம் தாழ்த்து எங்களிடம் வந்தது வருந்தத்தக்கது. எங்களுக்கு உங்கள் மேல் ஒரே அன்பு'' என்று பேச்சைத் தொடர்ந்தான் கோமாளி. ''நீங்கள் எங்களைத் தேற்றி இருப்பீர்கள். நீங்கள் உரிமை இழந்தவர்களின் நண்பர், மக்களின் நண்பர் என்பதை நாங்கள் அறிவோம். ஒரு நிகழ்ச்சியை நான் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அப்போது நாங்கள் எருதுக் கல்லீரல் சந்தையில் நாடகம் போட்டுக் கொண்டிருந்தோம். இது நடந்தது போன ஆண்டு வசந்தத்தில். என் பெண் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள்...''

''அப்படியா, ஆமாம்...'' என்று நினைவு படுத்திக் கொண்டார் மருத்துவர். விந்தையான உள்ளக் கிளர்ச்சியை அவர் திடீரென்று உணர்ந்தார்.

''நினைவு வருகிறதா? நீங்கள் அப்போது சந்தையில் இருந்தீர்கள். எங்கள் நாடகத்தை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். என் பெண் ஒரு பணியாரத்தைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தாள். கொழுத்த பிரபுவின் இரைப்பையில் போய்ச் சேர்வதை விட அடுப்பு நெருப்பில் கரிந்து போவது மேல் என்று பணியாரம் நினைத்ததாகப் பாட்டில் வந்தது...''

''ஆம், ஆம்... நினைவு இருக்கிறது... அப்புறம்?''

''ஒரு கிழச் சீமாட்டி இதைக் கேட்டுக் கோபம் கொண்டாள். என் பெண்ணுடைய காதைப் பிய்த்து விடும்படித் தன் நீள மூக்கு வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டாள்.''

''ஆமாம், எனக்கு நினைவு வருகிறது. நான் குறுக்கிட்டேன். வேலைக்காரர்களை விரட்டினேன். சீமாட்டி என்னை அடையாளம் கண்டு கொண்டாள். அவளுக்கு வெட்கமாகப் போய் விட்டது. சரி தானே?''

''ஆமாம். பிறகு நீங்கள் போய் விட்டீர்கள். என் பெண் என்ன சொன்னுள், தெரியுமா? சீமாட்டியின் சேவகர்கள் தன் காதைப் பிய்த்திருந்தால் தன்னல் உயிரோடு இருக்க முடிந்திராது என்ருள்... நீங்கள் அவளைக் காப்பாற்றினீர்கள். இதை அவள் ஒருபோதும் மறக்க மாட்டாள்!''

''உங்கள் பெண் இப்போது எங்கே இருக்கிருள்?'' என்று கேட்டார் மருத்துவர். அவர் மிகுந்த கிளர்ச்சி அடைந்திருந்தார்.

அப்போது முதிய கோமாளி கித்தான் தடுப்புக்குப் பக்கத்தில் போய்க் கூப்பிட்டான். விசித்திரமான ஒரு பெயரை அவன் சொன்னுன். திறக்கக் கடினமான சிறு மரச் சிமிழைத் திறப்பது போன்ற இரண்டு ஒலிகளைச் செய்தான்:

''சுவோக்!''

சில விஞடிகள் கழிந்தன, பிறகு கித்தான் துணிக் கதவு கொஞ்சம் விலகிற்று. கலைந்த சுருட்டை மயிர்த் தலையைச் சிறிது சாய்த்து அங்கிருந்து எட்டிப்பார்த்தாள் ஒரு சிறுமி. சாம்பல் நிற விழிகளால் சற்றுக் கீழிருந்து, கவனமாகவும் தந்திரமாகவும் அவள் மருத்துவரை நோக்கினுள்.

விழிமளை நிமிர்த்திய மருத்துவர் திகைத்துப் போனுர்: வாரிசு துத்தியின் பொம்மை அது!





## மூன்றும் பாகம்

*

# சுவோக்



COMICS PDF TIMES





அத்தியாயம் 8

# சின்ன நடிகையின் கடினமான பாத்திரம்



ஆம், அந்தப் பொம்மைதான் இது!

ஆனால் குட்டிச் சாத்தான் வேலை போல, அது இங்கே எப்படி வந்தது? அற்புதமா? அட, அற்புதமாவது, ஒன்றாவது? அற்புதங்கள் நிகழ்வது இல்லை என்று மருத்துவர் கஸ்பார் நன்றாக அறிந்திருந்தார். இது வெறும் ஏமாற்று என்று அவர் முடிவு செய்தார். பொம்மை உயிருள்ள பெண். அவர் அசாக்கிரதையாக வண்டியில் தூங்கிப் போனதும், சொன்னபடி கேட்காத பெண் போல இவள் தப்பி ஓடி இருக்கிறாள்.

''இப்படிப் புன்னகை செய்து பயன் இல்லை! உங்கள் பசப்புப் புன்னகை உங்கள் குற்றத்தைக் குறைத்து விடாது'' என்று கண்டிப்பாகக் கூறினர். ''நீங்களே பார்க்கிறீர்கள், விதி உங்களைத் தண்டித்து விட்டது. எங்கே உங்களைக் கண்டுபிடிப்பது நடக்காததாகத் தோன்றியதோ அங்கே முற்றிலும் தற்செயலாக நான் உங்களைக் கண்டு விட்டேன்.''

பொம்மைப் பெண் கண்களைப் பரக்க விழித்தாள். பின்பு குழி முயல் குட்டி போலக் கண்களைக் கொட்டி, கோமாளி அவ்கூஸ்தின் பக்கம் குழப்பத்துடன் பார்த்தாள். அவன் பெருமூச்செறிந்தான்.

''நீங்கள் யார், மறைக்காமல் சொல்லுங்கள்!''

மருத்துவர் குரலை முடிந்த அளவு கடுமை ஆக்கிக் கொண்டார். ஆனால் பொம்மைப் பெண் ஒரே கவர்ச்சியாய் இருந்ததால் கோபிப்பது மிகவும் கடினமாக இருந்தது.

''பார்த்தீர்களா, என்னை மறந்து விட்டீர்களே. நான்தான் சுவோக்'' என்றாள் பொம்மைப் பெண்.

''சு-வோக்...'' என்று திருப்பிச் சொன்னர் மருத்துவர். ''ஆனால் நீங்கள் வாரிசு துத்தியின் பொம்மை அல்லவா?''

''பொம்மையாவது ஒன்றுவது? நான் சாதாரணமான பெண்...''

''என்ன?.. நீங்கள் பாசாங்கு செய்கிறீர்கள்!''

பொம்மைப் பெண் தடுப்புக்குப் பின்னுலிருந்து வெளி வந்தாள். விளக்கு வெளிச்சம் அவள் மேல் நன்ருகப் பட்டது. பறட்டைத் தலையை ஒரு பக்கம் சாய்த்து, அவள் புன்னகை செய்தாள். அவளுடைய தலைமயிர் சாம்பல் நிறப் பறவைக் குஞ்சுகளது தூவியின் நிறமாக இருந்தது.

கூண்டில் இருந்த மயிர் அடர்ந்த பிராணி அவளை மிகவும் கவனமாகப் பார்த்தது.

மருத்துவர் கஸ்பாருக்குத் தலைகால் புரியவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு வாசக நேயர்கள் முழு மர்மத்தையும் தெரிந்து கொள்வார்கள். ஆனால், மருத்துவர் கஸ்பாரின் கவனம் உள்ள பார்வைக்குத் தப்பி விட்ட மிக முக்கியமான ஒரு விவரத்தை நாம் இப்போது வாசகர் களுக்குச் சொல்லிவிட விரும்புகிருேம். பெரியவர்கள் சொல்லுவது போலக் கண்களில் உறுத்தும் விவரத்தை உள்ளக் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கும் நேரத்தில் மனிதன் சிலபோது கவனிக்காமல் விட்டு விடுகிருன்.

அந்த விவரம் இதுதான்: இப்போது, நாடகக் குழுவின் இருப்பிடத்தில், பொம்மையின் தோற்றம் முற்றிலும் வேருய் இருந்தது.

பொம்மைப் பெண்ணின் சாம்பல் நிற விழிகள் பளிச்சிட்டன. இப்போது அவள் ஆழ்ந்த போக்கும் கவனமும் உள்ளவளாகத் தோன்றினுள், ஆனால் அவளுடைய ஏக்கத்தின் சுவடு கூடக் காணப்படவில்லை. மாருக, அடக்கம் உள்ளவள் போலப் பாவனை செய்யும் குறும்புக் காரி என்று அவளைப் பார்த்தவர்கள் சொல்லி இருப்பார்கள்.

அப்புறம் அடுத்ததைப் பார்ப்போம். முன்பு அவள் அணிந்திருந்த அருமையான கவுன் எங்கே போயிற்று? ரோஜா நிறப் பட்டு என்ன, தங்க ரோஜாப் பூக்கள் என்ன, லேஸ்கள் என்ன, ஜிகினுக்கள் என்ன, எல்லாம் சேர்ந்த அற்புத உடை எங்கே காணும்? அந்த மாதிரி உடை அணிந்தால் எந்தப் பெண்ணுமே இளவரசி போல் இல்லாவிட்டாலும், புத்தாண்டு மர அலங்காரப் பொம்மை போலாவது இருப்பாளே! இந்தப் பொம்மைப் பெண்ணே, பகட்டே இல்லாத சாதாரண உடை மாட்டி இருந்தாள். மாலுமியினது போன்ற நீலக் கழுத்துப் பட்டை வைத்த பிளவுஸ், வெள்ளையாய் இருக்க முடியாத அளவு சாம்பல் நிறமான பழைய செருப்பு கள், இவையே அவள் அணிந்திருந்தவை. காலுறைகள் இல்லாமல் வெறும் கால்களில் செருப்பு களைப் போட்டுக் கொண்டிருந்தாள். இந்தச் சாதாரண உடையினுல் பொம்மைப் பெண் அழகற்ற வள் ஆகி விட்டதாக எண்ணுதீர்கள். மாருக, இந்த உடை அவளுக்குப் பாந்தமாக இருந் தது. துப்புரவு இல்லாத சில பெண் குழந்தைகள் உண்டு. முதலில் அவர்கள் மேல் பார்வை செல்லாது. ஆனுல் பிறகு, உற்றுப் பார்க்கும் போது தெரியும், இந்த மாதிரித் துப்புரவு கெட்ட குழந்தைப் பெண் அரச குமாரிகளைக் காட்டிலும் இனியவள் என்பது—அதிலும் அரச குமாரிகள் சில நேரங்களில் தவளைகளாக மாறிவிடுகிருர்கள், அல்லது, மாருக, தவளைகள் அரச குமாரிகளாக மாறி விடுகின்றன என்பதால்.

இப்போது எல்லாவற்றிலும் முக்கியமான விவரத்துக்கு வருவோம்: உங்களுக்கு நினைவு இருக்கும், வாரிசு துத்தியுடைய பொம்மையின் மார்பில் பயங்கரமான கறுப்புக் காயங்கள் இருந்தன. இப்போது அவை மறைந்து விட்டன.

இது குதூகலமும் உடல் நலமும் உள்ள பொம்மைப் பெண்!

ஆனுல் மருத்துவர் கஸ்பார் எதையும் கவனிக்கவில்லை. விஷயம் என்ன என்று மறு நிமி டமே அவர் ஒருவேளை புரிந்து கொண்டிருப்பார், ஆனுல் அந்த மறு நிமிடத்தில் யாரோ கதவைத் தட்டினுர்கள். இப்போது விஷயங்கள் இன்னும் அதிகமாகச் சிக்கல் ஆயின. நாடகக் குழுவின் இருப்பிடத்துக்குள் வந்தான் ஒரு நீக்ரோ.

பொம்மைப் பெண் கீச்சிட்டாள். கூண்டில் இருந்த பிராணி பூனை அல்ல, வேறு ஏதோ சிக்கலான மிருகம் என்றுலும் சீறிற்று.

நீக்ரோ யார் என்பது நமக்கு முன்பே தெரியும். சர்வ சாதாரணமான திபூலே இந்த நீக்ரோவாக மாற்றிய மருத்துவர் கஸ்பாரும் இதை அறிந்திருந்தார். ஆனால் வேறு ஒருவருக்கும் இந்த இரகசியம் தெரியாது.

குழப்பம் ஐந்து நிமிட நேரம் நீடித்தது. நீக்ரோ படு கோரமான விதத்தில் நடந்து கொண்டான். அவன் பொம்மைப் பெண்ணைப் பிடித்து, உயரே தூக்கி, கன்னங்களிலும் மூக்கிலும் முத்தமிடத் தலைப்பட்டான். அப்போது அந்தக் கன்னங்களும் மூக்கும் மிகவும் துடியாக விலகிக் கொண்டதால், முத்தமிடப் பார்த்த நீக்ரோ நூலில் தொங்கும் ஆப்பிளைக் கடிக்க முயல்பவன் போல இருந்தான்.

கிழவன் அவ்கூஸ்த் கண்களை மூடிக் கொண்டு, திகிலை அடக்குவதற்காக அசைந்தாடினான். குற்றவாளியின் தலையை வெட்டி விடுவதா, அல்லது, உயிருள்ள எலியைச் சர்க்கரை தொட்டுக் கொள்ளாமல் தின்னும்படி அவனைக் கட்டாயப்படுத்துவதா என்ற கேள்விக்கு விடை காண முயலும் சீனச் சக்கரவர்த்தி போல அப்போது அவன் காணப்பட்டான்.

ஒரு செருப்பு பொம்மைப் பெண்ணின் காலிலிருந்து கழன்று விளக்கில் விழுந்தது. விளக்கு குப்புறக் கவிழ்ந்து அணைந்து போயிற்று. இருட்டு சூழ்ந்தது. திகில் உச்சத்தை எட்டிற்று. பொழுது விடியத் தொடங்கி விட்டதை அப்போது எல்லோரும் கண்டார்கள். இருக்குகளில் வெளிச்சம் தெரிந்தது.

''இதோ விடிந்து விட்டது. வாரிசு துத்தியின் பொம்மையோடு நான் மூன்று தடியர்களின் அரண்மனைக்குப் போக வேண்டும்'' என்றார் மருத்துவர் கஸ்பார்.

நீக்ரோ கதவை இடித்துத் திறந்தான். வெளியிலிருந்து சாம்பல் நிற வெளிச்சம் இருப்பிடத்துக்குள் வந்தது. கோமாளி முன் போலவே உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்கள் மூடி இருந்தன. பொம்மைப் பெண் தடுப்புக்குப் பின்னால் மறைந்து விட்டாள்.

மருத்துவர் கஸ்பார் திபூலுக்கு நிலைமையைச் சட்டென்று விளக்கினார். வாரிசு துத்தியின் பொம்மைக்கு நேர்ந்த விபத்து, அது காணாமல் போனது, இப்போது நல்ல வேளையாக இங்கே, நாடகக் குழுவின் இருப்பிடத்தில் அது கிடைத்திருப்பது எல்லாவற்றையும் விவரித்தார்.

தடுப்புக்குப் பின்னால் இருந்து இதை எல்லாம் உற்றுக் கேட்ட பொம்மைப் பெண்ணுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

''அவர் இவனைத் திபூல் என்று கூப்பிடுகிறாரே. இவனாவது திபூலாவது? இவன் கோரமான நீக்ரோ அல்லவா? திபூல் அழகானவன், அவனுடைய நிறம் வெள்ளை, கறுப்பு அல்ல...'' என்று வியப்புடன் எண்ணிக் கொண்டாள்.

அப்போது அவள் ஒரு கண்ணால் எட்டிப் பார்த்தாள். நீக்ரோ தன் சிவப்புச் சராயின் பையிலிருந்து நீளுருளை வடிவான குடுவையை எடுத்து அதன் அடைப்பானைத் திறந்தான். அது குருவி போலக் கீச்சென்று ஒலித்தது. நீக்ரோ குடுவையில் இருந்த நீர்மத்தைத் தன் மேல் ஊற்றிக் கொண்டான். மறு விநாடி அற்புதம் நிகழ்ந்தது: நீக்ரோ வெள்ளைத் தோலுள்ள அழகன் ஆகி விட்டான். கறுப்பாகவே இல்லை. சந்தேகம் போய் விட்டது. அவன் திபூல் தான்!

பொம்மைப் பெண் வெற்றி முழக்கம் செய்து, தடுப்புக்குப் பின்னாலிருந்து நேரே திபூலின் கழுத்துக்குத் தாவினாள்.

எதையும் பார்க்காமல் படு கோரம் நிகழ்ந்து விட்டதாக எண்ணிக் கொண்ட கோமாளி தன் இருக்கையிலிருந்து விழுந்து அசையாமல் கிடந்தான். திபூல் அவனுடைய சராயைப் பிடித்துத் தூக்கினான்.

இப்போது பொம்மைப் பெண் தானாகவே திபூலை முத்தமிட்டாள்.

மகிழ்ச்சிப் பெருக்கால் அவளுக்கு மூச்சு திணறியது. ''அருமை! ஆமாம், நீ அப்படிக் கறுப்பன் ஆனது எப்படி? எனக்கு உன்னை அடையாளமே தெரியவில்லை...'' என்றாள்.

''சுவோக்!'' என்று கண்டிப்புடன் சொன்னான் திபூல்.

அவள் அவனுடைய அகன்ற மார்பிலிருந்து சட்டெனக் குதித்து நல்ல படை வீரன் பொம்மை போல இராணுவ தோரணையில் விரைப்பாக அவன் முன்னே நின்றாள்.

''எனன?'' என்று பள்ளிச் சிறுமி மாதிரிக் கேட்டாள்.

திபூல் அவளுடைய பறட்டைத் தலை மேல் கையை வைத்தான். மகிழ்ச்சி ததும்பிய சாம்பல் நிற விழிகளால் அவள் அவனைக் கீழிருந்து பார்த்தாள்.

''மருத்துவர் கஸ்பார் சொன்னது உன் காதில் பட்டது, அல்லவா?''

''பட்டது. வாரிசு துத்தியின் பொம்மயைக் குணப்படுத்தும் பொறுப்பை மூன்று தடியர் கள் இவரிடம் ஒப்படைத்தார்களாம். இந்தப் பொம்மை அவருடைய வண்டியிலிருந்து தப்பி ஓடி விட்டதாம். நான்தான் அந்தப் பொம்மையாம். இப்படிச் சொன்னார் அவர்.''

''அவர் தப்பாகச் சொல்லுகிறார். மருத்துவர் கஸ்பார், இது பொம்மை அல்ல. உறுதி யாகச் சொல்லுகிறேன். இவள் என் சின்னத் தோழி. இவள் சிறுமி, நர்த்தகி சுவோக். சர்க் கஸ் வேலையில் என் நம்பகமான துணைவி'' என்றான் திபூல்.

பொம்மைப் பெண்ணுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ''உண்மைதான்! நீயும் நானும் எத்தனையோ தரம் கம்பி மேல் நடந்திருக்கிறோமே'' என்றாள்.

திபூல் தன்னை நம்பகமான துணைவி என்று அழைத்ததில் அவளுக்குப் பெரு மகிழ்ச்சி உண் டாயிற்று.

''அருமைத் தோழா!'' என்று கிசுகிசுத்து அவனுடைய கையில் கன்னத்தைத் தேய்த்துக் கொண்டாள்.

மருத்துவரின் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. ''எப்படி? இவள் உயிருள்ள பெண்ணா என்ன? சுவோக் என்றா சொல்லுகிறீர்கள்?.. ஆம்! ஆம்! மெய்தான்! இப்போது நான் தெளிவாகக் காண்கிறேன். எனக்கு நினைவு இருக்கிறது. இந்தப் பெண்ணை நான் ஒரு தரம் பார்த்திருக் கிறேனே. ஆம்... ஆம்... கிழவியின் வேலையாட்கள் இவளைக் கழிகளால் அடிக்க வந்த போது அவர்களிடமிருந்து இவளை நான் காப்பாற்றினேனே!''

இப்படிச் சொல்கையில் மருத்துவர் கைகளைக் கூடக் கொட்டினார்.

''ஹ-ஹ-ஹா! அடே, ஆமாம், சந்தேகம் இல்லாமல். அதனால் தான் வாரிசு துத்தியுடைய பொம்மையின் முகம் நிரம்பப் பழக்கமானதாக எனக்குத் தோன்றிற்று. இது வெறுமே வியப் பூட்டும் உருவ ஒற்றுமை, அல்லது, விஞ்ஞானிகள் சொல்லுவது போல, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி.''

எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் வகையில் நிலைமை தெளிவாகி விட்டது.

வெளிச்சம் நொடிக்கு நொடி அதிகம் ஆகிக் கொண்டு போயிற்று. புறக்கடைகளில் ஒரு சேவல் கூவியது.

அப்போது மருத்துவரின் முகத்தில் மறுபடி கவலை படர்ந்தது.

''ஆமாம், இதெல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் இதன் அர்த்தம், வாரிசு துத்தியின் பொம்மை என்னிடம் இல்லை என்பதாகும். இதன் அர்த்தம், பொம்மையை நான் மெய்யாகவே தொலைத்து விட்டேன் என்பதாகும்...''

''இதன் அர்த்தம், பொம்மை உங்களுக்குக் கிடைத்து விட்டது என்பதாகும்'' என்று சிறுமியைத் தன்னோடு அணைத்துக் கொண்டு சொன்னான் திபூல்.

''எ-எப்-படி?''

''அப்படித்தான். உனக்குப் புரிகிறதா நான் சொல்வது, சுவோக்?''

''புரிவது போல் இருக்கிறது'' என்று தணிந்த குரலில் பதில் சொன்னாள் சுவோக்.

''ஊம்?'' என்று கேட்டான் திபூல்.

''சந்தேகம் இல்லாமல்'' என்று சொல்லிப் புன்னகை செய்தாள் பொம்மைப் பெண்.

மருத்துவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

''ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டத்துக்கு முன்னால் நீயும் நானும் வித்தைகள் காட்டிய

போது நான் சொன்னதை நீ கேட்டாயா இல்லையா? கோடுகள் போட்ட மேடை மேல் நீ நின்று கொண்டிருந்தாய். 'அல்லே!' என்று நான் சொன்னதும் நீ கம்பி மேல் நடந்து என்னிடம் வந்தாய். நான் நட்ட நடுவில், கூட்டத்துக்கு மிக உயரே, உனக்காக நின்று கொண்டிருந்தேன். ஒரு முழங்காலை முன்னே நீட்டி, 'அல்லே!' என்று மறுபடி உன்னிடம் சொன்னேன். நீ என் முழங்கால் மேல் காலை வைத்து என் தோள் மேல் ஏறினாய்... உனக்குப் பயமாய் இருந்ததா?''

''இல்லை. 'அல்லே!' என்று நீ என்னிடம் சொன்னாய் என்றால் அமைதியாய் இருக்க வேண்டும், எதற்கும் அஞ்சக் கூடாது என்று அர்த்தம்.''

''அதுதான் சரி. இப்போதும் நான் உன்னிடம் 'அல்லே!' என்று சொல்லுகிறேன். நீ பொம்மையாக இருப்பாய்'' என்றான் திபூல்.

''நான் பொம்மையாக இருப்பேன்.''

''இவள் பொம்மையாய் இருப்பாளா? இதன் அர்த்தம் என்ன?'' என்று கேட்டார் மருத்துவர் கஸ்பார்.

வாசகர்களே, நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று நம்புகிறேன்! மருத்துவர் கஸ்பார் போல அத்தனை கிளர்ச்சிகளையும் வியப்புகளையும் அனுபவிக்க உங்களுக்கு நேரவில்லை, ஆகையால் நீங்கள் அதிக அமைதியாய் இருப்பீர்கள், சீக்கிரமாகப் புரிந்து கொள்வீர்கள்.

எண்ணிப் பாருங்கள்: மருத்துவர் இது வரை சரியாகத் தூங்கவில்லை. இவ்வளவு அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொண்ட அவருடைய எஃகு உடம்பைக் கண்டு பிரமிப்பு உண்டாகிறது.

இரண்டாம் சேவல் கூவுவதற்குள் எல்லாம் முடிவாகி விட்டது. விவரமான செயல் திட்டத்தைத் திபூல் விவரித்தான்.

''சுவோக், நீ நடிகை. வயதில் சின்னவள் ஆனாலும் நீ நல்ல நடிகை என்றே சொல்ல வேண்டும். வசந்த காலத்தில் நம் நாடகக் குழு 'அசட்டு அரசன்' என்ற ஊமை நாடகம் நடத்திய போது தங்க முட்டைக் கோசுத் தண்டின் பாத்திரத்தில் நீ அருமையாக நடித்தாய். பிறகு நடன நாடகத்தில் நீ ஒட்டுப்படமாக நடித்து, அரைவை இயந்திரக்காரன் தேநீர்க் கெண்டியாக மாறியதை அற்புதமாக உருவகப்படுத்தினாய். நீ எல்லோரையும் விட நன்றாக நடனம் ஆடுகிறாய், எல்லோரையும் விட நன்றாகப் பாடுகிறாய். உனக்கு நல்ல கற்பனை இருக்கிறது. முக்கியமாக நீ துணிவும் சமயோசித புத்தியும் உள்ள பெண்.''

மகிழ்ச்சியால் சுவோக்கின் முகம் சிவந்தது. இந்தப் புகழ்ச்சிகளால் அவளுக்குக் கூச்சம் கூட உண்டாயிற்று.

''ஆகவே, வாரிசு துத்தியுடைய பொம்மையின் பாத்திரத்தில் நீ நடிக்க வேண்டும்.''

சுவோக் கைகளைக் கொட்டினாள். பின்பு திபூல், கிழவன் அவ்கூஸ்த், மருத்துவர் கஸ்பார் மூவரையும் ஒருவர் பின் ஒருவராக முத்தமிட்டாள்.

''பொறு, நான் சொல்ல வந்தது இது மட்டும் அல்ல. கருமான் புரோஸ்பெரோ மூன்று தடியர்களின் அரண்மனையில் இரும்புக் கூண்டில் அடைபட்டிருப்பது உனக்குத் தெரியும். கருமான் புரோஸ்பெரோவை நீ விடுவிக்க வேண்டும்'' என்று மேலே சொன்னான் திபூல்.

''கூண்டைத் திறக்க வேண்டுமா?''

''ஆம். அரண்மனையிலிருந்து தப்பி வெளியேறப் புரோஸ்பெரோவுக்கு வாய்ப்பு அளிக்கும் இரகசியம் எனக்குத் தெரியும்.''

''இரகசியமா?''

''ஆமாம். அங்கே சுரங்க வழி இருக்கிறது.''

இப்போது திபூல் பலூன் விற்பவனின் அனுபவத்தை விவரித்தான்.

''இந்த வழி எங்கோ ஒரு பாத்திரத்தில் தொடங்குகிறதாம்—அந்த இடம் அரண்மனைச் சமையல் அறையாய் இருக்க வேண்டும். அந்த வழியை நீ கண்டு பிடிக்க வேண்டும்.''

''ஆகட்டும்.''

சூரியன் இன்னும் உதிக்கவில்லை, ஆனால் பறவைகள் எழுந்து விட்டன. நாடகக் குழுவின் இருப்பிடத்திலிருந்து தெரிந்த புல் வெளியில் புல் மீது பசுமை படர்ந்தது.

வெளிச்சத்தில் பார்த்த போது கூண்டில் இருந்த மர்மப் பிராணி சாதாரண நரி என்று தெரிய வந்தது.

''நேரம் கடத்த வேண்டாம்! நாம் வெகு தூரம் போக வேண்டும்.''

மருத்துவர் கஸ்பார் சொன்னார்:

''உங்கள் உடைகளில் எல்லாவற்றையும் விட அழகானதை நீங்கள் இப்போது தேர்ந்தெடுக்க வேண்டும்...''

சுவோக் தன் எல்லா ஆடை அணிகளையும் எடுத்து வந்தாள். அவை கண்ணைக் கவர்ந்தன, ஏனென்றால் சுவோக் தானே அவற்றைத் தயாரித்திருந்தாள். திறமை உள்ள எந்த நடிகையும் போலவே அவளுக்கு நல்ல அழகுணர்வு இருந்தது.

மருத்துவர் கஸ்பார் பல நிறக் குவியலில் வெகு நேரம் குடைந்து கொண்டிருந்தார்.

''நிரம்ப நல்லது. இந்தக் கவுன் முற்றிலும் பொருத்தமாய் இருக்கும் என்று நினைக்கிறேன். சேதப்படுத்தப்பட்ட பொம்மை போட்டிருந்த உடைக்கு இது எள்ளளவும் குறைந்தது அல்ல. இதைப் போட்டுக் கொள்ளுங்கள்!'' என்றார்.

சுவோக் உடை மாற்றிக் கொண்டாள். உதய சூரியனின் ஒளியில் நாடகக் குழு இருப்பிடத்தின் நடுவில் பகட்டாக உடை அணிந்து நின்ற அவளைப் பார்த்த போது, பிறந்த நாள் கொண்டாடும் எந்தப் பெண்ணும் இவளுக்கு ஈடாக மாட்டாள் என்று தோன்றியது. கவுன் ரோஜா நிறமாக இருந்தது. சுவோக் உடம்பை அசைத்த போது தங்க மழை பெய்வது போன்ற பிரமை ஏற்பட்டது. கவுன் பளபளத்தது, சரசரத்தது, இனிய மணம் கமழ்ந்தது.

''நான் தயார்'' என்றாள் சுவோக்.

பிரிவு சொல்லிக் கொள்வது ஒரே நிமிடத்தில் முடிந்து விட்டது. சர்க்கஸ் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்பவர்கள் கண்ணீரை விரும்புவதில்லை. அவர்கள் தங்கள் உயிரை அளவு கடந்து அடிக்கடி ஆபத்துக்கு உள்ளாக்குகிறார்கள். தவிரவும் கவுன் கசங்கி விடுமோ என்ற அச்சத்தால் மிகுந்த ஆர்வத்துடன் தழுவிக் கொள்ள முடியாமல் இருந்தது.

''சீக்கிரம் திரும்பி வா!'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் கிழவன் அவ்கூஸ்த்.

''நான் தொழிலாளர் இருப்பிடங்களுக்குப் போகிறேன். நம்முடைய பலத்தைக் கணக்கிட வேண்டும். தொழிலாளர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள். நான் உயிரோடு இருப்பதையும் சுதந்திரமாய் உலாவுவதையும் அவர்கள் தெரிந்து கொண்டு விட்டார்கள்.''

திபூல் இப்படிச் சொல்லி, மழைக் கோட்டைப் போர்த்துக் கொண்டு, அகலத் தொப்பியையும் கறுப்பு மூக்குக் கண்ணாடியையும் பெரிய பொய் மூக்கையும் மாட்டிக் கொண்டான். ''கெய்ரோ படையெடுப்பு'' என்ற ஊமை நாடகத்தில் பாதுஷா அணியும் பொய் மூக்கு அது.

இந்த வேடத்தில் அவனை அடையாளம் காண்பது முடியாதிருந்தது. பிரமாண்டமான மூக்கு அவனை அலங்கோலப் படுத்திற்று ஆனாலும் இன்னார் என்று தெரியாதபடி மறைத்தது.

கிழவன் அவ்கூஸ்த் நிலைப் படியில் நின்று கொண்டான். மருத்துவரும் திபூலும் சுவோக்கும் நாடகக் குழுவின் இருப்பிடத்திலிருந்து வெளியே சென்றார்கள்.

நன்றாக விடிந்து விட்டது.

''சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று அவசரப்படுத்தினார் மருத்துவர்.

ஒரு நிமிடம் பொறுத்து அவர் சுவோக்குடன் வண்டியில் இருந்தார்.

''உங்களுக்குப் பயமாய் இல்லையே?'' என்று கேட்டார்.

சுவோக் பதிலுக்குப் புன்னகை செய்தாள். மருத்துவர் அவளுடைய நெற்றியில் முத்தம் இட்டார்.

தெருக்கள் இன்னமும் வெறிச்சோடிக் கிடந்தன. ஆட்களின் குரல்கள் எப்போதாவது



தான் கேட்டன. ஆனால் திடீரென்று ஒரு நாயின் உரத்த குலைப்பு காதில் பட்டது. பிறகு நாய் யாரோ அதனிடமிருந்து எலும்புத் துண்டைப் பிடுங்குவது போல வீலென்று கத்தி உறுமிற்று. மருத்துவர் வண்டியிலிருந்து எட்டிப் பார்த்தார்.

நீங்கள் நம்புவீர்களா, பயில்வான் லப்பித்தூப்பைக் கடித்ததே, அந்த நாய்தான் இது! ஆனால் விஷயம் இது மட்டும் அல்ல.

மருத்துவர் பின்வரும் காட்சியைக் கண்டார். நாய் ஒரு மனிதனோடு போராடிக் கொண்டிருந்தது. சின்னத் தலையும் நெட்டையான ஒல்லி உடலுமாக வெட்டுக்கிளி போல் இருந்த அந்த மனிதன் அழகானது ஆனாலும் விசித்திரமான உடை அணிந்திருந்தான். ரோஜா நிறமும் சிவப்புமாக இன்னது என்று விளங்காத ஒரு பொருளை நாயிடமிருந்து பிடுங்கிக் கொண்டிருந்தான் அவன். ரோஜா நிறத் துணித் துண்டுகள் நாலா பக்கமும் சிதறிக் கொண்டிருந்தன. மனிதன் வென்றான். பெற்ற பொருளைப் பிடித்து மார்போடு தழுவிக் கொண்டு, மருத்துவர் போன திக்கைப் பார்த்து ஓடி வந்தான் அவன்.

அவன் வண்டியைச் சந்தித்த போது, மருத்துவரின் முதுகுக்குப் பின்னிருந்து பார்த்துக் கொண்டிருந்த சுவோக் ஒரு கோரக் காட்சியைக் கண்டாள். விந்தை மனிதன் ஓடவில்லை, நர்த்தகன் போலத் தரையில் பட்டும் படாமலும் ஒய்யாரமாகத் துள்ளித் துள்ளி வந்து கொண்டிருந்தான். அவனுடைய கோட்டின் பச்சைத் தலைப்புக்கள் காற்று விசை ஆலையின் காற்றாடி அலகுகள் போல அவன் பின்னே பறந்து கொண்டிருந்தன. கைகளில்—கைகளில்—ஒரு பெண்ணைத் தூக்கிக் கொண்டிருந்தான் அவன். அவளுடைய மார்பில் கறுப்புக் காயங்கள் இருந்தன.

''அது நான்தான்!'' என்று கத்தினாள் சுவோக்.

அவள் வண்டிக்குள் நகர்ந்து பூம்பட்டுத் தலையணையில் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

கூச்சலைக் கேட்டதும் வழிப்பறி நடத்தியவன் திரும்பிப் பார்த்தான். அந்த ஆள் நட்டுவனார் தாதக்கத்தையார் என்று மருத்துவர் கஸ்பார் கண்டு கொண்டார்.



## அத்தியாயம் 9

# பொம்மை பசியுடன் சாப்பிடுகிறது



வாரிசு துத்தி வெளித் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தான். பூகோளவியல் ஆசிரியன் இருநோக்காடியின் துணையால் பார்த்துக் கொண்டிருந்தான். திசைகாட்டிக் கருவி யையும் கொண்டுவரும்படி வாரிசு துத்தி கோரினன். ஆனல் அது தேவை அற்றதாக இருந்தது.

வாரிசு துத்தி பொம்மையின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

கடுமையான உள்ளக் கிளர்ச்சி காரணமாக அவன் இரவு முழுவதும் இன்பமாக அயர்ந்து தூங்கினன்.

நகர வாயிலிலிருந்து அரண்மனைக்கு வரும் சாலையை வெளித் தாழ்வாரத்திலிருந்து பார்க்க முடிந்தது. நகரத்துக்கு மேலே வந்திருந்த சூரியன் பார்வையைத் தடுத்தது. வாரிசு துத்தி கையைக் கண் அருகே வைத்துக் கொண்டு முகத்தைச் சுளித்தான், தும்மக் கூடாதே என்று வருந்தினன்.

''இன்னும் ஒருவரும் காணப்படவில்லை'' என்றான் பூகோளவியல் ஆசிரியன்.

தன் சிறப்புப் பயிற்சி காரணமாகத் தொலைவுகளையும் தொடுவானங்களையும் இயங்கும் புள்ளிகளையும் இவை போன்ற பிறவற்றையும் எல்லோரையும் விட நன்றாகப் புரிந்து கொள்ள அவனுக்கு முடிந்ததனல் பொறுப்புள்ள இந்தக் காரியம் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

''ஒருவேளை, காணப்படுகிறார்களோ?'' என்று சாதித்தான் துத்தி.

''என்னை மறுத்துப் பேசாதீர்கள். இருநோக்காடி தவிர, விஞ்ஞானங்களும் பொருள்கள் பற்றிய துல்லியமான அறிவும் என்னிடம் இருக்கின்றன. உதாரணமாக நான் மல்லிகைச்

செடியைக் காண்கிறேன். லத்தீன் மொழியில் அதற்கு மிகவும் அழகான பெயர் உண்டு, ஆனுல் அந்தப் பெயரை நினைவு வைத்துக் கொள்வது கடினம். அப்பால் பாலங்களையும் காவல் படையினரையும் காண்கிறேன். அவர்களைச் சுற்றிப் பறக்கின்றன வண்ணத்திப் பூச்சிகள். இன்னும் தள்ளி இருக்கிறது சாலை... பொறுங்கள்! பொறுங்கள்!''

அவன் தெளிவாகப் பார்ப்பதற்காக இருநோக்காடியைத் திருகினுன். வாரிசு துத்தி நுனிக் கால்களில் நின்ருன். வீட்டுப் பாடத்தைச் சரியாய்ப் படிக்காத போது செய்வது போல அவனுடைய நெஞ்சு கீழிருந்து மேலே அடித்துக் கொண்டது.

''ஆமாம்'' என்ருன் ஆசிரியன்.

அந்த நேரத்தில் மூன்று குதிரையேற்றக்காரர்கள் அரண்மனைப் பூங்காவின் திசையிலிருந்து சாலைக்குப் புறப்பட்டார்கள். சாலையில் தென்பட்ட வண்டியை எதிர் கொண்டு காவலர்களோடு போனுன் காப்டன் பொனவெந்துரா.

''ஹுர்ரே!'' என்று வாரிசு காதைத் துளைக்கும்படி போட்ட வெற்றிக் கூச்சலுக்குத் தூரத்துக் கிராமங்களில் தாராக்கள் பதில் குரல் கொடுத்தன.

வெளித் தாழ்வாரத்துக்குக் கீழே உடற்பயிற்சி ஆசிரியன் தயாராக நின்று கொண்டிருந்தான்—வாரிசு ஆனந்த மிகுதியில் தாழ்வாரத்தின் தடுப்புச் சுவருக்கு வெளியே விழுந்து விட்டால் அவனைப் பிடித்துக் கொள்வதற்காக.

இவ்வாருக மருத்துவர் கஸ்பாரின் வண்டி அரண்மனையை நெருங்கிற்று. இரு நோக்காடியும் பூகோளவியல் ஆசிரியனின் விஞ்ஞான அறிவும் இப்போது தேவைப்படவில்லை. வண்டியையும் வெள்ளைக் குதிரையையும் இப்போது எல்லோரும் கண்டார்கள்.

இன்பக் கணம்! வண்டி கடைசிப் பாலத்தின் பக்கத்தில் நின்றது. காவல் படையினரின் அணி விலகிற்று. வாரிசு பொன் மயிர்ச் சுருள்களை அசைத்து ஆட்டியபடி இரண்டு கைகளையும் வீசித் துள்ளினுன். கடைசியில் எல்லாவற்றிலும் முக்கியமானதை அவன் கண்டான். சிறு கூடான ஒரு மனிதர் கிழவர்களின் வழக்கப்படி, பாங்கில்லாமல் வண்டியிலிருந்து இறங்கினுர். காவல் படையினர் வாட்களை மரியாதையாக உயர்த்திப் பிடித்து இராணுவ வணக்கம் செலுத்தியபடிச் சற்றுத் தொலைவில் நின்ருர்கள். சிறு கூடான மனிதர் வண்டியிலிருந்து அற்புதப் பொம்மையை வெளியில் எடுத்தார். புதிதாய்ப் பறித்த ரோஜாப் பூக்களை ரிப்பன்களால் பின்னிய செண்டு போல இருந்தது அது.

இள நீலம் ஆகிக் கொண்டிருந்த காலை வானத்தின் கீழ், புற்களும் வெயிலும் வீசிய ஒளியில், அந்தக் காட்சி கண்ணைப் பறிப்பதாக இருந்தது.

நிமிட நேரம் பொறுத்துப் பொம்மை அரண்மனைக்கு வந்து விட்டது. சந்திப்பு இந்த மாதிரி நேர்ந்தது.

மற்றவர்களுடைய உதவி இல்லாமல் நடந்தது பொம்மை.

ஆகா, பொம்மையின் பாத்திரத்தில் சுவோக் அருமையாக நடித்தாள்! நிசமான பொம்மைகளின் கூட்டத்தில் அவள் புகுந்தால் அவை அவளைத் தங்களைப் போன்ற ஒரு பொம்மையாகவே மதித்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

சுவோக் அமைதியாக இருந்தாள். தன் நடிப்பு நன்ருக வாய்ப்பதை அவள் உணர்ந்தாள்.

''இதைவிடக் கடினமான வேலைகள் உண்டே, உதாரணமாக, எரியும் விளக்கை அம்மானை ஆடுவது அல்லது இரட்டைக் குட்டிக் கரணம் அடிப்பது...'' என்று எண்ணிக் கொண்டாள்.

சர்க்கசில் இந்த இரண்டு வகை வித்தைகளையும் காட்ட அவளுக்கு நேர்ந்திருந்தது.

சுருங்கச் சொன்னுல், சுவோக் பயப்படவில்லை. இந்த விளையாட்டு அவளுக்குப் பிடித்துக் கூட இருந்தது. மருத்துவர் கஸ்பார் எவ்வளவோ அதிகக் கவலை கொண்டிருந்தார். அவர் சுவோக்கின் பின்னுலேயே போனுர். நுனிப் பாதங்களால் நடக்கும் நர்த்தகி போலச் சிற்றடிகள் வைத்து நடந்தாள் சுவோக். அவளுடைய கவுன் அசைந்து நடுங்கிச் சரசரத்தது.



மெருகிட்ட பிளாச்சுத் தரை பளபளத்தது. அவற்றில் அவள் ரோஜா நிற மேகம் போலப் பிரதிபலித்தாள். உயரமான ஹால்கள் பிளாச்சுத் தரைகளின் பளபளப்பால் அதிக ஆழமாகவும் நிலைக்கண்ணுடிகளால் அதிக அகலமாகவும் காணப்பட்டன. அவற்றின் நடுவே சுவோக் மிகவும் சின்னவளாக இருந்தாள்.

அசைவற்ற பிரமாண்டமான நீர் நிலையில் சின்னஞ் சிறு பூக் கூடை மிதக்கிறது என்று எண்ணத் தோன்றியது.

காவலர்களுக்கு அருகாக, தோலும் இரும்பும் பூண்டிருந்த மனிதர்களுக்கு அருகாகக் குதூகலம் பொங்கப் புன்னகை செய்தபடி நடந்தாள் சுவோக். மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள் தங்கள் அருகாக நடந்து போன போது அலுவலர்கள் வாழ்க்கையில் முதல் தடவையாகப் புன்னகை செய்தார்கள்.

அவளுக்கு முன்னே விலகி, அவளுக்கு வழி விட்டு ஒதுங்கிக் கொண்டார்கள் அவர்கள்— அவள் இந்த அரண்மனையின் சொந்தக்காரி போலவும், தன் உரிமையை நாட்டிக் கொள்ள வந்திருப்பது போலவும்.

ஒரே நிசப்தம் நிலவியதால், பூவிதழ் விழுவதை விட உரக்க ஒலிக்காத அவளுடைய மெல்லிய காலடிகள் காதில் பட்டன.

மேலிருந்து விசாலமான படிக்கட்டில் இறங்கிப் பொம்மையை எதிர்கொள்ள வந்தான் அவள் போலவே சின்னவனுக, ஒளி வீசிக் கொண்டிருந்த வாரிசு துத்தி.

அவர்கள் சம உயரமாக இருந்தார்கள்.

சுவோக் நின்றுள்.

''ஓகோ, இவன்தான் வாரிசு துத்தி என்பவனு?'' என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

சிடுமூஞ்சிப் பெண் போல் இருந்த ஒரு மெலிந்த பையன் அவளுக்கு எதிரே நின்றுன். சாம்பல் நிற விழிகளும் கொஞ்சம் ஏக்கமும் கொண்டிருந்த அவன் பறட்டைத் தலையை ஒரு பக்கம் சாய்த்துக் கொண்டிருந்தான்.

துத்தி யார் என்பதைச் சுவோக் அறிந்திருந்தாள். மூன்று தடியர்கள் யார் என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தது. ஏழைகளான பசித்த மக்களின் உழைப்பால் உற்பத்தி செய்யப் பட்ட எல்லா இரும்பையும் எல்லா நிலக்கரியையும் எல்லாத் தானியங்களையும் மூன்று தடியர் கள் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள் என்பதை அவள் அறிந்திருந்தாள். சின்னச் சிறுமி சுவோக் மேல் தன் பணியாட்களை ஏவி விட்ட கிழச் சீமாட்டியை அவள் நன்ருக நினைவு வைத் திருந்தாள். மூன்று தடியர்கள், கிழச் சீமாட்டிகள், பகட்டர்கள், கடைக்காரர்கள், காவல் படையினர்—எல்லோருமே—கருமான் புரோஸ்பெரோவை இரும்புக் கூண்டில் அடைத்தவர் களும் அவனுடைய நண்பன், சர்க்கஸ்காரன் திபூலைத் தேடிக் கொண்டிருப்பவர்களுமான எல்லோருமே ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

வாரிசு துத்தி கிழச் சீமாட்டி போலவே தனக்கு எதனுலோ அருவருப்பு ஊட்டுவான், எப்போதும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் நீண்டு மெலிந்த கருஞ்சிவப்பு நாக்கும் அவனுக்கு இருக்கும் என்று அரண்மனையில் புகுந்த போது அவள் நினைத்துக் கொண்டிருந்தாள்.

ஆனுல் எந்த விதமான அருவருப்பும் அவளுக்கு உண்டாகவில்லை. உள்ளதைச் சொன்னுல், அவனைக் கண்டதில் அவளுக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது.

களி பொங்கிய சாம்பல் நிற விழிகளால் அவள் அவனைப் பார்த்தாள்.

''பொம்மையே, நீதானு இது?'' என்று கேட்டுக் கையை நீட்டினுன் வாரிசு துத்தி.

''நான் என்ன செய்ய வேண்டும்? பொம்மைகள் பேசுமா என்ன? அடாடா, எனக்கு முன்னமே சொல்லாமல் போனுர்களே, காவல் படைக்காரர்கள் குத்திக் கிழித்த அந்தப் பொம்மை எப்படி நடந்து கொண்டது என்று எனக்குத் தெரியாதே...'' இப்படி நினைத்துத் தயங்கினுள் சுவோக்.

மருத்துவர் கஸ்பார் அவளுடைய உதவிக்கு வந்தார்.



''திருவாளர் வாரிசு அவர்களே'' என்று சடங்கு முறைப்படிப் பேசத் தொடங்கினுர். ''உங்கள் பொம்மையை நான் குணப்படுத்தி விட்டேன். அதற்கு உயிர் கொடுத்ததோடு நில்லாமல் அந்த உயிரை முன்னே விடக் கவர்ச்சி உள்ளதாகச் செய்திருக்கிறேன். இதை நீங்களே காண் கிறீர்கள். பொம்மை சந்தேகம் இல்லாமல் அதிக அழகு ஆகி விட்டது. அருமையான புதிய உடை அதற்குக் கிடைத்திருக்கிறது. எல்லாவற்றிலும் முக்கியமானது, பேசவும் பாட் டுக்கள் இட்டுக்கட்டவும் நடனம் ஆடவும் உங்கள் பொம்மைக்கு நான் கற்றுக் கொடுத்திருப்பது தான்.

''எவ்வளவு இன்பம்!'' என்று தணிந்த குரலில் சொன்னுன் வாரிசு.

''செயல் புரிய வேளை வந்து விட்டது'' என்று முடிவு செய்தாள் சுவோக்.

பிரிஸாக் மாமாவின் நாடகக் குழுவைச் சேர்ந்த சின்னஞ் சிறு நடிகை, புதிய மேடை யில் அரங்கேற்றம் நிகழ்த்தினுள்.

அரண்மனையின் பிரதான ஹால் இந்த மேடையாக விளங்கியது. பார்வையாளர்களோ, பெருந் திரளாகக் கூடி இருந்தார்கள். படிக்கட்டுகளின் உச்சிகளிலும் இடை வழிகளிலும் நுழைமாடங்களிலும், எல்லாப் புறங்களிலிருந்தும் அவர்கள் நெரிந்தார்கள். வட்டச் சாளரங் களிலிருந்து அவர்கள் இறங்கினுர்கள், முன்மாடங்களில் பிதுங்கப் பிதுங்க நிறைந்தார்கள், நன்ருகப் பார்ப்பதற்கும் கேட்பதற்குமாகத் தூண்கள் மேல் ஏறினுர்கள்.

மிக மிக வெவ்வேறு நிறங்களும் வண்ணச் சாயல்களும் கொண்ட ஏராளமான தலை களும் முதுகுகளும் பளிச்சென்ற வெயிலில் பளபளத்தன.

மலர்ந்த புன்னகையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த ஏராளமான முகங்களைச் சுவோக் கண்டாள்.

ஐந்து விரல்களையும் பரத்திக் கொண்டு நின்ற சமையல்காரர்கள்—இவர்களுடைய விரல் களிலிருந்து இனிப்பான சிவப்புச் சாறுகளோ அல்லது பழுப்பான கொழுப்புள்ள குழம்புகளோ கிளைகளில் கோந்து துளிப்பது போலச் சொட்டிக் கொண்டிருந்தன; பூத்தையல் வேலை செய்த பல நிறச் சீருடைகள் அணிந்த அமைச்சர்கள்—சேவல் வேடம் புனைந்த குரங்குகள் போல் இருந்தார்கள் இவர்கள்; குறுகிய பிராக் கோட்டுகள் மாட்டிய வாத்தியக் குழுவினர்—சிறு கூடான மேனிகளும் உப்பிய முகங்களும் கொண்டிருந்தார்கள் இவர்கள்; அரண்மனைச் சீமாட் டிகளும் அவர்களுடைய துணைவர்களும்; கூன் விழுந்த மருத்துவர்கள், மூக்குகள் நீண்ட விஞ் ஞானிகள், பம்பைத் தலை அஞ்சலோட்டக்காரர்கள்; மந்திரிகளை விட மோசம் இல்லாமல் உடை அணிந்த வேலையாட்கள் ஆகியோர் அங்கே இருந்தார்கள்.

ஆட்களின் இந்தத் திரள் முழுவதும் முடிந்த எல்லாவற்றுடனும் அடையாக ஒட்டிக் கொண்டது.

எல்லோரும் பேசாதிருந்தார்கள். அந்த ரோஜா நிறச் சிறுமியை எல்லோரும் ஒரே பரவசத் துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவளோ, நூற்றுக்கணக்கான அந்தப் பார்வைகளை அமைதியுடனும் பன்னிரண்டு வயதுப் பெண்ணுக்கு ஏற்ற தன்மதிப்புடனும் சந்தித்தாள். அவள் கொஞ்சங்கூடக் கூச்சப்படவில்லை. சுவோக் அனேகமாக நாள் தோறும் நிகழ்ச்சிகள் நடத்திய சதுக்கங்களின் பார்வையாளர்களை விட இந்தப் பார்வையாளர்கள் அதிகக் கண்டிப்பு உள்ளவர்களாக இருக்க முடியாதே. அடேயப்பா, அவர்கள் மிகவும் கண்டிப்பு உள்ள பார்வை யாளர்கள்: வெட்டிப் பொழுது போக்குபவர்கள், படையினர், நடிகர்கள், பள்ளி மாணவர்கள், சிறு விற்பனையாளர்கள் ஆகியோர்! அவர்களுக்குக் கூடச் சுவோக் அஞ்சியது இல்லை. அவர்கள் சொன்னுர்கள்:

''சுவோக் உலகத்தில் எல்லோரையும் விட மேலான நடிகை!''

இப்படிப் புகழ்ந்து, தங்களிடம் இருந்த கடைசிச் செப்புக் காசை அவளுடைய விரிப் பில் போட்டார்கள். அற்பக் காசுதான், என்ருலும் அதைக் கொண்டு கல்லீரல் வைத்துச் சுட்ட பணியாரம் வாங்க முடிந்தது. காலுறை பின்னிப் பிழைக்கும் தொழிலாளி மாதுக்குக்

காலை, மதியம், இரவு, மூன்று வேளைகளுக்கும் தேவையான சாப்பாட்டின் இடத்தில் பயன்பட்டது இந்தப் பணியாரம்.

ஆக, பொம்மையின் பாத்திரத்தில் முழு மூச்சாக நடிக்கத் தொடங்கினாள் சுவோக்.

அவள் பாதங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டாள், பின்பு அவற்றின் மேல் எம்பி நின்றாள், முழங்கைகளை மடக்கிக் கைகளை முகத்தின் பக்கத்தில் கொண்டு போய், பழங்காலச் சீன அதிகாரி போல இரண்டு சுண்டு விரல்களையும் அசைத்துக் கொண்டு பாடத் தொடங்கினாள். அதோடு, தாளத்துக்குத் தக்கபடி இடமும் வலமுமாகத் தலையை ஆட்டினாள்.

நைச்சியமாகப் பசப்பும் விதத்தில் அவள் புன்னகை செய்தாள். ஆனால் விழிகள் எல்லாப் பொம்மைகளுக்கும் இருப்பது போல வட்டமாகவும் அகலமாகவும் இருக்கும்படி வைத்துக் கொள்ள ஓயாமல் முயன்றாள்.

அவள் இப்படிப் பாடினாள்:

பிறர் அறியாத கலையாலே
பெருஞ்சூடு உலையில் ஏற்றிட்டார்,
மறு உயிர் எனக்குத் தந்திட்டார்
மருத்துவர், நல்லவர் கஸ்பார்.
பார் என்னை: புன்னகைக்கின்றேன்.
கேள்: பெருமூச்சு விடுகின்றேன்...
ஆருயிரோடு மகிழ்ச்சியுமே
அடைந்தேன், இன்பம் அடைந்தேனே.
ஆயுள் முழுதும் உனைத் தேடி
அலைந்தேன் பற்பல பாதைகளில்!..
தாய் போல் அக்காள் நான், மறவேல்!
தம்பீ, எனது பெயர் சுவோக்!
நல்லுயிர் பெற்றே அமைதியிலே
நான் தூங்குகையில் நீ வந்தாய்
மெல்ல என் கனவில். எனக்காக
மிகவும் அழுதாய், கண்டேன் நான்!
பார் என் இமைகள் நடுங்குவதை,
பாவைக் கூந்தல் நெளிகுவதை
ஆருயிர் அக்காளை மறவேல்!
அருமைத் தம்பீ, என் பேர் சுவோக்!

''சுவோக்'' என்று தணிந்த குரலில் திருப்பிச் சொன்னான் துத்தி.

அவனுடைய விழிகளில் கண்ணீர் நிறைந்திருந்ததால் அவனுக்கு இரண்டு அல்ல, நான்கு விழிகள் என்று தோன்றியது.

பொம்மை பாடி முடித்து எல்லோருக்கும் ஒயிலாக வணக்கம் தெரிவித்தது. ஹால் ஆகாகா என்று பாராட்டிற்று. எல்லோரும் அசைந்தார்கள், தலைகளை ஆட்டினார்கள், சப்புக் கொட்டினார்கள்.

இவ்வளவு சின்னப் பெண்ணின் குரலுக்குக் கொஞ்சம் ஏக்கம் ததும்புவதாக இருந்தாலும் பாட்டின் மெட்டு மிகவும் கவர்ச்சியாக இருந்தது. குரலோ, வெள்ளி அல்லது கண்ணாடித் தொண்டையிலிருந்து வருவது போல அற்புதமாக ஒலித்தது.

''பொம்மைப் பெண் தேவதை போலப் பாடுகிறாள்'' என்று இசை இயக்குநர் சொன்னது நிசப்தத்தில் கணீரென்று கேட்டது.

''அவளுடைய பாட்டு தான் கொஞ்சம் விசித்திரமானது'' என்று பதக்கங்களைக் கிலுக்கிக் கொண்டு கூறினான் எவனோ உயர் அதிகாரி.

அதோடு விமர்சனம் இடை முறிந்து விட்டது. ஹாலுக்குள் வந்தார்கள் மூன்று தடியர்

கள். பொது மக்களின் கூட்டம் அவர்களுக்குப் பிடிக்காததாகத் தோன்றலாமே. ஆகையால் எல்லோரும் வெளியேறும் வழிகளை நோக்கிப் பாய்ந்தார்கள். அந்த அமளியில் சமையல்காரன் பழச்சாறு நிறைந்து சொதசொத என்று இருந்த ஐந்து விரல்களையும் ஓர் அழகியின் முதுகில் அப்பி விட்டான். அழகி வீரிட்டாள். அப்போது அவளுடைய தாடை செயற்கையானது என் பது வெளியாயிற்று, ஏனென்றால் தாடை கழன்று விழுந்து விட்டது. பருத்த காவல் படைக் காப்டன் ஒருவன் அழகு இல்லாத முரட்டு பூட்சால் அழகான தாடையை மிதித்தான்.

கறுக்கு முறுக்கு என்ற சத்தம் கேட்டது. அங்கேயே சடங்கு மேற்பார்வை அதிகாரிக்குக் கால் சறுக்கிற்று.

''யாரோ கொட்டைகளை எறிந்திருக்கிறார்கள்! கால்களுக்கு அடியில் நெறு நெறுக்கின்றன! படு மோசம்!'' என்று இரைந்தான் அவன்.

தாடையை இழந்த அழகி கத்த வாயெடுத்தாள். கைகளைக் கூட வீசினாள், ஆனால், அந்தோ! தாடையோடு கூடவே அவளுடைய குரலும் போய் விட்டது. அவள் வெறுமே வாய்க்குள் முணுமுணுத்தாள். அது யாருக்கும் விளங்கவில்லை.

நிமிட நேரம் பொறுத்து ஹாலில் வெளியார் ஒருவரும் இல்லை. பொறுப்புள்ள நபர்கள் மட்டுமே மிஞ்சி இருந்தார்கள்.

இப்போது சுவோக்கும் மருத்துவரும் மூன்று தடியர்களுக்கு முன்னே நின்றார்கள்.

மூன்று தடியர்கள் முந்திய நாள் நிகழ்ச்சிகளால் கவலை கொண்டவர்களாகக் காணப்பட வில்லை. முறை வேலை மருத்துவனின் மேற்பார்வையில் பூங்காவில் இப்போது தான் பந்து விளையாடி விட்டு வந்திருந்தார்கள் அவர்கள். உடம்பு அசைவுக்காக இந்த விளையாட்டு நடந் தது. அவர்கள் நிரம்பக் களைத்திருந்தார்கள். அவர்களுடைய வியர்த்த முகங்கள் பளபளத்தன. சட்டைகள் அவர்களுடைய முதுகுகளோடு ஒட்டிக் கொண்டன. அந்த முதுகுகள் காற்றினால் உப்பிய கப்பற் பாய்கள் போல இருந்தன. ஒரு தடியனுடைய கண்ணுக்குக் கீழே அடித் தழும்பு கறுப்பாய்த் தெரிந்தது. அழகு இல்லாத ரோஜாப் பூ அல்லது அழகான தவளை மாதிரி இருந் தது அது. இன்னொரு தடியன் அந்த அழகு இல்லாத ரோஜாப் பூவை அச்சத்தோடு பார்த் தான்.

''இவன்தான் அவன் முகத்தில் பந்தை எறிந்து தழும்பு ஏற்படுத்தியவன்'' என்று நினைத்துக் கொண்டாள் சுவோக்.

பந்தடி பட்ட தடியன் பயங்கரமாக மூக்கை உறிஞ்சினான். மருத்துவர் கஸ்பார் குழப்பத் துடன் புன்னகை செய்தார். தடியர்கள் பேசாமல் பொம்மையைப் பார்வையிட்டார்கள். வாரிசு துத்தியின் பளிச்சென்ற தோற்றம் அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது.

''ஊம், நல்லது, நீங்கள் தாம் மருத்துவர் கஸ்பார் அர்னேரியா?'' என்று கேட்டான் ஒருவன்.

மருத்துவர் தலை வணங்கினார்.

''என்ன, பொம்மை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான் அடுத்தவன்.

''அற்புதமாய் இருக்கிறது!'' என்று கூவினான் துத்தி.

அவன் இவ்வளவு உற்சாகத்தோடு இருந்ததைத் தடியர்கள் கண்டதே இல்லை.

''அப்படியானால் நிரம்ப நல்லது! அது மெய்யாகவே பார்வைக்கு நன்றாய் இருக்கிறது...''

முதல் தடியன் அங்கையால் நெற்றியைத் துடைத்து, வன்மத்தோடு தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொன்னான்:

''மருத்துவர் கஸ்பார், எங்கள் கட்டளையை நீங்கள் நிறைவேற்றினீர்கள். பரிசு கேட்க இப்போது உங்களுக்கு உரிமை உண்டு.''

மௌனம் குடி கொண்டது.

செம்பழுப்புப் பொய்மயிர்த் தொப்பி அணிந்த சிறு கூடான செயலன் மருத்துவரின் கோரிக்கையைக் குறித்துக்கொள்ளத் தயாராகப் பேனாவைப் பிடித்துக் கொண்டான்.

மருத்துவர் தம் கோரிக்கையை வெளியிடத் தொடங்கினர்:

''கிளர்ச்சிக்காரர்களுக்கு மரண தண்டனை கொடுப்பதற்காகப் பத்து வெட்டு மேடைகள் நீதிமன்றச் சதுக்கத்தில் நேற்று கட்டப்பட்டன...''

''அவர்களுடைய தண்டனை இன்று நிறைவேற்றப்படும்'' என்று குறுக்கே சொன்னன் தடியன்.

''நான் சொல்ல வந்ததும் அதுதான். என்னுடைய வேண்டுகோள் இது: எல்லாக் கைதிகளுக்கும் வாழ்வும் விடுதலேயும் அளிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். மரண தண்டனையே ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் இந்த வெட்டு மேடைகள் எரிக்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்...''

இந்த வேண்டுகோளேக் கேட்ட செம்பழுப்புத் தலேச் செயலன் பதறிப் போய்ப் பேனவை நழுவ விட்டான். நன்ருகக் கூராக்கப்பட்டிருந்த பேன இரண்டாவது தடியனுடைய பாதத்தில் தைத்தது. அவன் கூச்சலிட்டு ஒற்றைக் காலில் நொண்டியடித்துச் சுழன்ருன். தழும்புக்கு உடையவன முதல் தடியன் வன்மக் களிப்புடன் கெக்கலித்தான். அவன் பழி தீர்ந்து விட்டது.

அம்பைப் போலப் பேனவைப் பாதத்திலிருந்து பிடுங்கிய இரண்டாவது தடியன் ''நாசமாய்ப் போக!'' என்று வீரிட்டான். ''நாசமாய்ப் போக! இந்த வேண்டுகோள் பாதகமானது! இந்த மாதிரி விஷயங்களேக் கோரத்துணியாதீர்கள்!'' என்ருன்.

செம்பட்டைச் செயலன் வெளியே ஓடினன். போகிற போக்கில் அவன் தள்ளி விட்ட பூப்படிக்கம் அவன் பின்னே பறந்து வெடி குண்டு போலத் துணுக்குகளாகச் சிதறிற்று. ஒரே கந்தரகோளம் ஆகி விட்டது. தடியன் பேனவைப் பிடுங்கிச் செயலன் மேல் எறிந்தான். ஆனல் இவ்வளவு தடித்த உடம்பை வைத்துக் கொண்டு வேல் எறிவதில் சூரனக இருக்க முடியுமா எங்காவது? பாராக் கொடுத்துக் கொண்டிருந்த காவல் படையினனின் பின்பாகத்தில் தைத்தது பேன. ஆனல் கடமையில் கருத்து உள்ளவன அவன் அசையாமல் நின்று கொண்டிருந்தான். மாற்றுப் பாராக்காரன் வரும் வரையில் பேன தகுதி அற்ற இடத்தில் துருத்திக் கொண்டிருந்தது.

''மரண தண்டனை விதிக்கப் பெற்றிருக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் உயிர்ப் பிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று நான் கோருகிறேன். வெட்டு மேடைகளே எரித்து விட வேண்டும் என்று நான் கோருகிறேன்'' என்று தணிந்த குரலில் உறுதியாகத் திருப்பிச் சொன்னர் மருத்துவர்.

பதிலுக்குத் தடியர்களின் கூச்சல்கள் கிளம்பின. யாரோ குச்சிகளே ஒடிப்பது போன்ற சத்தம் கேட்டது.

''முடியாது! முடியாது! முடியாது! ஒருகாலும் முடியாது! அவர்கள் மரண தண்டனை பெறுவார்கள்!''

''சாவது போல் நடியுங்கள்!'' என்று பொம்மையிடம் கிசுகிசுத்தார் மருத்துவர்.

சுவோக் நிலேமையைப் புரிந்து கொண்டாள். அவள் மறுபடி நுனிப் பாதங்களில் நின்று கீச்சிட்டுத் தள்ளாடினள். அவளுடைய கவுன் பிடிபட்ட வண்ணத்துப் பூச்சியின் சிறகுகள் போலப் படபடத்தது, தலே தொங்கிப் போயிற்று. பொம்மை எந்தக் கணமும் விழுந்து விடும் போல் இருந்தது.

வாரிசு அவளிடம் பாய்ந்தான்.

''ஐயோ! ஐயோ!'' என்று கத்தத் தொடங்கினன் அவன்.

சுவோக் முன்னே விட ஏக்கமாகக் கீச்சிட்டாள்.

மருத்துவர் கஸ்பார் சொன்னர்: ''பார்த்தீர்களா? பொம்மை மறுபடி உயிரை இழந்து விடும். இதற்குள் வைக்கப்பட்டிருக்கும் பொறி அமைப்பு நுண் உணர்வு உள்ளது. என் வேண்டுகோளே நீங்கள் நிறைவேற்ரு விட்டால் அது ஒரேயடியாகப் பழுதடைந்து விடும். பொம்மை

ஒன்றுக்கும் உதவாத ரோஜாத் துணிச் சுருணை ஆகி விட்டால் திருவாளர் வாரிசு நிரம்ப மகிழ்ச்சி அடைய மாட்டார் என்று நினைக்கிறேன்.''

வாரிசுக்குக் கடுங் கோபம் வந்து விட்டது. அவன் யானைக்குட்டி போலக் கால்களைத் தொப்புத் தொப்பென்று அடித்தான். கண்களைச் சுரித்துக் கொண்டு தலையை ஆட்டத் தொடங்கினன்.

''அப்படி ஆக விடக் கூடாது! கேட்டீர்களா, விடவே கூடாது!'' என்று இரைந்தான். ''மருத்துவரின் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்! என் பொம்மையை நான் தர மாட்டேன்! சுவோக்! சுவோக்!'' என்று விம்மி அழத் தலைப்பட்டான்.

தடியர்கள் பணிந்தார்கள் என்று சொல்லவே வேண்டியதில்லை. உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. மன்னிப்பு அறிவிக்கப்பட்டது. இன்பம் அடைந்த மருத்துவர் கஸ்பார் வீட்டுக்குப் புறப்பட்டார்.

''இரவும் பகலும் இடைவிடாமல் பல நாட்கள் தூங்கப் போகிறேன்'' என்று வழியில் நினைத்துக் கொண்டார்.



நகரத்தில் புகுந்த போது நீதிமன்றச் சதுக்கத்தில் வெட்டு மேடைகள் எரிவதாகவும் ஏழைகளின் மரண தண்டனை நிறைவேற்றப்படாது என்பதால் பணக்காரர்கள் பெருத்த அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்றும் ஆட்கள் பேசிக் கொண்டது அவர் காதில் விழுந்தது.

இப்படியாக, சுவோக் மூன்று தடியர்களின் அரண்மனையில் இருந்தாள்.

துத்தி அவளோடு தோட்டத்துக்குப் போனன்.

வாரிசு பூச்செடிகளை மிதித்துத் துவைத்தான், முள் கம்பியில் சிராய்த்துக் கொண்டான், குளத்தில் அனேகமாக விழத் தெரிந்தான். இன்பம் காரணமாக அவன் எதையும் கவனிக்க வில்லை.

''நான் உயிருள்ள பெண் என்பதை இவன் புரிந்து கொள்ளவில்லையா என்ன? மற்றவர்கள் என்னை இப்படி ஏமாற்றுவதற்கு நான் விட்டிருக்கவே மாட்டேன்'' என்று வியப்புடன் எண்ணிக் கொண்டாள் சுவோக்.

காலைச் சிற்றுண்டி கொண்டுவரப்பட்டது. இனிப்புப் பணியாரங்களைக் கண்ட சுவோக், போன ஆண்டு இலையுதிர் காலத்தில்தான் ஒரு பணியாரம் தின்னத் தனக்கு வாய்த்தது என் பதை நினைத்துக் கொண்டாள். அது கூட அசல் பணியாரம் அல்ல, உருண்டைப் பிசுக் கோத்து தான் என்று கிழவன் அவ்கூஸ்த் சொன்னான். வாரிசு துத்தியின் பணியாரங்களோ, அற்புதமாய் இருந்தன. அவை பூக்கள் என்று மயங்கி, பத்துத் தேனீக்கள் அவைகளுக்குப் பறந்து வந்தன.

சுவோக் தவித்தாள்: ''ஊம், நான் என்ன செய்ய வேண்டும்? பொம்மைகள் தின்பது உண்டா என்ன? பொம்மைகளில் பல வகைகள் உண்டே... ஐயோ, எனக்கு எவ்வளவு ஆசை யாய் இருக்கிறது பணியாரம் தின்ன!''

சுவோக்கால் தாங்க முடியவில்லை.





COMICS PDF TIMES

''எனக்கு ஒரு துண்டு வேண்டும் போல் இருக்கி றது...'' என்று தணிந்த குரலில் சொன்னாள். அவளு டைய கன்னங்களில் செம்மை படர்ந்தது.

''இது நல்லது! முன்னே உனக்குப் பசியே எடுத்த தில்லை. தனியாகச் சாப்பிட முன்பெல்லாம் எனக்கு ஒரே சலிப்பாய் இருந்தது. ஆகா, எவ்வளவு நல்லது! உனக்குப் பசி எடுத்து விட்டதே!'' என்று ஆனந்தப் பட்டான் வாரிசு.

சுவோக் ஒரு துண்டு தின்றாள். பிறகு இன்னொன்று, பின்னும் ஒன்று, மற்றொன்று. வாரிசைத் தொலைவிலி

ருந்து கண்காணித்துக் கொண்டிருந்த வேலையாள் தன்னைப் பார்ப்பதை, அது மட்டும் இல்லாமல், கலவரத்தோடு பார்ப்பதைச் சுவோக் திடீரென்று கண்டாள்.

வேலையாளின் வாய் அகலத் திறந்திருந்தது.

வேலையாள் செய்தது சரிதான்.

பொம்மைகள் தின்றதைக் காண அவனுக்கு ஒருபோதும் வாய்க்கவில்லை.

சுவோக் பயந்து போய், நாலாவது பணியாரத்தைத் தவற விட்டு விட்டாள். எல்லாவற்றையும் விடப் பொருபொருவென்றும் முந்திரிப் பழங்களுடனும் இருந்தது அது.

ஆனால் எல்லாம் நல்லபடியாக முடிந்தது. வேலையாள் கண்களைத் துடைத்துக் கொண்டு வாயை மூடிக் கொண்டான்.

எனக்கு அப்படித் தோன்றியது. அது மிகவும் சூடாக இருந்தது.

வாரிசு வாய் ஓயாமல் பேசிக் கொண்டு போனான். பின்பு களைத்துப் போய், பேச்சை நிறுத்தினான்.

அந்த வெக்கையான வேளையில் ஒரே நிசப்தம் குடி கொண்டிருந்தது. முந்திய நாள் அடித்த காற்று மிகுந்த தொலைவுக்குப் போய் விட்டது போல் இருந்தது. இப்போது எல்லாமே அடங்கி விட்டன. பறவைகள் கூடப் பறக்கக் காணோம்.

அந்த நிசப்தத்தில் வாரிசின் பக்கத்தில் புல் மேல் உட்கார்ந்திருந்த சுவோக்குக்கு, பஞ்சில் புதைந்த கடிகாரத்தின் டிக்-டிக் போல ஒரு சீராகத் திரும்பத் திரும்ப வரும் ஒலி காதில் பட்டது. ''டிக்-டிக்'' என்பதற்குப் பதில் ''டுக்-டுக்'' என்ற ஒலி கேட்டது.

''என்ன அது?'' என்று கேட்டாள்.

''எது?'' என்று ஆச்சரியப்படும் வயது வந்த மனிதன் போலப் புருவங்களை உயர்த்தினான் வாரிசு துத்தி.

''அதுதான், டுக்-டுக் என்கிறதே, அது கடிகாரமா? உன்னிடம் இருக்கிறதா கடிகாரம்?''

மறுபடி நிசப்தம் நிலவிற்று. நிசப்தத்தில் டுக்-டுக் என்று எதுவோ ஒலித்தது. சுவோக் விரலை உயர்த்தினாள். வாரிசு உற்றுக் கேட்டான்.

''அது கடிகாரம் அல்ல. என்னுடைய இரும்பு இருதயம் துடிக்கிறது...''



## அத்தியாயம் 10

# மிருகச்சாலை



இரண்டு மணிக்கு வாரிசு துத்தி வகுப்பு அறைக்கு அழைக்கப்பட்டான். அது பாடங்கள் கற்கும் நேரம். சுவோக் தனியாக இருந்தாள்.

சுவோக் உயிர் உள்ள பெண் என்று ஒருவருமே நினைக்கவில்லை. நட்டுவனர் தாதக்கத் தையார் வசம் இருந்த வாரிசு துத்தியின் நிசப் பொம்மை இவ்வளவே கட்டின்மையோடு விளைய வந்திருக்கலாம். அந்தப் பொம்மையைச் செய்தவன் சிறந்த திறமை பெற்ற சிற்பி யாய் இருக்க வேண்டும். அது பணியாரங்கள் தின்னவில்லைதான், ஆனல், வாரிசு துத்தி சொன்னது ஒருவேளை சரியாய் இருக்கும்: அந்தப் பொம்மைக்குப் பசி எடுத்திருக்காது, அவ் வளவுதான் போலும் ஒருவேளை.

ஆக, சுவோக் தனியாக இருந்தாள்.

அவளுடைய நிலைமை கடினமாக இருந்தது.

பிரமாண்டமான அரண்மனை. புகு வழிகள், நுழைமாடங்கள், படிக்கட்டுகள் ஆகியவற்றின் சிக்கல்.

அச்சமூட்டும் காவல் படைக்காரர்கள், பல வித நிறங்கள் உள்ள பொய்மயிர்த் தலையர் களான அறிமுகம் இல்லாத கடுகடுத்த மனிதர்கள், நிசப்தமும் பளபளப்பும்.

சுவோக்கை யாரும் கவனிக்கவில்லை.

வாரிசின் உறங்கறையில் சன்னலின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள் அவள்.

''செயல் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும்'' என்று அவள் முடிவு செய்தாள். ''கருமான் புரோஸ்பெரோ அடைபட்டிருக்கும் இரும்புக் கூண்டு வாரிசு துத்தியின் மிருகச் சாலையில் இருக்கிறது. நான் மிருகச்சாலையில் புக வேண்டும்'' என்று எண்ணினள். உங்

களுக்குத் தான் தெரியுமே, உயிருள்ள குழந்தைகள் வாரிசுக்குக் காட்டப்படவில்லை. மூடிய வண்டியில் கூட ஒரு தரமாவது அவன் நகரத்துக்கு அழைத்துப் போகப்படவில்லை. அவன் அரண்மனையில் வளர்ந்தான். அவனுக்கு அறிவியல்கள் கற்பிக்கப்பட்டன, கொடிய அரசர் களையும் படைத்தலைவர்களையும் பற்றிய புத்தகங்கள் அவனுக்குப் படித்துக் காட்டப்பட்டன. அவனைச் சூழ்ந்திருந்தவர்கள் புன்னகைப்பது தடை செய்யப்பட்டிருந்தது. அவனுடைய எல்லா வளர்ப்பு ஆசிரியர்களும் போதனை ஆசிரியர்களும் இறுக மூடிய உதடுகளும் வெடிமருந்தின் நிறமுள்ள தாடைகளும் ஒல்லியும் நெட்டையுமான மேனிகளும் கொண்ட கிழவர்கள். போதாக் குறைக்கு அவர்கள் எல்லோருமே அசீரணத்தால் துன்பப்பட்டார்கள். இந்த நோய் உள்ள மனிதனுக்குப் புன்னகைக்க வகை ஏது?

குதூகலமான, கலகலவென்ற சிரிப்பு ஒலியை வாரிசு துத்தி கேட்டதே கிடையாது. எவனாவது குடிகார இறைச்சிக்காரன் அல்லது தங்களையே போன்ற தடி விருந்தாளிகளை உபசரிக் கும் மூன்று தடியர்கள் சிரிக்கும் கடகடப்புதான் எப்போதாவது அவன் காதுகளுக்கு எட்டிற்று. ஆனால் அதைச் சிரிப்பு என்று சொல்ல முடியுமா? அது பயங்கர உறுமல். அதனால் மகிழ்ச்சி அல்ல, அச்சந்தான் உண்டாயிற்று.

சரியானபடி புன்னகைத்தது பொம்மை மட்டுமே. ஆனால் பொம்மையின் புன்னகை தடியர்களுக்கு அபாயமானதாகப் படவில்லை, தவிரவும், பொம்மை பேசாதிருந்தது. அரண்மனைப் பூங்காவினாலும் இரும்புப் பாலங்களுக்குப் பக்கத்தில் டமாரங்களுடன் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த காவலர்களாலும் வாரிசு துத்தியிடமிருந்து மறைக்கப்பட்டிருந்த எத்தனையோ சேதிகளை அவனுக்குச் சொல்லப் பொம்மையால் முடியாதிருந்தது. அதனால்தான் மக்களைப் பற்றியும் ஏழ்மையைப் பற்றியும் பட்டினி கிடக்கும் குழந்தைகளைப் பற்றியும் தொழிற்சாலை களையும் சுரங்கங்களையும் சிறைச்சாலைகளையும் விவசாயிகளையும் பற்றியும் பணக்காரர்கள் ஏழை களை உழைக்கும் படிக் கட்டாயப்படுத்தி, ஏழைகளின் நொய்ந்த கரங்களுடைய உழைப்பின் பயன்கள் எல்லாவற்றையும் தாங்களே எடுத்துக் கொள்கிறார்கள் என்பது பற்றியும் அவன் ஒன்றுமே அறியாதிருந்தான்.

வாரிசைத் தீமையும் கொடுமையும் உள்ளவனாக வளர்க்க மூன்று தடியர்கள் விரும்பினார் கள். குழந்தைகளுடன் பழக விடாமல் அவனை வஞ்சித்து, அவனுக்காக மிருகச்சாலை அமைத் திருந்தார்கள்.

''இவன் காட்டு மிருகங்களைப் பார்க்கட்டும். உயிரோ உணர்வோ இல்லாத பொம்மை இவனிடம் இருக்கிறது, கொடிய விலங்குகளும் இவனிடம் இருக்கும். புலிகளுக்குப் பச்சை மாமிசம் இரை போடப்படுவதையும் மலைப்பாம்பு உயிருள்ள குழிமுயலை விழுங்குவதையும் இவன் பார்க்கட்டும். வேட்டையாடி ஊன் உண்ணும் விலங்குகளின் குரல்களை இவன் கேட் கட்டும், பேயினுடையவை போன்ற அவற்றின் சிவப்பு விழிகளைப் பார்க்கட்டும். கொடுமை யாக நடந்து கொள்ள அப்போது அவன் கற்றுக் கொள்வான்.'' இப்படி முடிவு செய்தார்கள் தடியர்கள்.

ஆனால், மூன்று தடியர்கள் விரும்பிய படி விஷயம் நடக்கவில்லை.

வாரிசு துத்தி நன்றாக உழைத்துப் படித்து வந்தான். வீரர்களையும் அரசர்களையும் பற்றிய பயங்கர வரலாற்றுக் குறிப்புக்களைக் கேட்டு வந்தான், வளர்ப்பு ஆசிரியர்களின் பருக்கள் வெடித்த மூக்குகளை அருவருப்புடன் பார்த்து வந்தான், ஆனால் கொடியவன் ஆகவில்லை.

விலங்குகளோடு உறவாடுவதைக் காட்டிலும் பொம்மைகளோடு அளவளாவுவதை அவன் விரும்பினான்.

பன்னிரண்டு வயதுப் பையனுக்குப் பொம்மைகளோடு விளையாட வெட்கமாய் இருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லலாம்தான். இந்த வயதில் பலர் புலிகளை வேட்டையாடு வதை விரும்புவார்கள் என்பீர்கள். ஆனால் துத்தியின் இந்தச் சுபாவத்துக்கு ஒரு காரணம் இருந்தது. தக்க தருணத்தில் அது தெரிய வரும்.

சுவோக்கிடம் திரும்புவோம்.

அவள் மாலைவரை காத்திருக்க முடிவு செய்தாள். மெய்தானே, பட்டப் பகலில் தன்னந் தனியாக அரண்மனையில் தள்ளாடி நடந்து கொண்டிருக்கும் பொம்மை பார்ப்பவர்களின் சந்தேகத்தைக் கிளப்பக் கூடுந்தான்.

வகுப்புக்கள் முடிந்த பிறகு அவர்கள் மறுபடி சந்தித்தார்கள்.

''ஒன்று சொல்லட்டுமா'' என்று பேசத் தொடங்கினாள் சுவோக். ''நான் மருத்துவர் கஸ்பார் வீட்டில் நோயாளியாகக் கிடந்த போது விந்தையான ஒரு கனவு கண்டேன். பொம் மையிலிருந்து உயிருள்ள பெண்ணாக நான் மாறி விட்டதாக எனக்குக் கனவில் தோன்றியது... நான் சர்க்கஸ் நடிகையாக இருந்ததாக எண்ணம் உண்டாயிற்று. மற்ற நடிகர்களோடு நாடகக் குழுவின் இருப்பிடத்தில் வசித்து வந்தேன். நாடகக் குழு ஊர் ஊராகப் போயிற்று. சந் தைகளிலும் பெரிய சதுக்கங்களிலும் தங்கி, நிகழ்ச்சிகள் நடத்திற்று. நான் கயிற்றின் மேல் நடந்தேன், நடனம் ஆடினேன், கடினமான கழைக்கூத்து வேலைகள் செய்தேன், ஊமை நாடகங் களில் வெவ்வேறு பாத்திரங்களில் நடித்தேன்...''

வாரிசு துத்தி அவள் சொன்னதை அகலத் திறந்த விழிகளோடு கேட்டுக் கொண்டிருந்தான்.

''நாங்கள் மிகவும் ஏழைகளாய் இருந்தோம். மிக அடிக்கடி நாங்கள் சாப்பிடாமல் இருந்தோம்... எங்களிடம் ஒரு பெரிய வெள்ளைக் குதிரை இருந்தது. அதன் பெயர் ஆன்ரா. நான் அதன் மேல் சவாரி செய்து கொண்டே பொருள்களைப் பந்தாடிப் பிடித்தேன். குதிரையின் அகலமான சேணம் கிழிந்த மஞ்சள் பட்டுத் துணியால் மூடியிருந்தது. நான் அதன் மேல் நின்று கொண்டு வித்தை காட்டினேன். இந்தக் குதிரையும் செத்துப் போயிற்று, ஏனென்றால் ஒரு மாதம் முழுவதும் எங்களிடம் பணம் மிகக் கொஞ்சமாய் இருந்தபடியால் அதற்குச் சரியாகத் தீனி போட எங்களால் முடியவில்லை...''

''ஏழைகளா? எனக்குப் புரியவில்லை. நீங்கள் ஏன் ஏழைகளாய் இருந்தீர்கள்?'' என்று கேட்டான் துத்தி.

''நாங்கள் ஏழைகளுக்கு முன் நிகழ்ச்சிகள் நடத்தினோம். ஏழைகள் எங்களுக்குச் சிறு செப்புக் காசுகள் போட்டார்கள். நிகழ்ச்சிகள் முடிந்த பின் கோமாளி அவ்கூஸ்த் தொப்பியை எடுத்துக் கொண்டு பார்வையாளர்களிடம் சுற்றி வந்தார். சில வேளைகளில் அந்தத் தொப்பி யில் ஒரு காசு கூட விழவில்லை.''

வாரிசு துத்திக்கு ஒன்றும் புரியவில்லை.

மாலை வரையில் அவனுக்குக் கதை சொல்லிக் கொண்டு போனாள் சுவோக். ஏழைகளின் கடினமான வாழ்க்கை பற்றியும், பெரிய நகரத்தைப் பற்றியும், தன்னை அடித்துப் புடைக்க ஆசைப்பட்ட கிழச் சீமாட்டியைப் பற்றியும், உயிருள்ள குழந்தைகளைப் பற்றியும், பணக் காரார்கள் அவர்கள் மேல் நாய்களை ஏவி விடுவதைப் பற்றியும், சர்க்கஸ்காரன் திபூலேயும் கருமான் புரோஸ்பெரோவையும் பற்றியும், தொழிலாளர்களும் சுரங்க வேலைக்காரர்களும் மாலுமிகளும் பணக்காரர்கள், தடியர்கள் முதலியவர்களின் ஆட்சியை ஒழிக்க விரும்புவதைப் பற்றியும் அவள் சொன்னாள்.

எல்லாவற்றையும் விட அதிகமாக அவள் சர்க்கசைப் பற்றிப் பேசினாள். தான் விவரிப்பது கனவு என்பதைப் பேச்சு சுவாரசியத்தில் மறந்து விட்டாள்.

''பிரிஸாக் மாமாவின் நாடகக் குழுவில் நான் வெகு காலமாக இருந்து வருகிறேன். நடனம் ஆடவும் குதிரைச் சவாரி செய்யவும் பார் ஆடவும் எந்த வயது முதல் எனக்குத் தெரியும் என்பது கூட எனக்கு நினைவு இல்லை. ஆகா, எப்பேர்ப்பட்ட அருமையான கலையை நான் கற்றுக் கொண்டிருக்கிறேன், தெரியுமா?'' அவள் கைகளைக் கொட்டினாள். ''போன ஞாயிற்றுக் கிழமை துறைமுகத்தில் நாங்கள் வித்தை காட்டினோம். ஆப்ரிக்காட் கொட் டைகளில் வால்ட்ஸ் நடன மெட்டை நான் வாசித்தேன்...''

''ஆப்ரிக்காட் கொட்டைகளிலா, அது எப்படி?''

''அடே, உனக்குத் தெரியாதா? ஆப்ரிக்காட் கொட்டையால் செய்த ஊதலை நீ கண்டது இல்லையா என்ன? இது ரொம்பச் சுலபம். நான் பன்னிரண்டு ஆப்ரிக்காட் கொட்டைகளைப் பொறுக்கி அவற்றை ஊதல்கள் ஆக்கினேன். அதாவது, ஓட்டை விழும் வரையில் ஒவ்வொரு கொட்டையையும் கல்லில் தேய்த்தேன்...''

''எவ்வளவு சுவாரசியமாய் இருக்கிறது!''

''வால்ட்ஸ் மெட்டை வாசிக்கப் பன்னிரண்டு கொட்டைகளில்தான் முடியும் என்பதில்லை. சாவியைக் கொண்டும் என்னுல் ஊத முடியுமே...''

''சாவியைக் கொண்டா? எப்படி? காட்டு! என்னிடம் அருமையான சாவி இருக்கிறது...''

இப்படிச் சொல்லி வாரிசு துத்தி தன் மேல் சட்டைக் கழுத்துப் பட்டைப் பொத்தானைக் கழற்றி, மெல்லிய சங்கிலி ஒன்றைக் கழுத்திலிருந்து எடுத்தான். ஒரு சிறிய வெள்ளைச் சாவி சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்தது.

''இதோ!''

''இதை மார்பில் ஏன் மறைத்து வைத்திருக்கிறுய்?'' என்று கேட்டாள் சுவோக்.

''இந்தச் சாவியை அரசு அமைச்சர் எனக்குக் கொடுத்தார். என்னுடைய மிருகச்சாலை யில் உள்ள ஒரு கூண்டின் சாவி இது.''

''எல்லாக் கூண்டுகளின் சாவிகளையும் நீ உன்னிடம் வைத்திருக்கிறுயா?''

''இல்லை. ஆனல் இது எல்லாவற்றிலும் முக்கியமான சாவியாம், என்னிடம் சொன்னர்கள். நான் இதைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டுமாம்...''

சுவோக் உதடுகளைக் குவித்து, சாவித்துளை மேல் பக்கம் இருக்கும்படி வைத்துக் கொண்டு அருமையான ஒரு பாட்டின் மெட்டை வாசித்துக் காட்டினள்.

அவளுடைய இந்தக் கலையால் சொக்கிப் போன வாரிசு துத்தி, பத்திரமாகக் காப்பாற்றும் படித் தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்த சாவியைக் கூட ஆனந்தப் பெருக்கில் மறந்து விட்டான். சாவி சுவோக்கிடம் இருந்தது. அவள் எங்கோ கவனமாக லேஸ் வைத்த ரோஜா நிறப் பையில் அதைப் போட்டுக் கொண்டாள்.

மாலை ஆயிற்று.

வாரிசு துத்தியின் அறைக்குப் பக்கத்தில் ஒரு தனி அறை பொம்மைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாரிசு துத்தி தூங்கிய போது விந்தையான காட்சிகளைக் கனவில் கண்டான். அவையாவன: வேடிக்கையான மூக்குகள் உள்ள முகமூடிகள்; மழமழப்பாக இழைத்து மெருகேற்றப்பட்டிருந்த பெரிய கல்லை மஞ்சள் பாரித்த வெற்று முதுகில் சுமந்து சென்ற மனிதன், இந்த மனிதனைக் கறுப்புச் சவுக்கால் அடித்த தடியன்; உருளைக்கிழங்கு தின்று கொண்டிருந்த கந்தலாண்டிப் பையன், லேஸ் வைத்த உடை அணிந்து வெள்ளைக் குதிரை மேல் சவாரி செய்தபடிப் பன்னிரண்டு ஆப்ரிக்காட் கொட்டைகளைக் கொண்டு காதைக் குடையும் ஒரு வால்ட்ஸ் மெட்டை வாசித்த கிழச் சீமாட்டி.

அந்த நேரத்தில், இந்தச் சிறு உறங்கறையிலிருந்து தொலைவில் இருந்த முற்றிலும் வேறு ஓர் இடத்தில், அரண்மனைப் பூங்காவின் ஒரு மூலையில், பின்வருவது நடந்து கொண்டிருந்தது. என்னவோ, ஏதோ என்று நினைக்காதீர்கள், அப்படி எதுவும் நடந்து விடவில்லை. விந்தையான கனவுகள் அந்த இரவில் வாரிசு துத்திக்கு மட்டும் தோன்றவில்லை. வாரிசு துத்தியுடைய மிருகச்சாலையின் வாசலில் பாராக் கொடுக்கையில் தூங்கிப் போய் விட்ட காவல் படையினனும் வியப்புக்கு உரிய கனவு கண்டு கொண்டிருந்தான்.

கிராதியில் முதுகைச் சாய்த்தபடிக் குத்துக் கல்லில் உட்கார்ந்து இனிமையாகத் தூங்கிக் கொண்டிருந்தான் அவன். பளபளப்பான அகன்ற பிடி வைத்த அவனுடைய வாள் அவனுடைய முழங்கால்களுக்கு நடுவில் கிடந்தது. அவன் இடையில் கட்டி இருந்த கரும் பட்டு மப்ளரிலிருந்து மிகவும் அமைதியாகத் துருத்திக் கொண்டிருந்தது கைத்துப்பாக்கி. பக்கத்தில் சரளைக் கற்கள்

மேல் வைத்திருந்த கம்பி வலையிட்ட கைவிளக்கு காவல் படையினனின் பூட்சு மேலும் இலை களிலிருந்து நேரே அவனுடைய சட்டைக் கை மேல் விழுந்த நீளக் கம்பளிப் பூச்சி மேலும் வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

காட்சி முற்றிலும் அமைதி உள்ளதாகக் காணப்பட்டது.

இப்படியாக, பாராக்காரன் தூங்கிக் கொண்டு, அசாதாரணமான கனவு கண்டு கொண் டிருந்தான். வாரிசு துத்தியின் பொம்மை கனவில் அவனிடம் வந்தது. மருத்துவர் கஸ்பார் அர்னேரி அன்று காலையில் கொண்டு வந்த போது இருந்த மாதிரியே அது இப்போதும் இருந்தது: அதே ரோஜா நிறமான கவுன், ரிப்பன்கள், பூத்தையல்கள், ஜிகினுக்கள். ஆனுல் இப்போது கனவில் அது உயிருள்ள பெண்ணுகக் காணப்பட்டது. அது தயக்கம் இல்லாமல் நடந்தது, அக்கம் பக்கம் பார்த்தது, பதுங்கிற்று, திடுக்கிட்டது, விரலால் உதட்டை அழுத்திக் கொண்டது.

கைவிளக்கின் வெளிச்சம் அதனுடைய சிறு உருவம் முழுவதையும் காட்டிற்று.

காவல் படையினன் கனவில் புன்னகை கூடச் செய்தான்.

பிறகு அவன் கிராதியில் தோளைச் சாய்த்து, அதன் சித்திர வேலையில் இருந்த இரும்பு ரோஜாப் பூவில் மூக்கை நுழைத்தபடி அதிகச் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டான்.

பாராக்காரன் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட சுவோக் கைவிளக்கை எடுத்துக் கொண்டு நுனிப் பாதங்களில் நடந்து சாக்கிரதையாக வேலிக்குள் புகுந்தாள்.

காவல் படையினன் குறட்டை விட்டான். மிருகச்சாலையில் புலிகள் உறுமுவதாகத் தூக்கத்தில் அவனுக்குத் தோன்றியது.

உண்மையிலோ, மிருகச்சாலையில் நிசப்தம் நிலவிற்று. மிருகங்கள் தூங்கிக் கொண்டிருந்தன.

கைவிளக்கு சிறு வட்டத்தில் வெளிச்சம் காட்டிற்று. இருட்டில் உற்று நோக்கியபடி மெது வாக நடந்தாள் சுவோக். நல்ல வேளையாக இரவு கும்மிருட்டாக இல்லை. விண்மீன்களும் பூங்காவில் அங்கங்கே தொங்கிய விளக்குகளின் வெளிச்சமும் இரவுக்கு ஒளியூட்டின. மரங்கள், கட்டுமானங்கள் ஆகியவற்றின் உச்சிகளின் ஊடாக ஒதுக்குப்புறமான இந்த இடத்துக்கு வந்தது விளக்குகளின் வெளிச்சம்.

வேலியிலிருந்து சுருக்கமான மரப் பாதையில் நடந்தாள் சுவோக். வெள்ளை மலர்கள் பூத்த குட்டைச் செடிகளுக்கு நடுவே சென்றது அந்தப் பாதை.

பிறகு விலங்குகளின் நாற்றம் சட்டென அவளுடைய மூக்கைத் தாக்கிற்று. அவளுக்குப் பழக்கமானது அந்த நாற்றம்: மூன்று சிங்கங்களும் பெரிய உலும் நாய் ஒன்றும் வைத்திருந்த ஒரு விலங்குப் பயிற்சியாளன் ஒரு தரம் அவர்களுடைய நாடகக் குழுவோடு வந்திருந்தான்.

சுவோக் திறந்த வெளியை அடைந்தாள். சின்னச் சின்ன வீடுகள் போலச் சுற்றிலும் எவையோ கறுப்பாகத் தெரிந்தன.

''கூண்டுகள்'' என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டாள் சுவோக்.

அவளுடைய நெஞ்சு படபடத்தது.

விலங்குகளிடம் அவளுக்கு அச்சம் உண்டாகவில்லை, ஏனென்ருல் சர்க்கஸ்காரர்கள் பொது வாகவே கோழைகள் அல்ல. தன் காலடி ஓசையாலும் விளக்கின் வெளிச்சத்தாலும் ஏதேனும் விலங்கு விழித்துக் கொண்டு உறுமத் தொடங்கி, பாராக்காரனை எழுப்பி விடுமோ என்றே அவள் பயந்தாள்.

அவள் கூண்டுகளை நெருங்கினுள்.

''எங்கேதான் இருப்பான் புரோஸ்பெரோ?'' என்று பதற்றத்தோடு எண்ணினுள்.

கைவிளக்கை உயர்த்திக் கூண்டுகளுக்குள் பார்வை செலுத்தினுள். எல்லாம் அசைவோ சந்தடியோ இல்லாமல் இருந்தன. விளக்கு வெளிச்சம் கூண்டுக் கம்பிகளில் மோதிச் சிதறி, கம்பிகளின் மறு புறம் தூங்கிக் கொண்டிருந்தவற்றின் உடல்கள் மேல் சமமற்ற துணுக்குகளாகப் பரவிற்று.



மயிர் அடர்ந்த பருத்த காதுகளையும் சில வேளைகளில் நீட்டிய பாதத்தையும் வேறு சில வேளைகளில் கோடுகள் போட்ட முதுகையும் அவள் கண்டாள்... கழுகுகள் இறக்கைகளை விரித்தபடி உறங்கிக் கொண்டிருந்தன. விசித்திரமான அரசுச் சின்னம் போல் இருந்தன அவை. சில கூண்டுகளின் உள்ளே இனம் தெரியாத பருத்த பொருள்கள் கறுப்பாகத் தெரிந்தன.

மெல்லிய வெள்ளிக் கம்பி வலைப் பின்னல் போட்ட ஒரு கூண்டில், வெவ்வேறு உயரங்களில் கழிகள் மேல் உட்கார்ந்திருந்தன கிளிகள். சுவோக் இந்தக் கூண்டின் பக்கத்தில் நின்றபோது, கம்பி வலைக்கு மற்றவற்றை விடப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நீண்ட சிவப்புத் தாடி உள்ள கிழக் கிளி ஒன்று ஒரு கண்ணைத் திறந்து தன்னைப் பார்த்தது போல அவளுக்குத் தோன்றியது. அதன் கண் எலுமிச்சை விதை போல இருந்தது.

அது மட்டும் அல்ல, அந்தக் கிளி இந்தக் கண்ணைச் சட்டென மூடிக் கொண்டது. உறங்குவதாக அது பாவனை செய்தது போல் இருந்தது. போதாக் குறைக்கு அது தன் சிவப்புத் தாடிக்குள் புன்னகை செய்தது போலவும் சுவோக்குக்குத் தோன்றியது.

''நான் வெறும் முட்டாள் பெண்'' என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள் சுவோக். ஆனாலும் அவள் நெஞ்சு பதைத்தது.

நிசப்தத்துக்கு நடுவே ஒரு சமயம் ஓர் இடத்திலும் மறு சமயம் வேறு இடத்திலும் ஏதாவது ஒன்று ஓயாமல் சடசடப்பதும் நெறுநெறுப்பதும் கீச்சிடுவதுமாக இருந்தது...

நடு இரவில் குதிரை லாயத்துக்குள் போய்ப் பாருங்கள், அல்லது கோழிக் குடிலின் ஒலிகளை உற்றுக் கேளுங்கள்: நிசப்தம் உங்களை வியப்பில் ஆழ்த்தும். அதே சமயம், ஏராளமான சிறு ஒலிகள் உங்கள் காதில் விழுந்த வண்ணமாய் இருக்கும்—ஒரு சமயம் சிறகின் அசைவு, மறு சமயம் சவைப்புச் சத்தம், வேறு சமயம் அமர் கொம்பின் கிறீச்சொலி, பின்னொரு சமயம் தூங்கும் பறவையின் தொண்டையிலிருந்து சிறு துளி போல வெளிப்படும் மெல்லிய குரல்.

''எங்கேதான் இருக்கிறான் புரோஸ்பெரோ?'' என்று மறுபடி எண்ணினாள் சுவோக். ஆனால் இப்போது பெருத்த கலவரம் அவளை ஆட்கொண்டது. ''ஒருவேளை இன்று அவனுக்கு மரண தண்டனையை நிறைவேற்றி விட்டு அவனுடைய கூண்டில் கழுகை அடைத்திருக்கிறார்களோ?'' என்று பதைத்தாள்.

அப்போது இருட்டில் ஒருவனுடைய கம்மிய குரல் அழைத்தது:

''சுவோக்!''

யாரோ சிரமப்பட்டு, பதற்றத்துடன் பெருமூச்சு விடுவதும் பெரிய நோயாளி நாய் சிணுங்குவது போன்ற ஒலிகளும் அதே சமயம் அவள் காதில் பட்டன.

''ஐயோ!'' என்று வீரிட்டாள் சுவோக்.

தன்னை அழைத்த குரல் வந்த திக்கில் கைவிளக்கை வீசி ஆட்டினாள். அங்கே இரண்டு சிவப்புக் கங்குகள் எரிந்தன. கூண்டின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு அவற்றில் தலையை அழுத்தியபடி கூண்டில் நின்று கொண்டிருந்தது கரடி போன்ற ஒரு பெரிய கறுப்புப் பிராணி.

''புரோஸ்பெரோ!'' என்று தணிவாகச் சொன்னாள் சுவோக்.

ஒரு நொடிக்குள் பற்பல எண்ணங்கள் அவள் மனத்தில் தோன்றி விட்டன:

''இவன் ஏன் இவ்வளவு பயங்கரமாய் இருக்கிறான்? இவன் மேலெல்லாம் கரடி போல மயிர் அடர்ந்திருக்கிறதே. இவனுடைய கண்களில் சிவப்புப் பொறிகள் சுடர்கின்றன. நகங்கள் நீண்டு வளைந்திருக்கின்றன. இவன் உடை உடுத்தாமல் இருக்கிறான். இவன் மனிதன் அல்ல, மனிதக் குரங்கு...''

சுவோக்குக்கு அழுகை வந்தது.

''கடைசியில் எப்படியோ வந்து விட்டாயே, சுவோக். நான் உன்னைக் காண்பேன் என்று அறிந்திருந்தேன்'' என்றது விந்தைப் பிராணி.

''வணக்கம். நான் உன்னை விடுவிக்க வந்திருக்கிறேன்'' என்று தழுதழுத்த குரலில் சொன்னாள் சுவோக்.

''நான் கூண்டிலிருந்து வெளியேற மாட்டேன். இன்றைக்கு நான் செத்துப் போவேன்.''

நெஞ்சைப் பிளக்கும் சிணுங்கல் ஒலிகள் மறுபடியும் கேட்டன. அந்தப் பிராணி விழுந்தது, பின்பு எழுந்து கூண்டுக் கம்பிகளோடு ஒண்டிக் கொண்டது.

''கிட்டே வா, சுவோக்.''

சுவோக் பக்கத்தில் போனாள். பயங்கரமான முகம் அவளைப் பார்த்தது. அது மனித முகம் இல்லைதான். ஓநாயின் மூஞ்சியை அது அதிகமாக ஒத்திருந்தது. எல்லாவற்றையும் விடப் பயங்கரமானது என்ன என்றால் இந்த ஓநாயின் காதுகள் குட்டையான முரட்டு ரோமங்கள் அடர்ந்தவை ஆனாலும் மனிதக் காதுகள் போன்ற வடிவம் கொண்டிருந்தது தான்.

சுவோக் ஒரு கையால் கண்களைப் பொத்திக் கொள்ள விரும்பினாள். விளக்கு அவளுடைய கையில் துள்ளிக் குதித்தது. மஞ்சள் நிற வெளிச்சப் புள்ளிகள் காற்றில் பறந்தன.

''நீ என்னைக் கண்டு பயப்படுகிறாய், சுவோக்... மனித உருவத்தை நான் இழந்து விட்டேன். பயப்படாதே! கிட்டே வா... நீ உயர்ந்து, மெலிந்து விட்டாய். உன் சின்ன முகத்தில் ஏக்கம் ததும்புகிறது...''

அவன் சிரமப்பட்டுப் பேசினான். வர வரக் குனிந்து கொண்டே போய், முடிவில் கூண்டின் பலகைத் தரையில் படுத்தான். மேலும் மேலும் அடிக்கடி மூச்சு விட்டான். அப்போது வாயை அகலத் திறந்தான். மஞ்சள் நிறமான நீண்ட பற்கள் அதில் நிறைந்திருந்தன.

''இப்போது நான் இறந்து போவேன். சாவதற்கு முன்னால் உன்னைக் காண்பேன் என்று அறிந்திருந்தேன்...''

குரங்கினுடையது போல மயிர் அடர்ந்த தன் கையை அவன் நீட்டினான். இருட்டில் எதையோ தேடினான். ஆணி பிடுங்கப்பட்டது போன்ற சத்தம் கேட்டது. பின்பு பயங்கரமான ஒரு கை கம்பிகளின் ஊடாக வெளியே நீண்டது.

கையில் இருந்தது சிறு பலகை.

''இதை வாங்கிக் கொள். இதில் எல்லாம் எழுதி இருக்கிறது.''

சுவோக் பலகையை வாங்கி வைத்துக் கொண்டாள்.

''புரோஸ்பெரோ'' என்று தணிந்த குரலில் சொன்னாள்.

பதில் வரவில்லை.

சுவோக் விளக்கை அருகே கொண்டு போனாள். பற்கள் இளித்திருந்தன. மங்கி விட்ட விழிகள் அவளை ஊடுருவி நோக்கின.

''புரோஸ்பெரோ!'' என்று கூவி, விளக்கை நழுவ விட்டாள் சுவோக். ''இறந்து போனான்! இறந்து போய் விட்டான்! புரோஸ்பெரோ!''

விளக்கு அணைந்து போயிற்று.





நாலாம் பாகம்

✷

# கருமான் புரோஸ்பெரோ

COMICS PDF TIMES





## அத்தியாயம் 11

# மிட்டாய்ச் சாலை தவிடுபொடி



எந்தக் காவல் படைப் பாராக் காரனைக் கம்பி வலை போட்ட கைவிளக்கை சுவோக் அவனிடமிருந்து திருடிக் கொண்ட சந்தர்ப்பத்தில் நாம் அறிமுகம் செய்து கொண்டோமோ, அவன் மிருகச்சாலையில் ஏற்பட்ட கூச்சலால் விழித்துக் கொண்டான்.

விலங்குகள் உறுமின, ஊளையிட்டன, கீச்சிட்டன. சிறகுகள் அடித்துக் கொண்டன. வால்கள் இரும்புக் கிராதியில் அடித்தன...

காவல் படைக்காரன் எலும்புகள் பயங்கரமாகச் சடசடக்கும்படி கொட்டாவி விட்டுச் சோம்பல் முறித்து, கிராதியில் முட்டி இடித்ததால் வலி உண்டாகவே, முடிவில் தன் உணர்வுக்கு வந்தான்.

அப்போது அவன் துள்ளி எழுந்தான். விளக்கு இல்லை. விண்மீன்கள் அமைதியாக மினுமினுத்துக் கொண்டிருந்தன. மல்லிகை மணம் வீசிக் கொண்டிருந்தது.

''அட இழவே!''

காவல் படையினன் ஒரே ஆத்திரத்துடன் தூ என்று உமிழ்ந்தான். அந்தத் துப்பல் துப்பாக்கிக் குண்டு போல மல்லிகைத் தொட்டியைத் தாக்கி வீழ்த்தி விட்டது.

விலங்குகளின் கூட்டுக் கூச்சல் வரவர அதிகமாகிக் கொண்டு போயிற்று.

காவல் படையினன் அபாய எச்சரிக்கை செய்தான். நிமிட நேரத்தில் ஆட்கள் தீவட்டிகளோடு ஓடி வந்தார்கள். தீவட்டிகள் சடசடத்தன, காவல் படையினர் திட்டி நொறுக்கினர்கள். ஒருவன் உடை வாளில் தடுக்கிக் கொண்டு குப்புற விழுந்து மற்றவனுடைய குதிமுள்ளில் மூக்கை உடைத்துக் கொண்டான்.

''என் கைவிளக்கு திருட்டுப் போய் விட்டது!''

''யாரோ மிருகச்சாலைக்குள் புகுந்து விட்டார்கள்!''

''திருடர்கள்!''

''கலகக்காரர்கள்!''

மூக்கு உடைந்த காவல் படைக்காரனும் குதிமுள் முறிந்த காவல் படைக்காரனும் மற்றவர்களும் தீவட்டிகளால் இருட்டைக் கிழித்தபடி, யார் என்று தெரியாத பகைவனைத் தாக்கப் புறப்பட்டார்கள்.

ஆனால் சந்தேகத்துக்கு இடமான எதுவும் மிருகச்சாலையில் காணப்படவில்லை.

நாற்றம் அடித்த சிவந்த வாய்களைத் திறந்து உறுமிக் கொண்டிருந்தன புலிகள். சிங்கங்கள் ஒரேயடியாகக் கலவரம் அடைந்து கூண்டுகளுக்குள் ஓடிக் கொண்டிருந்தன. கிளிகளோ, ஒரே தடுமாற்றம் ஏற்படுத்திக் கொண்டிருந்தன. பல நிறக் குடைராட்டினம் சுழல்வது போல அவை சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன. குரங்குகள் ஊசலாட்டத் தண்டுகளில் ஆடிக் கொண்டிருந்தன. கரடிகளோ, அழகான அடித் தொண்டையில் பாடிக் கொண்டிருந்தன.

தீவட்டி நெருப்பும் ஆட்களும் வந்ததால் விலங்குக் கூட்டம் இன்னும் பெருத்த கலவரம் அடைந்தது.

காவல் படைக்காரர்கள் எல்லாக் கூண்டுகளையும் பார்வையிட்டார்கள்.

எல்லாம் ஒழுங்காய் இருந்தன.

சுவோக் நழுவ விட்ட கைவிளக்கு கூடக் காவல் படைக்காரர்களுக்குக் கிடைக்கவில்லை.

மூக்கு உடைபட்ட காவல் படைக்காரன் ''நில்!'' என்று திடீரென்று சொல்லி, தீவட்டியை உயர்த்திப் பிடித்தான்.

எல்லோரும் உயரே பார்த்தார்கள். மரத்தின் பச்சை முடி அங்கே கறுப்பாகத் தெரிந்தது. இலைகள் அசையவில்லை. காற்றோட்டம் இல்லாத இரவு.

''பார்த்தீர்களா?'' என்று பயமுறுத்தும் பாங்கில் கேட்டான் காவல் படைக்காரன். அவன் தீவட்டியை ஆட்டினான்.

''ஆமாம். ரோஜா நிறமான ஒன்று...''

''சின்னது...''

''உட்கார்ந்திருக்கிறது...''

''மடையர்களா! அது என்ன, தெரியுமா? கிளி. கூண்டிலிருந்து பறந்து அங்கே பதுங்கிக் கொண்டிருக்கிறது, அதைச் சைத்தான் வாரிக் கொண்டு போக!''

அபாய எச்சரிக்கை செய்த பாராக்காரன் குழப்பம் அடைந்து பேசாதிருந்தான்.

''அதை இறக்க வேண்டும். எல்லா மிருகங்களையும் அது கலவரப்படுத்தி விட்டது.''

''சரிதான். ஏறு வூர்ம். நீ எல்லோரிலும் இளையவன்.''

வூர்ம் என்று அழைக்கப்பட்டவன் மரத்தின் பக்கத்தில் போனான். தயங்கினான்.

''ஏறி அதைத் தாடியைப் பிடித்து இழுத்து வா.''

கிளி அசையாமல் உட்கார்ந்திருந்தது. தீவட்டிகளால் வெளிச்சமாக்கப்பட்ட அடர்ந்த கிளைகளின் உட்புறம் அதன் இறகுகள் ரோஜா நிறம் காட்டின.

வூர்ம் தொப்பியை நெற்றி மேல் தள்ளிப் பின் மண்டையைச் சொறிந்தான்.

''எனக்குப் பயமாய் இருக்கிறது... கிளிகள் ரொம்ப வலிக்கும்படி கடிக்குமாமே.''

''ம-டையா!''

ஆனாலும் வூர்ம் மரத்தில் ஏறினான். ஆனால் பாதி மரம் ஏறியவன், நின்று, நொடிப் போது தயங்கி விட்டுக் கீழே சறுகினான்.

''மாட்டவே மாட்டேன். இது என் வேலை அல்ல. கிளிகளோடு போராட எனக்கு ஏலாது'' என்று சொல்லி விட்டான்.

அப்போது சிடுசிடுத்த கிழக் குரல் ஒன்று ஒலித்தது. செருப்புக்களைப் பறட்டுப் பறட்டென்று இழுத்தபடி இருட்டில் காவல் படையினரின் பக்கம் ஓடி வந்தான் ஒருவன்.

''அதைத் தொட வேண்டாம்! அதைக் கலவரப்படுத்தாதீர்கள்!'' என்று கத்தினன்.

அப்படிக் கத்தியவர் மிருகச்சாலையின் தலைமை மேற்பார்வையாளர்.

அவர் பெரிய விஞ்ஞானி, விலங்கியல் அறிஞர். அதாவது, பிராணிகளைப் பற்றித் தெரிய வேண்டிய எல்லாச் சேதிகளையும் அவர் அறிந்திருந்தார்.

இரைச்சல் அவரை எழுப்பி விட்டது.

மிருகச்சாலைக்குப் பக்கத்திலேயே அவர் வீடு இருந்தது. படுக்கையிலிருந்து எழுந்து, தூங்கும் போது மாட்டிக் கொள்ளும் குல்லாயைக் கூடக் கழற்ருமல் நேரே ஓடி வந்திருந்தார். மூக்கின் மேல் பளிச்சிட்ட பெரிய மூட்டைப் பூச்சியைக் கூட அவர் அகற்றவில்லை.

பெருத்த கிளர்ச்சி அடைந்திருந்தார் அவர். மெய்தானே: அவருடைய சாம்ராஜ்யத்தில் புகுந்து குழப்பம் ஏற்படுத்தத் துணிந்திருந்தார்கள் எவர்களோ படையினர். எவனே ஓர் உலக்கைக் கழுந்து அவருடைய செல்லக் கிளியின் தாடியைப் பிடித்து இழுக்கப் பார்க்கிருன்!

காவல் படையினர் விலகி வழி விட்டார்கள்.

விலங்கியல் அறிஞர் நிமிர்ந்து பார்த்தார். இலைகளுக்கு நடுவில் ரோஜா நிறமான ஒன்றை அவரும் கண்டார்.

''ஆமாம். இது கிளிதான். என்னுடைய சிறந்த கிளி இது. எப்போதுமே இது முரண்டு பண்ணும். கூண்டில் இதற்கு இருப்பே கொள்வதில்லை. லாரா இது... லாரா! லாரா!'' என்று கீச்சுக் குரலில் கிளியை அழைக்கத் தலைப்பட்டார். ''கொஞ்சிப் பேசினல் இதற்குப் பிடிக்கும். லாரா! லாரா! லாரா!''

காவல் படையினர் அடக்க முடியாமல் பக்கென்று சிரித்து விட்டார்கள். வண்ண மேலங்கியும் உறங்கறைச் செருப்புக்களும் அணிந்து, குல்லாயின் குஞ்சம் தரைவரை தொங்கும்படி நிமிர்ந்த தலையோடு நின்ற சிறு கூடான அந்தக் கிழவர், வாட்ட சாட்டமான காவல் படையினருக்கும் பிரகாசமாக எரிந்த தீவட்டிகளுக்கும் மிருகங்களின் ஊளைகளுக்கும் நடுவில் மொத்தத்திலேயே வேடிக்கையாகக் காட்சி அளித்தார்.

அப்புறம் நடந்தது எல்லாவற்றிலும் வேடிக்கையான நிகழ்ச்சி. விலங்கியலார் மரத்தில் ஏறினர். அவர் மிக லாகவமாக ஏறியதைப் பார்த்தால் இது முதல் தடவை இல்லை என்று தோன்றியது. ஒன்று, இரண்டு, மூன்று! கோடிட்ட உள்ளாடைகள் அணிந்த அவருடைய கால்கள் மேலங்கிக்கு அடியில் சில தடவைகள் தோன்றி மறைந்தன. பின்பு மதிப்புக்குரிய முதியவர் உச்சியை அடைந்து விட்டார், நிரம்பத் தொலைவு இல்லா விட்டாலும் ஆபத்தான தம் பயணத்தின் முடிவை நெருங்கி விட்டார்.

''லார்ரா!'' என்று மறுபடி கொஞ்சலாகக் குழைந்தார்.

திடீரென்று காதைத் துளைக்கும்படி அவர் வீரிட்டது மிருகச்சாலையிலும் பூங்காவிலும் சுற்று வட்டாரங்களிலும் குறைந்தது ஒரு கிலோமீட்டர் தூரத்துக்குக் கேட்டது.

''பேய்!'' என்று கத்தினர் அவர்.

கிளியின் இடத்தில் கிளையில் ஏதோ பூதம் உட்கார்ந்திருந்தது போலும்.

காவல் படையினர் மரத்திலிருந்து துள்ளி விலகினர்கள். விலங்கியல் அறிஞர் பிடி தவறி விழுந்தார். கணிசமாகக் கெட்டியான குட்டைக்கிளை ஒன்றின் வடிவத்தில் தற்செயல் அவரைக் காப்பாற்றியது. மேலங்கியோடு கிளையில் மாட்டிக்கொண்டு தொங்கினர் அவர்.

அடாடா, மற்ற விஞ்ஞானிகள் தங்களுடைய மதிப்புக்குரிய சோதரரை அந்தக் கோலத்தில் கண்டிருந்தால், அவருடைய வழுக்கைத் தலைக்காகவும் இயல் அறிவுக்காகவும் அவர் மேல் அவர்களுக்கு இருந்த மரியாதை போயே போயிருக்கும்! அவருடைய மேலங்கி மட்டு மீறி அநாகரிகமாகக் கிழிந்து மேலே தூக்கிக் கொண்டிருந்தது.

காவல் படையினர் ஓட்டம் எடுத்தார்கள். தீவட்டிச் சுவாலைகள் காற்றில் பறந்தன.

நெருப்புப் பிடரிகள் உள்ள கறுப்புக் குதிரைகள் பாய்ந்தோடுவது போல இருந்தது இருட்டில் அந்தக் காட்சி.

மிருகச்சாலையில் கலவரம் அடங்கி விட்டது. விலங்கியல் அறிஞர் அசையாமல் தொங்கிக் கொண்டிருந்தார். ஆனால் அரண்மனையில் பரபரப்பு தொடங்கிவிட்டது.

மர்மக் கிளி மரத்தில் காணப்பட்டதற்கு ஒரு கால் மணிக்கு முன்னால் மூன்று தடியர் களுக்கு ஒரு கெட்ட சேதி கிடைத்திருந்தது.

''நகரத்தில் ஒழுங்கீனம். தொழிலாளர்களுக்குக் கைத்துப்பாக்கிகளும் துப்பாக்கிகளும் கிடைத்து விட்டன. தொழிலாளர்கள் காவல் படையினரைச் சுடுகிறார்கள், கொழுத்தவர்களை எல் லோரையும் தண்ணீரில் தள்ளுகிறார்கள்.''

''சர்க்கஸ்காரன் திபூல் வெளியே சுதந்திரமாக இருக்கிறான். சுற்று வட்டாரத்தில் வசிப் பவர்களை ஒரே படையாகத் திரட்டிக் கொண்டிருக்கிறான்.''

''பெரும்பாலான காவல் படையினர் தொழிலாளர் குடியிருப்பு வட்டாரங்களுக்குப் போய் விட்டார்கள். மூன்று தடியர்களுக்குச் சேவகம் செய்ய அவர்கள் விரும்பவில்லை.''

''தொழிற்சாலைப் புகை போக்கிகள் புகையவில்லை. இயந்திரங்கள் வேலை செய்யவில்லை. பணக்காரர்களுக்காக நிலக்கரி தோண்டி எடுக்கச் சுரங்கத்தில் இறங்குவதற்குச் சுரங்கத் தொழி லாளர்கள் மறுக்கிறார்கள்.''

''வட்டார விவசாயிகள் பண்ணைச் சொந்தக்காரர்களோடு சண்டை போடுகிறார்கள்.''

இவையே மூன்று தடியர்களுக்கு அமைச்சர்கள் தந்த தகவல்கள்.

வழக்கம் போலவே கலவரம் காரணமாக மூன்று தடியர்களும் கொழுக்கத் தொடங்கினார் கள். அரசு ஆலோசனை மன்றத்தார் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவர்களில் ஒவ் வொருவனுடைய எடையும் கால் பவுண்டு கூடி விட்டது.

''என்னால் முடியாது!'' என்று குறை சொல்லத் தலைப்பட்டான் ஒரு தடியன். ''என் னால் முடியாது... என்னால் பொறுக்கக் கூடிய அளவுக்கு மேற்பட்டது இது... ஐயோ! கழுத்துப் பொத்தான் என் குரல்வளையை நெரிக்கிறதே...'' என்று அலறினான்.







கண்ணைக் கூசச் செய்யும்படி பளிச்சிட்ட அவனுடைய கழுத்துப் பட்டை படீரென்று தெறித்தது.

''நான் கொழுத்துக் கொண்டு போகிறேன். என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று ஊளையிட்டான் இரண்டாமவன்.

மூன்றுமவன் தன் தொப்பையைச் சோர்வுடன் பார்த்தான்.

இந்த விதமாக, அரசு ஆலோசனை மன்றத்துக்கு முன் இரண்டு கேள்விகள் எழுந்தன: முதலாவது, கொழுப்பதை நிறுத்துவதற்கான உபாயத்தை உடனே கண்டுபிடிப்பது; இரண்டாவது, நகரத்தில் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனத்தை அடக்குவது.

முதல் விஷயம் பற்றிப் பின்வரும் முடிவு செய்யப்பட்டது:

''நடனம்!''

''நடனம்! நடனம்! ஆமாம், சந்தேகம் இல்லாமல் நடனம்! எல்லாவற்றிலும் மேலான உடல் அசைப்பு இது.''

''ஒரு நிமிடங்கூட வீணாக்காமல் நட்டுவனாரை அழைக்க வேண்டும். மூன்று தடியர்களுக்கு நடனக் கலையை அவர் கற்பிக்க வேண்டும்.''

''ஆமாம்'' என்று கெஞ்சும் குரலில் சொன்னான் முதல் தடியன். ''ஆனால்...''

சரியாக அந்த நேரத்தில்தான் மதிப்புக்கு உரிய விலங்கியல் அறிஞரின் கூச்சல் மிருகச் சாலையிலிருந்து கேட்டது—தம்முடைய செல்லக் கிளி லாராவின் இடத்தில் மரத்தின் மேல் பேயைக் கண்ட போது அவர் போட்டாரே, அந்தக் கூச்சல்.



அரசாங்கத்தார் எல்லோரும் பூங்காவுக்குப் பாய்ந்து, மரப் பாதைகள் வழியே மிருகச் சாலேக்குப் போனார்கள்.

''ஹப்பா! ஹப்பா! ஹப்பா!'' என்று மூச்சிரைக்கும் சத்தம் பூங்காவில் கேட்டது.

ஆரஞ்சு நிறமும் சிறகுகளில் கறுப்புக் கோடுகளும் உள்ள மிகச் சிறந்த வண்ணத்துப் பூச்சிகளின் முப்பது குடும்பங்கள் பயந்து போய்ப் பூங்காவிலிருந்து வெளியேறின.

ஏராளமான தீவட்டிகள் காணப்பட்டன. கீல் மணத்தைப் பரப்பியபடி எரிந்து முழுக் காடு. இந்தக் காடு ஓடிக் கொண்டே எரிந்தது.

மிருகச்சாலேக்கு ஒரு பத்தடி தூரத்தில், ஓடிக் கொண்டிருந்தவை எல்லாம் திடீரென்று காலற்றவை போல் ஆகி விட்டன. திடீரென்று எல்லாமே ஊளேயிடுவதும் கீச்சிடுவதுமாகத் தப்பும் வகை தேடித் தடுமாறி ஒன்றன் மேல் ஒன்று விழுந்த வண்ணம் திரும்பிப் பாய்ந் தோடின. தீவட்டிகள் தரையில் கிடந்தன, தழல்கள் பெருகின, புகை அலே அலேயாய்ப் படர்ந் தது.

''ஓ!''

''ஆ!''

''தப்புங்கள்!''



குரல்கள் பூங்காவை அதிர வைத்தன.

தழல் படர்ந்து ஓட்டத்தையும் குழப்பத்தையும் சிவப்பு ஒளியில் காட்டிற்று.

எதிர்த் திக்கிலிருந்து, மிருகச்சாலையிலிருந்து, இரும்பு வேலியின் மறுபுறமிருந்து, அமைதியுடன் உறுதியாக அகன்ற அடிகள் வைத்து நடந்தான் உயரமும் பருமனுமான ஒரு மனிதன்.

செம்பழுப்புத் தலையும் சுடர் வீசிய கண்களுமாக, கந்தலாய்க் கிழிந்த மேல்சட்டை அணிந்து பயங்கரமான ஆவி உருவம் போல இந்த ஒளியில் நடந்தான் அவன். இரும்புச் சங்கிலித் துண்டால் தயாரித்த கழுத்துப் பட்டை கட்டிய ஒரு சிறுத்தையை அவன் ஒரு கையில் பிடித்திருந்தான். மஞ்சள் நிறமும் மெல்லிய உடலும் கொண்ட அந்த விலங்கு பயங்கரக் கழுத்துப்பட்டையிலிருந்து விடுபடுவதற்குக் கடு முயற்சி செய்து துள்ளிற்று, கீச்சிட்டது, ஊளையிட்டது, பிரபுவம்ச வீரர்களின் கொடியில் பொறித்த படத்தில் உள்ள சிங்கம் போல நீண்ட சிவப்பு நாக்கை ஒரு தரம் தொங்க விடுவதும் மறு தரம் உள்ளே இழுத்துக் கொள்வது மாக இருந்தது.

பளபளப்பான ரோஜா நிற உடை அணிந்த ஒரு பெண்ணை அந்த மனிதன் மறு கையில் தூக்கிக் கொண்டிருந்ததை, திரும்பிப் பார்க்கத் துணிந்தவர்கள் கண்டார்கள். அந்தப் பெண் வெறி கொண்ட சிறுத்தையை அச்சத்துடன் பார்த்து தங்க ரோஜாப் பூக்கள் வைத்த செருப்புக்களில் கால்களை அழுத்தி, தன் நண்பனுடைய தோளில் ஒண்டிக் கொண்டாள்.

''புரோஸ்பெரோ!'' என்று ஓடிக் கொண்டே வீரிட்டார்கள் ஆட்கள்.

''புரோஸ்பெரோ! இவன் தான் புரோஸ்பெரோ!''

''ஓடித் தப்புங்கள்!''

''பொம்மை!''

''பொம்மை!''

அப்போது புரோஸ்பெரோ சிறுத்தையை விட்டு விட்டான்.

சிறுத்தை வாலைச் சுழற்றி, நீண்ட பாய்ச்சல்களில் கிளம்பி, ஓடுபவர்களை விரட்டிற்று.

சுவோக் கருமானின் கையிலிருந்து குதித்தாள். இந்த ஓட்டத்தின் போது நிறையக் கைத்துப்பாக்கிகள் புல் மேல் எறியப்பட்டிருந்தன. சுவோக் மூன்று கைத்துப்பாக்கிகளைப் பொறுக்கிக் கொண்டாள். இரண்டைப் புரோஸ்பெரோ கைகளில் பிடித்துக் கொண்டான். ஒன்றைச் சுவோக் எடுத்துக் கொண்டாள். அது அவள் உயரத்தில் அனேகமாகப் பாதி இருந்தது. ஆனால் பளபளப்பான அந்தக் கறுப்புக் கருவியைக் கையாள அவள் அறிந்திருந்தாள். கைத்துப்பாக்கி சுடுவதற்கு அவள் சர்க்கசில் பழகி இருந்தாள்.

''போவோம்!'' என்று கட்டளை இட்டான் கருமான்.

பூங்காவுக்கு உள்ளே நடந்து கொண்டிருந்ததில் அவர்களுக்கு அக்கறை ஏற்படவில்லை. சிறுத்தை மேற்கொண்டு எங்கே போயிற்று என்பதைப் பற்றி அவர்கள் நினைக்கவில்லை.

அரண்மனையிலிருந்து வெளியேறும் வழியைக் காண வேண்டி இருந்தது. அந்த உயிரைக் காப்பாற்றுவது அவசியமாக இருந்தது.

திபூல் சொன்ன அருமையான பாத்திரம் எங்கே? பலூன்காரன் எதன் வழியாகத் தப்பி வெளியேறினனோ, அந்த இரகசியப் பாத்திரம் எங்கே?

சுவோக் கைத்துப்பாக்கியை வீசி ஆட்டிக் கொண்டு ஓடியபடி, ''சமையல் அறைக்கு! சமையல் அறைக்குப் போவோம்!'' என்று கத்தினள்.

செடிகளைப் பிய்த்துக் கொண்டும் தூங்கிப் போன பட்சிகளை விரட்டிக் கொண்டும் கும்மிருட்டில் ஓடினர்கள் அவர்கள். ஐயோ, பாவம்! சுவோக்கின் உடை பட்ட பாட்டை என்ன சொல்ல.

வெளிச்சமாய் இருந்த சில சன்னல்களுக்குக் கீழே நின்ற சுவோக், ''ஏதோ இனிப்புப் பண்டத்தின் வாசனை வருகிறது'' என்றாள்.

எல்லோருடைய கவனத்தையும் திருப்புவதற்கு வழக்கமாகச் செய்வது போல விரலை உயர்த்துவதற்குப் பதில் கறுப்புக் கைத்துப்பாக்கியை உயர்த்தினுள்.

அருகே ஓடி வந்த காவல் படையினர் அவர்கள் மரத்தின் உச்சியில் இருந்ததைக் கண்டார்கள். இந்தச் சன்னல் வரை நீண்டிருந்த கிளையிலிருந்து மறு நொடியில் அவர்கள் பெரிய சன்னலுக்குள் போய் விட்டார்கள்.

பலூன்காரன் தலைக்கு நாள் எதன் வழியாக உள்ளே பறந்து புகுந்தானே, அதே சன்னல் இது.

மிட்டாய்ச்சாலையின் சன்னல் இது.

இரவு வெகு நேரம் ஆகி விட்டதையும் பொதுவான கலவரத்தையும் சட்டை செய்யாமல் இங்கே வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மிட்டாய்க்காரர்களின் குழு முழுவதும் வெள்ளைக் குசினித் தொப்பிகள் அணிந்த கெட்டிக்காரச் சிறுவர்களின் பட்டாளமும் முழு மூச்சாகப் பாடுபட்டுக்' கொண்டிருந்தன: வாரிசு துத்தியின் பொம்மை திரும்பி வந்ததைக் கொண்டாடுவதற்காக மிட்டாய்க்காரர்கள் தனி வகையான பழச் சாறு தயாரித்துக் கொண்டிருந்தார்கள். வேறு எவனுவது பறக்கும் மனிதன் வந்து பிரெஞ்சுப் பாலாடையையும் உயர் தரமான உலர் பழங்களையும் கெடுத்து விடக் கூடும் என்ற அச்சத்தால் இந்த விருந்துக்குக் கேக் தயாரிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

நடுவில் வைத்திருந்தது கொப்பரை. அதில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. வெள்ளை ஆவி எல்லாவற்றின் மேலும் கவிந்திருந்தது. இந்தப் போர்வையின் கீழ் சமையல்காரப் பையன்கள் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்: பழச் சாறு தயாரிப்பதற்காகப் பல வகைக் கனிகளை நறுக்கிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

ஆயிற்று... அப்போது சமையல் கலை நிபுணர்கள் ஆவிப் படலத்துக்கும் பரபரப்புக்கும் ஊடாக ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டார்கள்.

சன்னலுக்கு வெளியே புயல் அடிப்பதற்கு முன்பு போலக் கிளைகள் அசைந்தன, இலைகள் சரசரத்தன, சன்னல் குறட்டில் இறங்கினுர்கள் இரண்டு பேர்: ஒரு செம்பட்டைத் தலை அரக்கனும் ஒரு சிறு பெண்ணும்.

''தூக்குங்கள் கைகளை!'' என்ருன் புரோஸ்பெரோ. அவனுடைய ஒவ்வொரு கையிலும் ஒரு கைத்துப்பாக்கி இருந்தது.

சுவோக் தன்னுடைய கைத்துப்பாக்கியை உயர்த்தி, ''இடத்தை விட்டு நகராதேயுங்கள்!'' என்று கணீரென அதட்டினுள்.

மேற்கொண்டு வற்புறுத்திக் கோரும் வரை காத்திராமல் இரண்டு டஜன் வெள்ளைச் சட்டைக் கைகள் உயர்த்தப்பட்டன.

அப்புறம் பறந்தன பாத்திரங்கள்.

கண்ணுடியும் செம்பும், வெண்கலமும், கொதிப்பதும் இனிப்பதும் மணப்பதுமாகப் பளபளத்துக் கொண்டிருந்த மிட்டாய்ச் சாலையின் தனி உலகம் தவிடுபொடி ஆகத் தொடங்கிற்று.

கருமான் முக்கியப் பாத்திரத்தைத் தேடிக் கொண்டிருந்தான். அவன் தப்புவதற்கும் அவனைக் காப்பாற்றிய சிறுமி தப்புவதற்கும் வழி அதில் இருந்தது.

அவன் சாடிகளைக் குப்புறக் கவிழ்த்தான், வாணலிகளையும் பெய் குழல்களையும் தாம்பாளங்களையும் தட்டுக்களையும் நாலா பக்கமும் எறிந்தான். கண்ணுடி எல்லாத் திசைகளிலும் பறந்து கணீரென்றும் ஃடாரென்றும் ஒலித்தபடி உடைந்து சிதறிற்று. இறைக்கப்பட்ட மாவு சகாராப் பாலைவனத்தில் எழும் சுழல் காற்றுப் போலப் படலம் படலமாகச் சுழன்றது. வாதுமை, உலர் திராட்சை, செர்ரிப் பழங்கள் முதலியவற்றின் சூறை அடித்தது. சர்க்கரை அலமாரிகளிலிருந்து அருவி போலச் சோவென்று கொட்டிற்று. பழப்பாகுகளின் வெள்ளம் முழங்காலளவு பெருகிற்று. நீர்த் துளிகள் தெறித்தன, பழங்கள் உருண்டன, பாத்திரங்களின் செப்பு, வெண்

COMICSPDF.TIMES

கலக் கோபுரங்கள் தகர்ந்து சரிந்தன... எல்லாம் தலை கீழாகப் புரட்டப்பட்டன. தூக்கத்தில் சில வேளைகளில் இந்த மாதிரி நடப்பதுண்டு: கனவு காணும் போதே அது கனவு தான், ஆகவே என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று தெரியும்.

''இருக்கிறது! இதோ!'' என்று கீச்சிட்டாள் சுவோக்.

அவர்கள் தேடியது கிடைத்து விட்டது. மூடி இடிபாடுகளின் குவியலில் போய் விழுந்தது. கரும்பழுப்பும் பச்சையும் பொன் மஞ்சள் நிறமுமான பழப்பாகுகளின் கெட்டியான ஏரியில் சளப்பென்று அடித்தது அது.

புரோஸ்பெரோ அடியற்ற பாத்திரத்தைக் கண்டான்.

''ஓடு! நான் உன் பின்னால் வருகிறேன்'' என்று கத்தினாள் சுவோக்.

கருமான் பாத்திரத்தில் இறங்கினான். மிட்டாய்ச்சாலையில் இருந்தவர்கள் போட்ட கூப்பாடு பாத்திரத்திற்குள் புகுந்து மறைந்த போதுதான் அவனுக்குக் கேட்டது.

சுவோக்குக்கு நேரம் கிடைக்கவில்லை. பூங்காவிலும் அரண்மனையிலும் பயங்கரப் பயணம் நடத்தி முடித்திருந்த சிறுத்தை இங்கே வந்து விட்டது. காவல் படையினர் சுட்டதால் ஏற்பட்ட காயங்கள் அதன் தோலில் ரோஜாக்கள் போல மலர்ந்திருந்தன.

மிட்டாய்க்காரர்களும் சமையல்காரர்களும் ஒரு மூலையில் ஒதுங்கினார்கள். சுவோக் கைத்துப்பாக்கியை மறந்து விட்டு, கைக்குக் கிடைத்த பேரிக்காய்களைச் சிறுத்தை மேல் எறிந்தாள்.

சிறுத்தை புரோஸ்பெரோவின் பின்னே பாத்திரத்தில் தலைகீழாகப் பாய்ந்தது. இருண்ட குறுகிய வழியில் அவன் பின்னால் விழுந்து விட்டது. கிணற்றுக்குள்ளிருந்து போல பாத்திரத்தின் உள்ளிருந்து துருத்திக் கொண்டிருந்த மஞ்சள் வாலை எல்லோரும் பார்த்தார்கள். பிறகு எல்லாம் மறைந்து விட்டன.

சுவோக் கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

''புரோஸ்பெரோ! புரோஸ்பெரோ!''

மிட்டாய்க்காரர்களோ, வன்மத்துடன் கெக்கலித்தார்கள். அதற்குள் காவல் படையினரும் வந்து விட்டார்கள். அவர்களுடைய சீருடைகள் கிழிந்திருந்தன, முகங்களில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது, கைத்துப்பாக்கிகள் புகைந்து கொண்டிருந்தன. அவர்கள் சிறுத்தையோடு சண்டை போட்டிருந்தார்கள்.

''புரோஸ்பெரோ மடிந்தான்! சிறுத்தை அவனைக் குதறிப் போட்டு விடும்! அப்படியானால் எனக்கு எல்லாம் ஒன்றுதான். நான் சரண் அடைகிறேன்.''

சுவோக் மிகப் பெரிய கைத்துப்பாக்கி பிடித்திருந்த சின்னக் கையைத் தொங்க விட்டு, அமைதியாகப் பேசினாள்.

ஆனால் குண்டு வெடித்தது. சுரங்க வழியில் தப்பி ஓடிய புரோஸ்பெரோ தன் பின் பாய்ந்து வந்த சிறுத்தையைச் சுட்ட சத்தம் அது.

காவல் படையினர் பாத்திரத்தைச் சூழ்ந்து மொய்த்தார்கள். பழப்பாகு ஏரி அவர்களுடைய மிகப் பெரிய பூட்சுகளைப் பாதி வரை மூழ்கடித்தது.

ஒருவன் பாத்திரத்தில் எட்டிப் பார்த்தான். பிறகு அவன் அங்கே கையை விட்டு இழுத்தான். இன்னும் இரண்டு பேர் அவனுடைய உதவிக்கு வந்தார்கள். சுரங்க வழியில் மாட்டிக் கொண்டிருந்த உயிரற்ற சிறுத்தையை வெகு சிரமத்துடன் வாலைப் பிடித்து இழுத்து வெளியேற்றினார்கள் அவர்கள்.

''இது செத்துப் போயிற்று'' என்று மூச்சு வாங்கக் கூறினான் ஒரு காவல் படைக்காரன்.

''உயிரோடிருக்கிறான்! பிழைத்து விட்டான்! அவனை நான் காப்பாற்றினேன்! மக்களின் நண்பனை நான் காப்பாற்றி விட்டேன்!''

இப்படி மகிழ்ந்தாள் சுவோக், பாவம், சிறுமி சுவோக். அவளுடைய கவுன் கிழிந்திருந்தது. தலை மயிரிலும் செருப்பிலும் இருந்த தங்க ரோஜாப் பூக்கள் மிதிபட்டுச் சிதைந்திருந்தன.



மகிழ்ச்சியால் அவள் ரோஜா போலச் சிவந்தாள்.

அவளுடைய நண்பன், சர்க்கஸ்காரன் திபூல் ஒப்படைத்த பொறுப்பை அவள் நிறை வேற்றி விட்டாள்: கருமான் புரோஸ்பெரோவை அவள் சிறையிலிருந்து விடுவித்து விட்டாள்.

''அப்படியா!'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான் ஒரு காவல் படைக்காரன். ''பிரமாதமாகப் புகழப்படும் பொம்மையே, பார்ப்போம் இனி என்ன செய்வாய் என்று! பார்ப்போம்!..''

''இவளை மூன்று தடியர்களிடம் கூட்டிப் போவோம்...''

''அவர்கள் உனக்கு மரண தண்டனை விதிப்பார்கள்.''

ரோஜா நிற லேஸில் இருந்த பழப்பாகை நக்கினுள் சுவோக். புரோஸ்பெரோ மிட்டாய்ச் சாலையைத் தவிடுபொடி ஆக்கின போது அவளுடைய கவுனில் தெறித்திருந்தது இந்தப் பாகு. அதை நக்கி விட்டுப் படையினனைப் பார்த்து அமைதியாக, ''முட்டாள்'' என்ருள்.



## அத்தியாயம் 12

# நட்டுவனர் தாதக்கத்தையார்



குட்டு வெளியாகி விட்ட பொம்மையின் கதி அப்புறம் என்ன ஆயிற்ருே, இப்போதைக்குத் தெரியவில்லே. வேறு சில நிகழ்ச்சிகளின் விளக்கத்தையும் நாம் தற்போதைக்குத் தரப் போவதில்லே. அதாவது: மரத்தில் உட்கார்ந்திருந்த கிளி எது? தோய்த்த சட்டை போல் ஒருவேளே. இந்நேரம் வரை கிளேயில் தொங்கிக் கொண்டிருக்கும் மதிப்புக்குரிய விலங்கியலார் எதனுல் பயந்து போனுர்? கருமான் புரோஸ்பெரோ விடுதலே ஆனது எப்படி, சிறுத்தை வந்தது எங்கிருந்து? சுவோக் கருமானுடைய தோளில் சாய்ந்திருந்தது எவ்விதத்தில்? மனிதப் பேச்சு பேசிய அந்த விகிருதி யார், சுவோக்குக்கு அது கொடுத்த பலகை எப்படிப்பட்டது, அந்த விதிருதி இறந்தது ஏன்?.. இவற்றுக்கு எல்லாம் விளக்கம் உரிய நேரத்தில் தரப்படும். ஒன்று மட்டும் உங்களுக்கு உறுதியாகச் சோல்லி விடுகிறேன்: எந்த விதமான அற்புதங்களும் நிகழ்ந்து விடவில்லே. விஞ்ஞானிகள் சொல்வது போல, தர்க்கத்தின் இரும்பு விதிகளின் படியே எல்லாம் நடந்தேறின. இப்போது காலே நேரம். இந்தக் காலேயில் இயற்கை வியப்பூட்டும் அழகுடன் திகழ்ந்தது. வெள்ளாடு போன்ற உணர்ச்சி ததும்பும் முகத் தோற்றம் கொண்ட ஒரு முது கன்னியைக் குழந்தைப் பருவம் முதல் தொல்லேப்படுத்தி வந்த தலேவலி கூட நின்று விட்டது. அந்தக்காலே நேரத்தில் காற்று அப்பேர்ப்பட்டதாக இருந்தது. மரங்கள் சலசலக்கவில்லே, குழந்தைகளின் குதூகலக் குரல்களில் பாடின.

அந்த மாதிரிக் காலே நேரத்தில் நடனம் ஆட எல்லோருக்குமே விருப்பம் உண்டாகும். ஆகவே, நட்டுவனர் தாதக்கத்தையாரின் நடனக் கூடம் நிரம்பி வழிந்ததில் வியப்பு இல்லே.

வயிறு காலியாய் இருக்கும் போது நடனம் ஆட முடியாதே. துயரம் கவிந்திருக்கும் போதும் அப்படியே. ஆனல் வெறும் வயிறுகளும் துயரம் தோய்ந்த உள்ளங்களும், மூன்று தடியர்களின் அரண்மனை மேல் மறுபடி தாக்கு நடத்துவதற்காக இன்று தொழிலாளர் குடியிருப்பு வட்டாரங்களில் கூடியவர்களுக்குத்தான் இருந்தன. பகட்டர்களும் சீமாட்டிகளும் பெருந்தீனிக்காரர்களுடையவும் பணக்காரர்களுடையவும் புதல்வர்களும் புதல்விகளுமோ, உல்லாச மனநிலையில் இருந்தார்கள். ஏழைகளும் பசித்தவர்களுமான தொழிலாளி மக்களைச் சர்க்கஸ்காரன் திபூல் படையாகத் திரட்டிக் கொண்டிருக்கிறுன் என்பது அவர்களுக்குத் தெரியாது. எவனை மக்கள் ஒரே ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ அந்தக் கருமான் புரோஸ் பெரோவை நர்த்தகி சுவோக் விடுவித்து விட்டாள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அழகான, ஆனல் கூர் மூக்குள்ள ஒரு இளஞ் சீமாட்டி நடனக் காலணிகளைத் தயார் செய்து கொண்டே சொன்னுள்: ''அற்ப விஷயம்! இவர்கள் அரண்மனையைத் தாக்க மறுபடி



கிளம்பினுல் காவல் படைக்காரர்கள் போன தடவை போலவே இந்தத் தடவையும் இவர்களைக் கொன்று ஒழித்து விடுவார்கள்!''

''சந்தேகம் இல்லாமல்! இந்தச் சுரங்கம் தோண்டுபவர்களிடமும் அழுக்குப் பிடித்த கம்மியர்களிடமும் துப்பாக்கிகளோ, கைத்துப்பாக்கிகளோ வாள்களோ இல்லை. காவல் படைக்காரர்களிடமோ, பீரங்கிகள் கூட இருக்கின்றன'' என்று ஆப்பிளைக் கடித்தபடித் தன் பிராக்கோட்டைப் பார்வையிட்டுக் கொண்டே கூடப் பாடினுன் ஒரு பகட்டன்.

கவலை அற்றவர்களும் சுயதிருப்தி கொண்டவர்களுமான மனிதர்கள் இணை இணையாகத் தாதக்கத்தையாரின் வீட்டுக்கு வந்தார்கள்.

அவர் வீட்டு வாசலில் பின்வருமாறு எழுதிய விளம்பரப் பலகை தொங்கிற்று:




வட்ட நடனக் கூடத்தின் தேன் நிறமான மெருகிட்ட பெரிய பிளாச்சுத் தரையில் தமது கலையைப் போதித்து வந்தார் தாதக்கத்தையார். அவரே கறுப்புப் புல்லாங்குழல் வாசித்து வந்தார். லேஸ் முன்பகுதிகளும் வெள்ளை நிற ஆட்டுக்குட்டித் தோல் உறைகளும் அணிந்த கைகளை அவர் ஓயாமல் ஆட்டிக் கொண்டிருந்ததால் புல்லாங்குழல் அவர் உதடுகளோடு சேர்ந் திருந்தது ஏதோ மாயந்தான். அவர் உடம்பை வளைத்து அபிநயம் பிடித்தார், விழிகளை உருட் டினார், குதிகளால் தாளம் போட்டார், நொடிக்கு ஒரு தரம் கண்ணாடி முன்னே நின்று தாம் அழகாய் இருக்கிறாரா, ரிப்பன்கள் தமக்குப் பாந்தமாய் இருக்கின்றனவா, நறுமணச் சாந்து பூசிய தலை பளிச்சிடுகிறதா என்று பார்த்த வண்ணமாய் இருந்தார்...

இணைகள் சுழன்று ஆடின. அவை மிக நிறைய இருந்தன, மிக அதிகமாக வியர்த்து வடிந்தன. ஆகையால், கலப்படமான ஏதோ சூப்பு கொதிப்பது போலவும் அது ருசியாய் இருக்க முடியாது என்றும் எண்ணம் உண்டாயிற்று.

பொதுக் களேபரத்தில் சுழன்று ஆடிக் கொண்டிருந்த சீமாட்டியோ அவளுடைய நடனத் துணைவனோ, வால் போன்று வேர் நீண்டிருக்கும் டர்னிப்புக் கிழங்கோ, முட்டைக் கோசு இலையோ, அல்லது சூப்புத்தட்டில் இருக்கக் கூடிய வண்ணமும் விந்தை வடிவமும் கொண்ட ஏதேனும் விளங்காத பண்டமோ போலக் காணப்பட்டார்கள்.

இந்தச் சூப்பில் கரண்டியின் பணியைச் செய்து கொண்டிருந்தார் தாதக்கத்தையார். அவர் மிகவும் நெட்டையாகவும் ஒடிசலாகவும் வளைந்தும் இருந்ததால் இந்த உருவகம் அவருக்கு இன்னும் நன்றாகப் பொருந்தியது.

ஆகா, இந்த நடனங்களை மட்டும் சுவோக் பார்த்திருந்தால் எப்படிக் கெக்கலி கொட்டிச் சிரித்திருப்பாள்! ''அசட்டு அரசன்'' ஊமை நாடகத்தில் தங்க முட்டைக் கோசுத் தண்டின் பாத்திரத்தில் நடித்த போது கூட அவள் இதை விட எவ்வளவோ அதிக ஒயிலுடன் நடனம் ஆடினாள். இவ்வளவிற்கும் முட்டைக் கோசுத் தண்டுகள் ஆடுவது போல அவள் ஆட வேண்டி இருந்தது.

நடனம் உச்சக் கட்டத்தில் இருந்த போது முரட்டுத் தோல் கையுறைகள் அணிந்த மூன்று பெரிய முட்டிகள் நட்டுவனார் தாதக்கத்தையாரின் வீட்டுக் கதவைத் தட்டின.

தோற்றத்தில் இந்த முட்டிகளுக்கும் நாட்டுப்புறத்து மட்பாண்டங்களுக்கும் இருந்த வேறுபாடு மிகக் குறைவு.

''சூப்பு'' கொதிப்பது நின்றது.

ஐந்து நிமிடங்கள் பொறுத்து நட்டுவனார் தாதக்கத்தையார் மூன்று தடியர்களின் அரண்மனைக்கு அழைத்துப் போகப்பட்டார். மூன்று காவல் படைக்காரர்கள் அவரை அழைத்துப் போகக் குதிரைகள் மேல் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் நட்டுவனாரின் முதுகு தன் முதுகோடு சேர்ந்து இருக்கும்படி அவரைக் குதிரையின் பிட்டத்தில் உட்கார வைத்துக் கொண்டான். வேறு வார்த்தைகளில் சொன்னால், தாதக்கத்தையார் பின்புறத்தை முன்னே காட்டியபடிச் சவாரி செய்தார். இன்னொரு காவல் படைக்காரன் அவருடைய பெரிய அட்டைப் பெட்டியைத் தன்னிடம் வைத்துக் கொண்டான். மிகவும் இடம் அகன்ற பெட்டி அது.

''சில உடைகளையும் இசைக் கருவிகளையும் பொய்மயிர்த் தொப்பிகளையும் இசைக் குறிப்புகளையும் அன்புக்கு உகந்த பாட்டுப் புத்தகங்களையும் நான் எடுத்துப் போக வேண்டுமே. அரண்மனையில் நான் எவ்வளவு நேரம் இருக்க வேண்டி வருமோ தெரியாது. நானோ, ஒயிலுக்கும் அழகுக்கும் பழக்கப்பட்டவன், ஆகையால் உடையை அடிக்கடி மாற்றிக் கொள்வது எனக்குப் பிடிக்கும்'' என்று பயணத்துக்கு ஏற்பாடு செய்கையில் சொன்னார் தாதக்கத்தையார்.

நடனம் ஆடிக் கொண்டிருந்தவர்கள் குதிரைகளின் பின்னே ஓடி, கைக்குட்டைகளை ஆட்டி நட்டுவனாருக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

சூரியன் உச்சியில் இருந்தது.

அரண்மனைக்கு அழைக்கப்பட்டதால் தாதக்கத்தையார் மகிழ்ச்சி அடைந்தார். மூன்று தடியர்களை அவருக்குப் பிடித்திருந்தது, ஏனென்றால் அவர்களுக்குச் சளைக்காத தடியர்களான பணக்காரர்களின் புதல்வர்களும் புதல்விகளும் அவர்கள் மேல் அன்பு கொண்டிருந்தார்கள். பணக்காரன் எந்த அளவுக்கு அதிகப் பணக்காரனாய் இருந்தானோ, தாதக்கத்தையாருக்கு அவனை அந்த அளவுக்கு அதிகமாகப் பிடித்திருந்தது.

அவர் இந்த மாதிரித் தர்க்கம் செய்து கொண்டார்: ''பார்க்கப் போனால் ஏழைகளால் எனக்கு என்ன பயன்? அவர்கள் நடனம் ஆடக் கற்றுக் கொள்வார்களா? அவர்கள் ஓயாமல் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்களிடம் பணமே இருப்பதில்லை. பணக்கார வர்த்தகர்கள், பணக்காரப் பகட்டர்கள், சீமாட்டிகள் ஆகியவர்களின் விஷயமே வேறு! இவர்களிடம்

எப்போதும் நிறையப் பணம் இருக்கிறது, அதோடு இவர்கள் ஒருபோதும் ஒரு வேலேயும் செய்வது கிடையாது.''

பார்த்தீர்களா, தாதக்கத்தையார் தம் நோக்குப்படி அசடர் அல்ல, ஆனுல் நம் நோக்குப் படியோ, அசடர்.

சின்னஞ் சிறு நர்த்தகி சுவோக்கைப் பற்றி நினைக்கும் போது அவர் ஆச்சரியப்பட்டார். ''மூடப் பெண் இவள்! ஏழைகளுக்கும் படையினருக்கும் கம்மியர்களுக்கும் கந்தலாண்டிக் குழந்தைகளுக்கும் முன்னுல் இவள் எதற்காகத்தான் நடனம் ஆடுகிருளோ? அவர்கள் இவளுக்கு அற்பக் காசுகள் தானே கொடுக்கிருர்கள்!'' என்று சொல்லிக் கொண்டார்.

இந்த ஏழைகள், கம்மியர்கள், கந்தல் உடுத்திய குழந்தைகள் ஆகியவர்களின் தலைவனை—கருமான் புரோஸ்பெரோவை—தப்புவிப்பதற்காக இந்தச் சின்னஞ் சிறு நர்த்தகி தன் உயிரை ஆபத்துக்கு உள்ளாக்கினுள் என்பதை அறிந்தால் அசடர் தாதக்கத்தையார் கட்டாயமாக இன்னும் அதிக வியப்பு அடைந்திருப்பார்.

சவாரிக்காரர்கள் குதிரைகளைப் பாய்ச்சலில் விரட்டிச் சென்றுர்கள்.

வழியில் மிகவும் விந்தையான நிகழ்ச்சிகள் நடந்தன. தொலேவில் துப்பாக்கி வெடிகளின் சத்தம் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தது. நகர வாயிலின் பக்கத்தில் கிளர்ச்சி அடைந்த மனிதர்களின் கும்பல்கள் நெரிந்தன. சில வேளைகளில் கைத்துப்பாக்கிகளைத் தயாராகப் பிடித்துக் கொண்டு வீதி வழியே ஓடினுர்கள் இரண்டு மூன்று கம்மியர்கள்... இவ்வளவு அருமையான பகலில் கடைக்காரர்களுக்கு வியாபாரம் பிரமாதமாக நடக்குமே என்று தோன்றியது. ஆனுல் அவர்களோ, சன்னல்களைச் சாத்தி விட்டு, தங்கள் பளபளப்பான பருத்த கன்னங்களைப் பலகணிப் பக்கத் திறப்புக்களிலிருந்து வெளியே நீட்டி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருப்பிட வட்டாரங்களில் ஒன்றிலிருந்து மற்ருென்றுக்குச் செய்தி விடுத்துக் கொண்டிருந்தன வெவ்வேறு குரல்கள்:

''புரோஸ்பெரோ!''

''புரோஸ்பெரோ!''

''அவன் நம்முடன் இருக்கிருன்!''

''நம்-முடன் இருக்-கிருன்!''

சில வேளைகளில், மட்டு மீறிச் சூடேறி நுரை சிந்திக் கொண்டிருந்த குதிரை மேல் பாய்ந்து சென்றுன் ஒரு காவல் படையினன். வேறு சில வேளைகளில் எவனுவது தடியன் மூச்சு இரைக்கச் சந்துகளில் புகுந்து ஓடினுன். தங்கள் எசமானைக் காப்பதற்காகத் தடிகளைத் தயாராகப் பிடித்துக் கொண்டு அவனுக்கு இரு பக்கங்களிலும் ஓடினுர்கள் செம்பழுப்புத் தலையினரான வேலேயாட்கள்.

ஓர் இடத்தில் இந்த மாதிரி வேலேயாட்கள் தங்கள் கொழுத்த எசமானைக் காப்பதற்குப் பதிலாக முற்றிலும் எதிர்பாராத விதமாகத் தாங்களே அவனை நொய்யப் புடைத்து, அந்த வட்டாரம் முழுவதிலும் கேட்கும்படி ஆரவாரம் செய்தார்கள்.

அவர்கள் துருக்கியச் சோபாவிலிருந்து தூசியை அடித்துப் போக்குகிருர்கள் என்று முதலில் நினைத்தார் தாதக்கத்தையார்.

மூன்று டஜன் அடிகளைப் பொழிந்த பிறகு வேலேயாட்கள் கொழுத்த எசமானுடைய பிட்டத்தில் ஒருவர் பின் ஒருவராக உதைத்து விட்டு, ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு, தடிகளை ஆட்டியபடி, எங்கோ ஓடினுர்கள்.

''மூன்று தடியர்கள் ஒழிக! பணக்காரர்களுக்குத் தொண்டு செய்ய நாங்கள் விரும்பவில்லே! மக்கள் நீடூழி வாழ்க!'' என்று அவர்கள் முழங்கினுர்கள்.

குரல்கள் ஒன்றுக்கு ஒன்று எதிர் முழக்கம் செய்தன:

''புரோஸ்பெரோ!''

''புரோ-ஓ-ஸ்பெ-ஏரோ!''



சுருங்கச் சொன்னால், பெருத்த கலவரம் நிலவிற்று. காற்றில் வெடி மருந்து நாற்றம் அடித்தது. முடிவில், கடைசி நிகழ்ச்சி நடந்தது.

தாதக்கத்தையாரை அழைத்துப் போய்க் கொண்டிருந்த காவல் படைக்காரர்களை அவர்களுடைய பத்து தோழர்கள் தடுத்தார்கள். இவர்கள் காலாட்படையினர்.

''நில்லுங்கள்! நீங்கள் யார்?'' என்றான் அவர்களில் ஒருவன். அவனுடைய இள நீல விழிகள் கோபத்தால் தழல் வீசின.

''தெரியவில்லையோ?'' என்று அவன் போலவே கோபம் பொங்கக் கேட்டான் தாதக்கத்தையாரை முதுகுக்குப் பின்னால் உட்கார்த்திக் கொண்டிருந்த காவல் படையினன்.

முழு வேகத்தில் வந்து கொண்டிருந்த போது நிறுத்தப்பட்ட குதிரைகளுக்கு நிலை கொள்ளவில்லை. சேணங்கள் நடுங்கின. நட்டுவனார் தாதக்கத்தையாருக்கோ, தொடை நடுங்கிற்று. இரண்டில் எது அதிகமாக நடுங்கிற்றோ, தெரியவில்லை.

''மூன்று தடியர்களுடைய அரண்மனைக் காவல் படையினர் நாங்கள்.''

''நாங்கள் அவசரமாக அரண்மனைக்குப் போகிறோம். எங்களை உடனே போக விடுங்கள்.''

இடையில் கட்டியிருந்த மப்ளரிலிருந்து கைத்துப்பாக்கியை உருவிக் கொண்டான் இள நீலக் கண்ணன்.

''அப்படியானால் உங்கள் கைத்துப்பாக்கிகளையும் வாட்களையும் கொடுத்து விடுங்கள். படை வீரனின் ஆயுதங்கள் மக்களுக்குத்தான் தொண்டு செய்ய வேண்டும், மூன்று தடியர்களுக்கு அல்ல'' என்றான்.

காவலாட்கள் எல்லோரும் சவாரிக்காரர்களைச் சூழ்ந்து கொண்டு கைத்துப்பாக்கிகளை உருவிக் கொண்டார்கள்.

சவாரிக்காரர்கள் தங்கள் ஆயுதங்களை எடுக்க முற்பட்டார்கள். தாதக்கத்தையார் மூர்ச்சை போட்டுக் குதிரையிலிருந்து விழுந்தார். அவருக்கு எப்போது மூர்ச்சை தெளிந்ததோ, நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் அவரை அழைத்து வந்த காவல் படையினருக்கும் அவர்களைத் தடுத்தவர்களுக்கும் இடையே சண்டை முடிந்த பிறகுதான் என்பது உறுதி. தடுத்தவர்கள் வெற்றி அடைந்தார்கள் என்று தெரிந்தது. எவனுடைய முதுகுக்குப் பின்னால் தாம் உட்கார்ந்திருந்தாரோ அவனைத் தாதக்கத்தையார் கண்டார். அவன் செத்துக் கிடந்தான்.

''இரத்தம்'' என்று குழற்றி, கண்களை மூடிக் கொண்டார் தாதக்கத்தையார்.

ஆனால் ஒரு விநாடிக்குப் பிறகு அவர் கண்டது மூன்று மடங்கு அதிக வலிமையுடன் அவரை உலுக்கிப் போட்டது.

அவருடைய அட்டைப் பெட்டி உடைபட்டிருந்தது. அவருடைய உடைமைகள் பெட்டியின் துணுக்குகளிலிருந்து வெளியே சிதறிக் கிடந்தன. அவருடைய அருமையான உடைகளும் பாட்டுப் புத்தகங்களும் பொய்மயிர்த் தொப்பிகளும் சாலைப் புழுதியில் கிடந்தன...

''ஐயோ!..''

சண்டை மும்முரத்தில் காவல் படைக்காரன் தன் பொறுப்பில் இருந்த பெட்டியைத் தவற விடவே அது சாலைக் கல்லில் மோதி உடைந்து விட்டது. ''அடாடா! ஐயோ!''

தாதக்கத்தையார் தம் உடைமைகளைத் திரட்டுவதற்காகப் பாய்ந்தார். மார்புச் சட்டைகள், பிராக் கோட்டுகள், காலுறைகள், மலிவானவை என்றாலும் முதல் பார்வைக்கு அழகான வார்ப்பூட்டுகள் உள்ள செருப்புகள் முதலியவற்றை ஆவேசத்துடன் திரட்டியவர், மறுபடி தரையில் உட்கார்ந்து விட்டார். அவருடைய துயரத்துக்குக் கங்கு கரை இல்லை. எல்லாச் சாமான்களும் எல்லாத் துணிமணிகளும் இருந்தன, ஆனால் முக்கியமானது பறிபோய் விட்டது.

தாதக்கத்தையார் பன் ரொட்டி போல் இருந்த முட்டிகளை இள நீல வானத்தை நோக்கி ஆட்டினார். தமது ஆற்றாமையை அவர் இப்படி வெளியிட்டுக் கொண்டிருக்கையில் மூன்று சவாரிக்காரர்கள் மூன்று தடியர்களின் அரண்மனைக்குக் குதிரைகளை நாற்கால் பாய்ச்சலில்

COMICS PDF TIMES

விரட்டிக் கொண்டு போனுர்கள்.

சண்டைக்கு முன்னுல் அவர்களுடைய குதிரைகள் தாதக்கத்தையாரை அழைத்து வந்த காவல் படைக்காரர்களுடையவையாக இருந்தன. சண்டையின் போது ஒரு குதிரை வீரன் கொல்லப்பட்டான், மற்றவர்கள் சரண் அடைந்து மக்களின் தரப்புக்கு வந்து விட்டார்கள். தாதக்கத்தையாரின் உடைந்த பெட்டியில் சல்லாத் துணியில் சுற்றிய ரோஜா நிறமான ஒரு பொருள் வெற்றியாளர்களுக்குக் கிடைத்தது.

அப்போது வெற்றியாளர்களில் மூவர் வென்று கைப்பற்றிய குதிரைகள் மேல் ஏறிப் பாய்ந்து சென்ருர்கள்.

குதிரையேறி முன்னே போன இள நீல விழியஞன காவல் படையினன் சல்லாத் துணியில் சுற்றிய ரோஜா நிறமான ஒரு பொருளே மார்போடு அணேத்துக் கொண்டிருந்தான்.

எதிரே வந்தவர்கள் ஒரு பக்கம் துள்ளி விலகினுர்கள். இள நீலக் கண்ணனின் தொப்பியில் சிவப்புச் சின்னம் இருந்தது. அவன் மக்களின் தரப்புக்கு வந்து விட்டதை அது காட்டிற்று.

எதிர்ப்பட்டவர்கள் தடியர்களோ பெருந்தீனிக்காரர்களோ இல்லே என்ருல் அவனே ஆதரித்து உற்சாகப்படுத்தினுர்கள். ஆனுல் உற்றுப் பார்த்ததும் வியப்பினுல் கல்லாய்ச் சமைந்து விட்டார் கள்: காவல் படையினன் மார்போடு சேர்த்து அணேத்துக் கொண்டிருந்த மூட்டையிலிருந்து தொங்கின ஒரு சிறுமியின் கால்கள். வார்ப்பூட்டுகளுக்குப் பதில் தங்க ரோஜாப் பூக்கள் வைத்த ரோஜா நிறச் செருப்புகளே அணிந்திருந்தன அந்தக் கால்கள்...



## அத்தியாயம் 13

# வெற்றி



அசாதாரண நிகழ்ச்சிகள் நடந்த காலையை நாம் சற்று முன் வருணித்தோம். இந்தக் காலைக்கு முந்திய இரவும் வியப்பூட்டும் நிகழ்ச்சிகளில் இதற்குக் குறையாததாக இருந்தது உங்களுக்குத் தெரியும். வாருங்கள், இப்போது அந்த இரவுக்குத் திரும்பவோம்.

அந்த இரவில் கருமான் புரோஸ்பெரோ மூன்று தடியர்களின் அரண்மனையிலிருந்து தப்பி வெளியேறினான். அந்த இரவில் சுவோக் குற்றம் நடந்த இடத்தில் பிடிபட்டாள்.

தவிரவும், அந்த இரவில் மூன்று மனிதர்கள் மூடிய கைவிளக்குகளுடன் வாரிசு துத்தியின் உறங்கறைக்குள் புகுந்தார்கள்.

கருமான் புரோஸ்பெரோ அரண்மனை மிட்டாய்ச் சாலையைத் தவிடு பொடி ஆக்கினதும் காவல் படையினர் சுவோக்கை வெளியேறும் பாத்திரத்தின் பக்கத்தில் சிறை பிடித்ததும் நடந்ததற்கு ஏறக்குறைய ஒரு மணி நேரம் பொறுத்து இது நிகழ்ந்தது.

உறங்கறையில் இருட்டாய் இருந்தது.

உயரமான சன்னல்கள் வழியே தெரிந்த வானப் பகுதியில் விண்மீன்கள் மொய்த்திருந்தன.

பையன் மிக அமைதியாகவும் ஓசை இல்லாமலும் மூச்சு விட்டபடி ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

மூன்று ஆட்களும் தங்கள் கைவிளக்குகளின் வெளிச்சத்தை மறைக்க எல்லா வகையிலும் முயன்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களோ, தெரியாது. கிசுகிசுப்பு தான் கேட்டுக்

கொண்டிருந்தது. உறங்கறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த பாராக்காரன் ஒன்றுமே நடக்காதது போலத் தொடர்ந்து நின்று கொண்டிருந்தான்.

வாரிசின் அறைக்குள் வந்தவர்கள் அவனுடைய உறங்கறையில் விரும்பியதைச் செய்ய ஏதோ உரிமை பெற்றிருந்தார்கள் போலும்.

வாரிசு துத்தியின் வளர்ப்பு ஆசிரியர்கள் துணிவுக்குப் பேர் போனவர்கள் அல்ல என்பதை நீங்கள் ஏற்கெனவே அறிவீர்கள். பொம்மை விஷயத்தில் நடந்தது உங்களுக்கு நினைவு இருக்கும். காவல் படையினர் பொம்மையை வாட்களால் குத்திச் சிதைத்த பயங்கர நிகழ்ச்சி தோட்டத்தில் நடந்த போது வளர்ப்பு ஆசிரியன் எப்படி விலவிலத்துப் போனான் என்பது உங்களுக்கு மறந்திருக்காது. மூன்று தடியர்களுக்கு இந்த நிகழ்ச்சியை விவரித்த போது வளர்ப்பு ஆசிரியன் எவ்வளவு திகில் அடைந்தான் என்பதை நீங்கள் பார்த்தீர்கள்.

இப்போது முறை வேலையில் இருந்த வளர்ப்பு ஆசிரியனும் அதே மாதிரிக் கோழையாக இருந்தான்.

நீங்களே பாருங்கள்: இன்னார் என்று தெரியாத மூன்று பெயர் கைவிளக்குகளுடன் உறங்கறைக்குள் புகுந்த போது அவன் அங்கே இருந்தான். வாரிசின் தூக்கத்துக்கு இடைஞ்சல் நேராமல் காப்பதற்காக அவன் சன்னலின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். தூக்கம் வராதிருக்கும் பொருட்டு விண்மீன்களை உற்று நோக்கித் தன் வானவியல் அறிவைச் சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் கதவு கிறீச்சிட்டது, வெளிச்சம் பளிச்சிட்டது, மூன்று மர்ம உருவங்கள் தென்பட்டன. உடனே வளர்ப்பு ஆசிரியன் சாய்வு நாற்காலியில் பதுங்கிக் கொண்டான். தன்னுடைய நீண்ட மூக்கு தலையோடு சேர்த்துத் தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்றே எல்லாவற்றிலும் அதிகமாக அவன் அஞ்சினான். உண்மையாகவே வியப்பூட்டிய அந்த மூக்கு விண்மீன்கள் மினுமினுத்த சன்னலின் பின்னணியில் துலக்கமாகக் கறுப்பாய்த் தெரிந்தது, சட்டென்று பார்வையில் படக் கூடியதாக இருந்தது.

ஆனாலும் அந்தக் கோழை இப்படி எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டான்: ''இது சாய்வு நாற்காலிக் கைமேல் உள்ள ஒரு வகை அலங்காரம் என்றோ அல்லது எதிர் வீட்டுக் கூரை விளிம்பு என்றோ அவர்கள் ஒருவேளை நினைக்கலாம்.''

கைவிளக்குகளின் மஞ்சள் வெளிச்சத்தால் கொஞ்சம் ஒளியுறுத்தப்பட்ட மூன்று உருவங்களும் வாரிசின் கட்டிலை நெருங்கின.

''இருக்கிறான்'' என்றது ஒரு கிசுகிசுக் குரல்.

''தூங்குகிறான்'' என்றது இரண்டாவது.

''உஷ்ஷ்!..''

''பரவாயில்லை. இவன் அயர்ந்து தூங்குகிறான்.''

''சரி, வேலை தொடங்குங்கள்.''

எதுவோ கிணுகிணுத்தது.

வளர்ப்பு ஆசிரியனின் நெற்றியில் அச்சத்தால் வியர்வை துளிர்த்தது. தன்னுடைய மூக்கு பயத்தினால் வளர்வதாக அவனுக்குத் தோன்றியது.

''தயார்'' என்று சீறியது ஒரு குரல்.

''தொடங்குங்கள்.''

மறுபடி எதுவோ கிணுகிணுத்தது, பின்பு களகளத்துப் பெருகியது. பிறகு நிசப்தம் மீண்டும் குடி கொண்டது.

''எங்கே விடுவது?''

''காதில்.''

''இவன் தலையை ஒருக்கணித்துப் படுத்திருக்கிறான். இது நிரம்பச் சௌகரியம். காதில் விடுங்கள்...''

''ஆனால் சாக்கிரதையாக. துளித்துளியாக.''

''எண்ணிப் பத்து துளிகள்.''

''முதல் துளி தாங்க முடியாதபடிச் சில்லென்று இருக்கும், ஆனால் இரண்டாவது உணர்ச்சியில் படவே படாது, ஏனென்றால் முதல் துளி உடனே செயல்பட்டு விடும். அதற்குப் பின் எல்லா உணர்ச்சியும் மரத்துப் போகும்.''

''முதல் துளிக்கும் இரண்டாவது துளிக்கும் நடுவில் இடைவெளியே இல்லாதபடி நீர்மத்தை விடப் பாருங்கள்.''

''இல்லாவிட்டால் பையன் பனிக்கட்டி பட்டது போல விழித்துக் கொள்வான்.''

''உஷ்ஷ்!.. விடுகிறேன்... ஒன்று, இரண்டு!..'' இளவேனில் மலரின் மூக்கைத் துளைக்கும் மணத்தை வளர்ப்பு ஆசிரியன் அப்போது உணர்ந்தான். வாசனை அறை நெடுகப் பரவிற்று.

''மூன்று, நான்கு, ஐந்து, ஆறு...'' என்று கிசுகிசுக் குரலில் விரைவாக எண்ணினான் ஒருவன்.

''ஆயிற்று.''

''இனி மூன்று நாட்கள் இடை விடாமல் தூங்குவான்.''

''தன் பொம்மைக்கு என்ன நேர்ந்தது என்பது இவனுக்குத் தெரியப் போவதில்லை...''

''காரியம் எல்லாம் முடிந்த பிறகுதான் இவன் கண் விழிப்பான்.''

''இல்லாவிட்டால் இவன் அழவும் கால்களைத் தொப்பென்று அடிக்கவும் தொடங்கி இருப்பான், கடைசியில் மூன்று தடியர்கள் அந்தப் பெண்ணை மன்னித்து அவளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்திருப்பார்கள்...''

இனம் தெரியாத மூன்று ஆட்களும் மறைந்து விட்டார்கள். நடுங்கிக் கொண்டிருந்த வளர்ப்பு ஆசிரியன் எழுந்தான். நாரத்தம் பூவின் வடிவத்தில் எரிந்த சிறு விளக்கை ஏற்றி, கட்டிலின் பக்கத்தில் போனான்.

லேஸ் உள்ளாடைகள் அணிந்து, பட்டுத் துணிகள் போர்த்து, சின்னவனாக, பெருமிதம் ததும்பத் தூங்கிக் கொண்டிருந்தான் வாரிசு துத்தி.

கலைந்த பொன் மயிர் அடர்ந்த அவனது தலை பிரமாண்டமான தலையணைகள் மேல் கிடந்தது.

வளர்ப்பு ஆசிரியன் குனிந்து, விளக்கைச் சிறுவனுடைய வெளிறிய முகத்தின் அருகே கொண்டு போனான். சிப்பியில் முத்துப் போலச் சின்னக் காதில் பளிச்சிட்டது ஒருதுளி.

அதில் பசும் பொன் நிறம் ஒளிர்ந்தது. வளர்ப்பு ஆசிரியன் சுண்டு விரலால் அதைத் தொட்டான். சின்னக் காதில் ஒன்றும் மிச்சம் இல்லை, ஆனால் வளர்ப்பு ஆசிரியனுடைய கை பூராவிலும் சுரீர் என்று பாய்ந்தது தாங்க முடியாத கடுங் குளிர்.

சிறுவன் விழிப்பூட்ட முடியாத தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

சில மணி நேரம் சென்ற பின், நம் வாசகர்களுக்கு வருணித்துக் கூற நமக்கு ஏற்கெனவே வாய்த்த இனிய காலை புலர்ந்தது.

அந்தக் காலையில் நட்டுவனார் தாதக்கத்தையாருக்கு என்ன நேர்ந்தது என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்தக் காலையில் சுவோக்குக்கு நேர்ந்தது என்ன என்பதை அறிய நமக்கு எவ்வளவோ அதிக ஆவலாய் இருக்கிறது. அவளைப் படு கோரமான நிலைமையில் விட்டு வந்தோமே!

அவளை நிலவறையில் அடைத்து வைப்பது என்று முதலில் முடிவு செய்யப்பட்டது.

''வேண்டாம், அது மட்டு மீறிச் சிக்கலான காரியம். விரைவான, நியாயமான விசாரணை நடத்துவோம்'' என்றான் அரசு அமைச்சன்.

''உண்மைதான். இந்தப் பெண்ணோடு சள்ளைப்பட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை'' என்று இசைந்தார்கள் மூன்று தடியர்கள்.

ஆனாலும், மூன்று தடியர்கள் சிறுத்தைக்குத் தப்பி ஓடுவதில் அரும் பாடு பட்டிருந் தார்கள் என்பதை மறக்காதீர்கள். இளைப்பாறுவது அவர்களுக்கு இன்றியமையாததாக இருந் தது. அவர்கள் இப்படிச் சொன்னார்கள்:

''நாங்கள் கொஞ்ச நேரம் தூங்குகிறோம். காலையில் வழக்கு விசாரணை நடத்துவோம்.''

இப்படிச் சொல்லி விட்டுத் தங்கள் தங்கள் உறங்கறைகளுக்குப் போய் விட்டார்கள்.



பொம்மையாக நடித்த பெண்ணுக்கு நீதி மன்றம் மரண தண்டனை விதிக்கும் என்பதில் அரசு அமைச்சனுக்குச் சந்தேகமே இருக்கவில்லை. ஆகவே, வாரிசு துத்தி தன் கண்ணீரால் மரண தண்டனையைக் குறைக்கும்படி செய்து விடக் கூடாது என்பதற்காக அவனைத் தூங்க வைக்கும்படி உத்தரவிட்டான்.

கைவிளக்குகளுடன் வந்த மூன்று ஆட்கள் இதைச் செய்தது உங்களுக்குத் தெரியும்.

வாரிசு துத்தி தூங்கிக் கொண்டிருந்தான்.

சுவோக் படைக் காவல் கூடத்தில் உட்கார்ந்திருந்தாள். இதுவே விசாரணைக் கைதிகளின் சிறைக்கூடமும் கூட. ஆக, அந்தக் காலையில் சுவோக் படைக் காவல் கூடத்தில் இருந்தாள். காவல் படையினர் அவளைச் சூழ்ந்திருந்தார்கள். படைக் காவல் கூடத்துக்கு முதல் தடவை வரும் வெளி ஆள் துயரம் ததும்பும் இந்த அழகான பெண் அசாதாரணப் பகட்டுள்ள ரோஜா

நிற உடை அணிந்து, காவல் படையினரின் நடுவே ஏன் இருக்கிறுள் என்று நெடு நேரம் வியந்து கொண்டிருப்பான். சேணங்களும் ஆயுதங்களும் பீர்க் குவளைகளும் குவிந்து கிடந்த படைக் காவல் கூடத்தின் முரட்டுச் சூழ்நிலைக்குக் கொஞ்சமும் பொருந்தாததாக இருந்தது அவளுடைய தோற்றம்.

காவல் படையினர் சீட்டு ஆடிக் கொண்டும் சுங்கான்களிலிருந்து நாற்றம் அடித்த நீலப் புகையை விட்டுக் கொண்டும் வைத்து திட்டிக் கொண்டும் அடிக்கொரு தரம் சண்டை போட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

இந்தக் காவல் படையினர் மூன்று தடியர்களுக்கு இன்னமும் விசுவாசமாய் இருந்தார்கள். பெருத்த முட்டிகளைக் காட்டி அவர்கள் சுவோக்கை அச்சுறுத்திஞர்கள், அவளுக்குப் பயங் கரமான கோரணிகள் காட்டிஞர்கள், அவளை மிதித்தார்கள்.

சுவோக் இவற்றை அமைதியோடு பொறுத்துக் கொண்டாள். அவர்களுடைய கவனத் திலிருந்து தப்பும் பொருட்டும் அவர்களுக்கு எரிச்சல் உண்டாக்கும் பொருட்டும் அவள் நாக் கைத் துருத்தி, எல்லோருக்கும் தன் முகம் தெரியும்படி உட்கார்ந்து, ஒரு மணி நேரம் பூராவும் மூஞ்சியை அப்படியே வைத்துக் கொண்டிருந்தாள்.

பீப்பாய் மேல் உட்கார்வது அவளுக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. அந்த மாதிரி உட்கார்ந்ததால் உடையில் கறை பட்டது உண்மைதான். ஆனுல் இதற்கு முன்பே உடை தன் பகட்டான தோற்றத்தை இழந்து விட்டது: கிளைகள் அதைக் கிழித்திருந்தன, தீவட்டி கள் பொசுக்கி இருந்தன, காவல் படைக்காரர்கள் கசக்கி இருந்தார்கள், பழப்பாகுகள் அதில் தெறித்திருந்தன.

தன்னுடைய துன்பங்களைப் பற்றிச் சுவோக் நினைக்கவில்லை. அவள் வயதுப் பெண்கள் வெளிப்படையான ஆபத்துக்களுக்கு அஞ்ச மாட்டார்கள். தங்களைக் குறி வைத்திருக்கும் கைத்துப்பாக்கிக் குழாய்களைக் கண்டு அவர்கள் கலங்க மாட்டார்கள், ஆனுல் இருட்டு அறை யில் இருக்க அவர்களுக்குப் பயமாய் இருக்கும்.

''கருமான் புரோஸ்பெரோ சுதந்திரமாக இருக்கிறுன். திபூலும் அவனும் ஏழைகளைப் படை திரட்டிக் கொண்டு அரண்மனையைத் தாக்கி என்னை விடுவிப்பார்கள்'' என்று எண்ணிக் கொண்டாள் சுவோக்.

சுவோக் இந்த மாதிரி எண்ணிக் கொண்டிருந்த போது, முந்திய அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்ட மூன்று காவல் படை வீரர்கள் அரண்மனைக்குக் குதிரைகளில் பாய்ந்து சென்றுர் கள். அவர்களில் ஒருவன், இளநீல விழியன், மர்மமான ஒரு மூட்டையை வைத்துக் கொண் டிருந்தான் என்பதும் அதிலிருந்து தொங்கிய சிறுமியின் கால்களில் வார்ப் பூட்டுகளுக்குப் பதிலாகத் தங்க ரோஜாப் பூக்கள் வைத்த ரோஜா நிறச் செருப்புக்கள் மாட்டி இருந்தன என்பதும் உங்களுக்குத் தெரியும்.

மூன்று தடியர்களுக்கு விசுவாசம் உள்ள பாராக்காரர்கள் நின்ற பாலத்தை நெருங்கிய போது இந்த மூன்று காவல் படையினரும் தங்கள் தொப்பிகளிலிருந்து சிவப்புச் சின்னங் களைக் கழற்றி விட்டார்கள்.

பாராக்காரர்கள் அவர்களை விடுவதற்கு இந்த மாதிரிச் செய்வது அவசியமாய் இருந்தது.

இல்லாவிட்டால், சிவப்புத் தொப்பிச் சின்னங்களைக் கண்டதும் அவர்கள் இந்தக் காவல் படையினர் மேல் குண்டுகள் சுடத்தொடங்கி இருப்பார்கள், ஏனென்றுல் இவர்கள் மக்களின் தரப்புக்கு மாறி இருந்தார்களே.

மூன்று குதிரை வீரர்களும் பாராக்காரர்களைக் கடந்து பாய்ந்த வேகத்தில் அவர்களுடைய தலைவன் குப்புற விழத் தெரிந்தான்.

தலைவன் தொப்பியைத் தரையிலிருந்து எடுத்து, சீருடை மேல் படிந்திருந்த புழுதியைத் தட்டிப் போக்கியபடி, ''ஏதோ ரொம்ப முக்கியமான சேதி போல் இருக்கிறது'' என்று சொல் லிக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் சுவோக்கின் கடைசி நேரம் நெருங்கி விட்டது. அரசு அமைச்சன் படைக் காவல் கூடத்துக்கு வந்தான்.

காவல் படையினர் துள்ளி விரைப்பாக நின்று, பெரிய கையுறைகள் அணிந்த கரங்களை அமரிக்கையாகத் தொங்க விட்டுக் கொண்டார்கள்.

''அந்தக் குட்டி எங்கே?'' என்று மூக்குக் கண்ணாடியை உயர்த்திக் கொண்டு கேட்டான் அரசு அமைச்சன்.

காவல் படைத் தலைவன் சுவோக்கைப் பார்த்து, ''வா இங்கே!'' என்று அதட்டினான்.

சுவோக் பீப்பாயிலிருந்து இறங்கினாள்.

காவல் படையினன் அவளை இடுப்பின் குறுக்கே முரட்டுத்தனமாகப் பிடித்துத் தூக்கினான்.

''மூன்று தடியர்கள் விசாரணைக் கூடத்தில் காத்திருக்கிறார்கள். இந்தக் குட்டியைக் கூட்டிக் கொண்டு என் பின்னே வாருங்கள்'' என்று மூக்குக் கண்ணாடியைத் தாழ்த்திக் கொண்டு சொன்னான் அரசு அமைச்சன்.

இப்படிச் சொல்லி விட்டு, அரசு அமைச்சன் படைக் காவல் கூடத்திலிருந்து வெளியேறினான். காவல் படையினன் சுவோக்கை ஒரு கையால் பிடித்துத் தொங்க விட்டபடி அவன் பின்னே நடந்தான்.

ஐயோ, தங்க ரோஜாப் பூக்களே! ஐயோ, ரோஜா நிறப் பட்டே! அந்த இரக்கமற்ற கையில் இவை எல்லாம் பாழாகி விட்டன.

காவல் படைக்காரனுடைய கொடிய கையின் குறுக்கே தொங்குவது சுவோக்குக்கு அசௌகரியமாக இருந்தது, வலித்தது. அவள் அவனுடைய முழங்கைக்கு மேலே வெடுக்கென்று கிள்



னிஞள். சீருடையின் கனத்த சட்டைக் கையையும் துளேத்துக் கொண்டு கிள்ளல் படையினனேச் சுரீரென்று தாக்கிற்று.

''சனி!'' என்று திட்டி, சுவோக்கை நழுவ விட்டான் காவல் படையினன்.

''என்ன?'' என்று திரும்பிப் பார்த்தான் அரசு அமைச்சன்.

அப்போது கொஞ்சங்கூட எதிர்பாராத அடி தன் காதைத் தாக்கியதை அரசு அமைச்சன் உணர்ந்தான். அவன் தடாரென்று விழுந்தான்.

சுவோக்கைச் சற்று முன் வரை வதைத்துக் கொண்டிருந்த காவல் படையினன் மறு கணமே மண்ணேக் கவ்விஞன்.

அவனுக்கும் அடி காதில் விழுந்தது. அதுவும் எப்பேர்ப்பட்ட அடி! இவ்வளவு நெடு மாடனும் கொடியவனுமான காவல் படைக் காரனே மூர்ச்சையாகும்படி வீழ்த்த வேண்டும் என்ருல் அடி எவ்வளவு பலமாகப் பட்டிருக்க வேண்டும், நீங்களே யோசித்துப் பாருங்கள்!

சுவோக் அக்கம் பக்கம் பார்ப்பதற்குள் ஒருவனுடைய கைகள் அவனே மறுபடி பிடித்துத் தூக்கிக் கொண்டன.

இவையும் முரடான வலிய கைகள்தாம், ஆனுல் இவை அன்பு உள்ளவையாகத் தோன்றின. வெயிலில் பளிச்சிட்ட தரையில் இப்போது விழுந்து கிடந்த காவல் படைக்காரனின் கைகளில் இருந்ததை விட இவற்றில் அதிக வசதியாக இருப்பதாகச் சுவோக் உணர்ந்தாள்.

''பயப்படாதே!'' என்றது ஒருவனுடைய குரல்.

விசாரணேக் கூடத்தில் தடியர்கள் பொறுமை இல்லாமல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாசாங்குக்காரப் பொம்மையைத் தாங்களே விசாரிக்க அவர்கள் விரும்பிஞர்கள். அலுவலர்களும் ஆலோசகர்களும் நீதிபதிகளும் செயலர்களும் சுற்றிலும் உட்கார்ந்திருந்தார்கள். கருஞ்சிவப்பும் செந்நீலமும் பளிச்சிடும் பச்சையும் செம்பழுப்பும் வெள்ளேயும் தங்க நிறமுமாக வெவ்வேறு வண்ணங்கள் உள்ள பொய்மயிர்த் தொப்பிகள் வெயிலில் தகதகத்தன. ஆனுல் அந்தப் பொய்மயிர்த் தொப்பிகளுக்கு அடியில் இருந்த உப்பிய முகங்களே அழகு படுத்தக் களி பொங்கிய வெயில் ஒளியாலும் முடியவில்லே.

மூன்று தடியர்கள் முன் போலவே வெயிலால் துன்பப்பட்டார்கள். அவர்களுடைய உடல்களிலிருந்து வியர்வைத் துளிகள் பட்டாணிக் கடலேகள் போலச் சிதறின, அவர்களுக்கு எதிரே கிடந்த காகிதங்களேக் கறைப்படுத்தின. செயலர்கள் காகிதங்களே நிமிடந்தோறும் மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

முதல் தடியன் கழுத்து நெரிபடுவது போல விரல்களே அசைத்து, ''நம்முடைய அரசு அமைச்சர் நீண்ட நேரம் காக்க வைக்கிருர்'' என்ருன்.

வெகு நேரமாக எதிர்பார்க்கப்பட்டவர்கள் கடைசியில் வந்து சேர்ந்தார்கள்.

மூன்று காவல் படையினர் கூடத்தில் புகுந்தார்கள். ஒருவன் சிறுமியைக் கைகளில் தூக்கிக்கொண்டிருந்தான். ஐயோ, அவள் தான் எவ்வளவு வருத்தம் உள்ளவளாகக் காணப்பட்டாள்!

தனது பளபளப்பாலும் விலே மிக்க கலேத் தேர்ச்சி உள்ள சித்திரத் தையலாலும் தலேக்கு நாள் பார்த்தவர்களேப் பிரமிக்க வைத்த ரோஜா நிறக் கவுன், இரங்கத் தக்கக் கந்தலாக இப்போது மாறி இருந்தது. தங்க ரோஜாப் பூக்கள் வாடிவிட்டன, ஜிகினுக்கள் உதிர்ந்து விட்டன, பட்டு கசங்கிக் கிழிந்து போய் இருந்தது. சிறுமியுடைய தலே சோர்ந்து போய், காவல் படைக்காரனின் தோள் மேல் தொங்கிற்று. அவள் பிணம் போல வெளிறி இருந்தாள். அவளுடைய தந்திரமுள்ள சாம்பல் நிறக் கண்களில் ஒளி இல்லே.

கூடியிருந்த பல வித மனிதர்கள் தலேகளே நிமிர்த்திஞர்கள்.

மூன்று தடியர்கள் கைகளேத் தேய்த்துக் கொண்டார்கள்.

செயலர்கள் நீளமான பேனுக்கனே அவை போலவே நீண்ட காதுகளிலிருந்து எடுத்துக் கொண்டார்கள்.

''சரி. ஆனுல் அரசு அமைச்சர் எங்கே?'' என்று கேட்டான் முதல் தடியன்.

சிறுமியைத் தூக்கிக் கொண்டிருந்த காவல் படையினன் கூடியிருந்தவர்களுக்கு முன் நின்று அறிக்கை செய்தான். அவனுடைய இள நீல விழிகள் குதூகலமாகப் பளிச்சிட்டன.

''திருவாளர் அரசு அமைச்சருக்கு வழியில் வயிற்றுக் கோளாறு வந்து விட்டது.''



இந்த விளக்கம் எல்லோருக்கும் திருப்தி அளித்தது.

விசாரணை தொடங்கிற்று.

நீதிபதிகளின் மேசைக்கு எதிரே இருந்த கரடு முரடான பெஞ்சியில் சிறுமியை உடகார்த்தினான் காவல் படைக்காரன். அவள் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்தாள்.

முதல் தடியன் கேள்விகள் கேட்கத் தொடங்கினான்.

ஆனால் மிக முக்கியமான தடை இப்போது குறுக்கிட்டது. ஒரு கேள்விக்குக் கூடப் பதில் சொல்லச் சுவோக் விரும்பவில்லை.

தடியனுக்கு எரிச்சல் மண்டிற்று. ''அழகுதான்! அழகுதான்! இதனால் இவளுக்குத்தான் கெடுதல். எங்களுக்குப் பதில் சொல்ல இவளுக்கு இஷ்டம் இல்லையாக்கும். நல்லது... அத்தனைக்கு அத்தனை கடுமையான தண்டனையை இவளுக்குக் கொடுப்போம்!'' என்றான்.

சுவோக் அசையவில்லை.

மூன்று காவல் படையினரும் கல்லாய்ச் சமைந்து விட்டவர்கள் போல இரு பக்கங்களிலும் நின்றார்கள்.

''சாட்சிகளைக் கூப்பிடுங்கள்!'' என்று உத்தரவிட்டான் தடியன்.

ஒரு சாட்சிதான் இருந்தான். அவன் இட்டு வரப்பட்டான். மிருகச்சாலை மேற்பார்வை அதிகாரியான மதிப்புக்கு உரிய விலங்கியலார் தாம் அந்தச் சாட்சி. இரவு முழுவதும் அவர் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தார். இப்போது தான் அவர் விடுவிக்கப்பட்டார். அப்படியே வந்திருந்தார்: வண்ண மேலங்கியும் கோடு போட்ட உள்ளாடைகளும் படுக்கைக் குல்லாயும் அணிந்திருந்தார். குல்லாயின் குஞ்சம் குழாய் போல அவருக்குப் பின்னால் இழுபட்டது.

COMICS PDF TIMES



பெஞ்சியில் உட்கார்ந்திருந்த சுவோக்கைக் கண்டதும் அவர் அச்சத்தால் தள்ளாடினுர். மற்றவர்கள் அவரைத் தாங்கிக் கொண்டார்கள்.

''என்ன நடந்தது என்று சொல்லுங்கள்.''

விலங்கியலார் விரிவாக விளக்கத் தொடங்கினுர். மரத்தில் ஏறிய போது கிளைகளுக்கு நடுவில் வாரிசு துத்தியின் பொம்மையைக் கண்டாராம். உயிருள்ள பொம்மைகளைத் தாம் முன்பு பார்த்தது இல்லை ஆகையாலும் பொம்மைகள் இரவு நேரங்களில் மரங்கள் மேல் ஏறுகின்றன என்று நினைக்கவில்லை ஆகையாலும் அவர் மிகவும் பயந்து போய் உணர்வை இழந்தாராம்.

''கருமான் புரோஸ்பெரோவை அவள் எப்படி விடுவித்தாள்?''

''தெரியாது. நான் பார்க்கவும் இல்லை, கேட்கவும் இல்லை. என்னுடைய மூர்ச்சை மிக ஆழ்ந்ததாய் இருந்தது.''

''கருமான் புரோஸ்பெரோ எப்படி விடுதலை அடைந்தான் என்று எங்களுக்குச் சொல்லப் போகிருயா இல்லையா, அசிங்கம் பிடித்த பெண்ணே?''

சுவோக் பேசாதிருந்தாள்.

''அவளை உலுக்குங்கள்.''

''நன்ருக!'' என்று ஆணையிட்டார்கள் தடியர்கள்.

நீலக் கண் காவல் படையினன் சிறுமியின் தோளைப் பிடித்து உலுக்கினுன். அதோடு விடாமல் அவளுடைய நெற்றியில் வலி உண்டாகும்படிச் சுண்டினுன்.

சுவோக் பேசவில்லை.

தடியர்கள் கோபத்தினுல் சீறினுர்கள். பல நிறத் தலைகள் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் அசைந்தன.

''விவரங்கள் எவற்றையும் தெரிந்து கொள்ள நமக்கு வாய்க்காது என்று தோன்றுகிறது!'' என்ருன் முதல் தடியன்.

இந்தச் சொற்களைக் கேட்டதும் விலங்கியலார் நெற்றியில் அடித்துக் கொண்டார்.

''என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்!''

எல்லோரும் காதுகளைக் கூராக்கிக் கொண்டார்கள்.

''மிருகச்சாலையில் கிளிகளின் கூண்டு இருக்கிறது. மிகவும் அபூர்வமான சாதிகளைச் சேர்ந்த கிளிகள் அதில் இருக்கின்றன. மனிதர்களுடைய பேச்சை நினைவு வைத்துக் கொள்ளவும் திருப்பிச் சொல்லவும் கிளிகளால் முடியும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். பல கிளிகள் ஒலிகளை நுட்பமாகக் கேட்கும் திறனும் அற்புதமான நினைவாற்றலும் கொண்டவை... இந்தப் பெண்ணும் கருமான் புரோஸ்பெரோவும் மிருகச்சாலையில் இரவு செய்தவை எல்லா வற்றையும் அவை நினைவில் பதித்துக் கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். ஆகையால், என்னுடைய அற்புதமான கிளிகளில் ஒன்றைச் சாட்சியாக விசாரணைக் கூடத்துக்கு அழைக்கும் படி யோசனை சொல்லுகிறேன்.''

கூடியிருந்தவர்கள் இசைவு தெரிவித்த இரைச்சல் கேட்டது.

விலங்கியலார் மிருகச்சாலைக்குப் போய்விட்டு விரைவில் திரும்பி வந்தார். நீண்ட சிவப்புத் தாடி உள்ள பெரிய கிழக் கிளி ஒன்று அவருடைய சுட்டு விரலில் உட்கார்ந்திருந்தது.

நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்: இரவில் சுவோக் மிருகச்சாலையில் சுற்றி வந்த போது கிளிகளில் ஒன்று சந்தேகத்துக்கு இடமானதாக அவளுக்குத் தோன்றியது—நினைவு இருக்கிறதா? இந்தக் கிளி தன்னை எப்படிப் பார்த்தது, தூங்குவது போல நடித்து, நீண்ட சிவப்புத் தாடிக் குள் எப்படிப் புன்னகை செய்தது என்பதை அவள் கண்டதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

வெள்ளி அமர் கொம்பில் உட்கார்ந்திருந்தது போலவே இப்போதும் விலங்கியலாரின் விரலில் சௌகரியமாக உட்கார்ந்திருந்தது எல்லாவற்றையும் விடச் சிவப்பான தாடி உள்ள அந்தக் கிளி.

பேதை சுவோக்கைக் காட்டிக் கொடுக்கும் வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ந்து இப்போது அது மிகவும் வெளிப்படையாகப் புன்னகை செய்து கொண்டிருந்தது.

விலங்கியலார் ஜெர்மானிய மொழியில் அதனுடன் பேசினர். சிறுமி கிளிக்குக் காட்டப் பட்டாள்.

அப்போது அது சிறகுகளை அடித்து, ''சுவோக்! சுவோக்!'' என்று கத்திற்று.

துருப்பிடித்த வளையத்திலிருந்து காற்றினால் அசைத்துப் பிடுங்கப்படும் பழைய கதவு கிறீச்சிடுவது போல இருந்தது அதன் குரல்.

கூடி இருந்தவர்கள் பேசாதிருந்தார்கள்.

விலங்கியலார் வெற்றி கொண்டாடினர்.

கிளி உளவு சொல்வதைத் தொடர்ந்தது. இரவில் கேட்டதை அது அப்படியே தெரிவித்தது. ஆகவே, கருமான் புரோஸ்பெரோ விடுவிக்கப்பட்டது எப்படி என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால் இந்தக் கிளி கத்தப் போவதை எல்லாம் கேளுங்கள்.

ஆகாகா! அது உண்மையிலேயே அபூர்வமான சாதிக் கிளி. எந்த ஜெனரலும் பெருமை கொள்ளக் கூடிய அழகான சிவப்புத் தாடி அதற்கு இருந்ததோடு, மனிதர்களின் பேச்சை அது மிகுந்த கலைத் திறமையுடன் திருப்பிச் சொல்லிற்று.

''யார் நீ?'' என்று முழங்கிற்று ஆண் குரலில்.

உடனேயே, சிறு பெண்ணின் குரலைப் போன்ற கீச்சுக் குரலில் பதில் சொல்லிற்று:

''நான் சுவோக்.''

''சுவோக்!''

''என்னைத் திபூல் அனுப்பி இருக்கிறான். நான் பொம்மை இல்லை. நான் உயிருள்ள பெண். உன்னை விடுவிக்க வந்திருக்கிறேன். நான் மிருகச்சாலையில் புகுந்ததை நீ பார்க்கவில்லையா?''

''இல்லை. நான் தூங்கிக் கொண்டிருந்தேன் போல் இருக்கிறது. இங்கே முதல் தடவையாக இன்றைக்குத் தூங்கினேன்.''

''நான் மிருகச்சாலையில் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன். மனிதக் குரலில் பேசிய ஒரு விகிருதியை இங்கே கண்டேன். அது நீயாக்கும் என்று நினைத்தேன். அந்த விகிருதி இறந்து விட்டது.''

''அவன் பெயர் தூப். இறந்து போய் விட்டானா அவன்?''

''ஆமாம். நான் பயந்து போய்க் கூச்சல் போட்டேன். காவல் படைக்காரர்கள் வந்தார்கள். நான் மரத்தின் மேல் ஏறி ஒளிந்து கொண்டேன். நீ உயிரோடு இருப்பதில் எனக்கு நிரம்ப மகிழ்ச்சி. உன்னை விடுவிக்க வந்திருக்கிறேன்.''

''என் கூண்டு வலுவாகப் பூட்டப்பட்டிருக்கிறது.''

''உன் கூண்டின் சாவி என்னிடம் இருக்கிறது.''

இந்த வாக்கியத்தைக் கிளி கீச்சிட்டதும் எல்லோருக்கும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''அட, கடை கெட்ட பெண்ணே! இப்போது எல்லாம் புரிகிறது. வாரிசு துத்தியிடமிருந்து சாவியைத் திருடிக் கருமான் புரோஸ்பெரோவை இவள் விடுவித்திருக்கிறாள். கருமான் தன்னுடைய சங்கிலியை அறுத்து, சிறுத்தைக் கூண்டை உடைத்து, முகப்பு வெளியைத் தடையில்லாமல் கடப்பதற்காக அதைப் பிடித்துக் கொண்டிருக்கிறான்'' என்று இரைந்தார்கள் தடியர்கள்.

''ஆமாம்!''

''ஆமாம்!''

''ஆமாம்!''

ஆனால் சுவோக் பேசாதிருந்தாள்.

கிளி உறுதிப்படுத்தும் பாங்கில் தாடியை ஆட்டி, சிறகுகளை மூன்று தரம் அடித்தது.

விசாரணை முடிந்தது. பின்வரும் தீர்ப்பு வழங்கப்பட்டது:

''பொம்மையாக நடித்த பெண் வாரிசு துத்தியை ஏமாற்றி இருக்கிறாள். முக்கியமான கலகக்காரனும் மூன்று தடியர்களின் முக்கியப் பகைவனுமான கருமான் புரோஸ்பெரோவை இவள் விடுவித்திருக்கிறாள். இவள் காரணமாக உயர்ந்த சாதிச் சிறுத்தை மடிந்து விட்டது. ஆகவே, மோசடி செய்த இந்தப் பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இவளை விலங்குகள் குதறிப் போடும்.''

விந்தை என்ன தெரியுமா? இந்தத் தீர்ப்பு படிக்கப்பட்ட போது கூடச் சுவோக் அசைய வில்லை!

கூடி இருந்தவர்கள் எல்லோரும் மிருகச்சாலைக்குப் போனார்கள். மிருகங்களின் ஊளையும் கீச்சொலியும் சீழ்க்கையும் அவர்களை வரவேற்றன. எல்லோரையும் விடக் கிளர்ச்சி அடைந் திருந்தார் விலங்கியலார்: அவர் மிருகச்சாலையின் மேற்பார்வையாளர் அல்லவா?

மூன்று தடியர்களும் ஆலோசகர்களும் அலுவலர்களும் மற்ற அரண்மனைப் பரிவா ரத்தினரும் மேடையில் அமர்ந்து கொண்டார்கள். மேடை கிராதியால் பாதுகாக்கப்பட்டி ருந்தது.

ஆகா, வெயில் எவ்வளவு இன்பமாக அடித்துக் கொண்டிருந்தது! ஆகா, வானம் எப்படி நீலமாய் ஒளிர்ந்தது! கிளிகளின் சிறகுகள் எப்படிப் பளபளத்தன, குரங்குகள் எப்படிச் சுற்றிச் சுழன்றன, பசுமை படிந்த யானை எப்படிக் குதித்து ஆடிற்று!

பாவம் சுவோக்! அவள் இந்தக் காட்சிகளைக் கண்டு மகிழவில்லை. வரிப் புலிகள் சற்றுக் குந்துவதும் ஓடுவதுமாய் இருந்த அழுக்குக் கூண்டை, அச்சம் நிறைந்த விழிகளால் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள் போலும். புலிகள் குளவிகள் போல் இருந்தன, அதாவது குளவி கள் போன்று பழுப்புக் கோடுகள் போட்ட மஞ்சள் நிறமாய் இருந்தன.

குனிந்த தலைகளுடன் அவை மனிதர்களைப் பார்த்தன. சில வேளைகளில் சிவந்த வாய்களை ஓசை இல்லாமல் திறந்தன. பச்சை இறைச்சியின் நாற்றம் அவற்றிலிருந்து அடித்தது.

பாவம், சுவோக்!

விடை கொடுங்கள் சர்க்கசே, சதுக்கங்களே, அவ்கூஸ்த், கூண்டில் உள்ள நரியே, இனிய, பெரிய, துணிவுள்ள திபூல்!

இளநீல விழியனை காவல் படைக்காரன் சிறுமியை மிருகச்சாலையின் நடுவுக்கு எடுத்துப் போய், பளிச்சிட்ட சூடான காரீயத் தகட்டின் மேல் கிடத்தினான்.

''கேளுங்கள், வாரிசு துத்தியின் கதி என்னாகும்? தன் பொம்மை புலியின் உகிர்களால் கிழிபட்டு மடிந்ததை அவன் அறிந்தால் அழுது அழுது உயிரை விட்டு விடுவானே'' என்று ஆலோசகர்களில் ஒருவன் திடீரென்று சொன்னான்.

''உஷ்ஷ்!'' என்று சீறி அவனை அடக்கினான் பக்கத்தில் இருந்தவன். ''அவனுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது... அவன் கண்ணை விழிக்காமல் மூன்று நாட்கள் தூங்கு வான். அதிக நாட்கள் கூடத் தூங்கலாம்.''

கூண்டுகளுக்கு நடுவே வட்டத்தில் கிடந்த பரிதாபகரமான ரோஜா உருண்டையின் மேல் எல்லாப் பார்வைகளும் பதிந்திருந்தன.

விலங்குகளைப் பழக்குபவன் சவுக்கைச் சுடக்கிக் கொண்டு கைத்துப்பாக்கி பளபளக்க உள்ளே வந்தான். வாத்தியக்காரர்கள் அணிநடை மெட்டை இசைத்தார்கள். இந்த மாதிரி, சுவோக் கடைசித் தடவையாகப் பார்வையாளர்களுக்கு முன்னால் நிகழ்ச்சி நடத்தினாள்.

''ஆல்லே!'' என்று கத்தினான் பழக்குபவன்.

கூண்டின் இரும்புக் கதவு தடதடத்தது. கனத்த பாதங்களை வைத்து ஓசை இல்லாமல் கூண்டிலிருந்து வெளியே வந்தன புலிகள்.

தடியர்கள் கடகடவென்று சிரித்தார்கள். ஆலோசகர்கள் இஹிஹி என்று இளித்து, பொய் மயிர்த் தொப்பிகளை ஆட்டினார்கள். சவுக்கு சொடேரென்று ஒலித்தது.

மூன்று புலிகள் சுவோக்கின் பக்கத்தில் ஓடின.

அசைவற்ற சாம்பல் நிற விழிகளால் வானத்தைப் பார்த்தபடி அசையாமல் படுத்திருந்தாள் சுவோக். எல்லோரும் எம்பிப் பார்த்தார்கள். மக்களின் நன்மையை நாடும் அந்தச் சின்னப் பெண்ணைப் புலிகள் குதறிப் போடுவதைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதற்கு எல்லோரும் தயாராய் இருந்தார்கள்...

ஆனால் ... புலிகள் நெருங்கின, ஒன்று பருத்த நெற்றி உள்ள தலையைக் குனிந்தது, மோந்து பார்த்தது, இரண்டாவது புலி பூனைப் பாதத்தால் அந்தச் சிறுமியைத் தொட்டது, மூன்றாவதோ, அந்தப் பக்கமே பார்க்காமல் கடந்து போய், மேடைக்கு எதிரே நின்று தடியர்களைப் பார்த்து உறுமத் தொடங்கிற்று.

அது உயிருள்ள பெண் அல்ல, பொம்மை என்பதை அப்போது எல்லோரும் கண்டார்கள்—கிழிந்து, பழையதாகி, ஒன்றுக்கும் உதவாததாக இருந்த பொம்மை.

ஒரே அமளி ஏற்பட்டது. விலங்கியலார் தடுமாற்றத்தில் நாக்கைக் கடித்துத் துண்டாக்கி விட்டார். பழக்குபவன் புலிகளைக் கூண்டுக்குள் திரும்ப விரட்டி அடைத்துவிட்டு உயிரற்ற பொம்மையை இகழ்ச்சியுடன் உதைத்துத் தள்ளினான், பின்பு தங்க சரிகைக் கயிறுகள் பின்னிய பகட்டான நீல உடையை மாற்றப் போனான்.

எல்லோருக்கும் ஐந்து நிமிட நேரம் வாய் அடைத்துப் போயிற்று.

அந்த மௌனம் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் கலைந்தது: மிருகச்சாலைக்கு மேலே இள நீல வானத்தில் ஒரு குண்டு வெடித்தது.

பார்வையாளர்கள் எல்லோரும் மேடையின் பலகைத் தரையில் முகம் குப்புறச் சரிந்தார்கள். எல்லா விலங்குகளும் பின்னங்கால்களில் நின்றன. விரைவில் வெடித்தது அடுத்த குண்டு. வட்டமான வெண் புகை வானத்தில் பரவிற்று.

''என்ன இது? என்ன இது? என்ன இது?'' என்ற கேள்வி உரக்க முழங்கிற்று.

''மக்கள் தாக்குதல் நடத்துகிறார்கள்!''

''மக்களிடம் பீரங்கிகள் இருக்கின்றன!''

''காவல் படையினர் துரோகம் செய்து விட்டார்கள்!!''

''ஐயோ! அம்மா!! ஐயோ!!!''

இரைச்சலாலும் கூச்சல்களாலும் துப்பாக்கி வெடிகளாலும் பூங்கா அதிர்ந்தது. கலகக்காரர்கள் பூங்காவில் நுழைந்து விட்டார்கள் என்பது தெளிவாகப் புலப்பட்டது!

கூடி இருந்தவர்கள் எல்லோரும் மிருகச்சாலையிலிருந்து பாய்ந்து ஓடினார்கள். அமைச்சர்கள் வாட்களை உருவினார்கள். தடியர்கள் ஆபாச வசவுகளைப் பொழிந்தார்கள்.

பூங்காவில் அவர்கள் இந்தக் காட்சியைக் கண்டார்கள்.

ஆட்கள் எல்லாப் புறங்களிலும் இருந்து முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏராளமானவர்கள். வெறும் தலைகள், இரத்தம் கசிந்த நெற்றிகள், கிழிந்த மேல் சட்டைகள், மகிழ்ச்சி ததும்பும் முகங்கள்... இன்றைக்கு வெற்றி பெற்று விட்ட மக்கள் இவர்கள். காவல் படையினர் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்களுடைய தொப்பிகளில் சிவப்புச் சின்னங்கள் பளிச்சிட்டன. தொழிலாளர்களும் ஆயுதங்கள் ஏந்தி இருந்தார்கள். பழுப்பு உடைகளும் கட்டைச் செருப்புகளும் அணிந்த ஏழைகள் பெரும் படையாகத் திரண்டு முன்னேறினார்கள். அவர்கள் அழுத்தியதால் மரங்கள் வளைந்தன, செடிகள் சடசடத்தன.

''நாம் வென்று விட்டோம்!'' என்று முழங்கினார்கள் மக்கள்.

தப்ப வழி இல்லை என்று கண்டார்கள் மூன்று தடியர்கள்.

''இல்லை! இது உண்மை அல்ல! காவல் படைக்காரர்களே, இவர்களைச் சுடுங்கள்!'' என்று ஊளையிட்டான் ஒரு தடியன்.



ஆனுல் காவல் படையினர் ஏழை மக்களோடு ஒரே அணியாகச் சேர்ந்து நின்ருர்கள். கூட்டம் முழுவதன் இரைச்சலையும் அடக்கிக் கொண்டு அப்போது முழங்கிற்று ஒரு குரல். பேசியவன் கருமான் புரோஸ்பெரோ.

''சரண் அடைந்து விடுங்கள்! மக்கள் வெற்றி பெற்று விட்டார்கள்! பணக்காரர்கள், பெருந்தீனிக்காரர்கள் ஆட்சி ஒழிந்தது! நகரம் முழுவதும் மக்களின் கைகளில் இருக்கிறது. எல்லாத் தடியர்களும் கைதாகி விட்டார்கள்.''

பலவித மக்களின் கொந்தளிக்கும் திரள் மூன்று தடியர்களை நெருக்கமாகச் சூழ்ந்தது. ஆட்கள் செங்கொடிகளையும் தடிகளையும் வாட்களையும் முட்டிகளையும் ஆட்டினுர்கள். அப்போதே பாட்டு தொடங்கி விட்டது.

திபூல் தன் பச்சை மழைக் கோட்டை அணிந்து புரோஸ்பெரோவின் பக்கத்தில் நின்ருன். அவனுடைய தலையில் கட்டியிருந்த துணியிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

தடியர்களில் ஒருவன் கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டு, ''இது கனவு!'' என்று கத்தினுன்.

திபூலும் புரோஸ்பெரோவும் பாடத் தொடங்கினுர்கள். ஆயிரக் கணக்கானவர்கள் கூடப் பாடினுர்கள். பிரமாண்டமான பூங்கா முழுவதிலும் பரவி, வாய்க்கால்களையும் பாலங்களையும் தாண்டி ஒலித்தது பாட்டு. நகர வாயிலிலிருந்து அரண்மனையை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த மக்கள் அதைக் கேட்டுத் தாங்களும் பாடலானுர்கள். கடலின் பேரலை போலப் பாட்டு சாலை வழியாக வாயிலைக் கடந்து நகரிலும், தொழிலாளர்களும் ஏழை மக்களும் வந்து கொண்டிருந்த எல்லா வீதிகளிலும் பரவிற்று. இப்போது நகரம் முழுவதும் இந்தப் பாட்டைப் பாடிற்று. தங்களை ஒடுக்கி வைத்திருந்தவர்கள் மேல் வெற்றி பெற்று விட்ட மக்களின் பாட்டு அது.

இந்தப் பாட்டின் ஒலிகளைக் கேட்டு இரங்கத்தக்க ஒரே மந்தையாகச் சேர்ந்து, நெருங்கி, நிலை கொள்ளாமல் குமைந்தவர்கள் மூன்று தடியர்கள் மட்டும் அல்ல. நகரத்தில் இருந்த எல்லாப் பகட்டர்களும் கொழுத்த கடைக்காரர்களும் பெருந்தீனிக்காரர்களும் வர்த்தகர்களும் சீமாட்டிகளும் வழுக்கைத் தலை ஜெனரல்களும் திகிலாலும் குழப்பத்தாலும் ஓட்டம் பிடித்தார்கள். இவை பாட்டின் சொற்கள் அல்ல, பீரங்கிக் குண்டுகளும் நெருப்பும் என்பது போல இருந்தது அவர்கள் பட்ட பாடு.

அவர்கள் ஒளிவதற்கு இடங்கள் தேடினுர்கள், காதுகளைப் பொத்திக் கொண்டார்கள், பூத்தையல் வேலை செய்த விலை உயர்ந்த தலையணைகளில் தலைகளைப் புதைத்துக் கொண்டார்கள்.

முடிவில் நடந்தது என்ன என்ருல், தங்கள் ஆட்சியையும் பணத்தையும் கட்டற்ற சோம்பேறி வாழ்க்கையையும் எல்லாவற்றையும் எங்கே அவர்கள் இழந்து விட்டார்களோ, அந்த நாட்டை விட்டுக் கப்பலேறி வெளியே போய் விடும் நோக்கத்துடன் பணக்காரர்களின் பெரியக் கூட்டம் துறைமுகத்தை அடைந்தது. ஆனுல் அங்கே மாலுமிகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். பணக்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மன்னிப்பு கேட்டார்கள்.

''எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்! எங்களுக்காக உழைக்கும்படி இனிமேல் உங்களை நாங்கள் கட்டாயப்படுத்த மாட்டோம்...'' என்ருர்கள்.

ஆனுல் மக்கள் அவர்களை நம்பவில்லை, ஏனென்ருல் ஏழைகளையும் தொழிலாளர்களையும் பணக்காரர்கள் ஏற்கெனவே பல தடவைகள் ஏமாற்றி இருந்தார்கள்.

சூரியன் நகரத்துக்கு மேலே வெகு உயரத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்தது. தெளிந்த வானம் நீலமாகச் சுடர்ந்தது. முன் ஒருபோதும் இல்லாத பெரிய விழா கொண்டாடப்படுகிறது என்ற எண்ணம் உண்டாயிற்று.

ஆயுதசாலைகள், படையினர் இருப்பிடங்கள், அரண்மனைகள், ரொட்டிக் கிடங்குகள்,



கடைகள் எல்லாம் மக்களின் கைகளில் இருந்தன. தொப்பிகளில் சிவப்புச் சின்னங்கள் அணிந்த காவல் படையினர் எங்கும் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நாற்சந்திகளில் செங்கொடிகள் வீசிப் பறந்து கொண்டிருந்தன. அவற்றில் இந்த வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது:

*ஏழைகளின் உழைப்பால் உரு ஆனவை எல்லாம்*
*ஏழைகளுக்கு சொந்தம்!*
*மக்கள் நீடூழி வாழ்க!*
*சோம்பேறிகளும் தின்னிகளும் ஒழிக!*

மூன்று தடியர்கள் என்ன ஆனார்கள்?

மக்களுக்குக் காட்டுவதற்காக அவர்கள் அரண்மனையின் பிரதான ஹாலுக்குக் கூட்டி வரப் பட்டார்கள். சாம்பல் நிற மேல் சட்டைகளும் பச்சை முன்கைப் பகுதிகளும் அணிந்த தொழிலாளர்கள் துப்பாக்கிகளைத் தாழ்த்திப் பிடித்த வண்ணம் அவர்களுக்குக் காவலாக வந்தார்கள். ஆயிரக் கணக்கான வெயில் துணுக்குகளால் ஹால் பளிச்சிட்டது. அங்கே இருந்தவர்களை எண்ணி மாளாது! ஆனால், வாரிசு துத்தியைப் பழக்கம் செய்து கொண்ட அன்று சிறுமி சுவோக் எந்தக் கூட்டத்துக்கு முன் பாடினாளோ அதற்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு!

சதுக்கங்களிலும் சந்தைகளிலும் சுவோக்கை உற்சாகப்படுத்திக் கைகளைத் தட்டிய பார்வையாளர்கள் எல்லோரும் இங்கே இருந்தார்கள். ஆனால் இப்போது அவர்களுடைய முகங்களில் மகிழ்ச்சியும் இன்பமும் அலை மோதின. ஆட்கள் நெரிந்தார்கள், ஒருவர் முதுகு மேல் ஒருவர் ஏறினார்கள், சிரித்தார்கள், கேலி செய்தார்கள். சிலர் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்கள்.

அரண்மனையின் முக்கியக் கூடங்கள் இந்த மாதிரி விருந்தாளிகளைக் கண்டதே இல்லை. வெயில் அவர்கள் மேல் இவ்வளவு ஒளியும் வீசியதே இல்லை.

''உஷ்ஷ்!''

''பேசாதிருங்கள்!''







‘‘சத்தம் செய்யாதீர்கள்!’’

படிக்கட்டின் உச்சியில் கைதிகளின் வரிசை தென்பட்டது. மூன்று தடியர்கள் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முன்னே புரோஸ்பெரோவும் அவனோடு திபூலும் வந்து கொண்டிருந்தார்கள்.

களி பொங்கிய வெற்றி முழக்கங்களால் தூண்கள் கிடுகிடுத்தன. மூன்று தடியர்களுக்கோ காதுகள் செவிடாகி விட்டன. மக்கள் அவர்களைக் கண்கூடாகப் பார்த்து, இந்தப் பயங்கரமான தடியர்கள் தங்கள் கைதிகள் ஆகி விட்டார்கள் என்று உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அவர்கள் படிக்கட்டின் வழியாக நடத்தி வரப்பட்டார்கள்.

‘‘பாருங்கள்’’ என்று தூண் அருகே நின்று கொண்டு சொன்னான் புரோஸ்பெரோ.

உயரத்தில் அந்தப் பெரிய தூணில் அனேகமாகப் பாதி இருந்தான் அவன். அவனுடைய செம்பழுப்புத் தலை வெயில் ஒளியில் தழல் வீசிச் சுடர்ந்தது.

அவன் சொன்னான்: ‘‘இதோ பாருங்கள், இவர்கள் தாம் மூன்று தடியர்கள். இவர்கள் ஏழை மக்களை நசுக்கிக் கொண்டிருந்தார்கள். நம்மைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கி, நம்மிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக் கொண்டார்கள். பாருங்கள், இவர்கள் எப்படிக் கொழுத்துப் போய் இருக்கிறார்கள் என்று! நாம் இவர்களை வென்று விட்டோம். இனி நாம் நமக்காகவே


COMICS PDF TIMES

உழைக்கப் போகிறோம், நாம் எல்லோரும் சமமாய் இருப்போம். பெரும் பணக்காரர்களோ, சோம்பேறிகளோ பெருந்தீனிக்காரர்களோ நம் இடையே இருக்க மாட்டார்கள். அப்போது நம் வாழ்க்கை நன்றாய் இருக்கும். நாம் எல்லோரும் வயிறார உண்டு வளமாக வாழ்வோம். நமது நிலைமை மோசமானால், நாம் பட்டினி கிடக்கும் போது தான் தின்று கொழுப்பவன் எவனும் இல்லை என்பதை அறிவோம்...''

''வெல்க! வெல்க!'' என்ற முழக்கங்கள் கேட்டன.

மூன்று தடியர்களும் மூக்குகளை உறிஞ்சினார்கள்.

புரோஸ்பெரோ சொன்னான்: ''இன்று நம்முடைய வெற்றி நாள். பாருங்கள் வெயில் எப்படி ஒளி வீசுகிறது என்று! கேளுங்கள் பட்சிகள் எப்படிப் பாடுகின்றன என்று! முகருங்கள் பூக்கள் எப்படி மணக்கின்றன என்று! நினைவில் பதித்துக் கொள்ளுங்கள் இந்த நாளை, இந்த மணியை!''

''மணியை'' என்ற சொல்லைக் கேட்டதும் கடிகாரம் இருந்த திக்கில் எல்லாத் தலைகளும் திரும்பின.

இரண்டு தூண்களுக்கு நடுவில் ஆழ்ந்த மாடத்தில் வைத்திருந்தது கடிகாரம். செதுக்குச் சித்திர வேலைப்பாடும் எனுமல் பூச்சும் உள்ள பிரமாண்டமான ஓக் மரப் பெட்டி அது. எண் வட்டம் நட்ட நடுவில் கறுப்பாகத் தெரிந்தது.

''மணி என்ன?'' என்று ஒவ்வொருவனும் நினைத்துக் கொண்டான்.

திடீரென்று (நம்முடைய நாவலில் வரும் கடைசியான ''திடீரென்று'' இது)... திடீரென்று ஓக் மரப் பெட்டியின் கதவு திறந்தது. உள்ளே பொறி அமைப்பு எதுவும் இல்லை. கடிகார இயந்திரம் முழுவதும் உடைக்கப்பட்டிருந்தது. செப்பு வட்டங்களுக்கும் சுருள் கம்பிகளுக்கும் பதிலாக இந்த அலமாரியில் உட்கார்ந்திருந்தாள் ரோஜா நிறத்தில் பளபளத்து ஒளி வீசிக் கொண்டிருந்த சுவோக்.

''சுவோக்!'' என்று ஆறுதலுடன் பெருமூச்சு விட்டது ஹால்.

''சுவோக்!'' என்று ஆரவாரித்தார்கள் குழந்தைகள்.

''சுவோக்! சுவோக்! சுவோக்!''

உரத்த கைதட்டல் ஒலி எழுந்தது.

இளநீல விழிக் காவல் படையினன் அவளை அலமாரியிலிருந்து வெளியே எடுத்தான். நட்டுவனர் தாதக்கத்தையாரின் அட்டைப் பெட்டியிலிருந்து வாரிசு துத்தியின் பொம்மையை எடுத்துக் கொண்டு போனானே, அவனேதான் இந்த இளநீல விழியன். அவனே பொம்மையை அரண்மனைக்குக் கொண்டு வந்தான், அரசு அமைச்சரையும் உயிருள்ள சுவோக்கைத் தூக்கிச் சென்ற காவல் படைக்காரனையும் குத்துக்களால் வீழ்த்தினான். சுவோக்கைக் கடிகார அலமாரியில் மறைத்து விட்டு, உயிர் இல்லாத கிழிந்த பொம்மையை அவளுக்குப் பதிலாகக் கொண்டு போனான். விசாரணைக் கூடத்தில் அந்தப் பொம்மையை அவன் தோளைப் பிடித்து உலுக்கியதும் புலிகள் குதறுவதற்கு அதை அவன் கொடுத்ததும் நினைவு இருக்கிறதா?

சிறுமி சுவோக்கை ஒருவர் மாற்றி ஒருவராகத் தூக்கிக் கொஞ்சினார்கள். சுவோக் உலகத்தில் எல்லோரையும் விட மேலான நர்த்தகி என்று சொன்னவர்கள், தங்கள் கடைசிக் காசுகளை அவளுக்குப் போட்டவர்கள், இப்போது அவளைத் தழுவிக் கொண்டு ''சுவோக்!'' என்று கிசுகிசுத்தார்கள், முத்தமிட்டார்கள், மார்புகளோடு சேர்த்துக் கட்டிக் கொண்டார்கள். புகைக்கரியும் கீலும் படிந்து கிழிந்திருந்த முரட்டுத் துணி மேல்சட்டைகளின் கீழ் இந்த மனிதர்களின் துன்பங்கள் பட்ட, கனிவு நிறைந்த பெரிய இதயங்கள் துடித்துக் கொண்டிருந்தன.

சுவோக் கலகலவென்று சிரித்தாள், ஆட்களின் பம்பைத் தலைகளைக் கோதினாள், அவர்கள் முகங்களில் கசிந்த இரத்தத்தைச் சின்னக் கைகளால் துடைத்தாள், குழந்தைகளைச்



சீண்டி அவர்களுக்குக் கோரணிகள் காட்டி, ள், கண்ணீர் விட்டு ஏதோ புரியாத மழலை பேசினுள்.

''அவளை இப்படிக் கொடுங்கள்'' என்று தழுதழுத்த குரலில் சொன்னுன் கருமான் புரோஸ்பெரோ. அவனுடைய விழிகளில் கண்ணீர் துளித்து நின்றது போலப் பலருக்குத் தோன்றியது. ''இவள் என்னைக் காப்பாற்றியவள்'' என்ருன் புரோஸ்பெரோ.

திபூல் பச்சை மழைக்கோட்டை ஆட்டிக் கொண்டே, ''இங்கே கொடுங்கள் அவளை. இவள் என் சின்னத் துணைவி. இங்கே வா, சுவோக்!'' என்ருன்.

தொலைவிலிருந்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு புன்னகை செய்தபடி ஓடி வந்தார் சிறு கூடான மருத்துவர் கஸ்பார்...

கருமான் புரோஸ்பெரோ எதில் இருந்தானே அதே கூண்டில் மூன்று தடியர்கள் அடைக்கப்பட்டார்கள்.





# முடிவுரை







ஓர் ஆண்டு கழிந்த பின் வந்ததுகளிப்பும் கோலாகலமும் பொங்கிய திருநாள். மூன்று தடியர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற தன் முதல் ஆண்டு விழாவை மக்கள் கொண்டாடினார்கள்.

விண்மீன் சதுக்கத்தில் குழந்தைகளுக்காக நாடகம் நடத்த ஏற்பாடு ஆயிற்று.

விளம்பரங்களில் இந்தக் குறிப்பு கவனத்தைக் கவர்ந்தது:

''சுவோக்! சுவோக்! சுவோக்!''

தங்கள் அன்பு நடிகை மேடையில் தோன்றுவதை ஆயிரமாயிரம் குழந்தைகள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இன்று அவள் தனியாக நடிக்க வரவில்லை. அவளோடு ஒரு சின்னப் பையனும் மேடைக்கு வந்தான். அவனுடைய தலை மயிர் தங்க நிறமானது, ஆனாலும் அவன் சுவோக்கை உருவத்தில் கொஞ்சம் ஒத்திருந்தான்.

இவன் அவளுடைய தம்பி. முன்பு அவன் வாரிசு துத்தியாக இருந்தான்.

நகரம் ஆரவாரித்தது, கொடிகள் படபடத்தன, பூக்காரிகளின் தாம்பாளங்களிலிருந்து ஈர ரோஜா மலர்கள் சிந்தின, பல நிற இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் துள்ளின, குடைராட்டினங்கள் சுழன்றன, விண்மீன் சதுக்கத்திலோ, குழந்தைப் பார்வையாளர்கள் நாடகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு சுவோக் மேலும் துத்தி மேலும் மலர் மாரி பொழிந்தது. குழந்தைகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.



சுவோக் தன் புதிய உடையின் பையிலிருந்து சிறு பலகை ஒன்றை எடுத்துக் குழந்தைகளுக்கு எதையோ படித்துக் காட்டினுள்.

நம்முடைய வாசகர்களுக்கு இந்தப் பலகை நினைவு இருக்கும். மிருகச்சாலையில் ஏக்கம் நிறைந்த கூண்டில் இருந்த ஓநாய் போன்ற உருவம் உள்ள மர்ம மனிதன், பயங்கரமான ஓர் இரவில், சாவதற்கு முன்னுல், இந்தப் பலகையைச் சுவோக்கிடம் கொடுத்தான்.

பலகையில் இப்படி எழுதி இருந்தது:

''நீங்கள் இரண்டு பேர் இருந்தீர்கள்: அக்காளும் தம்பியும்—சுவோக்கும் துத்தியும்.

''உங்களுக்கு நான்கு வயது ஆனபோது மூன்று தடியர்களின் காவல் படைக்காரர்கள் உங்களை உங்கள் வீட்டிலிருந்து திருடிப் போனுர்கள். நான் தூப் என்ற விஞ்ஞானி. நான் அரண்மனைக்கு அழைத்துப் போகப் பட்டேன். குழந்தைகளான சுவோக்கையும் துத்தியையும் அங்கே எனக்குக் காட்டினுர்கள். 'இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? இவளை அப்படியே ஒத்திருக்கக் கூடிய ஒரு பொம்மை பண்ணு' என்று மூன்று தடியர்கள் என்னிடம் சொன்னுர்கள். இது எதற்காக வேண்டி இருந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த மாதிரிப் பொம்மையை நான் தயாரித்தேன். நான் பெரிய விஞ்ஞானி. உயிருள்ள பெண் போலப் பொம்மை வளர வேண்டி இருந்தது. சுவோக்குக்கு ஐந்து வயது ஆகும் போது பொம்மைக்கும் ஆகும். சுவோக் வளர்ந்து அழகும் ஏக்கமும் உள்ள பெரிய பெண் ஆவாள், அப்போது பொம்மை அப்படியே ஆகும். நான் இந்தப் பொம்மையைச் செய்தேன். அப்புறம் நீங்கள் பிரிக்கப்பட்டீர்கள். துத்தி பொம்மையோடு அரண்மனையில் இருந்தான், சுவோக் நீண்ட சிவப்புத் தாடி உள்ள அபூர்வ சாதிக் கிளிக்கு மாற்ருக நாடோடி சர்க்கசுக்குக் கொடுக்கப் பட்டாள். 'பையனுடைய இருதயத்தை எடுத்துவிட்டு இரும்பு இருதயம் செய்து அவனுக்கு வை' என்று மூன்று தடியர்கள் எனக்கு உத்தரவிட்டார்கள். நான் மறுத்து விட்டேன். மனித இருதயத்தை மனிதனிடமிருந்து பறித்துக் கொள்ளக் கூடாது என்றும், இரும்பு இருதயம், பனிக்கட்டி இருதயம், தங்க இருதயம், எதுவுமே சாதாரணமான நிஜ மனித இருதயத்தின் இடத்தில் மனிதனுக்குக் கொடுக்கப்பட முடியாது என்றும் சொன்னேன். இதற்காக என்னைக் கூண்டில் அடைத்து விட்டார்கள். பையனுடையது இரும்பு இருதயம் என்ற எண்ணத்தை அப்போது முதல் அவனுக்குப் புகட்டி வருகிருர்கள். அவர்கள் நினைப்பின்படி அவன் இதை நம்ப வேண்டும், கொடுமையும் கண்டிப்பும் உள்ளவன் ஆக வேண்டும். மிருகங்களுக்கு நடுவே எட்டு ஆண்டுகள் நான் கழித்து விட்டேன். என் உடம்பில் ரோமம் அடர்த்தியாக வளர்ந்து விட்டது, என் பற்கள் நீண்டு மஞ்சள் ஆகி விட்டன. ஆனுலும் உங்களை நான் மறக்கவில்லை. உங்களிடம் நான் மன்னிப்பு கேட்கிறேன். நாம் எல்லோரும் மூன்று தடியர்களால் உரிமை இழந்தவர்கள் ஆக்கப்பட்டோம். பணக்காரர்களும் பேராசை பிடித்த பெருந்தீனிக்காரர்களும் நம்மை ஒடுக்கினுர்கள், சுறண்டினுர்கள். உரிமை இழந்தவர்களின் மொழியில் துத்தி என்ருல் 'பிரிக்கப்பட்டவன்' என்று அர்த்தம். என்னை மன்னித்து விடு, துத்தி. சுவோக், நீயும் என்னை மன்னித்து விடு. சுவோக் என்ருல் 'வாழ்நாள் முழுவதும்' என்று அர்த்தம்...''



### வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வர வேற்கவும் **ராதுகா பதிப்பகம்** மகிழ்வுடன் காத்திருக் கிறது. கடிதங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR என்ற முக வரிக்கு அனுப்புங்கள்.


## விற்பனையாளர்கள்
## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

**தலைமை அலுவலகம்**

41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098

**ஷோ-ரூம்**

136, மவுண்ட் ரோடு, சென்னை — 600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் — 641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001

**விற்பனை நிலையங்கள்**

3 — 22 — 75 — D மதுரை சாலை; திருநெல்வேலி ஜங்ஷன்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்



COMICS PDF TIMES





ISBN 5-05-000336-9